# வரலாறு

வரலாறு

மேல்நிலை இரண்டாம் ஆண்டு.

தொகுதி - II



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# வரலாறு

## தொகுதி II

## மேல் நிலை—இரண்டாம் ஆண்டு

தீண்டாமை : மனிதத்தன்மையற்ற செயல்.
ஒரு பெருங்குற்றம்.
ஒரு பாவச்செயல்.

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
திருத்திய பதிப்பு—1981
மறுபதிப்பு—1983

மதிப்பாசிரியர் குழுத்தலைவர்
(& ஆசிரியர்) :

டாக்டர் சி. ஜே. நிர்மல்,
பேராசிரியர் & வரலாற்றுத்துறைத் தலைவர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை

ஆசிரியர்கள் :

டாக்டர் கே. ராஜய்யன்
பேராசிரியர் & நவீன கால வரலாற்றுத்துறைத் தலைவர்,
மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

டாக்டர் கே. ஆர். அனுமந்தன்,
பழங்கால வரலாற்றுத்துறைத் தலைவர்,
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

பேரா. எம். வி. சுப்பிரமணியம்,
''கோமதி விலாஸ்'', ஸ்ரீபிரம் விரிவாக்கம்,
திருநெல்வேலி சந்திப்பு.

மொழி பெயர்ப்பாளர்கள் :

திரு. மாணிக்கவேலு,
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி, சென்னை—600 035.

திரு. வி. இராஜாராம்,
வரலாற்றுத்துறைத் துணைப்பேராசிரியர்,
தேர்வு முன்னிலைப் பயிற்சி நிலையம், சென்னை-600 035.

மதிப்புரையாளர்கள் :

பேரா. டி. பாலசுப்பிரமணியம்,
வரலாற்றுத்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

பேரா. சி. கே. பங்கஜாட்சி,
முதல்வர், டி. கே. எம். மகளிர் கல்லூரி, வேலூர்.

விலை : ரூ. 3-40

இந்நூல் இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
பிரின்ட் ஹவுஸ் (மக்கள் குரல்), சென்னை - 600 024

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 17. | ஆசியாவில் தேசிய இயக்கத்தின் எழுச்சி | ... | 1 |
| 18. | ஆப்பிரிக்காவில் புத்தெழுச்சி | ... | 73 |
| 19. | ருஷ்யா—ஸ்டாலின் ஆட்சியும் அதன் பின்னரும் | ... | 103 |
| 20 | ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதாம் ஆண்டுகளில் அமெரிக்கா | ... | 114 |
| 21. | நேரு சகாப்தத்தின் நன்கொடை | ... | 134 |
| 22. | மாவோவின் தலைமையில் சீனா | ... | 143 |
| 23. | இன்றைய பாரதம் | ... | 154 |

அத்தியாயம் 17

# ஆசியாவில் தேசிய இயக்கத்தின் எழுச்சி

இருபதாம் நூற்றாண்டில் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பல நாடுகள் விடுதலையடைந்து தேசிய அரசுகளாகத் திகழ்ந்து வருகின்றன. அன்னிய ஆதிக்கத்தில் அல்லலுற்று அடிமைப்பட்டுக் கிடந்த அந்நாடுகள் சுதந்திர வானில் சிறகடித்துப் பறக்கத் தொடங்கியுள்ளன. இரண்டாம் உலகப் போர் ஓய்ந்த பின்னர் ஆசியாவிலும் தூரக் கிழக்கிலும் நாடுகள் பலவற்றில் தேசிய விடுதலை இயக்கம் வீறுகொண் டெழுந்தது. போருக்குப்பின் வந்த புதிய சகாப்தத்தில் விடுதலை முரசுகொட்டிய முதல் நாடு பாரதத் திருநாடே (1947). அதைத்தொடர்ந்து தென் கிழக்காசிய நாடுகள் பல வற்றில் சுதந்திர சூரியன் உதயமானான். 1949-ல் வியட்நாம் பிரஞ்சுக்காரரின் ஆதிக்கத்தை விரட்டியடித்தது. அதே ஆண்டில் இந்தோனேஷியா டச்சுக்காரர்களின் ஆணவ ஆட்சியை அகற்றுவதில் வெற்றி கண்டது.

பர்மாவும், இலங்கையும் பிரிட்டிஷ்காரர்களின் பிடியி லிருந்து விடுபட்டு வெற்றிநடைபோட்டன (1947). அது போலவே மத்திய ஆசியாவிலும் தேசிய அரசுகள் எழலாயின. சிரியாவும் (Syria) லெபனானும் 1946 ல் பிரெஞ்சு ஆதிக்கத்தி லிருந்து விடுதலை பெற்றன. அதே ஆண்டில் லெபனானுக்குப் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை கிடைத்தது. 1948-ல் ஜோர்டனும் (Jordan) பாலஸ்தீனமும் பிரிட்டனின் ஆட்சியை உதறித்தள்ளின. இவ்வாறு இரண்டாவது உலகப்போரை அடுத்து ஆசிய நாடுகள் பலவற்றில் எழுந்த தேசிய இயக்க மானது முழு விடுதலைக்கு வழிவகுத்துச் சென்றது.

## இந்தியாவில் தேசிய இயக்கம்

### தேசிய இயக்கம் எழுவதற்கான சூழ்நிலைகள்

ஒரே மொழி, ஒரே சமயம் அல்லது ஒத்த பண்பாடு, ஒரே வகையான பொருளாதார அரசியல் நோக்கங்கள், ஒரே ஆட்சி

முறை ஆகியவற்றால் பிணைக்கப்பட்டு, வரையறுக்கப்பட்ட நில எல்லையில் நிலைத்துவாழும் மக்களிடையே எழுகின்ற உள்ளார்ந்த ஒற்றுமையுணர்வே தேசியமாகும். இந்தியாவிலும் பல்வேறு காரணங்களால் இத்தகைய ஒற்றுமை உணர்ச்சி நிலைபெற்று வளரத் தொடங்கியது. அன்னிய ஆட்சியாளர் தங்களுடைய வசதிக்காகப் புகுத்திய ஆங்கில மொழியும் ஆங்கிலக் கல்வி முறையும் இந்தியரை ஒற்றுமைப்படுத்தும் கருவிகளாக வந்தன. குறிப்பாக, ஆட்சிமொழியாகவும், போதனா மொழியாகவும் இருந்த ஆங்கிலம் இந்திய மக்களை ஒன்றுபடுத்தும் பெரும் சக்தியாக விளங்கியது. இந்திய நாட்டில் கற்றறிந்த மாந்தர்தம் பொதுமொழியாகவும் விளங்கியது ஆங்கிலம். கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும் வாழ்ந்த மக்கள் தங்களிடையே கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும் ஒன்றாகக்கூடிச் சிந்திக்கவும், பேசவும், செயல்படவும் பெரிதும் பயன்பட்டது அம்மொழி.

மேலும், மேலைநாட்டுக் கல்வித் திட்டத்தில் கற்றறிந்த மாந்தரிடையே உரிமைவேட்கையும் தன்னாட்சிப்பற்றும வளர்ந்தன. மேலைநாட்டுத் தாராளச் சிந்தனையாளர்களான பர்க் (Burke), மெக்காலே (Macaulay), பென்தாம (Bentham), மில் (Mill), ரூசோ (Rousseau) போன்றோரின் நூல்களைப் படித்ததன்மூலமாக ஜனநாயகம், தேசியப்பற்று ஆகியவை இந்தியர் மனத்தில் நன்கு பதியலாயின. இத்தகைய சீரிய கருததுகளை மனதிற் கொண்டு, இந்திய மக்கள் அவற்றை நனவாக்க ஒன்றுபட்டு உழைக்கவும் முன்வநதனர்.

இதற்கிடையில் தபால், தந்தி, இருப்புப்பாதை போன்ற போக்குவரததுச் சாதனங்களின் வளர்ச்சியும், நாடு தழுவிய பொது நிர்வாகம், பொதுச் சட்டம், பொது நீதிமன்றங்கள் ஆகியவையும் ஒற்றுமை உணர்வு வளர்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கின.

ஆங்கிலக் கல்வி பயின்று, அதேசமயத்தில் நாட்டுப்பற்று கொண்ட இராஜாராம் மோகன்ராய், கேசவசந்திர சென், ஈஸ்வர சந்திர வித்யாசாகரர், தயானந்த சரஸ்வதி, சுவாமி விவேகாநந்தர் போன்ற நல்ல தலைவர்கள் இந்தியரின் மனதில் பண்பாட்டு, அரசியல் விடுதலைக்கான வேட்கையைத் தூண்டலாயினர். பழம்பெரும் பாரதப் பண்பாட்டில் பெருமிதம் கொள்ள இந்திய மக்களைப் பக்குவப் படுத்தினர். அத்தகைய பெருமைமிகு பாரதப் பண்பாட்டை அன்னிய ஆதிக்கத்தி

லிருந்து காக்கவேண்டுமென்ற உத்வேகத்தை நாட்டு மக்களுக்கு ஊட்டிவந்தனர்.

இந்தியாவில் கோலோச்சிய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தவறுகள் இந்தியரிடையே தேசிய உணர்ச்சி வளர மறைமுகமாக உதவி செய்தன. அரசாங்கப் பணியில் இந்தியருக்கு இடமளிக்க மறுத்துவந்ததால், கல்வியில் தேர்ச்சிபெற்ற இந்தியர் ஆங்கில ஆட்சியை வெறுக்கத் தொடங்கினர். எடுத்துக்காட்டாக இந்தியப் பொது நிர்வாகப் பணிக்கான தேர்வில் (I.C.S. Examination) நல்ல முறையில் தேர்ச்சி பெற்றிருந்தும் சுரேந்திரநாத் பானர்ஜீ (Surendranath Banerjee) நிர்வாகத் துறையில் பதவியேற்க முடியாமல் தடுத்துவிட்டனர் ஆங்கிலேயர்கள். சினம்கொண்ட சுரேந்திரநாதர் இந்தியரின் நியாயமான உரிமைகளுக்காகப் போராடுவதற்காக 1876-ல் கல்கத்தாவில் இந்தியா கழகத்தைப் (India Association) நிறுவினார். வெகுவிரைவிலேயே அவர் உருவாக்கிய கழகம் அகில இந்திய தேசிய இயக்கத்தின் கேந்திரமாகத் திகழத் தொடங்கியது,

இந்திய வாணிபத்திற்கும் தொழில்களுக்கும் விரோதமான பொருளாதாரக் கொள்கையைப் பிரிட்டிஷ்காரர்கள் பின்பற்றி வந்தனர். தங்களது சொந்த நலனுக்காக இந்தியாவின் வாணிகத்தையும் தொழில்களையும் வளரவிடாமல் தடுத்தனர்.

அரசியல் துறையில் ஆங்கில ஆட்சியாளர் கையாண்ட அடக்குமுறைக் கொள்கையும் இந்தியரிடையே வெறுப்பை வளர்த்தது. அதிகார வர்க்கத்தினரின் அடக்குமுறைக்கு ஆளாகி அல்லலுற்ற மக்கள் அன்னிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போரிட ஒன்று திரண்டனர். எடுத்துக்காட்டாக ஐரோப்பிய இனத்தவரின் உயர்வை வலியுறுத்துவதாகவும் இந்தியரைத் தாழ்வுபடுத்துவதாயும் அமைந்த இல்பர்ட் மசோதா குறித்து எழுந்த சிக்கலை இந்தியர் பெரிதும் வெறுத்தனர். அதைப்போலவே இந்தியர் படைக்கலன் தாங்குவதற்குத் தடைவிதித்த படைக்கலச் சட்டமும் (Arms Act) பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்க முன்வந்த பத்திரிகைச் சட்டமும், (Press Act) நாட்டுமக்களிடையே எதிர்ப்பை வளர்த்தன. ஆங்கிலேயரின் இத்தகைய அடக்குமுறைகள் மக்களிடையே, அன்னியரின் ஆட்சிக்கு எதிராகப் போரிட ஒற்றுமையுடன் செயல்படவேண்டுமென்ற உத்வேகத்தை இந்தியரிடம் தோற்றுவித்தது.

**இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றம்—1885**

ஓய்வு பெற்ற ஆங்கில அதிகாரியான **அல்லன் ஆக்டேவியன் ஹ்யூம்** (Allan Octavian Hume) என்பவர் இந்திய தேசிய காங்கிரஸ் எனும் அமைப்பை 1885-ல் நிறுவினார். படித்த இளைஞர்களைக் கொண்ட அவ்வியக்கம், இந்தியரின் குறைகளை வெளியிடுவதையும், அக் குறைகளைக் களை வதற்கான வழிவகைகளைப் பரிந்துரைப்பதையும் நோக்க மாகக் கொண்டிருந்தது இத்தகைய ஓர் அமைப்பு, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக வன்முறைப் புரட்சி ஏற்படுவதைத் தடுக்க உதவும் என நம்பிய அரசப் பிரதிநிதியான **டஃப்ரின் பிரபு** (Lord Dufferin) இந்திய தேசிய காங்கிரஸை முழுமனதுடன் வரவேற்றார். இங்ஙனம் ஆட்சியாளரின் ஆசியுடன் இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டம் 1885 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் **டபிள்யூ. சி பானர்ஜியின்** (W. C. Banerjee) தலை மையில் பம்பாயில் கூடியது. அதன்பிறகு ஆண்டுதோறும் கூடிய காங்கிரஸ் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கொண்டிருந்த பற்றுறுதியை வெளிப்படுத்தும் தீர்மானம் நிறைவேற்றியபிறகு, முக்கியமாக அரசாங்கத்தில் இந்தியருக்கு அதிகப் பதவிகளை வழங்க வேண்டுமென்று ஆட்சியாளரிடம் விண்ணப்பித்துக் கொண்டிருந்தது.

காலப்போக்கில் காங்கிரஸில் மிதவாதிகள் (Moderates) தீவிரவாதிகள் (Extremists) என இருபிரிவுகள் தோன்றின. தீவிரவாதிகளின் தலைவரான திலகர் 'சுதந்திரம் (Swaraj) எனது பிறப்புரிமை' என முழக்கமிட்டார். பிரிட்டிஷ் ஆட்சி யிடம் பற்றுறுதி கொண்டவர்களென அறிக்கை வெளியிடு வதும், அரசாங்கத்திடம் விண்ணப்பங்கள் அளிப்பதும் பயன் தராது என நம்பிய திலகர் இந்திய விடுதலைக்காக நேரடிப் போராட்டம் நடத்தவேண்டுமென்று கூறினார். மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்க்கவேண்டி கணேசர் விழாவையும் மராட்டியப பேரரசர் சிவாஜி விழாவையும் கோலாகலமாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார்; ஆனால் கோபாலகிருஷ்ண கோகலேயின் (Gopala Krishna Gokhale) தலைமையிலான மிதவாதிகள் வன்முறையற்ற சட்டமுறையிலான வழியில் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இந்தியர் தன்னாட்சி பெறவேண்டு மென்று கூறிவந்தனர். அடிப்படைக் கொள்கையில் மாறு. பட்டிருந்த தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் காங்கிரஸில் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன.

இதற்கிடையில் திறமையான அரசாங்கம் நடைபெறுவதற்கு வாய்ப்பாகவும் வங்காளத்தில் தேசிய உணர்ச்சியை ஒடுக்கவும், கர்ஸன் பிரபு (Lord Curzon) 1905-ல் வங்காளத்தைத் துண்டாடினார். இந்த வங்காள பிரிவினை நாட்டிற்கு எதிரான செயல் என்று தீவிரவாதிகள் அதனை எதிர்த்துச் சுதேசி இயக்கத்தையும் தொடங்கினர். அவர்களிற் சிலர் பிரிட்டிஷ் ஆட்சியை அழிப்பதற்குத் தீவிரமான வன்முறையைக் கையாள வேண்டுமென்றனர். வங்காளம் கொதித்தெழுந்தது. அன்னியப் பொருட்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஆங்கில அதிகாரிகள் சிலர் கொலை செய்யப்பட்டனர். ஆனால் வன்முறையில் இறங்கிய பயங்கரவாதிகளின் (Terrorists) இயக்கத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் விரைவில் ஒடுக்கியது. தீவிரவாதிகளின் தலைவர்களான, லாலா லஜபதிராய் (Lala Lajpat Rai), அஜித்சிங் (Ajit Singh) ஆகியோர் 1907-ல் பர்மாவிற்கு நாடு கடத்தப்பட்டனர். அதே ஆண்டில் காங்கிரஸ் சூரத்தில் கூடிய போது மிதவாதிகளும் தீவிரவாதிகளும் கொள்கை அடிப்படையில் கடுமையாக மோதிக் கொண்டனர். தேசியவாதிகளிடையே இருந்த ஒற்றுமையின்மையை பிரிடடிஷ் ஆட்சியாளர் பயன்படுத்திக் கொண்டு திலகருக்கு ஆறு ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்தனர். ஆங்கிலக் கப்பல் கம்பெனிகளுக்குப் போட்டியாகக் கப்பலோட்டிய தமிழரான வ. உ. சிதம்பரம் பிள்ளையைச் சிறையில் தள்ளிக் கொடுமை செய்தனர். பிரித்தாளும் சூழ்ச்சியில் வல்லவர்களான பிரிட்டிஷார் தேசிய இயக்கத்திலிருந்து முஸ்லிம்களைப் பிரிக்க முழுமுச்சாக முயன்று பெருமளவு வெற்றியும் பெற்றனர். அதன் விளைவாக 1906-ல் முஸ்லிம் லீக் உதயமானது. அது சுதேசி இயக்கத்தைக் (Swadeshi) கண்டித்ததுடன் வங்காள பிரிவினைக்கும் பிரிட்டிஷ் ஆட்சிக்கும் ஆதரவு தர முன் வந்தது. 1909-ல் ஆங்கில ஆட்சியாளர் கொண்டு வந்த மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களின் மூலமாக முஸ்லிம்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் (Separate electorate) கிடைத்தது. அதன் மூலமாக இந்து முஸ்லிம்களிடையே வேற்றுமை வளரவும் இறுதியில் முஸ்லிம்களுக்கென்று தனி நாடு பாகிஸ்தான் பிரியவும் வழி பிறந்தது.

1914-ல் முதல் உலகப் பெரும் போர் மூண்ட போது பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்கவும் போர் முயற்சிகளுக்கு உதவி செய்யவும் காங்கிரஸ் முன் வந்தது. இந்நிலையில் டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார், 'தன்னாட்சி இயக்கத்தை'(Home Rule Movement) 1915-16-ல் துவக்கினார். திலகரின் ஆதர

வையும் பெற்ற தன்னாட்சி இயக்கம் நன்கு வேரூன்றி வளரத் தொடங்கியது. மேலும் அன்னிபெசன்ட் அம்மையாரின் அருந் தொண்டு காரணமாக காங்கிரஸில் மிதவாதிகளும் தீவிரவாதி களும் 1915-ல் ஒன்று சேர்ந்தனர்.

1916-ல் முஸ்லிம் லீகும் காங்கிரஸும் ஒன்று சேர்ந்து தன் னாட்சி வேண்டுமென்று கேட்கத் தொடங்கின.

**காந்தி சகாப்தம் (1919 1947)**

**மோகன் தாஸ் கரம் சந்த் காந்தி** (Mohan Das Karam Chand Gandhi) 1915-லிருந்து இந்திய தேசிய இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தலானார். அது வரையில் அண்ணல் காந்தி அடிகள் ஆப்பிரிக்காவிலே வெள்ளையரின் நிறவெறிக் கொடுமையிலிருந்து இந்தியரின் உரிமையைக் காக்க அறப் போர் நடத்தி வந்தார். அங்கேதான் உலகப் புகழ் பெற்ற சத்தியாக்கிரக (Satyagraha) முறையை உருவாக்கி வெள்ளை யரின் கொடுங்கோன்மைக் கெதிராகப் பயன்படுத்தினார். கொடுமைக்குள்ளானவர்கள் கொடுங்கோலருக்கு எதிராகச் சாத்வீக மறுப்பு, (Passive Resistance), ஒத்துழையாமை (Non-Co-operation) முதலிய வன்முறையற்ற வழிகளைப் பயன் படுத்தும் நூதனப் போர் முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். 1915-ல் இந்தியா திரும்பிய காந்தியடிகள் மிதவாதி களின் பிரிவில் சேர்ந்து கோகலேயைத் தமது குருவாகவும், வழி காட்டியாகவும் கொண்டார். உலகப் போரின் போது அவர் அரசாங்கத்தின் போர் முயற்சிகளை ஆதரித்தார் போர் முடிந் ததும் காங்கிரஸ் செய்த உதவிக்காக இந்தியர்களுக்கு பிரிட்டிஷ் காரர்கள் தன்னாட்சி வழங்குவர் எனக் காந்தி நம்பியிருந்தார். போர் முடிந்ததும் 1919-ல் இந்திய அரசாங்க சட்டத்தைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றியது. ஓரளவு பொறுப் பாட்சியை இந்தியருக்கு வழங்க அச்சட்டம் வழி வகுத்த போதிலும், அதனால் மன நிறைவு பெறாத இந்திய மக்கள் கிளர்ச்சிகளிலும் வேலை நிறுத்தங்களிலும் ஈடுபட்டனர். அவற்றை ஒடுக்குவதற்கு இந்திய அரசாங்கம் அடக்குமுறைச் சட்டங்களை அள்ளி வீசியது.

1919-ல் ரௌலட் சட்டத்தைக் கொண்டு வந்து (Rowlatt Act) இந்தியரிடமிருந்த அடிப்படையான தனி மனித உரிமை யையும் தட்டிப் பறித்தது. உடனே காந்தியடிகள் மனிதத்

தன்மையற்ற மிருகத்தனமானது என அச்சட்டத்தைக் கண்டனம் செய்து அதனை எதிர்க்கும் வகையில் உண்ணா விரதம் இருக்குமாறும் மறியல் கிளர்ச்சி செய்யுமாறும் சக இந்தியரை வேண்டிக் கொண்டார் அதற்கிணங்க டெல்லி, லாகூர், அமிர்தசரஸ் ஆகிய இடங்களில் ஊர்வலங்களும் கூட்டங்களும் நடைபெற்றன.

காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்த நேரத்தில் முஸ்லிம்களும் கிலாபத் இயக்கத்தைத் துவக்கினர். துருக்கிய சுல்தானின் உரிமைகளைப் பிரிட்டிஷ்காரர் பறித்துக் கொண்டதை எதிர்த்தே இந்திய முஸ்லிம்கள் கிலாபத் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். காந்தியடிகளும் கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவு தர முன் வந்தார். . கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்கு அரசாங்கம் அடக்குமுறைகளைக் கையாளத் தொடங்கியது. பஞ்சாபில் ஜாலியன்வாலா பாக் எனுமிடத்தில் ஆயுதம் தாங்காத அப்பாவி மக்கள் மீது பிரிட்டிஷ் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதன் விளைவாக 379 பேர் அவ்விடத்திலேயே மாண்டனர். இரண்டு மடங்கு பேர் காயமுற்றனர். இதுவே **'ஜாலியன்வாலா பாக் படுகொலை'**யாகும். இக் கொடுஞ்செயலை தொடர்ந்து பஞ்சாபில் இராணுவ தர்பார் ஆட்சி நடந்தது.

இத் தருணத்தில் 1921-ல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வந்தார். அப்போது நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கும் கதவடைப்பிற்கும் காங்கிரஸ் ஏற்பாடு செய்தது. ஆனால் இந்த ஹர்தால் அமைதியாக நடக்க வேண்டுமென்று காந்தியடிகள் நினைத்ததற்கு மாறாகச் சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன சௌரி சௌராவில் (Chauri Chaura) வெறி கொண்ட மக்கள் கூட்டத்தினர் 22 காவல் துறையினரைத் தீயிலிட்டுக் கொன்றனர். இதை அறிந்து துன்புற்ற காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தி விட்டார். தேசிய இயக்கமொன்றைத் திடீரென இடையில் நிறுத்தியதைக் கண்டு சில காங்கிரஸ் தலைவர்கள் வெறுப்படைந்தனர். சித்தரஞ்சன் தாஸ் (C. R. Das) மோத்திலால் நேரு (Motilal Nehru) போன்ற காங்கிரஸ் தலைவர்கள் சுயராஜ்யக் கட்சி எனும் புதிய கட்சியையும் தோற்றுவித்தனர். சட்டசபைகளுக்குச் செல்வதும், உள்ளிருந்து கொண்டே ஆங்கில அரசாங்கத்துடன் போரிடுவதும் அக் கட்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது.

1919-ல் கொண்டு வரப்பட்ட அரசியல் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஆராயும் பொருட்டு 1927-ல் சர்

ஜான் சைமன் தலைமையில் தூதுக்குழு ஒன்றைப் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிற்கு அனுப்பியது. அக் குழுவில் இந்தியர் எவரும் இடம் பெறவில்லை. அதனால் காங்கிரஸும் மற்ற இந்திய அரசியல் கட்சிகளும் சைமன் குழுவுடன் ஒத்துழைக்க மறுத்து அதனைப் புறக்கணித்த (boycott). சைமன் குழு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பம்பாயில் கதவடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடந்தன. சைமன் குழு உறுப்பினர்கள் சென்ற இடங்களிலெல்லாம் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடந்தது 1928-ல் கல்கத்தாவில் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்ற போது ஓராண்டுக் காலத்திற்குள் இந்தியாவிற்குப் பிரிட்டிஷ் அரசின்கீழ் தனியாட்சி அல்லது டொமினியன் அந்தஸ்து அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் காங்கிரஸின் கோரிக்கையை ஏகாதிபத்திய ஆட்சியாளர் மறுத்து விட்டனர். அதனால் 1929 ல் லாகூரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பூரண சுயராஜ்யம் அல்லது முழு சுயாட்சி (பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து முழு விடுதலை) பெறுவதே இந்தியரின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது அத்தகைய முழு விடுதலை பெறுவதற்கு வேண்டிய திட்டத்தை வகுக்குமாறு காந்திஜியை அம் மாநாடு கேட்டுக் கொண்டது.

அன்னிபெசன்ட் அம்மையாரால் மகாத்மா என அன்புடன் அழைக்கப்பட்ட காந்திஜி பிரிட்டிஷ் ஆட்சியைப் பாரத மண்ணிலிருந்து வெளியேற்றுவதற்குத் தமது சத்யாக்கிரக இயக்கத்தின் இரண்டாவது கட்டத்தை 1930-ல் துவக்கினார். இதுவே சட்ட மறுப்பு இயக்கமாகும். குஜராத்துக் கரையிலுள்ள தண்டிக்கு ஊர்வலமாகச் சென்று கடல்நீரை எடுத்து உப்புக் காய்ச்சுவதன் மூலம் உப்புச் சட்டத்தை உடைத்தெறிய முன் வந்தார். மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரை நாட்டு மக்களைத் தட்டியெழுப்பியது. ஆயிரமாயிரம் சத்யாக்கிரகிகள் சட்ட மறுப்பு இயக்கத்தில் குதித்தனர். அவர்களிற் பலரை ஆட்சியாளர் கைது செய்தனர். தமிழ் நாட்டில் ராஜாஜியின் தலைமையில் சத்யாக்கிரகத் தொண்டர்கள் வேதாரண்யம் நோக்கிச் சென்றனர். நாமக்கல் கவிஞர் இயற்றிய "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" எனும் உணர்ச்சியூட்டும் பாடலை முழக்கிக் கொண்டு வேதாரண்யம் அடைந்த சத்யாக்கிரக் வீரர்கள் உப்பெடுத்துச் சட்டத்தை மீறினர். நாட்டின் பல பகுதிகளிலும் சட்ட மீறல்கள் நிகழ்ந்த வண்ணமிருந்தன, அரசாங்கம் அடக்கு முறைகளை அவிழ்த்து

விட்டது. கூட்டங்களை கலைக்கக் காவல் படையினர் தடியடி செய்தனர். துப்பாக்கியால் சுட்டனர் காந்திஜியையும் மற்ற காங்கிரஸ் தலைவர்களையும் சிறையிலடைத்தனர். அதன் மூலம் சுட்ட மறுப்பு இயக்கத்தை நசுக்கி விட முயன்றனர்

இதற்கிடையில் சைமன் குழுவின் பரிந்துரைக்கிணங்க 1930-ல் வட்டமேஜை மாநாடு கூட்டப்பட்டது. இந்தியாவில் இருந்த நிலைமையை விவாதிக்கவும் இந்திய விடுதலைப் பிரச்சினைக்குத் தீர்வுக்காணவும் வட்டமேஜை மாநாட்டை லண்டனில் கூட்டினர் பிரிட்டிஷ் அரசாங்கத்தார். பெருந் தலைவர்களெல்லாம் சிறையில் இருந்ததால் இந்த மாநாட்டைக் காங்கிரஸ் புறகணித்தது. எனவே, அரசப் பிரதிநிதியான இர்வின்பிரபு காந்திஜியுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். இந்த காந்தி-இர்வின் ஒப்பந் தந்தின்படி அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலையடைந் தனர். சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்திவைக்கப்பட்டது. 1931-ல் கூடிய இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தியடிகள் கலந்துகொண்டார். ஆனால் முஸ்லிம்களின் எதிர்ப்புக் காரணமாக இந்த மாநாட்டில் உருப்படியாக ஒன்றும் செய்ய முடியவில்லை. நாடு திரும்பிய காந்தியடிகள் மீண்டும் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடர்ந்தார். ஆயிரக்கணக் கான ஆண்களும் பெண்களும் அதில் பங்கேற்றுச் சிறை சென்றனர். ஓரிரு வன்முறைக் கிளர்ச்சிகளைத் தவிரப் பொது வாகப் போராட்டம் அமைதிவழியிலேயே நடைபெற்றது என்றாலும், அதனை ஒடுக்குவதற்கு அரசாங்கம் கேவலமான மிருகத்தனமான அடக்குமுறைகளைக் கையாண்டது. சட்ட மறுப்பு இயக்கம் சட்டங்களை அழிக்கும் இயக்கமல்ல. வன்முறைக் குற்றங்களை வளர்க்கும் இயக்கமல்ல சட்ட மறுப்புத் தொண்டர்கள் தங்கள் விருப்பம்போல் சட்டங்களை மீறித் தகாத செயல்களில் ஈடுபடவில்லை. மக்களுடைய உரிமைகளை அல்லது உடைமைகளைப் பறிக்கவில்லை. அரசாங்கச் சட்டங்கள் மக்களின் ஒப்புதலைப் பெற்றவை யல்ல என்பதை எடுத்துக் காட்டவும் அவை மக்களின் நலன் களைப் பேணுபவை அல்ல என்பதை எடுத்துக் காட்டி அரசாங்கத்தை எதிர்க்கவும் ஆன, கருவியாகவே சட்ட மறுப்பு இயக்கம் வளர்ந்தது. தடை ஆணைகளை மீறி ஊர் வலம் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் நடத்துதல், அன்னியப பொருள்களை ஒதுக்குதல், மதுக்கடைகள்முன் மறியல் செய்தல், கொடிக்கு வணக்கம் செலுத்துதல், உப்பு எடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் சட்ட மறுப்பாளர்கள் ஈடு

படடனர். அவர்களை ஒடுக்குவதற்குத்தான் அரசாங்கம் தடியடி தர்பார் நடத்தியது. கொடூரமான முறைகளைப் பயன் படுத்தி மக்களின் உரிமைகளைப் பறிக்க முற்பட்டது. இதற் கிடையில் பிரிட்டிஷ் பிரதமர் ராம்ஸே மார்க்டனால்டு (Ramsay MacDonald) 1932-ல் பரபரப்பூட்டும் "**வகுப்புகளுக்கான தீர்ப்பினை**" (Communal Award) வெளியிட்டார். அதன் மூல மாக இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்கும் (Depressed Classes) தனிப் பிரதிநிதித்துவம் வழங்க அரசாங்கம் முன் வந்தது. காந்திஜி அதனை எதிர்த்தார். ஆனால் ஷெட்யூல்டு வகுப்பாரின் தலைவரான டாக்டர் அம்பேத்கார் (Dr. Ambedkar) அதனை வரவேற்றார். வகுப்புக்களுக்கான தீர்ப்பினை எதிர்க்கும் வகையில் காந்தியடிகள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். இறுதியில் காந்திஜியும் டாக்டர் அம்பேத்காரும் கூடிபேசி **பூனா ஒப்பந்தம்** செய்து கொண்டனர். அதன் விளைவாகத் தாழ்த்தப்பட்டோருக் கான தனிப் பிரதிநிதித்துவம் கைவிடப்பட்டது. ஆயினும் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்குச் சட்ட சபைகளில் தனி யிடங்கள் ஒதுக்க ஏற்பாடாகியது. 1932-ல் மூன்றாவது வட்ட மேஜை மாநாடு கூடியது. ஆனால் காங்கிரஸ் பிரதிநிதி எவரும் அதில் பங்குகொள்ளவில்லை. எனினும் மூன்று வட்டமேஜை மாநாடுகள் எடுத்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு 1935-ல் இந்திய அரசாங்கச் சட்டத்தைப் பிரிட்டிஷ் பாராளு மன்றம் நிறைவேற்றியது.

1935 ஆம் ஆண்டு அரசாங்கச் சட்டம் கூட்டாட்சி (federal) அரசியல் முறையை வகுத்தது. மத்தியில் இரட்டை யாட்சியும் (dyarchy) மாநிலங்களில் சுயாட்சியும் கொண்டு வரத் திட்டமிட்டது. ஆனால் இந்திய மன்னர்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டதால் மத்தியில் கூட்டாட்சி ஏற்பட வழியில்லாமல் போய்விட்டது. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் திட்டத்தின் கூட்டாட்சிப் பகுதியைச் செயல்படுத்த முடியாமற் போனபோதிலும் அதன் மற்றப் பகுதிகள் 1937-ல் நடை முறைக்கு வந்தன. சட்டசபைகளுக்கான தேர்தல்கள் நடந்தன. காங்கிரஸும் முஸ்லிம் லீகும் அவற்றில் கலந்து கொண்டன. மொத்தம் பதினொரு மாநிலங்களில் ஆறு மாநிலச் சட்டசபைகளில் பெரும்பான்மை இடங்களைப் பிடித்த காங்கிரஸ் அங்கெல்லாம் மந்திரி சபைகளை அமைத்தது. சில மாநிலங்களில் முஸ்லிம் லீக் பெரும்பான்மை பலம் பெற்றது. காங்கிரஸ் பெரும்பான்மை பலம் கொண்ட மாநிலங்களில் காந்திஜியின் நிர்மானத் திட்டங்களான காதி

இயக்க வளர்ச்சி, மதுவிலக்கு, ஆதித்திராவிடர் முன்னேற்றம் Harijan Uplift) ஆகியவற்றை நிறைவேற்றி வைக்கக் காங்கிரஸ் அமைச்சுகள் அரும்பாடுபட்டன.

1939-ல் இரண்டாவது உலகப்போர் வெடித்தபோது இந்தியரைக் கலக்காமலேயே பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை அச்சு நாடுகளுக்கெதிரான போரில் ஈடுபடுத்தியது. அதனால் மாநிலங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் பதவியிலிருந்து விலகியதுடன் அரசாங்கத்தின் போர் முயற்சிகளுக்கு ஆதரவு தர காங்கிரஸ் மறுத்தது. இந்தியரின் ஆதரவைப் பெறும் நேரக்கத்துடன் ஆங்கில ஆட்சியாளர் ஆகஸ்ட் திட்டத்தை (August Offer) அறிவித்தனர். ஆயினும் அத் திட்டத்தை ஏற்க மறுத்து காந்தியடிகள் தனிநபர் சட்டமறுப்பு இயக்கத்தைத் (Individual Satyagraha) தொடங்கினார். போரின் போக்கு நேசநாடுகளுக்கும் கவலை தருவதாக இருந்ததால் இந்தியரின் முழு ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் கிரிப்ஸ் தூதுக்குழு (Cripps Mission) இந்தியாவிற்கு வந்தது. போர் ஆயத்தங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தந்தால் போருக்குப்பின் இந்தியாவிற்கு விடுதலை தரும் திட்டத்தை அக்குழு வெளியிட்டது. "ஆனால் மூழ்கிக் கொண்டிருக்கும் பாங்கின்மீது பிந்திய தேதியிட்டு வழங்கப்பட்ட காசோலை" எனக் காந்திஜி வருணித்த கிரிப்ஸ் திட்டம் இந்தியருக்கு மன நிறைவு தரவில்லை. கிரிப்ஸின் தூது பயனளிக்கத்தவறியதை அடுத்து 1942–ல் காந்திஜி 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் (Quit India) துவக்கினார். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி உடனடியாக முடிவுபெற வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். 1942 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் தேதி வார்தாவில் கூடிய காங்கிரஸ் செயற்குழுவில் வரலாற்றுச் சிறப்புடைய 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆகஸ்ட் மாதம் 8-ம் தேதி பம்பாய் காங்கிரஸ் அத்தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. காந்திஜியையும் மற்ற காங்கிரஸ் தலைவர்களையும் அரசாங்கம் கைது செய்து சிறைவைத்தது.

புரட்சியின்போது வன்முறைச் செயல்கள் நிகழ்ந்தன. அரசாங்கச் சொத்துகளுக்குக் கடும் தேசங்கள் ஏற்பட்டன. இந்த வன்முறைச் செயல்களுக்குக் காந்திஜியோ, மற்ற தேசியத் தலைவர்களோ பொறுப்பல்ல. அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததால் தகுந்த தலைமையின்றித் தவித்த விடுதலை வீரர்கள் வன்முறையில் இறங்கிவிட்டனர் எவ்வாறெனினும் 'செய் அல்லது செத்துமடி' (Do or Die) என்று

அறைகூவல் விடுத்த காந்தியடிகள் போராட்டத்திற்கான நெறி முறைகளை வகுப்பதற்குள் சிறைப்பட்டதால் செய்வதறியாத தொண்டர்கள் வெறுக்கத்தக்க வன்முறைகளில் ஈடுபட்டனர். புரட்சிக் கலங்களை ஒடுக்குவதற்காக அரசாங்கம் கொடுமை யான அடக்கு முறைகளைக் கையாண்டது. ஆயிரக்கணக் கானோரைச் சிறைப்படுத்தியது. சிறைச்சாலைகள் நிறைந்து வழிந்தன. தொண்டர்கள் பலரைச் சித்திரவதை செய்தது. இத்தகைய அடக்கு முறைகளால் ஆகஸ்ட்டுப் புரட்சி ஓரளவு ஒடுக்கப்பட்டது.

இதற்கிடையில் மாபெரும் தேசபக்தரும், இரண்டுமுறை காங்கிரஸின் தலைமைப் பொறுப்பை ஏற்றவருமான **சுபாஷ் சந்திரபோஸ்** ஜப்பானுக்குச் சென்று அங்கே இந்திய தேசிய ராணுவத்தை (I.N.A.) உருவாக்கினார். ஜப்பானியர் பிடித்துச் சென்ற போர்க் கைதிகளிலிருந்து உருவாக்கிய அந்த இந்திய தேசிய ராணுவத்துடன் வந்து இந்தியாவின் வடகிழக்கில் மணிப்பூர் பகுதியைத் தாக்கினார். ஆனால் இப் படை யெடுப்பைப் பிரிட்டிஷ் படை முறியடித்தது. சுபாஷ் சந்திர போஸின் நடவடிக்கைகளைக் கண்ட பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் தங்கள் ஏகாதிபத்தியத்தைக் காப்பதற்கு இந்தியப் படைகளை நம்பமுடியாது என்பதை உணரத் தொடங்கினர்.

இரண்டாவது உலகப்போர் முடிவுற்ற பின்னர் பிரிட்டனில் தொழிற்கட்சி பதவியேற்றது. அப்போது அக்கட்சியின் தலைவராகவும் பிரிட்டனின் பிரதமராகவும் இருந்த அட்லி (Attlee) அதற்கு முன்பிருந்த கன்சர்வேடிவ் கட்சித் தலைவரான (Conservative) சர். வின்ஸ்டன் சர்ச்சிலைப் போல் (Sir Winston Churchill) அல்லாமல் இந்தியாவின்மீது நல்லெண்ணம் கொண்டவர். அவர் இந்தியப் பிரச்சினைக்குத் தகுந்த தீர்வு காணும் பொருட்டுக் காபினெட் தூதுக்குழுவை (Cabinet Mission) 1946–ல் இந்தியாவிற்கு அனுப்பினார். இந்துக்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழும், அநேகமாகத் தன்னாட்சி கொண்ட, மாநிலங்களைக் கொண்ட கூட்டாட்சி அமைக்கும் யோசனையைக் காபினெட் தூதுக்குழு வெளி யிட்டது. இந்த யோசனைப்படி அமையவிருந்த இடைக்கால அரசாங்கத்தில் சேர முஸ்லிம் லீக் (Muslim League) முன் வந்த போதிலும் காங்கிரஸ் அதனை ஏற்க மறுத்தது. காங்கிரஸ் இல்லாமல் இடைக்கால அரசாங்கத்தை அமைக்கத் தயங்கிய பிரிட்டிஷ் அரசாங்கம் சிறிது காலத்திற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி தனியாக அரசாங்கம் அமைக்க அனுமதி தந்தது,

இதைக்கண்டு ஆத்திரமடைந்த முஸ்லிம் லீகினர் முகம்மது ஜின்னா தலைமையில் (Muhammad Ali Jinnah) 'நேரடி நடவடிக்கை'யில் (Direct Action) இறங்கினர். இந்த நேரடி நடவடிக்கையில் பஞ்சாபிலும் வங்காளத்திலும் வாழ்ந்த இந்துக்கள் பலரை முஸ்லிம்கள் கொன்று குவித்தனர். இந்துக்களும் எதிர் நடவடிக்கையில் ஈடுபட்டு முஸ்லிம்களைக் கொல்ல முற்பட்டனர். இத்தகைய வெறிச்செயல்களைக் கண்டு மனம் நொந்த காந்தியடிகள் வகுப்புவாதக் கலவரங்களைத் தடுப்பதற்காக வங்காளத்தில் பாதயாத்திரை (Padayatra) மேற்கொண்டார். இறுதியில் கலவரங்கள் ஒருவாறு ஓய்ந்தன. காங்கிரஸும் லீகும் இடைக்கால அரசாங்கத்தை அமைக்க முன்வந்தனர். ஆனால் விரைவிலேயே இருகட்சித் தலைவர்களிடையே வேற்றுமை வளர்ந்தன. முகமதுஅலி ஜின்னா தனிநாடு கோரினார். இந்தியாவிற்குப் புதிய அரசியல் அமைப்புச் சட்டமன்றத்தில் (Constituent Assembly) சேர ஜின்னாவும் முஸ்லிம் லீகினரும் மறுத்தனர். இதற்கிடையில் 1948 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் அதிகாரம் இந்தியர் கைக்கு மாற்றப்படும் என அட்லி அறிவித்தார். இதைத் தொடர்ந்து முஸ்லிம் லீகினர் மற்றுமொரு முறை 'நேரடி நடவடிக்கையில்' இறங்கினர். அதன் விளைவாகச் சாவரக்கன் சதுராடத் தொடங்கினான். சொத்துகள் சாம்பலாயின. இருள் சூழ்ந்த இந்நிலையில் 1947 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அரசப் பிரதிநிதியாகப் பொறுப்பேற்ற மௌண்ட்பேட்டன் பிரபு (Lord Mountbatten) காங்கிரஸ் தலைவர்களுடனும் முஸ்லிம் லீக் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தி நாட்டைத் துண்டாக்கும் யோசனையைக் கூறினார். இந்தியாவைப் பாரதம் என்றும் பாகிஸ்தான் என்றும் இரண்டு சுதந்திர நாடுகளாகப் பிரிப்பதைத் தவிர வேறுவழியில்லை என்று கூறினார். காந்தியடிகள் இந்த யோசனையை விரும்பாதபோதிலும் இறுதியில் இரு கட்சிகளும் மவுண்ட்பாட்டனின் யோசனையை ஏற்றுக்கொண்டன. பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்திய விடுதலை மசோதாவை 1947-ல் நிறைவேற்றியது. இங்ஙனம் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாளன்று இந்தியா அன்னிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை அடைந்தது. ஆனர்ல் பிரிவினை என்னும் பெரும் விலை கொடுத்தே அந்த விடுதலையைப் பெற்றது.

**விடுதலைப் போரில் தமிழ்நாடு**

இந்திய விடுதலைப் போரில் தமிழ்நாடு தனக்குரிய பங்கினை வகிக்கின்றது. விடுதலைப்போரும் இந்திய தேசிய

காங்கிரஸும் பிரித்துப பேசமுடியாதவை என்று சொல்லக் கூடிய சிறப்புவாய்ந்த தேசிய காங்கிரஸை உருவாக்க வேண்டு மென்ற கருத்தைத் தந்ததே தமிழ்நாடுதான் 1884-ல் அடையாற்றில் கூடிய பிரம்மஞானசபைக் கூட்டத்தில்தான் இந்திய தேசிய காங்கிரஸைத் துவக்க வேண்டுமென்ற கருத்து உதயமானது அதற்கும் முன்னரே தேசியம்பற்றிப் பேசிய தற்காகச் சேலத்துச் செம்மல் விஜயராகவாச்சாரியார் 1852-ல் சிறையிலடைக்கப்பட்டார். காங்கிரஸில் தீவிரவாதியாக விருந்த பாலகங்காதர திலகருக்குத் தமிழ் நாட்டில் பல தொண்டர்கள் இருந்தனர். நாட்டுப்பற்று மிகுந்த நற்றமிழ்க் கவிஞன் பாரதி, திலகரின் தீரங்கண்டு எழுச்சி கொண்டார். கப்பலோட்டிய தமிழ் வ. உ. சிதம்பரம் பிள்ளையும் சுதேசி இயக்கத்தை ஆதரித்து வளர்த்ததுடன் வெள்ளைப் பரங்கி யரின் வாணிபக் கொட்டத்தை அடக்க வங்கக் கடலில் நாவாய்ச் செலுத்தும் நல்லதொரு நிறுவனத்தைத் தூத்துக்குடி யில் துவக்கினார், அத்தமிழ்ப் பெருமகனாரும், அவர் தோழர் களான வ.வே.சு. அய்யரும், சுப்பிரமணிய சிவாவும் சிறை யிலே வாடி நொந்தனர். அவரது தொண்டர்களின் ஒருவரான வாஞ்சிநாதன் திருநெல்வேலிச் சீமையின் ஆட்சியாளரான ஆஷ் (Ash) எனும் ஆங்கிலேயனை வெடிகுண்டு வீசிக் கொன்று விட்டுத் தன் இன்னுயிரையும் மாய்த்துக் கொண் டான். டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கத்திற்குத் தமிழ்நாட்டில் தாராள உதவி கிடைத்தது. தமிழ்த்தென்றல் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, ரங்கசாமி அய்யங்கார் ஆகியோர் அளப் பரிய சேவை செய்தனர். குறிப்பாக நாட்டுப்பற்றின் நாயக னாக விருந்த திரு. வி. க. **'தேச பக்தன்'** எனும் தமது ஏட்டில் கனல் தெரிக்கும் கட்டுரைகள் மூலம் தமிழர்களைத் தட்டி யெழுப்பினார். காந்தி அடிகளும் அரசியல்வானில் அடி யெடுத்து வைத்த நாளிலிருந்து அறிவார்ந்த ஆதரவை நற்றமிழ் நாட்டிலிருந்து பெற்றார். அவரைப் பினபற்ற ஆயிரமாயிரம், தொணடர்கள் இங்கே குவிந்தனர். சாதிக் சழக்கொழித்துச் சமுதாய நீதியை நிலைநாட்டவந்த சீர்திருத்தச் செம்மல் தந்தை பெரியாரும் முதலில காங்கிரஸை ஆதரித்துக் காந்தி பக்தராக இருந்தார். தீண்டாமை யெனும் கொடுமைக்கு எதிராக வைக்கம் போரிலே பெரும்பங்கு கொண்டு அண்ணல் காந்தி யின் அன்பாதரவைப் பெற்றார். காந்தியின் உப்புச் சத்யாக் கிரகம் தமிழ்நாட்டில் எவ்வாறு எதிரொலித்தது என்பதை ஏற்கெனவே கண்டோம். மூதறிஞர் ராஜாஜியின் தலைமையில் வேதாரண்ய அறப்போர் நடந்தது. சத்யமூர்த்தி, கர்மவீரர்

காமராஜர், ம. பொ. சிவஞான கிராமணியார், வரதராஜுலு நாயுடு போன்ற பலர் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்றுச் சிறை சென்றனர். காந்தி அடிகள் தலைமையில் எழுச்சி கண்ட நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை தமது எளிய இனிய பாடல்களால் அண்ணலின் அரிய கருத்துக்களை மக்களிடையே பரப்பினார். 1942-ல் 'வெள்ளையனே வெளியேறு' எனும் இயக்கத்திலும் தமிழ் மக்கள் திரளாகப் பங்கு கொண்டனர். தடியடியும் சிறைத் தண்டனையும் தயங்காது ஏற்றனர். கொடி காத்த குமரனை நாடு மறக்க முடியாது. சுதந்திர வீரர் சுபாஷ் சந்திரபோஸ் உருவாக்கிய இந்திய தேசிய இராணுவத்திற்குத் தமிழகத்தில் முத்துராமலிங்கத் தேவர் போன்றோர் ஆதரவு காட்டினர். இறுதியாக நாடு விடுதலை பெற்றதும் முதல் தலைமை ஆளுநரை, ராஜாஜி எனும் நல்ல தலைவரை அளித்துப் பெருமை கொண்டதும் கன்னித் தமிழ் நாடேயாகும்.

## தென்கிழக்காசிய நாடுகளில் தேசிய இயக்கத்தின் வளர்ச்சி

ஆசியா பெரு நிலப்பரப்பின் கீழைப் பாதியில் சீனவும் ஜப்பானும் இருக்கின்றன. இந்த இரு பெரும் நாடுகளுடன் பர்மா, மலேசியா, சயாம், இந்தோனீசியா, பிலிப்பைன்ஸ், கிழக்கிந்தியத் தீவுகள் அல்லது இந்கதானேஷியா போன்ற அனைத்தும் தென் கிழக்காசிய நாடுகள் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படுகின்றன. தென் கிழக்காசிய நாடுகளனைத்தும் இருபதாம் நூற்றுண்டில் அந்நியர் ஆட்சி யினின்றும் விடுதலையடைந்தன.

இடைக்கால வரலாற்றினை பார்க்கும்போது, தேசிய உணர்வு அந்நாடுகளில் தோன்றியிருக்கவில்லை என்பது புலப்படும். அப்பகுதியின் பல நாடுகளிலும் ஆட்சி புரிந்த குறுநில மன்னர்கள் ஒருவரோடொருவர் போரிடுவதிலேயே தங்கள் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டனர். அத்தகு ஒற்றுமையற்ற நிலையைப் பயன்படுத்திக் கொண்ட ஐரோப்பிய நாடுகள் வெகு எளிதாகத் தென்கிழக்காசிய நாடுகளனைத்தையும் வென்று தங்களது குடியேற்றங்களை அமைத்துக்கொண்டனர். 19 ஆம் நூற்றுண்ன் இறுதிக்குள் சயாமைத தவிர ஏனைய நாடுகள் அனைத்தையும் ஐரோப்பிய

நாடுகளின் குடியேற்றங்களாயின. ஐரோப்பியர்கள் சுதேசிகளின் தேசிய உணர்வை மதிக்கவில்லை. முரட்டுத்தனமாக மாக அவர்களை அடக்கி, ஒரு நூற்றுண்டிற்கும் அதிகமாக அந் நாடுகளின் செல்வ தளங்களைச் சுரண்டி தங்களது மேன்மைக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். காலப் போக்கில் வங்களது அடிமைத்தனம் என்ற ஆழ்துயிலிலிருந்து விழித்து, அண்டை நாடுகளில் ஏற்பட்டுள்ள விழிப்ணர்ச்சியால் தூண்டப்பட்டு, தேசிய வேட்கை வளரப்பெற்று தங்களது உரிமைக்காகப் போரடத் தொடங்கினர்.

தென் கிழக்காசிய நாடுகளில் தேசிய விழிப்புணர்வினைத் தட்டியெழுப்பிய காரணங்கள் பலவாகும் அடிமைப் படுத்திய ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரச் சுரண்டல், சுதேசிகளுக்கு அரசியல் அதிகாரங்கள் மறுத்தல், அதிகாரங் களனைத்தையும் ஒரு கில ஐரோப்பிய அதிகாரிகளிடமே குவித்து வைத்திருத்தல், சுதேசிகளுக்கு உயர் கல்வி பயிலும் வாய்ப்புகள் இல்லாத நிலை, கற்றறிந்தவர்களின் எண்ணிக்கை அதிகமானபோது, அரசியல் செல்வாக்கற்ற தன்மையை அவர்கள் உணர்ந்து கொண்டது போன்ற பலவித நிலைகள் மக்களிடையே மன நிறைவின்மை தோனறக் காரணங்களாக அமைந்தன.

மேலை நாட்டு முறையில் கற்ற தாராளக் கல்வி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற எழுச்சிமிக்க புதிய கருத்துகளை இளைஞர்கள் உள்ளத்தில் உருவாக்கியிருந்தது. மேலை நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளைபபற்றி அவர்கள் படித்தபோது, அவர்களிடையே நாட்டுப்பற்றும், சுதந்திர வேட்கையும் எழுந்தது. அறிவியல் விந்தைகளான தந்தி, இரயில்பாதைகள் மறறும் செய்தி பத்திரிகைகளை மேலையரின் ஆட்சி அந்நாடுகளில் ஏற்படுத்தியிருந்தன. அவை அனைத்தும் புதுமைக் கருத்துக்கள் மக்களிடையே பரவி நிலை பெறப் பெரிதும் உதவின. இருப்பினும் கற்றறிந்த ஒரு சிலரிடையே மட்டுமே அத்தகைய அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருந்தது. சீனா, இந்தியா போன்ற நாடுகளில் வளர்ந்து விட்ட தேசிய எழுச்சியும், தேசிய இயக்கமும் அவர்களிடையே புதிய தெம்பினை உருவாக்கின. இந்திய தேசிய இயக்கத்தின் தனிப் பெரும் தலைவராக இருந்த காந்திஜி போன்றோர் அவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்தார். மாபெரும் ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றான ருஷியாவை 1905 ஆம் ஆண்டில் ஜப்பான் போரில் வென்றது. இந்த வெற்றியின் விளைவாக மேலை

யரைப போர்க்களத்தில் வெற்றி காண ஆசிய மக்களால் முடியாது என்றிருந்த தவறான கருத்து மறைந்தது. தென் கிழக்காசிய நாடுகளின் மக்களிடையே தங்களாலும் ஆடசியதிகாரம் பெற்றிருக்கின்ற வெள்ளயரை வீழ்த்த முடியும் என்ற புத்துணர்ச்சி தோன்றிப் பரவியது. 'மக்களாட்சிக் கொள்கைகள்' நாடுகள் அனைத்திற்குச் சுயாடசி நிர்ணய உரிமை என்ற கொள்கைகளை நிலைநிறுத்துவதற்காக ஏற்படட உலகப் போர்களைபபற்றி உணர்ந்த தென்கிழக்காசிய மக்களிடையே சுதந்திரம், சுயாட்சி உரிமை அடையவேண்டும் என்ற உரிமை வேட்கை எழுந்தது. ருஷியா குடியேற்ற எதிர்ப்புக் கொள்கையைப் பரப்பியிருந்தது. 'ஆசியா ஆசியர்களுக்கே' என்ற புதிய முழக்கத்தினை ஜப்பான் முழுமூச்சுடன் முழங்கியது. இத்தகைய புதிய முழக்கங்கள் தென்கிழக்காசிய மக்களிடையே தேசிய எழுச்சியுணர்வு தோன்றக் காரணமாக அமைந்துவிட்டது. இத்தகைய எழுச்சியுணர்வும், சுதந்திர வேட்கையும் இரண்டாம் உலகப் போரின் முடிவுக்குப் பின்னர் உச்சநிலையை அடைந்தன. அதன் விளைவாகக் காந்திஜி காட்டிய அமைதிவழிப் போராட்டங்களும், போர்களும் மேலையரின் பேரரசிற்கெதிராக எழுந்தன. அப்போராட்டங்களின் காரணமாகத் தென்கிழக்காசிய நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாகச் சுதந்திரமடைந்தன.

**அ. பர்மாவில் தேசிய இயக்கம்**

சுதந்திரமடையுமுன்னர் பர்மா இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. இந்தியா, பங்களாதேஷ் நாடுகளின் கிழக்கிலும், சீனா, சயாம், இந்தோசீனா ஆகிய நாடுகளின் மேற்குப்புறமும் ஆகிய இடைப்பட்ட பகுதியில் பர்மா அமைந்துள்ளது. பர்மாவின் மேற்கு எல்லையாக வங்காளவிரிகுடா அமைந்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீனப் பேரரசிற்கு உட்பட்டுச் சுதேச குறுநில மன்னர்களால் பர்மா ஆளப்பட்டு வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில ஆங்கிலேயர்கள் பர்மாவை வென்று, இந்தியாவுடன் இணைத்துவிட்டனர். 1897ஆம் ஆண்டில் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட பர்மா, 1937ஆம் ஆண்டு வரை ஆங்கில இந்தியப் பேரரசின் ஒரு மாநிலமாகவே இருந்து வந்தது. 1937 ஆம் ஆண்டில் இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டு ஓரளவு சுயாட்சி உரிமை பெற்ற அரசாக மாற்றப்படடது.

இரப்பர், தேக்குமரம், அரிசி, எண்ணெய்வளம், தகரம், ஈயம் ஆகிய இயற்கை வளம் மிகுந்தது பர்மா. எண்ணெய் எடுப்பதிலும், தேக்கு மரங்களை வெட்டுவதிலும் ஆங்கில அரசின் மூலதனம் மிகுதியாகக் காணப்பட்டது. ஏனைய வர்த்தகம், தொழில்களில் தனியார் துறையைச் சார்ந்த வர்த்தக நிறுவனங்கள் ஈடுபட்டிருந்தன. தமிழ்நாட்டைச் சேர்ந்த செட்டியார்கள் பர்மாவில் ஈட்டுக்குப் பணம் கொடுக்கும் தொழிலில் ஈடு இணையற்று விளங்கினார்கள். உழவர்கள் அத்தகைய செட்டியார்களிடமிருந்து தாராளமாகக் கடன் பெற்று, பெற்ற கடனையும் அதற்குரிய வட்டியையும் செலுத்த இயலாமல், தங்களது விளைநிலங்களை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, வறிய ஏழை விவசாயக் கூலிகளானார்கள். இவ்வாறு நிலத்தைப் பறிகொடுத்துவிட்டு, ஏழ்மை நிலையையடைந்த பர்மிய ஏழைகள் மனநிறைவற்று, ஆத்திரமடைந்திருந்தனர். இத்தகையோர் பர்மாவில் தேசிய உணர்வு தோன்றக் காரணமானார்கள். இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட கூலிகள் பர்மாவின் பண்ணைகளிலும், ஏனைய தொழில்களிலும் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டிருந்தனர். சொந்த நாட்டின் செழிப்பிலும், பொருளாதார வளர்ச்சியின் விளைவுகளிலும் ஈடுபாடு கொண்டு அனுபவிக்க இயலாத பர்மியர் மிகவும் ஆத்திரமடைந்திருந்தனர். அவர்களுடைய மனநிறைவற்ற கொந்தளிப்பு நிலை தேசியப் பயிர் செழிக்க மிகவும் ஏற்றதாக அமைந்துவிட்டது. ஆங்கில மொழிவழிக் கல்வி, தேசிய வளர்ச்சிக்கு உரமூட்டியது. அறிவாற்றல் மிக்கப் பர்மியர் அரசியல் நிர்வாகத் துறைகளில் பங்கேற்றுக் கொண்டு பயனடையத் துடித்தனர். பர்மாவில் ஆங்கிலேயர் பின்பற்றியிருந்த 'தடையற்ற வாணிபக் கொள்கை' (Laissez-Faire) பர்மாவை அந்நிய முதலாளிகளின் வேட்டைக்காடாக்கிற்று. பர்மாவின் மலைவாசிகள் மறுவாழ்வுத் திட்டத்தினை ஆங்கில அரசு செயல்படுத்தியது. இவ்வாறு மலைவாழ் மக்களையும் முன்னேற்றுவதால் பர்மாவில் பண்டைய காலந்தொட்டுத் தொடர்ந்து வருகின்ற கிராமப்புறப் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டுவிட்டதாக எண்ணிய பர்மியக் குடிமகன் வெறுப்படைந்தான். ஆங்கிலேயர் பெற்றுவிட்ட அரசியல் செல்வாக்கினால் தங்களது அரசியல் முக்கியத்துவமும் செல்வாக்கும் குறைந்துவிட்டதால் புத்த சமயத் துறவிகளும் கலக்கமடைந்திருந்தனர். நாளுக்குநாள் பெருகி வருகின்ற நிலமற்ற வறியவர்களான கூலிகளின் எண்ணிக்கை அரசிற்குப் பெரும் பிரச்சினையாக அமைந்துவிட்டது. ஏழை உழவன் புத்த சமயத் துறவிகள், க்ற்றறிந்த அரசியல்வாதிகளின்

கூட்டம் ஆகிய இம் மூன்று சக்திகளுமே பர்மாவின் தேசிய இயக்கத்தின் அடிபபடையாக அமைந்துவிட்டன. புத்த சமயத் துறவிகளும், மேலை நாட்டுக் கல்வி பயின்றவர்களும் தேசிய இயக்கத்தினைத் தலைமையேற்று நடத்திட முன்வந்தனர்.

முதல் உலகப போரின் முடிவில் தங்களுக்குச் சுயாட்சி நிர்ணய உரிமை வழங்கப்படும் என இந்தியர்களைப் போலவே பர்மியரும் பகற்கனவு கண்டனர். ஆனால் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் பர்மாவில் செயல்படுத்தப்பட மாட்டாது என்ற அறிவிப்பைக் கேட்டதும், பெரும் ஏமாற்றத் திற்குள்ளானார்கள். அந்த ஏமாற்றத்தின் விளைவாக ஆங்கில ஆட்சிக்கெதிரான கலவரங்கள் ஏற்பட்டன. அந்தக் கலவரங் கள் ஒடுக்கப்பட்ட போதிலும், எதிர்பார்த்த விளைவுகளை அக்கலவரங்கள் ஏற்படுத்தி விட்டன. 1921 ஆம் ஆண்டில் பர்மாவும் இந்திய மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த உரிமைகள் அனைத்தையும் பெற்றதுடன், மேலும் சில சிறப்பு உரிமைகளையும் பெற்றது. கலகங்களின் விளைவாகப் பெற்ற உரிமைகள் பர்மியரிடையே ஒருவித வெற்றியுணர்வைத் தோற்றுவித்தன. மேலும் உரிமைகள் கோரிப் போராட்டம் நடத்த ஆரம்பித்தனர். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு இணையான புத்த சமயத்தினரின் பொதுக்குழு, 1919 ஆம் ஆண்டின் சட்டத்தின்படி பர்மாவில் நடத்தப்பட்ட தேர்தல் களில் பங்கெடுத்துக் கொள்ள மறுத்து விட்டது. இதனால் பர்மாவின் சிறு அரசியல் கட்சிகளே மந்திரிசபையை அமைக்க முடிந்தது. அதனால் வெகுண்ட பர்மிய தேசிய கட்சிகள் வெள்ளையரை மட்டுமல்லாது வளமான வாழ்வை நாடி, இந்தியாவினின்றும் ஓடிவந்த இந்தியர்களின் அறியாமையை யும், அவர்களின் ஏழ்மையான நிலையினையும் சாடியது. அதன் விளைவாகவே பர்மாவை இந்தியாவினின்றும் பிரித்து தனி நாடாக்கிவிட ஆங்கில அரசு முடிவு செய்தது. பர்மாவை என்றென்றும் குடியேற்ற நாடாகவே வைத்திருக்கும் எண்ணங் கொண்டே, இப்பிரிவினையை ஏற்படுத்த ஆங்கில அரசு எண்ணியுள்ளது என எண்ணிய பர்மிய தேசிய இயக்கத் தினைச் சார்ந்தவர்கள் அதனை எதிர்த்தனர். பர்மிய தேசிய வாதிகளின் எதிர்ப்பினைப் பொருட்படுத்தாத ஆங்கில அரசு, பர்மாவை இந்தியாவினின்றும் பிரித்து. ஒருவித பொறுப் பாட்சியை வழங்கியது. இதனால் தேசியவாதிகள் திருப்தி யடையவில்லை.

1930 ஆம் ஆண்டில் சாயா சென் (Saya Sen) என்ற புத்த துறவியின் தலைமையில் பர்மிய உழவர்கள் எழுச்சிமிக்க மாபெரும் புரட்சியைத் தொடங்கினர். ஆனால், அப் புரட்சியை வெகு எளிதாக ஆங்கில அரசு அடக்கிவிட்டது. அதன் பின்னர் பர்மிய இளைஞர்களால் உருவாக்கப்பட்ட தோ பாமா' அல்லது 'நாம் பர்மியர் இயக்கம்' (Do Bama or We Burmans) போராட்டத்தினைத் தொடர்ந்து நடத்தியது. மாணவர்கள், தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோர் அனைவரும் 'நாம் பர்மியர்' இயக்கத்தில் திரளாகச் சேர்ந் தனர். அவ் வியக்கம் 'தோ பர்மா கட்சி' அல்லது 'தாகின் கட்சி' (Thakin Party) என அழைக்கப்பட்டது. முழு சுதந் திரம் அடைவதே அக் கட்சியின் தலையாய கொள்கையென அறிவிக்கப்பட்டது. 'கட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி' (Limited Autonomy) வழங்கப்பட்டபோது, பர்மிய தேசிய கட்சிகள், அதனை எதிர்த்துப் போராட்டங்களில் ஈடுபட்டன. 1938 ஆம் ஆண்டில் ஆங்கில எதிர்ப்பு இயக்கத்தினைத் தொடங்கின. ஆனால் 1939 ஆம் ஆண்டில் தேசியப் புரட்சிக் கட்சியின் தனிப் பெரும் தலைவரான பா-மா (Ba - Maw) என்பவர் புதிய அரசியல் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட அரசின் தலைமை அமைச்சரானார். இரண்டாம் உலகப் போர் தொடங்கிய பின்னர் பா-மா ஜப்பானியருடன் இரகசிய உடன் படிக்கை யொன்றினைச் செய்து கொண்டார்.

1942 ஆம் ஆண்டில் ஜப்பானிய வெற்றிப் படைகள் பர்மாவைக் கைப்பற்றியபோது, பர்மியத் தீவிர தேசியவாதி கள் ஜப்பானியப் படைகளுக்கு முகமன் கூறி வரவேற்றனர். ஜப்பானும் பர்மாவிலிருந்து ஆங்கிலேயரை விரட்டியடித்த வுடன் பர்மாவின் சுதந்திரத்தினை அறிவித்தது. பா-மாவின் தலைமையில் சுதந்திர பர்மிய அரசு 1942 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது. ஆனால் ஜப்பானியர் தங்களது உண்மையான நோக்கத்தினை விரைவிலேயே தெளிவாக் கினர். உண்மையான சுதந்திரம் அடைந்து விட்டதாக நம்பி, இறுமாப்புக் கொண்டிருந்த பர்மிய தேசியவாதிகள், தாங்கள் பெற்றது சுதந்திரமல்ல, ஆங்கிலேயருக்குப் பதிலாக ஜப்பானி யரின் ஆட்சியே என்பதை உணர்ந்து துணுக்குற்றனர். அவ் வுணர்வு ஜப்பானிய எதிர்ப்பியக்கத்தினை உருவாக்கியது. "பாசிச எதிர்ப்பாளர்களின் சுதந்திரக் கழகம்' (Anti-fascist People's Freedom League-A.F.P.F.L) என்ற ஜப்பானிய எதிர்ப் பியக்கக் கழகத்தினைத் தளபதி ஆங்-சென் (Aung Sen) உரு வாக்கினார்.

போரின் பின்னர், மீண்டும் போருக்கு முன்பிருந்த ஆட்சி முறையினை ஏற்படுத்த ஆங்கில அரசு முயன்றது. ஆனால், பர்மிய சுதந்திரக் கழகம் (A. F P. F. L) இம் முயற்சியை எதிர்த்தது. ஆங் சென்னின் தலைமையிலிருந்த படை ஆங்கி லேயருடன் மோதவும் தயாராக இருந்தது இதனையுணர்ந்த ஆங்கில அரசு. ஆளுநரின் மந்திரி சபையிலிருந்த பதினோரு இடத்தில் ஆறு இடத்தினைப் பர்மிய சுதந்திர கழகத்தின் பிரதி நிதிகளுக்கு (A. F. P. F L.) அளிப்பதன்மூலம், அவர்களுடன் சமரசம் செய்து கொள்ள முயன்றது. இருப்பினும் பர்மிய தேசிய இயக்கத்தின் வலிமையை உணர்ந்த அட்லி பிரபுவின் தலைமையிலான ஆங்கில அரசு பர்மிய அரசியல் தலைவர் களுடன் பேச்சு வார்த்தையைத் தொடங்கியது. 1947ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 27ஆம் நாள் ஆங்கில அரசு, பர்மிய சுதந்திரக் கழகத்தின் தலைவரான ஆங் சென்னுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொண்டது. அவ் வொப்பந்தத் தின்படி பர்மாவிற்குச் சுதந்திரம் வழங்க ஆங்கில அரசு இணங்கியது. ஆனால் அவ்வொப்பந்தம் கையெழுத்தான பின்னர் பர்மாவில் உட்பூசல்கள் மிகுந்தன. ஆங் சென்னும் அவருடன் பணியாற்றிய ஐந்து உறுப்பினர்களும் கொலை செய்யப்பட்டனர். ஆங் சென்னின் மறைவிற்குப் பின்னர் அவரது கட்சியின் தலைமைப் பொறுப்பினையேற்ற 'தாகின் நூ' (Thakin Nu) அல்லது யு நூ (U Nu) ஆங்கில அரசுடன் மீண்டும் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கினார். அதன் விளைவாகப் பர்மாவிற்கு முழு சுதந்திரம் வழங்கும் ஒப்பந்தத்தில் இரு சாராரும் கையொப்பமிட்டனர் (Oct 17. 1947). 1948 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4 ஆம் நாள் பர்மா சுதந்திரம் அடைந்தது. சுதந்திர மடைந்த பர்மா பிரிட்டிஷ் காமன் வெல்த்தினின்றும் விலகி குடியரசானது.

தாகின் நூ அல்லது யு நூ என்பவர் சுதந்திர பர்மாவின் முதல் தலைமை அமைச்சராகப் பதவி யேற்றார். பர்மா சுதந்திரமடைந்த பின்னர் உள் நாட்டுப் போராட்டங்கள் அதிகரித்தன. 1948-50 ஆம் ஆண்டுகளில் பர்மிய பொது வுடைமைக் கட்சியினர் புரட்சியில் ஈடுபட்டனர். 1949 ஆம் ஆண்டில் பொதுவுடைமைப் படையினர் தங்களது பயங் கரத் தாக்குதல்களால் பர்மா முழுவதையும் பிடித்து, தலைநகரான இரங்கூனைக்கூட அச்சுறுத்தினர். ஆனால், தங்களின் தவறான கொள்கைகளினால் மக்களின் ஆதரவை இழந்துவிட்டிருந்த பொதுவுடைமையினரை யு நூ வின் அரசு ஒடுக்கியது. பர்மாவில் காணப்பட்ட இனப்பிரிவினை

பொதுவுடைமையினரின் புரட்சி, குழப்பங்கள், கொந்தளிப்புகள் போன்ற எண்ணற்ற எதிர்ப்புகளை, அடக்கி, பர்மியர் அனைவரையும் ஒருங்கிணைத்து அமைதி நிலவச்செய்திருந்தார் யு நூ. புத்த சமயம் மீண்டும் புதிய வலிவுடன், புதுப் பொலிவுடன் பர்மாவில் நிலைபெற்றது. பர்மாவில் ஊழலற்ற, நேர்மையான ஆட்சி முறையை நிறுவி, கல்வி, நிலச் சீர்திருத்தங்கள், தொழில் வளர்ச்சி ஆகிய அனைத்தையும் திட்டமிட்டுச் செயலாற்ற முனைந்தார். இருப்பினும் கொந்தளிப்பு நிலை நீறு பூத்த நெருப்பாகக் கனிந்து கொண்டேயிருந்தது. நல்ல பல திட்டங்கள் தீட்டப்படினும் திறமையற்ற, ஊழல் நிறைந்த அரசு அதிகாரிகளும், மக்களின் இரத்தத்தில் ஊறிக் கலந்து விட்ட இனப்பிரிவினைகளும், அரசு எதிர்ப்புச் சக்திகளும் அரசை அலைக்கழித்தன. அதன் விளைவாக யு நூ 1958 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பினைத் தாமாகவே தளபதி நீ வின் (Ne-Win) என்பாரிடம் ஒப்படைத்து விட்டு பதவி விலகினார். பர்மாவில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இராணுவ ஆட்சிக் காலத்தில் எதிர்ப்புச் சக்திகள் அனைத்தும் ஒடுக்கப்பட்டன. அரசு எதிர்ப்பியக்கங்கள் மறைந்தன. அமைதி நிலவும் சூழ்நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக 1960 ஆம் ஆண்டில் பர்மாவில் பொதுத் தேர்தல்கள் நடத்தப் பெற்றன. அத்தேர்தலின்போது யு-நூவின் கட்சி மாபெரும் வெற்றி பெற்றது. யு நூ மீண்டும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். பர்மாவில் மக்களாட்சி நிலைபெற்று விட்டது போலத் தோன்றியது. ஆனால், பர்மாவில் மீண்டும் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பம், இரண்டாம் முறையாக இராணுவ ஆட்சி பர்மாவில் ஏற்படக் காரணமாயிற்று (March 2. 1962). தளபதி நீ வின் மீண்டும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். நீ வின் பர்மிய சோஷலிஸ்டு கட்சியைத் தோற்றுவித்தார். பர்மாவில் சோஷலிச சமுதாயம் ஏற்படுத்துவதே தமது தலையாய நோக்கமென அறிவித்தார். அவரது நோக்கங்களைச் செயல்படுத்தும் வகையில் தொழிலகங்களையும் வர்த்தக நிறுவனங்களையும் தேசிய மயமாக்கினார். அதனால் உற்பத்தி குறைந்து, பொருளாதார வளர்ச்சி குறைந்தபோது, தேசிய மயமாக்குவதில் காட்டிய வேகத்தினைச் சிறிது குறைத்தார். 1969 ஆம் ஆண்டில் 'மக்களாட்சி சோஷலிச முறை' (Democratic Socialist System) என்ற பெயரில் ஒரு புதிய அரசியலமைப்பினைத் தோற்றுவித்தார். அதன் மூலமாக மிகவும் வலிமை வாய்ந்த சோஷலிச நாடாகப் பர்மாவை

மாற்றப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். வெளி யுறவுக் கொள்கையில் பர்மா இந்தியாவின் கூட்டு சேராக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. அதன் காரண மாகவே பொதுவுடைமை, முதலாளித்துவ நாடுகளின் குழுக்க ளுடன் பர்மா சமரச நட்புறவு கொண்டிருக்கின்றது.

## ஆ. தாய்லாந்து அல்லது சயாம்

இந்தோசீனாவிற்கும், பர்மாவிற்கும் இடையில் அமைந் துள்ள பெரும் நிலப்பரப்பே தாய்லாந்து (அல்லது) சயாம் என அழைக்கப்படுகின்ற நாடாகும். அப் பகுதியினை முதன் முதலில் தாய் இனத்தவர்கள் (Thai stock) வென்று, குடி புகுந்தனர். அவர்களது பெயராலேயே தாய்லாந்து என அழைக்கப்படுகிறது. தென்கிழக்காசியாவிலேயே ஐரோப்பியர் களால் அடிமைப் படுத்தப்படாத ஒரே நாடு சயாம் (அல்லது) தாய்லாந்துதான். பர்மாவில் ஆதிக்கம் பெற்றிருந்த ஆங்கிலே யருக்கும், இந்தோ–சீனாவில் ஆதிக்கம் பெற்றிருந்த பிரெஞ்சுக் காரர்களுக்கும் எழுந்த ஆதிக்கப் போட்டியின் விளைவாகவே தாய்லாந்து சுதந்திர நாடாக நீடிக்க அனுமதிக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் பலமுறை ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக் காரர்களும் தாய்லாந்தினை வென்று தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளுகின்ற சூழ்நிலை உருவாகியிருந்தது. அவ்விரு நாடுகளுக்குமிடையே நிலவிவந்த ஆதிக்கப் போட்டியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தாய்லாந்து தனது சுதந்திரத்தினையும் காப்பாற்றிக்கொண்டுவிட்டது.

1822-க்கும் 1856ஆம் ஆண்டிற்குமிடையே இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் தாய்லாந்து வர்த்தகம் மற்றும் பல்வேறு உடன்படிக்கைகளைச் செய்து கொண்டது. அதன்படியாகத் தாய்லாந்தில் அந்நிய நாட்டின ருக்குத் தனியுரிமைகள் (Extra - territorial rights) வழங்கவும் இசைந்தது. ஏற்றுமதி-இறக்குமதிப் பொருள்களின் மீது விதிக்கப்படும் வழக்கமான வரிவிதிப்புகளையும் அந்நிய நாடுகள் அனுமதித்தன. அத்தகைய உடன்படிக்கைகளை ஏற்றுக் கொண்ட பின்னரும் இங்கிலாந்தும் பிரான்சும் தாய்லாந்தின் பல பகுதிகளை வற்புறுத்தி தம் வசமாக்கிக் கொண்டன. அத்தகு நிகழ்ச்சிகள் 1909ஆம் ஆண்டு வரை யிலும் நீடித்தது. ஆறாம் இராம வஜிரவுத் (Rama VI Vadjiravudh, 1910-1925) என்ற மன்னரின் ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய நாட்டினர் தாங்கள் அதுகாறும் அனுபவித்து வந்த

தனியுரிமைகளை விட்டுக் கொடுக்கும்படி வற்புறுத்தப் பட்டனர். அத்துடன் வரிவிதிப்பு முறைகளில் அவர்களுக் கிருந்த தனி செல்வாக்கினையும் விட்டுக் கொடுக்க முன் வந்தனர். 1938ஆம் ஆண்டில் பிபுன் (Phibun) என்ற படைத் தலைவர் இராணுவத்தினரின் துணையுடன் எதிர்ப்புகளை முறியடித்து ஆட்சியைக் கைப்பற்றி, இராணுவ ஆட்சியை நிறுவினார். 1938ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சியின் விளை வாகப் பதவியேற்ற படையாட்சியினர் ஏராளமான சீர்திருத்தங் களை மேற்கொண்டனர். அத்தகைய சீர்திருத்தங்களின் அடிப்படை நோக்கம் தாய்லாந்து மக்களின் தேசிய உணர் வினைத் தட்டியெழுப்புவது ஆகும். கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் காட்டப்பட்டது. மக்களனைவரும் கல்வி யறிவு பெற்றால்தான் தேசியப் பயிர் செழிக்க முடியும் என்ப தனை உணர்ந்து கல்வித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிறை வேற்றப் பட்டன. கல்வி, தொழில் துறை, மொழி மற்றும் பண்பாட்டுத் திட்டங்களை தாய்லாந்தில் குடியேறிவிட்ட மலாய் மக்களும் முகமதியர்களும் எதிர்த்தனர். பல முக்கிய மான பெரிய தொழில்களும், போக்குவரத்துச் சாதனங்களும் அரசுடைமையாக்கப் பட்டு, காகிதம், சர்க்கரை, புகையிலை போன்ற துறைகளில் புதிய தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப் பட்டன. மேலும் சமுதாய, பண்பாட்டு முன்னேற்ற திட்டங் களும் செயல்படுத்தப்பட்டன. பொருளாதாரத் துறையில் தன் னிறைவு காணும்முறையில் பல புதிய திட்டங்கள் தீட்டப் பட்டுச் செயல்படுத்தப்பட்டன. சமயப் பண்பாட்டுத் துறை களில் மாற்றங்களை ஏற்படுத்தி, அதன்மூலம் தாய்லாந்தின் தேசியத்தினை வளர்க்க முயன்றார் பிபுன். புத்த சமயத்தைத் தழுவியிருப்பதும், நாட்டுப் பற்றும் ஒன்றே என அறிவித்தார். எனவே, புத்த சமயம் தேசிய சமயமாக உயர்த்தப்பட்டது. அகத்தூய்மையைப் போலவே புறத்தூய்மையைப் பேணு வதும், சுகாதாரத்தின் நன்மையும் மக்களுக்கு அறிவுறுத்தப் பட்டன. வெற்றிலை போடும் பழக்கமுள்ளவர்கள் கண்ட இடங்களில் எச்சில் துப்பித் தூய்மைக்கேடு ஏற்படுத்துவதைத் தடை செய்யும் வகையில் வெற்றிலைப் பாக்கு மெல்லும் பழக்கத்தைத் தவிர்க்கும்படி மக்களை வற்புறுத்தினார். முறையாக, ஆடையணிவதன்மூலம் நாட்டின் பெருமையை உயர்த்தி, காக்க முடியும் என்றும் நம்பினார். அத்தகைய முறைகளில் தனித்தன்மை கொண்ட, மக்களின் தேசிய உணர் வினைத் தட்டியெழுப்பி வளர்க்கும் முயற்சிகளை மேற் கொண்டார். தேசிய உணர்வினை மேலும் உறுதிப்படுத்தும்

வகையில் நாட்டின் பெயரும்கூட 'சயாம்' என்பதிலிருந்து 1939ஆம் ஆண்டில் 'தாய்லாந்து' என மாற்றப்பட்டது. 'தாய் லாந்து' என்றால் 'சுதந்திர நாடு' என்பது பொருளாகும்.

இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகள தாய்லாந்திட மிருந்து வலிந்து எடுத்துக்கொண்ட பகுதிகளை மீட்கும் வண்ணம் புரட்சிகள் தோன்றின. அத்தகு புரட்சிகளுக்கு ஜப்பானிய ஆதரவு கிடைத்தது. இரண்டாம் உலகப் போரில் பிரான்சு முறியடிக்கப்பட்டவுடன் ஜப்பானின் ஆதரவுடன் தாய்லாந்து முன்னர் இழந்த பகுதிகளில், லாவோஸிலிருந்து 40,000 சதுர மைல் பரப்பினை மீண்டும் பெற்றது. அவ்வுதவி யின் கைமாறாக ஜப்பான் தாய்லாந்திடமிருந்து ஒருசில வர்த்தகச் சிறப்புரிமைகளைப் பெற்றது. இரண்டாம் உலகப் போரின்போது தாய்லாந்து ஜப்பானுடன் இணைந்து நேசநாடு களை எதிர்த்தது. போரின் இறுதியில் ஜப்பான் சரணடைந்த போது தாயலாந்து தனது பாதுகாப்பு நாடாக இருக்க வேண்டு மென இங்கிலாந்து விரும்பியது. அமெரிக்கா இக்கருத்தை எதிர்த்தது. அதனால் தாய்லாந்தின் சுதந்திரம் பாதுகாக்கப் பட்டது. போரிலிறங்குவதற்கு முன்னர் தாய்லாந்து எடுத்துக் கொண்ட பகுதிகளை மீண்டும் இழந்தது. பெருந்தொகை ஒன்றினைப் போர் இழப்பிடாக இங்கிலாந்திற்குக் கொடுக்க இசைந்தது. சுதந்திர நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தாய் லாந்து, 1946, டிசம்பர்த் திங்களில் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### இ. மலேயாவில் தேசிய இயக்கம்

பர்மா, இந்தோசீன நாடுகளுக்குத் தென்புறமும், மேற்குப் பகுதியில் இந்தியப் பெருங்கடலும், கிழக்குப் பகுதியில் பசிபிக் பெருங்கடல் பகுதியையும் கொண்ட தீபகற்பமே மலேயாவாகும். மலேயாவின் அமைப்பும், உலகப் படத்தில் அமைந்துள்ள இடமும் அந்நாட்டிற்குத் தூரக்கிழக்கு நாடு களிலேயே ஒரு முக்கிய இடத்தினை அளிக்கின்றது. இரப்பர், தகரம் உற்பத்தியில் மலேயா உலகில் முதலிடம் வகிக்கின்றது. மலேயாவினைச் சேர்ந்த சுதேசிகள், சீனர்கள் இந்தியர்கள், ஒருசில ஐரோப்பியர் எனப பல இனங்களைச் சேர்ந்த மக்கள் அந்நாட்டில் வசிக்கின்றனர். அங்கு வாழும் மக்களிலேயே பெரும்பான்மையினரும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களும் மலேயாகளே. இந்தியர்களையும் சீனர்களையும் சுரண்டிப் பிழைக்க வந்தவர்களெனவே

மலேயர்கள் கருதுகின்றனர். மலேய சுதேசிகள் உழவுத் தொழிலையும், மீன் பிடித்தலையுமே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். தகரச் சுரங்கங்களையும், இரப்பர்த் தோட டங்களையும் ஐரோப்பியர் தமதாக்கி, பயன்படுத்தினர் சீனர் கள் மற்றவகைத் தோட்டங்களையும், நாட்டின வியாபாரம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டிருந்தனர். அரசின் உயர் பதவிகளில் இருந்தவர்களும் ஐரோப்பியர்களேயாவர். வழக் கறிஞர்களாகவும் மற்றும் மருத்துவர்கள், வர்த்தகர்களா கவும், இரப்பர் தோட்டக் கூலிகளாகவும் இந்தியர்கள் வாழ்க்கை நடத்தினர். பொருளாதார இன வேறுபாடு களுடன், சமய வேறுபாடுகளும் மலேயாவில் காணப்பட்டன மலேய இனத்தைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்களாகவும், சீனர்கள் புத்த சமயத்தினராகவும், இந்தியர்கள் இந்துக்களாகவும் அல்லது முஸ்லிம்களாகவும், ஐரோப்பியர் கிறிஸ்தவர்களா கவும் இருந்தனர். இத்தகைய இனம், சமயம், பொருளாதா வேற்றுமைகள்தாம் மலேயாவில் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு, தேசிய எழுச்சி நீண்ட காலம் தோன்றாமல் இருந்ததற்கு அடிப்படைக் காரணங்களாகும். மேலும் பண் பாட்டுத் துறையிலும் இந்தியர்களும் சீனர்களும் மிகச் சிறந்த பண்பாடுகளை உருவாக்கி உலகிற்குத் தந்த நாடுகளைச் சார்ந்தவர்களாதலால் மலேயரின் பண்பாட்டினை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. மலேயர்கள் பண்பாட்டுச் சிறப் பற்று, கடன்பட்ட நிலையில், தாழ்ந்த நிலையில் வாழ்ந்திருந்த தால் மலேய தேசியம் தோன்றக்கூட வழியில்லாதிருந்தது

போர்ச்சுகீசியர்கள்தாம் முதன்முதலில் 1511ஆம் ஆண்டி லேயே மலாக்காவில் நுழைந்து கைப்பற்றினர். 1641ஆம் ஆண்டு போர்ச்சுகீசியரிடமிருந்து டச்சுக்காரர்கள் மலாக்கா வைக் கைப்பற்றினர். ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களிட மிருந்து 1795ஆம் ஆண்டில் மலாக்காவை வென்று சிறுகச்சிறுக மலேயா தீபகற்பம் முழுவதிலும் தங்களது ஆதிக்கத்தினை பரப்பி நிலைநிறுத்திக்கொண்டனர். 1867ஆம் ஆண்டில் மலாக்கா ஆங்கில அரசின் குடியேற்றமாக்கப்பட்டு (Crown Colony) ஆளுநர் ஒருவரால் ஆளப்பட்டது. 1909ஆம் ஆண் டிற்குள் அத் தீபகற்பம் முழுவதும் ஆங்கிலேயர்களின் நேரடி அல்லது மறைமுக ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. ஒரு சில பகுதிகள் 'அரசக் குடியேற்றங்கள்' (Crown Colonies) என்ற பெயரில் ஆங்கில அரசின் நேரடியாட்சிப் பொறுப்பிலும், ஒருசில ஆங்கிலேயரின் பாதுகாப்பில் சுதேசி சுல்தான்களின்

ஆட்சிப்பொறுப்பிலுமாக மாறுபட்ட அரசியல் நிலைகளைக் கொண்டிருந்தன.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் மலேயாவில் இரப்பர்த் தோட்டங்கள் மிக அதிகமாக உருவாக்கப்பட்டன. அத் தோட்டங்களில் இந்தியாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் கொண்டு வரப்பட்ட கூலிகள் வேலை செய்தனர். மலேயாவின் தொழில் வளர்ச்சியில் ஆங்கிலேயரும் சீனர்களும் பெரும் முதலீடு செய்திருந்தனர். மலேய மக்களினத்தில் காணப்பட்ட மாறுபாடுகளையும், ஒற்றுமையற்ற நிலையினையும் ஆங்கிலேயர்கள், தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, பிரித்தாளும் சூழ்ச்சியை மிக எளிதாகக் கையாண்டனர். சமுதாயத்தில் பெரும்பான்மையினமாகவும், தாழ்ந்த நிலையிலுமிருந்த மலேயர்களைத் தங்கள் ஆதரவாளர்களாக மாற்றிக் கொண்டனர். மலேயர்களுக்குத் தாங்களே பொறுப்பாளர்கள் என்றும் அறிவித்துக்கொண்டனர். சிவில் ஆட்சித் துறையில் மலேயர்களுக்கு இடம் அளிக்கப்பட்டாலும், உயர் பதவிகள் அனைத்தும் ஆங்கிலேயர்களிடமே இருந்தன. சீனர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஆங்கிலேயருடன் ஒத்துழைத்து, அதிகாரம் பெறுவதே சாலச்சிறந்தது என்பதனை உணர்ந்து செயல்பட ஆரம்பித்தனர். அதே நேரத்தில் மக்களாட்சி முறை ஏற்படுத்தப்பட்டால் பொருளாதாரப் பண்பாட்டுச் சிறப்பு பெற்ற சீனர்கள், ஆட்சியில் பெரும்பங்கு பெற்றுவிடுவர் என்று அச்சம் கொண்ட மலேயர்கள், தேசியத்தையோ மக்களாட்சிக் கருத்துகளையோ ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. இவ்வாறாக மலேய சுதேசிகள் அரசியலில் பங்கு கொள்ள தயங்கியபோது இந்தியர்களும் சீனர்களும் செல்வ வளம் பெற்ற நிலையில் அரசியலிலும் செல்வாக்குப் பெற விரும்பினர். தேசிய உணர்வு முதன்முதலில் மலேயர்களுக்கு அல்லாது, மலேயாவை வாழும் இடமாகக் கொண்ட மற்ற இனத்தவரிடையே தோன்றியது. மலேயர்கள் பண்டைய நிலமானிய முறை சமுதாய அமைப்பினில் கட்டுண்டு கிடந்த போது, இந்திய மண்ணில் தழைத்து வளர்ந்துவிட்ட தேசிய இயக்கத்தினைப் பின்பற்றி, மலேயா வாழ் இந்தியர்களும் சீனர்களும் மலேயா விடுதலைக்கும் வித்திட்டனர். மலேயா தேசிய இயக்கத்தினை உருவாக்கி வளர்த்தனர்.

இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்தில் மலேயாவை ஜப்பானியர்கள் கைப்பற்றினர். ஜப்பானியரும் ஆங்கி

லேயரைப் போலவே, மலேயரின் ஆதரவை ஏற்றுக்கொண்டு, மலேய, சீன வேறுபாடுகளைத் தூண்டிவிட்டனர். ஜப்பானி யரின் சூழ்ச்சியை உணர்ந்து கொண்ட சீனர்கள் ஜப்பானிய எதிர்ப்பியக்கத்தினைத் தோற்றுவித்தனர். இத்தகைய சீனக் கொரில்லாப் படையினருக்கு ஆங்கிலேயர் படைக்கலன்களை வழங்கிப் பேருதவி புரிந்தனர். மலேயாவிலிருந்த இந்தியர் களை ஜப்பானியர் சற்று மதிப்புடன் நடத்தினர். இந்திய விடுதலை இயக்கத்தினைச் சேர்ந்த சுபாஷ் சந்திர போஸ் 'ஆஸாத் ஹிந்த்' என்ற இந்தி தேசியப்படையினைத் தென் கிழக்காசிய நாடுகளில் உருவாக்க ஜப்பானியர் பெரிதும் உதவினர். அவ்வியக்கம் தோல்வியில் முடிந்தாலும் இந்தி யர்கள் தன்னம்பிக்கை வளரப் பெற்று, மலேயா தேசிய இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டனர். ஜப்பானியரின் ஆட்சிக் காலத்தில் மலேயரும் அரசு நடத்தும் அனுபவம் பெற்றனர்.

போரின் பின்னர் ஜப்பானியர் மலேயாவினின்றும் வெளி யேறியதும், ஆங்கில ஆட்சியாளர்கள் மீண்டும் மலேயாவில் நுழைந்தனர். அங்கு இருந்த முற்றிலும் மாறுபட்ட மலேயர் களைக் கண்டு திகைத்தனர். இனியும் தங்களது குடியேற்றக் கொள்கையைப் பின்பற்றி நீடிப்பது இயலாது என்பதனையும் உணர்ந்தனர். எனவே மலேயர், சீனர், இந்தியர் ஆகிய அனைவருக்கும் சமான குடியுரிமை வழங்க முன் வந்தனர் (1946). இதனை மலேயர்கள் எதிர்த்து 'ஐக்கிய மலேய தேசிய நிறுவனம்' (United Malay National Organisation—U.M.N.O) என்ற இயக்கத்தினை (1946 ஆம் ஆண்டில் உருவாக்கினர். அவவியக்கத்தின் நோக்கம் மலேயாவில் மற்ற இனத்தின ருக்குச் சம உரிமைகள் வழங்குவ்தைத் தடுப்பதும், மலேயாவி லுள்ள சுல்தான்களின் அதிகாரத்தினைக் குறைப்பதும், மலேயா சுதந்திரத்தை அடைவதுமாகும். இந்தோனேஷி யரின் அடிச்சுவட்டில் மலேய தேசிய இயக்கம் (P.U.T.E.R.A.) ஒன்றும் ஆங்கில ஆட்சிக்கு எதிராகத் தோற்றுவிக்கப்பட்டது. அததகைய தீவிர எதிர்ப்பினைக் கண்ட ஆங்கிலேயர்கள், தங்களது முந்தைய திட்டத்தினைக் கைவிட்டு, 1949 ஆம் ஆண்டில் பிப்ரவரித் திங்களில் 'மலேயாக் கூட்டரசை' (Federation of Malaya) நிறுவினர். இந்தப் புதிய நிறுவனத்தில் மலேயர்களுக்குப் புதிய சிறப்புரிமைகள் வழங்கப்பட்டன. மலேயாவிலிருந்த சுல்தான்கள் தங்களது இறைமையையும் தங்களது ஆட்சித் தலைமையினையும் வைத்துக்கொள்ள

அனுமதிக்கபபட்டனர். வெளியுறவு, மற்றும் நாட்டுப் பாது காபபு ஆகிய இவ்விரண்டு அதிகாரங்களை மட்டிலும் ஆங்கிலேயர் வைத்துக் கொண்டனர். சிங்கப்பூர் தனி அந்தஸ்தினைப் பெறறது. அந்தப் புதிய ஆட்சி முறையை மலேயப் பொதுவுடைமையினர் எதிர்த்தனர். அவர்கள் மலேய தேசியப படையை உருவாக்கிக்கொண்டு ஆங்கிலேயருடன் போரிடத் தொடங்கினர். மலேய மக்களின் குடியரசை அமைதது. முழுச் சுதந்திரமடைந்த அனைத்து இனத்தினருக்கும் சம உரிமை கொண்ட மலேயாவை உருவாக்குவதே தங்களது நோக்கம் என அறிவித்தனர். ஐந்தாண்டுகள் நடந்த கடுமையான போரின் பின்னர் பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் அடக்கப் பட்டனர்.

மலேயாவில் தாங்கள் இனியும் அதிகாரம் செலுத்துவது இயலாது என்பதனை உணர்ந்த ஆங்கிலேயர் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களது பிடியினைத் தளர்த்தி, மலேயாவினின்றும் வெளியேறினர். இறுதியாக 1957 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31 ஆம் நாள் மலேயாவிற்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. மலேயா கூட்டரசு உருவாக்கப் பட்டது. துங்கு அப்துல் ரஹ்மான் என்பவர் அப் புதிய குடியரசின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அக் கூட்டரசில் ஒன்பது மாநிலங்களும், இரண்டு குடியிருப்புகளும் (Settlements) இருந்தன. மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த சுல்தான்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் மலேயா கூட்டரசின் தனிப்பெரும் தலைவராக இருப்பார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் தலைமையமைச்சரைத் தேர்ந்தெடுக்கும். தலைமையமைச்சர் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பாக இருப்பார். 1957 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் சுயாட்சி உரிமை பெற்ற குடியேற்றமாகவும், 1959-ல் முழு விடுதலை பெற்ற நாடாகவும் மாறியது. மக்கள் கட்சியினைச் சேர்ந்த லி குவாயின் யீ (Lee Kuan Yee) என்பவர் சிங்கப்பூரின் முதல் தலைமையமைச்சராக ஆனார்.

1961 ஆம் ஆண்டில் துங்கு அப்துல் ரஹ்மான் மலேசியா கூட்டரசு ஏற்படுத்தப்படவேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தார். மலேசியக் கூட்டரசில் மலேயா, சிங்கப்பூருடன் ஆங்கில அரசின் பாதுகாப்பு நாடுகளான வடக்கு போர்னியோ தீவிலிருக்கும் 'சபா'(Sabah in North Borneo) சராவாக், புருனை (Sarawak, Brunei) ஆகிய பகுதிகளும் இணைந்திருக்க வேண்டுமென்றார் ஆனால் பிலிப்பைன்சும், இந்தோனேஷி

யாவும் வட போர்னியோ தீவின்மீது உரிமை பாராட்டின. இறுதியாக ஐ.நா வின் தலையீட்டினால் அப பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஐ.நா 'சபா' மற்றும் 'சராவாக்' பகுதிகளில் ஒரு பொது வாக்கெடுப்பு (Plebiscite) நடத்தியது. அப்பொழுது வாக்கெடுப்பில் 'சபா' மற்றும 'சராவாக்' பகுதி மக்கள் மலேசியாவுடன் கூட்டரசாக்




படம் 17.1 தென் கிழக்கு ஆசியா

இணைய விருப்பம் தெரிவித்தனர். அதன் விளைவாக 1963 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 16 ஆம் நாள் மலேசியா தோன்றியது. ஆரம்பத்தில் இந்தோனேஷியா, மலேசியாவின தோற்றத்தினை வன்மையாக எதிர்த்தது. தனது கொரில்லாப படைகளை அனுப்பி மலேசியா கூட்டரசினை

ஒழிக்க முயன்றது. ஆனால், இந்தோனேஷியாவின் தலைவரான சுகர்னோ பதவி விலகிய பின்னர் இந்தோனேஷியா, மலேசியா எதிர்ப்பினைத் தவிர்த்து, நட்புறவு கொள்ள ஆரம்பித்தது. பிலிப்பைன்சும் 1965 ஆம் ஆண்டிலிருந்து மலேசியாவுடன் நட்புறவு ஏற்படுத்திக் கொண்டுள்ளது. ஆனால் வெகு விரைவில் சிங்கப்பூர் மலேசியாவினின்றும் பிரிந்து, மீண்டும் தனி நாடாகியது. 1967 ஆம் ஆண்டில் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று நட்புறவுடன் ஒத்துழைப்பு நல்கி, இணைந்து வாழும் எண்ணங் கொண்டு 'தென் கிழக்காசிய நாடுகளின் கழகம்' (Association of South East Asian Nations—ASEAN)என்ற ஓர் அமைப்பினை உருவாக்கிக் கொண்டன.

**ஈ. இந்தோ-சீனாவில் தேசிய இயக்கம்**

ஆசிய பெருநிலப்பரப்பின் தென்கிழக்குக் கோடியில் இந்தோ-சீனா அமைந்துள்ளது. இந்தோ-சீனா சீனாவின் தென்பகுதியில் அமைந்துள்ளது. அதன் தென் பகுதி பசிபிக் பெருங்கடல் பகுதியை நோக்கியுள்ளது. அதில் கொச்சின் சீனா பிரான்சின் குடியேற்றமாகவும், அன்னாம், தொங்கின், கம்போடியா, லாவோஸ் போன்ற பகுதிகள் பிரான்சின் பாதுகாப்புக்கு உட்பட்டும் இருந்தன. இப்பகுதி மலைகளும், ஆறுகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த பகுதியாகும். அங்கு வாழ்கின்ற மக்கள் சீன மக்களைப் போன்ற தோற்றம் கொண்ட மங்கோலிய இனத்தவராவர்.

முதன் முதலில் 16ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர் இந்தோ-சீனாவில் நுழைந்தனர். ஆனால் 17ஆம் நூற்றாண்டில் வர்த்தகர்களாக நுழைந்த பிரெஞ்சுக்காரர்கள் இந்தோ-சீனாவின் அரசியலிலும் நுழைந்து கொஞ்சம் கொஞ்சமாக 19ஆம் நூற்றாண்டிற்குள் நாடு முழுவதிலும் தங்களுடைய ஆதிக்கத்தினை ஏற்படுத்திவிட்டனர். பிரெஞ்சுக்காரர்கள் தங்களது ஆதிக்கத்தினை ஏற்படுத்தும் முன்னர் சீனப் பேரரசின் மேலாண்மையை ஏற்றுக்கொண்ட அன்னாம் பேரரசர் இந்தோ-சீனாவின் பெரும்பகுதியை ஆண்டுவந்தார். 1907ஆம் ஆண்டிற்குள் இந்தோ-சீனா முழுவதையும் பிரெஞ்சுக்காரர்கள் பிடித்துக்கொண்டனர். இந்தோ-சீனாவின் செல்வ வளங்களான அரிசி, துத்தநாகம், தகரம், நிலக்கரி ஆகியவற்றை முறையாகப் பிரெஞ்சுக்காரர்கள் தங்களது வர்த்தக நலனுக்குப் பயன்படுத்தத் தொடங்கினர்.

1789 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சி, இந்தோ-சீன தேசிய எழுச்சிக்கு வித்தாக அமைந்து விட்டது. மேலைநாட்டுப் புரட்சி, தேசிய, அரசியல் வளர்ச்சி ஆகிய கருத்துகளைக் கற்றுணர்ந்த ஒருசில அன்னாமிய இளைஞர்கள், பிரெஞ்சு ஆதிக்கத்திற்கு எதிராகக் கலகங்களைத் தொடர்ந்து ஏற்படுத்தினா். 1905 ஆம் ஆண்டில் ருசிய-ஜப்பானியப் போரில் ஜப்பானியர் அடைந்த மாபெரும் வெற்றி இந்தோ சீனப் புரட்சியாளர்களுக்கு மேலும் ஊக்கமளித்தது. ஆனால், அத்தகைய புரட்சியைப் பிரெஞ்சுக்காரர்கள் மிகவும் கடுமையான முறையில் நசுக்கி விட்டனர். ஏராளமான கால்வாய்களை வெட்டியதன்மூலம், பாசன வசதிகளைப் பெருக்கி, புதிய முறைகளைப் புகுத்துவதன் மூலம் பிரெஞ்சுக்காரர்கள் வேளாண்மை வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவு கொடுத்தனர். இதனால் நாட்டின் வளம் பெருகியது. ஆனால் நாட்டு மக்களின் செல்வாக்கினைக் குறைக்கும் வகையில் உயர் வட்டிக்குப் பெரும் தொகையைக் கடனாகக் கொடுத்து, இந்தோ-சீனர்களை வறியராக்கும் முயற்சியில் சீனர்கள் ெற்றிகரமாகச் செயல்பட்டனர். வடபகுதியில் இருந்த இந்தோ-சீனர்கள், சீனர்களிடம் கடனாளிகளாகவும், தென் பகுதியில் இருந்தவர்கள் பண்ணைகளில் பணியாற்றும் விவசாயக் கூலிகளாகவும் இருந்தனர். அத்தகு வறியநிலை விவசாயிகளின் புரட்சி ஏற்பட் வழிவகுத்தது. சுரங்கத் தொழில் முழுவதும் பிரெஞ்சுக்காரர்களின் கையில் இருந்தது. அவர்கள் இந்தோனேஷியச் சுரங்கங்கள் முழுவதையும் தங்களது நன்மைக்காகவே பயன்படுத்தினர். இத்தகைய சுரண்டல்களைத் தேசியவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். அவர்கள் இந்திய தேசிய இயக்கத்தினரின் வழிகளைப் பின்பற்றி, முதல் உலகப் போருக்குப் பின்னர் சீர்திருத்தங்களை வேண்டினர். ஆனால் அவர்களது முயற்சி பலனளிக்காததால் தேசியவாதிகள் வெறுப்படைந்திருந்தனர். அவ்வித வெறுப்பின் விளைவாகத் தீவிர தேசியவாதிகளின் இயக்கம் இந்தோ-சீனாவில் தோன்றியது. மக்களாட்சி முறைப்படி சீர்திருத்தங்கள கோரி, ஏமாந்த, இந்தோ-சீனர்கள், 'இளம் அன்னாமியரின் புரட்சிக் கட்சி' (Revolutionary Party of Young Annam) என்ற புதிய தீவிரவாதிகளின் கட்சியை 1925-ல் ஆரம்பித்தனர். இந்தோ-சீனாவின் சுயாட்சிக்காகப போராடுவதே அவர்களின் முக்கியக் குறிக்கோளாக இருந்தது. 1928-29ஆம் ஆண்டுகளில் மற்றொரு புதிய புரட்சிக் கடசி ஆரம்பிக்கப்பட்டது. அப புதிய பரட்சிக் கடசி 1930ஆம்

ஆண்டு 'என்-பாய்' (Yen-Bai) என்ற விடத்தில் ஆயுத மேந்திக் கலகம் செய்தது. முன்னர் ஏற்பட்ட புரட்சிகளைப் போலவே அந்தப் புரட்சியும் நசுக்கப்பட்டது.

'தான் நியன்' (Than-Nien) அல்லது 'இந்தோ-சீனா பொதுவுடமைக்கட்சி' 1930ஆம் ஆண்டில் வியட்நாமின் தன்னேரில்லாத் தலைவரான டாக்டர் ஹோ சி-மின் (Dr. Ho. Chi-Minh) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. அக்கட்சியில் உழைப்பாளர்கள், உழவர்கள் பெருமளவில் சேர்ந்தனர். பொதுவுடமைக் கருத்துக்கள் ஏற்றம் பெற்றன. உலகில் தோன்றிய பொருளாதார பெருமந்தம், ஏற்கெனவே வறுமையில் வாடிய ஏழை உழைப்பாளிகளை மேலும் வறிய நிலையடையச் செய்தது. அதன் விளைவாக வேலை நிறுத்தங்களும், கிளர்ச்சிகளும் கடுமையாக ஏற்பட்டன. அப் புரட்சிகள் அனைத்தையும் பிரெஞ்சு அரசு கடுமையாக அடக்கியது. அத்தகைய கிளர்ச்சிகள் நடந்த 1930ஆம் ஆண்டினைச் "செம்படையினரின் படுகள ஆண்டு" (Year of Red Terror) எனப் பிரெஞ்சு வரலாற்றுக் குறிப்பேடுகள் குறிப்பிடுகின்றன. பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்கள் தலைமறைவானர்கள். டாக்டர் ஹோ-சி-மின் ஹாங்காங்கிற்குத் தப்பி ஓடினார். அங்கு மூன்றாண்டுக்காலம் சிறைந் தண்டனையையும் அனுபவித்தார். 1935-36ஆம் ஆண்டுகளில் இந்தோ-சீனாவில் மீண்டும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அவைகளும் நசுக்கப்பட்டன. 1936ஆம் ஆண்டில் பொதுவுடைமைக் கட்சியினர் இந்தோ-சீன தேசிய மாநாட்டினைக் கூட்டி, இந்தோ-சீனாவில் மக்கள் எதிர்ப்பியக்கத்தினைத் தோற்றுவிக்க நான்கு அம்சத்திட்டமொன்றினை உருவாக்கினார்கள். 1941ஆம் ஆண்டில் டாக்டர் ஹோ-சி-மின் தாய்நாடு திரும்பினார். அவர் 'வியட்நாமிய சுதந்திரக் கழகத்தினை' (Independence League of Vietnam) உருவாக்கினார். அக்கழகம் பின்னர் 'வியட்மின்' (Vietminh) என அழைக்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போரில் பிரான்சு ஜெர்மனியிடம் சரணடைந்த பின்னர் இந்தோனேஷியாவை ஜப்பானியர் கைப்பற்றிக் கொண்டனர். ஜப்பானியரின் ஆட்சியின் போதும் கடுமையான எதிர்ப்பியக்கங்கள் தொடர்ந்தன. வெள்ளையினத்தவரின் ஆதிக்கத்திற்கு மாறாக மஞ்சள் இனத்தவரின் ஆதிக்கமே வந்திருக்கின்றது என வெறுப்படைந்த இந்தோ-சீனர் எதிர்ப்புப் போராட்டங்களைத் தொடர்ந்தனர்.

அவ்வித எதிர்ப்பியக்கங்கள் அனைத்தையும் முறியடிக்க ஜப்பானியர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோற்றன. 1945ஆம் ஆண்டில் ஜெர்மனி தோற்கடிக்கப் பட்டது. இந்தோ-சீனாவிலிருந்து ஜெர்மனியப் படைகள் வெளியேற்றப்பட்டன. மீண்டும் உரிமை பெற்ற பிரான்சு இந்தோ-சீனாவின் ஆட்சிப் பொறுப்பையும் ஏற்கத் துணிந்தது. பிரான்சின் அத்தகைய எண்ணத்தினை முறியடித்து இந்தோ-சீன மக்களின் நல்லெண்ணத்தினைப் பெறுகின்ற வகையில் 1945ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள்11ஆம் நாள் லாவோஸ், கம்போடியா ஆகிய இரு நாடுகளைத் தவிர மற்ற பகுதிகள் அனைத்தும் சுதந்திரம் பெற்றுவிட்டதென ஜப்பானிய அரசு அறிவித்தது. தொங்கின், அன்னாம், கொச்சின் - சீனா ஆகிய பகுதிகளை உள்ளிட்ட சுதந்திர வியட்நாம் அரசு உருவாக்கப் பட்டது. அவ்வரசின் தலைமைப் பொறுப்பினைப் அன்னா மியப் பேரரசன் 'போவ்-டாய்' (Bao-Dai) என்பவருக்கு அளித்தனர். ஜப்பானியரின் கைப் பொம்மையாக ஏற் படுத்தப்பட்ட அந்த அரசரை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். ஜப்பானியர் போரில் சரனடைந்தவுடன் போவ் - டாய் மன்னரும் பதவி விலகினார். 1945ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 2 ஆம் நாள் டாக்டர் ஹோ-சி-மின்னின் தலைமையிலான வியட் மின்கள் 'வியட்நாமிய ஜன நாயகக் குடியரசு, ஒன்றினைத் தாற்காலிகமாக அமைத்தனர். அவ் வரசிற்கு டாக்டர் ஹோ-சி-மின் தலைவராக்கப்பட்டார். வியட்நாமிய சுதந்திரம் அறிவிக்கப்பட்டது. 'வியட்நாமிய ஜன நாயகக் குடியரசு' தோன்றியது.

அப் புதிய அரசிற்குப் புதிய பிரச்சினைகள் பல உடனடி யாகத் தோன்றின. 16° வட குறுங் கோட்டின் (16th Parallel) வடக்கிலிருந்த ஜப்பானியப் படைகளின் சரணாகதியை சீனப் படைகள் ஏற்கவேண்டுமென்றும், தென் பகுதியிலிருந்த ஜப்பானியப் படைகள் ஆங்கிலப் படைகளிடம் சரணடைய வேண்டுமென்றும் 'பாட்ஸ்டாம்' மாநாடு (Potsdam Confe-rence—1945) அறிவித்தது. இந்த ஏற்பாடு இந்தோ-சீன வர லாற்றின் திருப்பு முனையாக அமைந்துவிட்டது. ஆங்கி லேயரின் உதவியுடன் பிரெஞ்சு மீண்டும் தனது ஆதிக்கத் தினை இந்தோ-சீனாவில் ஏற்படுத்த முயன்றது. பிரெஞ்சு ஆதிக்கம் மீண்டும் ஏற்படுத்தப் படுவதைச் சீனர்கள் எதிர்த் தனர். எனவே, 1946ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 6ஆம் நாள் வியட்நாமியக் குடியரசுடன் பிரான்சு அரசு ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொண்டது. அவ்வொப்பந்தத்தின்படி

வியட்நாமியக் குடியரசின் சுதந்திரத்தினைப் பிரான்சு ஏற்றுக் கொண்டது. ஆனால் அந்த ஒப்பந்தத்தினை மீறி, பிரான்சு வடக்கு வியட்நாமின் மீது படையெடுத்தது. இவ்வாறாக வியட்மின்களுடன் 1946ஆம் ஆண்டில் தொடங்கிய உள் நாட்டுப் போர், எட்டு ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது.

தங்களது முப்படைகளையும் கொண்டு முயன்று தாக்கிய போதும், பிரெஞ்சுக்காரர்களுக்குத் தோல்விமேல் தோல்வியே கிட்டியது. போர்க்களத்தில் கிடைக்காத வெற்றியைப் பிரித்தாளும் சூழ்ச்சியைத் திறமையாகக் கையாளுவதன் மூலம் பெறப் பிரெஞ்சுக்காரர்கள் முயன்றனர். அதன் விளைவாகக் கொச்சின்-சீனப் பகுதிகளின் ஆட்சிப் பொறுப்பினை போவ்-டாய் (BaoDai) என்ற முன்னாள் அன்னாம் பேரரசரிடம் ஒப்படைத்தது. அத்துடன் வியட்நாமில் பிரெச்சுக்காரர் களுக்கும், வியட்மின்களுக்கும் இடையே நடக்கும் போரினை, இரு வியட்நாமிய அரசுகளுக்கிடையே நடக்கும் உள்நாட்டுப் போர் எனவும் திரித்துக் கூறி உலக நாடுகளை ஏமாற்றவும் முயற்சி செய்தது. அத்தகு செயல்களினால் ஹோ-சி-மினின் செல்வாக்கு சிறிதும் குறைந்தபாடில்லை. பிரெஞ்சுக்காரர் களால் அரசபதவியை மீண்டும் பெற்ற போல் டாய் தமக்கு முழு அதிகாரங்களும் கொடுக்கப்பட வேண்டுமென பிரெஞ் சுக் காரர்கனை வற்புறுத்தினார். இது எதிர்பாராத ஆச்சரியத் தைக் கொடுத்தது. பிரெஞ்சு ஒரு சில சலுகைகளை வழங்கி யதன் மூலம் அவரைச் சமாதானப்படுத்த முயன்றது. வியட் நாம், கம்போடியா, லாவோஸ் போன்றநாடுகள் இணை அரசு களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, வர்த்தகத் தொடர்புகளையும், சுங்கவரி உரிமைகளையும் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டன. பிரெஞ்சு அரசு டாக்டர் ஹோ-சி-மினின் வியட்நாமியக் குடியரசினை அங்கீகரிக்கவில்லை, மாறாக அவரை நாடு கடத்திவிட அறிவித்தது. ஆனால் செஞ்சீனா அவருக்கும் அவர் ஏற்படுத்திய அரசிற்கும் பாதுகாப்பளித்தது. பொது வுடைமை நாடுகளின் ஆதரவைப் பெற்ற வியட்மின்கள் தங்களது போரைத் தொடர்ந்தனர். பிரெஞ்சுப்படைகள் வியட்மின்களின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க இயலாது திண்டாடினர். பிரெஞ்சுப் படைகளுக்குத் தோல்விமேல் தோல்வியே கிட்டியது. அவர்களின் தோல்விக்கு முத்தாய்ப்பு வைப்பது போன்ற நிகழ்ச்சி 1954ஆம் ஆண்டு தியன்-பியன்-பூ (Dien-Bien-Phu) நகரில் ஏற்பட்டது. அந்த ஆண்டில் பிரெஞ்சுக்காரர்களின் மாபெரும் கோட் டையான தியன்-பியன்-பூவை முற்றுகையிட்டனர். அமெரிக்கா தங்களுக்கு அளித்திருந்த மிகச் சிறந்த விமானப் படையைக்

கொண்டு பிரெஞ்சுப்படைகள் தாக்குதல்களை நடத்தினர். 55 நாட்கள் நடந்த கடுமையான போருக்குப் பின்னர் 1954ஆம் ஆண்டு மே மாதம் 7–ஆம் நாள் வியட்மின்கள் தியன்-பியன்-பூ நகரைக் கைப்பற்றினர். வியட்மின் படைகள் மாபெரும் வெற்றியைப் பெற்றனர். அத்தகைய படுதோல்விக்குப் பின்னர் பிரெஞ்சு அரசு பேச்சு வார்த்தைகள் நடத்த இசைந்தது. சீனா, ருஷியா போன்ற பொதுவுடமை நாடுகளின் தீவிர முயற்சியின் விளைவாக 1954 ஆம் ஆண்டு ஜெனிவா (Geneva)நகரில் மாநாடு கூட்டப்பட்டது. இந்தோ சீனாவின் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. அந்த மாநாட்டில் இந்தியா மிக முக்கியப் பங்கெடுத்துக்கொண்டது. வி. கே. கிருஷ்ண மேனன் அவர்கள் இந்தியாவின் பிரதிநிதியாக அம் மாநாட்டில் கலந்துகொண்டு அரும்பணியாற்றினார். 'அம் மாநாட்டின் முடிவின்படி 17° குறுங்கோட்டினை ஒட்டி (17th Parallel) வியட்நாம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. வியட்நாமின்களின் ஆட்சியில் வடக்கு வியட்நாமும், பிரெஞ்சு அரசின் ஆதரவிலிருக்கும் பாவ்தாய் பேரரசரின் தலைமையில் தெற்கு வியட்நாமியக் குடியரசும் ஏற்படுத்தப்பட்டன். அப்பிரிவினை தற்காலிகமானதென்றும், பொதுவாக்கெடுப்பின் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டினை ஏற்படுத்த வேண்டுமென்றும், அந்தப் பொது வாக்கெடுப்பும் 1956ஆம் ஆண்டுக்குள் ஏற்படுத்த வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. லாவோஸ், கம்போடியா ஆகிய பகுதிகளினின்றும் பிரெஞ்சுப் படைகள் வெளியேற வேண்டுமென்றும் அவற்றில் சுதந்திர அரசகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. லாவோஸ், கம்போடியா ஆகிய இவ்விரு நாடுகளும் நடுநிலை நாடுகள் எனவும் அறிவிக்கப்பட்டன. போர் நிறுத்த ஒப்பந்தத்தினை மேற்பார்வையிடவும், நிறைவேற்றவும், இந்தியாவின் தலைமையில், கானடாவையும், போலந்தையும் உறுப்பினர்களாகக்கொண்ட 'உலகநாடுகளின் ஆணைக்குழு, (International Control Commission) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் ஜெனிவா மாநாட்டின் கூறுபாடுகள் நிறைவேற்றப்படவில்லை. அதற்கிடையில் அமெரிக்காவும் வியட்நாம் பிரச்சினையில் தலையிட்டது. பொதுவுடமைக் கொள்கைகள் உலகில் பரவவொட்டாமல் தடுப்பதைத் தங்களின் முதன்மைக் குறிக்கோளாகக் கொண்ட அமெரிக்கா திறமையற்ற எடுப்பார்க்கைப் பிள்ளையெனச் செயல்பட்ட பாவ்-தாய் அரசரை ஆதரிக்க மறுத்து, ஙகோ-தின்-தயம் (Ngo Dinh Diem)

என்பவரை ஆதரிக்க முன்வந்தது. ஆனால் அவர் வல்லாட்சி யாளரைப்போல் நடந்துகொண்டார். அதன் விளைவாக அரசியல் குழப்பங்கள் மலிந்தன. தயம் அவர்களின் ஆட்சி யின் குறைபாடுகளும், குழப்பங்களும், தெற்கு வியட்நாமில் அவருக்கு எதிர்ப்பணியை உருவாக்கின. 'தேசிய விடுதலை முன்னணி' 'அல்லது' 'வியட்காங்' (National Liberation Front also known as Viet Cong)என்ற பொதுவுடமையினரின் இயக் கம் டிசம்பர் 1961-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1962-63ஆம் ஆண்டு களில் தென் வியட்நாமில் வியட்காங்கினர் புரட்சியை ஏற்படுத்தினர். அப்புரட்சியை அடக்க வந்த இராணுவத் தினர் தயம் அவர்களையும் அவரது சகோதரரையும் சிறைப் படுத்திக் கொன்றனர். வியட்காங்கினர் தென்வியட்நாமில் செல்வாக்குப் பெற ஆரம்பித்தனர். பொதுவுடைமையினரின் பிடியிலிருந்து தென்வியட்நாமைக் காப்பாற்ற வேண்டும் என்பதையே தங்களது முக்கிய நோக்கமாகக் கொண்ட அமெரிக்கர்கள் தென் வியட்நாமில் பொதுவுடைமையினரின் ஆட்சி ஏற்படுவதையோ அல்லது செல்வாக்கு வளர் வதையோ விரும்பவில்லை. எனவே, தென்வியட்நாம் அரசியலில் தலையிட்டனர். பொருளாதார உதவி, ஆயுத உதவி, இராணுவ ஆலோசனை என்று படிப்படியாக நுழைந்த அமெரிக்கர்கள், பின்னர் தமது படையினையும் பெருமளவில் கொண்டுவந்து, வியட்நாமிய அரசியலைக் கட்டுப் படுத்தி, வியட்காங்குகளை வேட்டையாடினர். தொங்கின் வளைகுடாவில் இருந்த சில அமெரிக்கப் போர்க் கப்பல்களை வியட்காங்கினர் தாக்கியதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு வட வியட்நாம் முழுவதையுமே அமெரிக்கப் போர் விமானங்கள் தாக்கிக் குண்டுமாரி பொழிந்தன. வட வியட்நாமியப் படையினருக்கும் அமெரிக்கப் படையினருக்கு மிடையே நேரடிப்போர் ஆரம்பமாயிற்று. 1968ஆம் ஆண்டில் 60,000-க்கும் அதிகமான அமெரிக்கப் படையினர் வியட்நாம் போரில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அமெரிக்கர்களின் பயங்கரத் தாக்குதல்களை எதிர்த்துப் போர் புரிகின்ற வட வியட்நாமியரின் பேராற்றலையும், வீரத்தையும் கண்டு, உலகமே வியந்தது. இத்தகைய வீரம் செறிந்த நாட்டுப் பற்று மிக்க மக்களை எவ்வளவு தாக்குதல்கள் நடத்தினாலும் பணியச் செய்ய இயலாது என்பதனை அமெரிக்கர்களும் உணர்ந்தனர். இதற்கிடையில் நடந்த போர்களில் அமெரிக்கர்கள் வெற்றி காண இயலவில்லை. இதனால் அமெரிக்காவின் வியட்நாமியக் கொள்கைகளுக்கான பலத்த எதிர்ப்புணர்வு தோன்றியது. அமெரிக்கா தனது படைகளை

யும், பெருமளவிலான செல்வத்தையும் தேவையற்ற போரில் ஈடுபடுத்துவதன்மூலம் வீணடிக்கின்றது என்ற எண்ணம் அமெரிக்க மக்களிடையே பரவி நிலைபெற்றது. அமெரிக்க மக்களிடையே தோன்றிய அத்தகைய எதிர்ப்புணர்வுக்குத் தலைவணங்கிய அமெரிக்க அரசு வியட்நாமிற்குப் படைகளை அனுப்புவதை நிறுத்திக் கொண்டது. சமாதானப பேச்சுவார்த்தைகளைத் தொடங்க அமெரிக்க அரசும் முன்வந்தது. அதன் விளைவாக 1973ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் சமாதான உடன்படிக்கை கையெழுத்தானது. அவ்வொப்பந்தத்தின் படி அமெரிக்கா தனது படைகள் முழுவதையும் வியட் நாமிலிருந்து வெளியேற்றிக் கொள்ள இசைந்தது போர் நிறுத்தப்பட்டது. ஆனால் அமெரிக்கர்கள் விட்டுச் சென்ற படைக்கலன்களைக்கொண்டு, வியட் காங்கினரின் கொரில் லாக்களை அழித்து தனித்தன்மையைக் காத்துக்கொள்ள முடியும் என தியு (Thieu) என்பவரின் தலைமையிலான தென் வியட்நாமிய அரசு எண்ணியிருந்தது. ஆனால் திறமையற்ற, ஊழல்மலிந்த தியுவின் தலைமையிலான அரசினை மக்கள் மதிக்கவில்லை. சிறப்பாகப் புத்த சமயத்தினரும், கத்தோலிக்கர்களும் கடுமையாக எதிர்த்தனர். வியட்காங் படையினர், எதிர்ப்பாளர்களின் ஆதரவுடன் முறையான தாக்குதல்களைத் தொடங்கினர். கொஞ்சம் கொஞ்சமாகத் தென் வியட்நாமிய மாநிலங்களைக் கைப்பற்றி, இறுதியில் தென் வியட்நாம் முழுவதையுமே வென்று, வட வியட்நாமுடன் இணைத்தது. வியட்நாம் பொதுவுடைமையினரின் தலைமையில் மீண்டும் ஒருமைப்பாடடைந்தது. ஹோ-சி-மின் மற்றும் எண்ணற்ற இந்தோ-சீன தேசிய வாதிகளின் ஒரே வியட்நாம் என்ற கனவு நனவாகியது.

## உ. இந்தோனேஷிய தேசிய இயக்கம்

**நாடும் மக்களும் :** இந்தோனேஷியா என்பது சுமத்ரா ஜாவா, போர்னியோ, பாலி, செலிபஸ், மொலுக்கஸ், நியூகினியா போன்ற பெரிய தீவுகளை உள்ளடக்கிய மூவாயிரத்திற்கும் அதிகமான தீவுகளைக் கொண்ட தீவுக் கூட்டமாகும். இத் தீவுக் கூட்டங்கள் பூமியின் நடுக் கோட்டுப் பகுதியில் அமைந்திருக்கின்றன. இத் தீவுக் கூட்டங்களுக்கு 'கிழக்கிந்தியத் தீவுகள்' 'நறுமணத் தீவுகள்' என்ற பெயர்களும் உண்டு. பண்டைக் காலத்திலிருந்தே ஐரோப்பிய நாடுகளுக்குத் தேவையான நறுமணப் பொருள்கள் இந்த நறுமணத் தீவுக் கூட்டங்களிலிருந்து அனுப்பப்பட்டு வந்திருக்கின்றன. இரப்பர், கொய்னா மருந்து, மிளகு, கொப்பரைத் தேங்காய்

பெட்ரோலியம், தகரம், சர்க்கரைப் போன்ற பொருள்கள் உற்பத்தியில் அத் தீவுகள் தற்போதும் முன்னனியில் இருக்கின்றன. அத் தீவுக் கூட்டங்களில் முதன் முதலில் நுழைந்தவர்கள் மலேயர்கள் ஆவர். அவர்களைத் தொடர்ந்து இந்தியர்கள், சீனர்கள், முஸ்லிம்கள் ஆகியோரும் சென்றனர். புத்த, இந்து சமயக்கருத்துக்கள் அத் தீவுகளின் பண்பாட்டில் அதிக செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகின்றன. ஆனால் 15ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இஸ்லாமியச் சமயம் அத் தீவுகளில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. தற்போது பாலி தீவினைத் தவிர ஏனைய தீவுகளில் இஸ்லாம் தேசிய சமயமாக விளங்குகிறது.

**ஐரோப்பியர் வருகை :** நவீன காலத்தில் அத் தீவுக் கூட்டங்களில் ஐரோப்பியர்கள் நுழைந்தனர். போர்ச்சுகீசியர்கள் முதலிலும், அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களும், டச்சுக்காரர்களும் நுழைந்தனர். இறுதியாக நுழைந்த டச்சுக்காரர்கள், மற்ற இரு நாட்டினரையும் விரட்டியடித்துவிட்டு, நறுமணப் பொருள்கள் வர்த்தகத்தில் மூற்றுரிமைப் பெற்று நிலைத்தனர். டச்சு கிழக்கிந்திய வர்த்தகக் குழுவினர் முதலில் வர்த்தகத்தின் நிமித்தம் நுழைந்தவர்கள், சுதேசி அரசுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களின்மூலம், அரசியல் செல்வாக்கும் பெற்றனர். டச்சு கிழக்கிந்திய வர்த்தகக் குழு கலைக்கப்பட்டபோது 1800 லிருந்து அத்தீவுகளின் ஆதிக்கத்தினை டச்சு அரசு ஏற்றுக்கொண்டு விட்டது. 1910ஆம் ஆண்டிற்குள் இந்தோனேஷியா முழுவதும் டச்சுகளின் ஆட்சியின் கீழ்வந்தது.

**டச்சுக்காரர்களின் ஆதிக்கம் :** பேரரசுக் கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றிய ஏனைய ஐரோப்பிய நாடுகளின் அடிச்சுவட்டில், தென்கிழக்காசிய நாடுகளில் மட்டுமே வர்த்தகச் செல்வாக்குப் பெற்றிருந்த டச்சுக்காரர்கள், அத் தீவுகளின் இயற்கை வளத்தினை, தங்களது வர்த்தக மேன்மைக்காக மட்டுமே பயன்படுத்தத் தொடங்கினர். அத் தீவுகளின் முன்னேற்றத்திலோ, அத் தீவு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி, வளம்காணச் செய்வதற்கோ அவர்கள் எவ்வித அக்கரையும் காட்டவில்லை. தங்களுடைய நாடுகளின் கல்வி முறைகளை டச்சுக்காரர்கள் இந்தோனேஷியாவில் புகுத்தவில்லை. மேலை நாட்டு முறையில் உயர் கல்வி பெறும் தகுதி இந்தோனேஷியர்களுக்கு மறுக்கப்பட்டது. மக்களாட்சிக் கொள்கைகள், தேசிய எண்ணம் போன்ற

மேலை நாடடுத் தாராள முறைக் கல்வியில் காணப்படும் புதிய கருத்துக்களை இந்தோனேஷியர் கற்றுக்கொண்டுவிடக் கூடாது என்பதில் டச்சுக்காரர்கள் மிகவும் கவனமாக இருந்தனர். 'இந்தோனேஷியாவின் பண்பாட்டுச் சிறப்பு, மேலையருடைய பண்பாட்டுக் கருத்துக்களால் சிதைவு பெறாமல் காப்பாற்றுதல்' எனக் கூறித் தங்களது 'பண்பாட்டுத் திட்டம் (Ethical Policy) என்ற புதிய கொள்கையை உரு வாக்கிச் செயல்படுத்தினர். அந்தப் பண்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக மக்களிடையே தேசிய எழுச்சியோ அல்லது மக்க ளாட்சி முறைக் கொள்கைகளோ பரவவொட்டாமல் தடை செய்ய முடிந்தது. அத்தகைய காரணங்களால் இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் இந்தோனேஷியாவில் தேசிய இயக்கம் வளர்ச்சியடையவில்லை.

**தேசிய இயக்கத்தின் தோற்றம் :** மேலை நாட்டுக் கல்வி பயின்ற ஒரு சில இந்தோனேஷிய சீனர்கள்தாம் முதன் முத லில் தேசிய இயக்கத்தினை இந்தோனேஷியாவில் தோற்று வித்தனர். செல்வ வளமிக்க இந்தோனேஷிய சீன வர்த்த கர்கள் சிலர் தமது பிள்ளைகளை மேலை நாடுகளுக்கு அனுப்பிக் கல்வி பயின்றுவரச் செய்தனர். அவ்வாறு உயர் கல்வி பயின்று தாய்நாடு திரும்பிய இளைஞர்களின் உள்ளத் திலே தாங்கள் கற்ற கல்வி, தேசிய உணர்வினை முளைவிடச் செய்திருந்தது. அவர்கள்தாம் 19ஆம் நூற்றாண்டில் இந்தோ னேஷியாவில் தேசிய இயக்கத்தினைத் தோற்றுவித்தவர்க ளாவர். தேவையற்ற அதிகமான வரி விதிப்பின் மூலம் சுதேசி இரப்பர்த் தொழில் வளர்ச்சியைத் தடை செய்யப் படுவ தையும், மேலை நாடுகளின் அறிவியல் முன்னேற்றங்கள் இந்தோனேஷியாவில் பரவாமல் தடுக்கப்பட்டு, இருளில் மூழ்கிக் கிடக்கும்படிச் செய்கின்ற டச்சு அரசின் தன்மை யையும், அத்தகைய கற்றறிந்த இந்தோனேஷிய இளைஞர்கள் கடுமையாகச் சாடினர். ஜப்பானில் ஏற்பட்ட மேஜிப் புரட்சியும், அதன் பின்னர் ஐரோப்பிய முறைகளைப் பின்பற்றி விரைந்து முன்னேறி, சீனாவைப் பணியச் செய்து, ஆங்கிலேயருடன் சரி நிகராக நின்று ஒப்பந்தம் செய்துகொண்டு ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றான ருஷியாவைத் தோற்கடித்து, புக ழேணியில் விரைந்து முன்னேறிய ஜப்பானை இந்தோனேஷி யர்களும் வியப்புடன் நோக்கினர். ஜப்பானின் அத்தகு பெருமைதரும் வளர்ச்சி, இந்தோனேஷிய இளைஞர்களின் உள்ளத்தில் மேலை நாட்டினரைப் பின்பற்றி விரைந்து முன்னேற வேண்டும் என்ற தேசிய உணர்வுத் தோன்றியது.

அத்தகைய என்னத்தின் விளைவாக எழுந்ததுதான் 'புதி உதாமோ' (Budi-Utamo or High Endeavour) என்ற முதல் தேசிய இயக்க நிறுவனமாகும். அக் கழகம் 1908 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக் கழக உறுப்பினர்களில் பெரும்பாலோர் அரசுப் பணியாளர்களேயாவர். அவர்களது அடிப்படை நோக்கம் மேலைநாட்டு முறையில் உயர்கல்வி வசதிகளைக் கோருவதாகும். ஆனால் 1912ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட 'சரேகத் இஸ்லாம்' (Sarekat Islam) என்ற தேசிய இயக்கம் மிகவும் சிறந்த கொள்கைகளையும், நோக்கங்களையும் கொண்டு, முன்னேற்ற எண்ணங் கொண்ட கட்சியாகச் செயல் படத் தொடங்கியது. 1914ஆம் ஆண்டு இந்தோனேஷியா முழுச் சுதந்திரம் அடைய வேண்டும் என்பதே சரேகத் இஸ்லாமின் தலையாய நோக்கமென அறிவித்தது. இந்திய தேசிய இயக்கத்தின் செயல் முறைகளான 'அறவழிப் போராட்டம்', மற்றும் ஒத்துழையாமை இயக்கம்' ஆகியவற்றை அப்படியே பின்பற்றிச் செயல்படவும் தொடங்கியது. சீன வர்த்தகர்களின் பிடியினின்றும் இந்தோனேஷியர்களை விடுவிப்பதையும் தனது நோக்கமாகக் கொண்டுச் செயல்பட ஆரம்பித்தது. ஆனால், 1919-ல் தோற்றுவிக்கப் பட்ட 'பார்டை கொம்யூனிஸ் இண்டி' (partai- Kommunis Indi-P. K. I.) என்ற இந்தோனேஷியப் பொதுவுடைமைக் கட்சி புரட்சிகரமான கொள்கைகளைக் கொண்டிருந்தது. அத்தகு தீவிர இயக்கங்களை ஆங்கிலேயர் இந்தியாவில் நசுக்கியது போலவே, டச்சு அரசு இரும்புக்கரம் கொண்டு நசுக்கியது. புரட்சியாளர்கள் வேட்டையாடப்பட்டு, சிறையிலடைக்கப் பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். அதே நேரத்தில் அறவழி சுதந்திரப் போராட்டங்களுக்கு ஓரளவு ஆதரவும் கொடுக்கப் பட்டது. இந்தோனேஷியா முழுவதிலும் 'பகுத்தறிவுப் பாசறைகள்' (Study Clubs) தோற்றுவிக்கப்பட்டன. அப் பாசறைகளில் இந்தோனேஷியாவை அலைக்கழிக்கும் அரசியல், சமுதாயப் பொருளாதாரப் பிரச்சினைகள் அலசப் பட்டன. அப் பிரச்சினைகளுக்காகப் போராடுவது என அத்தகைய பகுத்தறிவுப் பாசறைகளில் முடிவு செய்யப்பட்டன. பாண்டுங் என்ற நகரத்திலிருந்த பகுத்தறிவுப் பாசறையினின்றும் தோன்றியதுதான் 'இந்தோனேஷியா தேசியக் கட்சி' யாகும் (Pattai National Indonesia-P.N.T.). அக் கட்சி 1927ஆம் ஆண்டு தோன்றியது. இந்திய ஒத்துழையாமை இயக்கத்தினைப் பின்பற்றி, முழு அரசியல் சுதந்திரம்பெற்று, மக்களாட்சி மலரச் செய்வது என்பதே அக் கட்சியின் அடிப்படைக் கொள்கையாக அமைந்தது. ஏனைய கட்சிகள்

அனைத்தையும் விட இக் கட்சி மிகவும் தீவிரமாகச் செயல் பட்டு இந்தோனேஷியாவிலேயே மிகுந்த செல்வாக்குப் பெற்று உயர்ந்து விட்ட கட்சியாக மாறியது. தேசியக்கட்சி யின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சிய டச்சுக்காரர்கள் இக் கட்சி யையும் நசுக்க முயன்றனர். குசுமா சுகர்ணோ (Kusuma Sukarno) போன்ற தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். டச்சுக்காரர்களின் அடக்குமுறை தேசிய இயக்கத்தினை மேலும் தீவிரமாக்கியது. தேசிய இயக்கத்தின் எதிர்ப்புகளை முறியடித்து, மக்களின் ஆதரவினைப் பெறும் வகையில் நிர் வாகத்துறையில் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டது. இருப்பினும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளு மன்றத்தினை ஏற்படுத்த மறுத்தனர். டச்சுக்காரர்களின் அடக்குமுறைகளாலும், ஆட்சிமுறைகளாலும் மிகவும் ஆத்திர மடைந்த தேசிய வாதிகள் டாக்டர் சுகர்ணோவின் தலைமை யில் ஒன்று பட்டனர்.

**இந்தோனேஷியா சுதந்திரமடைதல் :** இரண்டாம் உலகப் போரின்போது இந்தோனேஷியதேசிய இயக்கம் மேலும் தீவிர மடைந்தது. இரண்டாம் உலகப் போரின்போது கிழக்கிந்தியத் தீவுகள் அனைத்தையும் வெற்றிகொண்ட ஜப்பான், அந் நாடு களின் ஐரோப்பிய எதிர்ப்பியக்கங்களை மிகவும் ஊக்கு வித்தது. இருப்பினும் கிழக்காசிய நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்க விரும்பவில்லை. ஆனால் அமெரிக்காவின் எதிர்த் தாக்குதல்களால் நிலைகுலைந்த ஜப்பான், தான் வென்ற நாடுகளை இழக்கவேண்டியிவேண்டியிருக்கும் என்பதை உணர்ந்து கொண்ட நிலையில் சரணடைவதற்கு முன்னர் 1945ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 17ஆம் நாள் இந்தோ னேஷியாவின் சுதந்திரத்தினை அறிவித்தது. இந்தோனேஷியா என்ற பெயரில் கிழக்கிந்தியத் தீவுகள் விடுதலை பெற்றன. டாக்டர் சுகர்ணோ அப் புதிய குடியரசின் தலைவரானார். போரின் முடிவில் இந்தோனேஷியாவிலிருந்து ஜப்பானியப் படைகளைக் கலைத்து, நேசநாட்டுப் போர்க்கைதிகளை விடு விக்கும் பணியில் இறங்கிய ஆங்கிலப் படையினர் இந்தோ னேஷியக் குடியரசினை ஏற்றுக்கொண்டு அதன் உதவி யையும் நாடினர். அவர்களையடுத்து வந்த டச்சுக்காரர்கள் இந்தோனேஷிய சுதந்திரத்தினை ஏற்க மறுத்து, தங்களுடைய ஆட்சியை மீண்டும் நிலைபெறச் செய்ய முயன்றனர். தங்க ளது படைகளைப் பயன்படுத்தி மக்களைப் பணியவைக்க முயன்றனர். ஆனால் டச்சுக்காரர்களின் பயங்கரத் தாக்குதல் களுக்கு ஈடுகொடுத்து இந்தோனேஷியர் வீரத்துடன் போரிட்

டனர். டச்சுக்காரர்கள் இறுதியில் ஆங்கிலேயர்களின் வற்புறுத்தலை ஏற்றுக் கொண்டு, இந்தோனேஷியச் சுதந்திரத்தினை ஏற்றுக் கொள்ள முன்வந்தனர். போர் நிறுத்தம் ஏற்பட்டது. டச்சு அரசும், இந்தோனேஷிய ஒப்பந்தம் 'லிங்கட் ஜாடி' (Linggat jati agrreement Nov. 15, 1946) என்ற இடத்தில் கையெழுத்தானது. அதன்படி ஜாவா, சுமத்ரா, மதுரா தீவுப் பகுதிகளைக் கொண்ட இந்தோனேஷியக் குடியரசினை டச்சுக்காரர்கள் அங்கீகரித்தனர். ஆனால் டச்சுக்காரர்கள், விரைவிலேயே இந்த ஒப்பந்தத்தின் கூறுபாடுகளை மீறி, பகைவளர்க்கும் செயல்களில் ஈடுபட்டனர். பகையுணர்வினை வளர்த்துவிட்ட டச்சுக்காரர்கள், அதே பகையுணர்வினைக் காரணம் காட்டி இந்தோசினஷியக் குடியரசின்மீது 'போலீஸ்' நடவடிக்கை (Police Action) எடுத்தது. டச்சுக்காரர்கள் இந்தோனேஷியக் குடியரசினை அழிக்கும் எண்ணத்தில் தங்களது முப்படைகளையும் கொணடு தாக்கினர். இந்தியா, ஆஸ்திரேலியா நாடுகளின் முறையீடுகளை ஏற்றுக்கொண்ட ஐக்கிய நாடுகள் அவை போர் நிறுத்தம் செய்யக்கோரியது. ஐ. நா. வின் போர்நிறுத்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பின்னரும், போரை நிறுத்தாமல், தனது போலீஸ் நடவடிக்கைகளைத் தொடர்ந்து, இந்தோனேஷிய தேசியத் தலைவர்கள் பலரைச் சிறைப்பிடித்தனர். ஐ. நா. வின் பாதுகாப்புக் குழு இத்தகைய அத்துமீறல்களைத் தடுக்க எவ்வித சிறப்பு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. எனவே சுதந்திர இந்தியாவின் தலைமையமைச்சரான பண்டித ஜவஹர்லால் நேரு ஆசிய நாடுகளின் மாநாடு ஒன்றினைப் புதுடெல்லியில் கூட்டி, டச்சுக்காரர்களுக்கு எதிராக அனைத்து ஆசிய நாடுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினார். அத்தகு நடவடிக்கைகளினால் விழித்துக் கொண்ட ஐ. நா. வின் பாதுகாப்பு அவை உடனடியாக போர் நிறுத்தம் செய்யக் கோரும் ஆணையைப் பிறப்பித்தது. உலக நாடுகளின் எதிர்ப்பிற்குத் தலைவணங்கி டச்சுக்காரர்கள் இந்தோனேஷியத் தலைவர்களை விடுதலை செய்தனர். தி ஹேக் (The Hague) நகரில் வட்டமேஜை மாநாடு கூட்டி, இந்தோனேஷியாவின் சுதந்திரத்தைப் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்தவும் ஒப்புக்கொண்டது. அம் மாநாட்டில் இந்தோனேஷியாவின் சுதந்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 16 மாநிலங்களைக் கொண்ட 'இந்தோனேஷிய ஐக்கிய நாடுகள்' என்ற இந்தோனேஷியக் குடியரசு 1949 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27 ஆம் நாள் உதயமானது. 1950 ஆம் ஆண்டு ஒற்றையாட்சி அமைப்புக் கொண்ட இந்தோனேஷியக் குடி

யரசும், 1954 ஆம் ஆண்டு டச்சுக்காரர்களின் தொடர்பினை முற்றிலுமாக முறித்துக் கொண்டது. சுகர்ணோ குடியரசுத் தலைவராகவும், ஹட்டா தலைமையமைச்சராகவும் பதவி யேற்றனர்.

**சுதந்திர இந்தோனேஷியா :** சுதந்திர இந்தோனேஷியாவை எதிர் நோக்கியிருந்த பிரச்சினைகள் ஏராளம். முதன்மை யானப் பிரச்சினை அரசியலில் ஏற்பட்ட நிலையற்ற தன் மையேயாகும். இந்தோனேஷியாவில் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கைப் பெருகின. அதனால் எந்த ஒரு கட்சியும் பெரும்பான்மை இடங்களைப் பெற்று ஆட்சிப் பொறுப்பினை ஏற்க முடியவில்லை. அந் நிலையில் கூட்டணி அரசுகள் தோன்றின. ஆனால் அவையனைத்தும் தோன்றிய வேகத்தி லேயே வீழ்ந்தன. நிலையான அரசு ஏற்பட இயலவில்லை. அதனால் குழப்பங்களும், ஊழலும், பொறுப்பின்மையும் காணப்பட்டன. பொருளாதாரச் சீர்கேடுகள் மலிந்தன. இத் தகையச் சீர்கேடுகளை அகற்றி, நிலையான அரசினை உரு வாக்கும் வகையில் 1957ஆம் ஆண்டில் சுகர்னோ 'வரை யறுக்கப்பட்ட மக்களாட்சி'யை (Guided Democracy) ஏற்படுத் தினார். அதன்மூலம் பாராளுமன்ற முறை ஆட்சி கைவிடப் பட்டது. வரையறுக்கப்பட்ட மக்களாட்சி முறை வல்லாட் சிக்கு வழிகோலும் என அஞ்சிய அரசியல் கட்சிகள் அம் முறையை எதிர்த்தன. அதன் விளைவாகச் சுமத்ரா, போர் னியோ மற்றும் ஏனைய தீவுகளிலிருந்த இராணுவம் புரட்சியி லிறங்கியது. சுகர்ணோ அத்தகு கலகங்கள் அனைத்தையும் 1958ஆம் ஆண்டுவாக்கில் அடக்கி, அமைதியை ஏற்படுத்தி னார். எந்தக் கூட்டணியிலும் சேராமல் தனித்தன்மையுடன் இயங்கும் (Non-Alignment) கொள்கையினைத் தமது அய லுறவுக் கொள்கையின் அடித்தளமாகக் கொண்டார். ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் ஒற்றுமையுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்ற கொள்கையிலும் நம்பிக்கை கொண்டிருந்த சுகர்ணோ 1955ஆம் ஆண்டில் ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளின் மாநாட்டினைத் தம்முடைய நாட்டில் (பாண்டுங்-மாநாடு) நடத்தி இந்தோனேஷியாவிற்கு உலகப் புகழைத் தேடித் தந்தார். அம்மாநாட்டில் பண்டித ஜவஹர்லால் நேரு முக்கியப் பங்கினை ஏற்றார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். சுகர்ணோ ஐ. நாவின் துணையுடன் மேற்கு இரியன் அல்லது நியுகினியாத் தீவினையும் இந்தோனேஷியாவுடன் இணைத் தார். மலேயா, சிங்கப்பூர், சராவாக், புருனை ஆகிய பகுதிகள் இணைந்து மலேசியா கூட்டரசு உருவாவதை மிகவும் கடுமை

யாக எதிர்த்த சுகர்ணோ அக் கூட்டரசு ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் தமது கொரில்லாப் படையினரையும் அனுப்பித் தாக்கச் செய்தார். பின்னர் மலேசியா அவரது எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது தோனறி, அது ஐ.நா. வின் உறுப்பினராகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டபோது, தமது எதிர்ப்பினை வலியுறுத்தும் வகையில் இவர் ஐ. நாவிலிருந்தே இந்தோனேஷியாவை விலக்கிக் கொண்டார். பின்னர் மலேசியாவுடன் சமரசம் ஏற்படுத்திக் கொண்டு ஐ. நா. வின் உறுப்பினராகவும் தொடர்ந்தார். அவர் சீனாவுடனும், பொதுவுடைமைக் கட்சியினருடனும் கொண்டிருந்த நல்லுறவினைப் பலர் விரும்பவில்லை. அதன் விளைவாக 1965ஆம் ஆண்டில் இராணுவப் புரட்சி ஏற்பட்டு, அவரைப் பதவி நீக்கம் செய்ய முயன்று, தோல்வியுற்றது. இருப்பினும் சுகர்ணோவின் புகழ் மங்கத் தொடங்கியது. 1966ம் ஆம் ஆண்டில் வேறு வழியின்றி தமது அதிகாரங்களில் பெரும்பான்மையைத் தளபதி சுகார்ட்டோவிடம் (General Suharto) ஒப்படைக்க வேண்டியிருந்தது. அடுத்த ஆண்டில் பெயரளவுக்கு அவரிடம் இருந்த அதிகாரங்களும் பறிக்கப்பட்டு, அவரது மாளிகையிலேயே அவர் காவலில் வைக்கப்பட்டார். அவர் காவலில் இருக்கும் போதே 1970ஆம் ஆண்டில் மரணமடைந்தார்.

**ஊ. பிலிப்பைனில் தேசிய இயக்கம்**

பசிபிக் பெருங்கடலில், பார்மோசாத் தீவிற்குத் தெற்கில் சுமார் ஒரு மில்லியன் சதுரமைல் பரப்பில் அமைந்திருக்கின்ற ஏழாயிரத்திற்கும் அதிகமான தீவுகளைக் கொண்ட தீவுக் கூட்டமே பிலிப்பைன் தீவுகள் எனப்படுவது. இத் தீவுகளில் உயர்ந்த மலைகளும், அடர்ந்த காடுகளும், எரிமலைகளும் மிகுந்து காணப்படுகின்றன. 1521ஆம் ஆண்டில் ஸ்பானியப் பேரரசரான ஐந்தாம் சார்லஸின் காலத்தில், முதன் முதலில் உலகை வலம் வந்து பெருமை சேர்த்த மெகல்லன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு, ஸ்பானிய இளவரசர் பிலிப் என்பவரின் பெயரால் பிலிப்பைன் தீவுகள் எனப் பெயரிடப் பட்டது. பல நூற்றாண்டு காலம் ஸ்பானியரின் ஆட்சியின் கீழ்க் பிலிப்பைன் இருந்தது. அக்காலத்தில் கிறிஸ்தவ சமயமும், ஐரோப்பியப் பண்பாடுகளும் பிலிப்பைன் மக்களிடையே புகுத்தி, பரப்பப்பட்டது. 1898ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கும் ஸ்பெயினுக்குமிடையே போர் மூண்டது. ஸ்பெயின் தோற்கடிக்கப்பட்டு பிலிப்பைன் தீவுகளை அமெரிக்கா கைப்பற்றியது. பிலிப்பைனியருக்கு கல்வி ஒளியினைத் தந்து, கிறீஸ்தவ சமயத்தினை முறையாக அறிவுறுத்தி,

பண்பாட்டுச் சிறப்பினை உருவாக்கித் தருவதே தமது தலையாய கடமையென அமெரிக்கா எண்ணியது. ஆனால் ஸ்பானியரிடமிருந்து விடுதலையடைந்த பிலிப்பைனியர் அமெரிக்கரிடம் அடிமைபட வேண்டியதிருக்கின்றதே என மனம் புழுங்கினர். அதன் விளைவாக அமெரிக்கர்களுக் கெதிரான கொரில்லாப் போர்களைத் தொடங்கினர். அத்தகைய போராட்டங்கள் 1901ஆம் ஆண்டு வரை நீடித்தது.

அமெரிக்கர்கள் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளின்படி பிலிப்பைனியர்களின் தேசிய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவை வளர உதவி செய்தனர். அரசியல் துறையில் பயிற்சி யளித்தனர். நிர்வாகக் துறைக்கு ஆலோசனை கூறவும், தவறு என்று தெரிந்த போது எச்சரிக்கை செய்யவும் உரிமை கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி-கள் அவையையும் 1907ஆம் ஆண்டு உருவாக்கினர். அரசியலமைப்பிற்கு உட்பட்ட வழிகளில் பல அரசியல் கட்சிகள் சுதந்திரம் கோரிப் போராட்டங்கள் நடத்தவும் உரிமை வழங்கப்பட்டது. முதல் உலகப் போரின் போது தேசிய போராட்டங்கள் மிகவும் வலிமை பெற்றன. 9 பேர் கொண்ட ஆட்சிக்குழு பிலிப்பைனின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்தது. எட்டு பிலிப்பைனியரை அமெரிக்க குடியரசுத் தலைவர் ஆட்சிக் குழுவில் நியமித்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதி நிதிகள் அவையுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட செனேட் அல்லது மேல் அவையும் உருவாக்கப்பட்டது. உலகப் போரின்போது பிலிப்பைனிலிருந்த அமெரிக்கப் படையினர் திருப்பியழைக்கப்பட்டனர். பிலிப்பைனின் சட்டம், அமைதி, ஒழுங்கு ஆகியவைகளை நிலை நிறுத்தும் பொறுப்பினைப் பிலிப்பைனியரே ஏற்கும்படியாயிற்று. இத்தகைய முன்னேற்றக் கொள்கைகள் 1921ஆம் ஆண்டில் குடியரசுக் கட்சி யினர் அமெரிக்க ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பின்னர் சற்றுத் தடைப்பட்டன. 1930ஆம் ஆண்டுவாக்கில் ஏற்பட்ட உலகப் பெருமந்தத்தின் போது பிலிப்பைலிருந்து ஏராள மான பொருள்களை அமெரிக்கா இறக்குமதி செய்து கொண்டு, மிகவும் குறைந்த அளவு பொருள்களையே ஏற்றுமதி செய்தது. பெருமந்தத்தின் பின்னர் பிலிப்பைனிலி ருந்து இறக்குமதியாகும் பொருள்களின்மீது அமெரிக்கா வரி விதித்தது. தங்கள் நாட்டுப் பொருள்களின்மீது இறக்குமதி வரி விதித்த தன்மை பிலிப்பையர்களைத் தங்களது சுதந் திரத்தைப் பற்றி நினைக்கும்படி தோன்றியது. பொருளாதாரக்

காரணங்களுக்காக அமெரிக்க முதலாளிகள் பிலிப்பைனின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவளித்தனர். அத்தகைய காரணங்களினால் "டைடிங்ஸ்-மக்டபி சட்டத்தினை" (Tydings–McDuffie Act–1934) அமெரிக்க நாடாளுமன்றம் நிறைவேற்றியது. அச்சட்டம் 1946ஆம் ஆண்டில் பிலிப்பைனுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்படும் என அறிவித்தது. சுதந்திரம் வழங்குவதற்கு முன்னர் பிலிப்பைனியரின் சுயாட்சி மற்றும் நிர்வாகச் செயல் முறைகளை அமெரிக்க அரசு மேற்பார்வையிடும். அதன்படி 1935ஆம் ஆண்டு சுயாட்சியுரிமை பெற்ற பிலிப்பைனின் காமன்வெல்த் உருவாக்கப்பட்டது அக் காமன்வெல்த்தின் ஆட்சிப் பொறுப்பினை நான்காண்டுப் பதவிக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர் மற்றும் உதவி குடியரசு தலைவர் ஏற்பர். அதே போலத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சபை, மற்றும் செனேட் சபை என இரு சபைகள் கொண்ட நாடாளுமன்றமும் அதே நான்காண்டுப் பதவிக் கால அளவில் தேர்ந்தெடுக்கப்படும் எனவும் அறிவித்தது. டைடிங்ஸ்–மக்டபி சட்டத்தின் கூறுபாடுகள் பிலிப்மைனியர்களால் வரவேற்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன.

இரண்டாம் உலகப் போரின் போது, பிலிப்பையரில் ஒரு பகுதியினர் ஜப்பானுக்கு ஆதரவாக இருந்தாலும், பெரும்பான்மையினர் ஜப்பானியரைக் கடுமையாக எதிர்த்துப் போரிட்டனர். சூழ்நிலைச் சாதகமாக இருந்தால் பிலிப்பைனிக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்படும் என 1944ஆம் ஆண்டு அமெரிக்க குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் அறிவித்தார். அவ்வறிவிப்பின்படி 1946ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4ஆம் நாள் பிலிப்பைன் சுதந்திரமடைந்தது. சுதத்திரம் வழங்கிய பின்னரும் பிலிப்பைனின் வளர்ச்சிக்கும், போரின் அழிவுகளைத் திருத்தி, புதுப்பிப்பதற்கும் அமெரிக்கா முழு உதவியளித்தது. வருங்காலத்திலும் பிலிப்பைன் தீவுகளை அந்நியர் படையெடுப்பிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பினை அமெரிக்கா ஏற்றுக் கொண்டுள்ளது. பிலிப்பைன் தீவுகளில் படைத்தளங்கள் அமைத்து நிர்வகிக்கும் உரிமையினையும் அமெரிக்கா பெற்றுள்ளது.

சுதந்திர பிலிப்பைன் குடியரசின் முதல் குடியரசுத் தலைவராக மானிவல் ராக்சாஸ் (Manual Roxas) என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிலிப்பைன் குடியரசு தோன்றிய போதே, அதன எதிர்ப்பியக்கங்களும் தோன்றின. ஜப்பானிய

எதிர்ப்பியக்கமாகத் தோன்றிய 'ஹக்பாலாப்' (Huk Balahap) என்ற பொதுவுடமையினர் மானுவல் ராக்சாஸின் குடியரசின் எதிர்ப்பாளியாகச் செயல்பட்டனர். ஹக்குகளின் புரட்சி ஆரம்பமானது. நிலச் சீர்திருத்தங்களையும், கூட்டுப் பண்ணை முறைகளையும் உருவாக்கி, வேளாண்மைப் புரட்சியை உருவாக்க வேண்டுமென ஹக்குகள் போராட்




படம் 17.2
தென்கிழக்காசிய ஒப்பந்த நாடுகள்

டங்களைத் தொடங்கினர். பிலிப்பைன் அரசு ஹக்குகளின் புரட்சியை நசுக்கும் வலிமையற்றுக் காணப்பட்டது. அந் நிலையில் 'ராமோன் மக்சாசே (Ramon Magsaysay) என்பவர் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டார். ஹக்குகளை அடக்கும் முழுப் பொறுப்பும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ராமோன் மக்சாசே ஹக்குளை அழிப்பதற்குப் பதிலாக அவர்களைத் திருத்த முயன்றார். அர்சாங்கத்தின் குறைபாடு களைக் களைந்து அதன் மூலம் ஹக்குகள் அரசாங்கத்தினை எதிர்ப்பதற்கு காரணமாக இருந்த குறைகளை அகற்ற முயற்சி செய்தார். ஹக்குகளைச் சேர்ந்த புரட்சியியக்கத்தினர்

தாமாக அரசிடம் சரணடைந்தால் அவர்களுக்குச் சொந்த நிலமும், வீடும் வழங்கப்படும் என அறிவித்தார். சரணடையாமல் புரட்சியில் ஈடுபட்டவர்களை வேட்டையாடினார். புரட்சியாளர்கள் மலைப் பகுதிகளுக்கு விரட்டப்பட்டனர். பின்னர் பொதுவுடைமைக் கொள்கைகளை பிலிப்பைனிலிருந்தே அகற்றும் பணியில் இறங்கினார். அத்தகைய சிறப்புத் பணிகளால் பிலிபபைனியரின் உள்ளங்களிலே இடம்பெற்று விட்ட ராமோன் மக்சாசே 1953ஆம் ஆண்டு பிலிப்பைனின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஏழைகளின் தோழன். துயருற்றவர்களின் துயர் துடைக்கும் உற்ற நண்பன்; சீர்திருத்த செம்மல்; பிலிப்பைனிய மக்களின் உன்னத வாழ்விற்காக எத்தகைய தியாகங்களையும் செய்யத் தயங்காத தனிப் பெருந்தலைவர். அமெரிக்காவுடன் நல்லுறவு கொண்டிருந்த அவர், ஏனைய நாடுகளுடனும் நட்புறவினை ஏற்படுத்திக் கொண்டார். தென் கிழக்காசியா நாடுகளில் பொதுவுடைமைக் கொள்கை பரவுவதைத் தடுக்கும் எண்ணத்தில் உருவாக்கப்பட்ட 'தென் கிழக்காசிய நாடுகளின் ஒப்பந்த நிறுவனம்' (South East Asian Treaty Organisation–S. E. A. T. O)ஏற்படவும், அந் நிறுவனத்தின் தலைமையகம் பிலிப்பைனில் ஏற்படுத்தப்படுவதற்கும் ராமோன் மக்சாசே காரணமாக இருந்தார்.

## அரேபிய தேசிய இயக்கம்

மேற்கு அரேபியாவில் வாழும் அரேபியரிடம் ஒருவகையான ஒற்றுமை உணர்வை, அரேபிய தேசிய உணர்ச்சியைக் காணமுடியும் அத்தகைய தேசிய உணர்ச்சி எழப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் முதலாவதும் முக்கியமானதும் அவர்களுடைய சமயமான இஸ்லாமேயாகும். இஸ்லாம் அரேபியரின் பொதுச் சமயம் என்பதோடு அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு அடைய வேண்டிய இலக்காகவும் விளங்கியது. நபிநாயகத்திற்குப் பிறகு அவரது போதனைகளை அண்டை நாடுகளுக்கெல்லாம் அரேபியர் கொண்டு சென்றனர். அங்கே அரேபிய இஸ்லாமியப் பண்பாட்டை உருவாக்கி வளர்த்தனர். இந்தப் பொதுப் பண்பாட்டு மரபு அவர்களுக்கு ஊக்கத்தையும் உத்வேகத்தையும் அளித்து வந்தது. இங்ஙனம் அரேபிய உலகை ஒன்றுபடுத்தும் சக்தியாக மட்டும் இஸ்லாம் விளங்கவில்லை. மேற்கு ஆசியாவில் தேசிய உணர்வை வளர்க்கும் வலிமை மிக்க காரணக் கூறாகவும் அமைந்துள்ளது.

முதல் உலகப் போர் வரையில் பல நூற்றாண்டுகளுக்கு அரேபியரை அடக்கியாண்டனர் ஆட்டோமன் துருக்கியர். இதனால் பல அரேபிய நாடுகளிடையே அரசியல் ஒற்றுமையும் ஒரே சீரான ஆட்சி அமைப்பும் தோன்றும் வாய்ப்பு ஏற்பட்டது. மேலும் பொது மொழியும், பொது சமயமும், பொதுவான சமுதாய, பொருளாதார அமைப்பும் வளர வழி பிறந்தது. மேலும், பொதுவான மன்னரின் ஆதிக்கத்துக்குட் பட்டிருந்த அரேபியரிடம் பொதுவான நலன்கள் வளரவும் ஒற்றுமை உணர்வும், தேசிய உணர்ச்சியும் கிளர்ந்தெழவும் வாய்ப்பு அதிகரித்தது.

எகிப்து மன்னரான முகமது அலி சிரியாவை வென்றதுடன் தமது ஆதிகத்தின்கீழ் அரேபியப் பேரரசு ஒன்றை நிறுவ முயன்றார். அவரது முயற்சி தோல்வியுற்ற போதிலும் அம் முயற்சி அரேபியரிடையே தேசிய உணர்வைத் தட்டியெழுப்பியது. முகம்து அலியும் அவரது மைந்தரான இப்ரஹீமும் தங்களது பேச்சுகளாலும் செயல்களாலும் கற்றறிந்த அரேபியரின் உணர்ச்சியைத் தூண்டி, உண்மையான அரேபிய அரசை அமைக்கும் ஆர்வத்தை வளர்த்துவிட்டனர்.

இஸ்லாம் சமயத்தை அதன் பழைமையான தூய வடிவில் மீட்பதற்காக அரேபியாவில் எழுந்த வகாபி இயக்கம் (Wahabi Movement) அரேபிய புத்துணர்ச்சிக்குப் பேருதவி செய்தது. மேலும், அது சீர்குலைந்த நிலையிலுருந்த அரேபிய உலகிற்குப் புத்துயிரும் புதுத் தெம்பும் அளித்ததுடன் அரேபியரிடையே ஒற்றுமை உணர்வைத் தூண்டவும் உதவியது.

ஜமால் உத்தின் அல் ஆப்கனி (Jamal Ud-Din al Afghani) என்பவரின் தலைமையில் சமயச் சீர்திருத்தவாதிகள் சிலர் அனைத்து இஸ்லாம் கொள்கையைப் (Pan Islamism) பரப்பினர். அதன்மூலமாக முஸ்லீம் தேசியத்தை மீட்க அவர்கள் முயன்றனர். அவர்கள் கண்ட இயக்கம் அரேபிய தேசிய வளர்ச்சிக்கு மறைமுகமாக ஆக்கம் தந்தது.

அரேபிய தேசிய எழுச்சிக்கு மேலை நாட்டுக் கல்வி ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. மேலை நாட்டு தேசியக் கருத்துக்கள் முதலில் அரேபிய நாடான சிரியாவில் பரவத் தொடங்கின; மேலை நாட்டுக் கல்வி முறையின்

விளைவாகச் சிரியா மேலை நாட்டு தேசியக் கருத்துகளின் செல்வாக்கிற்குட்பட்டது. சிரியாவில் எழுந்த ஒருவகையான இலக்கிய மறுமலர்ச்சியினால் உத்வேகம் கொண்ட அரேபிய சிரிய தேசிய உணர்வு மெதுவாக மற்ற அரேபிய நாடுகளிலும் பரவியது.

சில அரேபிய அறிஞர்களின் இடையறாத உழைப்பின் காரணமாக அரேபிய தேசிய இயக்கம் ஊக்கமும் ஆக்கமும் பெற்றது. பட்ரஸ் எல் பஸ்டானி (Butrus El Bustani) யும் அவரது நண்பரான நஸீப் யாஸிஜியும் (Nasip Yazeji) 1857-ல் பேருட் நகரில் சிரியா அறிவியல் கழகத்தை நிறுவினர். பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த அரேபிய அறிஞர்கள் கூடிப் பேசும் வாய்ப்பினை அக் கழகம் நல்கியது. அதன் உறுப்பினர்கள் தாங்கள் அரேபியர் என்பதில் பெருமிதம் கொண்டதுடன் அரேபியப் பண்பாட்டைச் சிறப்பித்துப் பேசி வந்தனர். நஸிப் யாஸிஜின் புதல்வரான இப்ரஹீம் யாஸிஜி புகழ்மிக்க நாட்டுப் பற்றுப் பற்றிய துள்ளல் பாடலை (Ode to Patriotism) இக் கழகத்தில்தான் அரங்கேற்றம் செய்தார். அதில் அரேபியக் கலாச்சாரத்தின் மாண்பினை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்றும் துருக்கியரின் ஆட்சியைத் தங்கள் நாட்டிலிருந்து ஓட்டுதற்கு ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்றும் அரேபிய மக்களைக் கேட்டுக் கொண்டார், அரேபிய தேசியத்தை வளர்த்தவர்களில் சிரியா நாட்டு எழுத்தாளரான அப்துர் ரஹ்மான் எல் கவாகபி (Abdur-Rahman-el-Kawakabi) முக்கியமானவர். சில சமயங்களில் அரேபிய தேசியத் தந்தை எனப் போற்றப்பட்ட அவர் இஸ்லாமியர் ஒன்றுபட வேண்டுமென்றும் அரேபிய கலிபா ஆட்சியை (Arab Khaliphah) மீட்க வேண்டுமென்றும் மக்களைக் கேட்டுக் கொண்டார். துருக்கியரின் கொடுங்கோல் ஆட்சியைக் கண்டித்ததுடன் கோழைகளாய் அன்னிய ஆதிக்கத்திற்கு அடிபணிந்து கிடக்கும் அரேபியரின் அறியாமையையும் குறை கூறினார். அவரும் துருக்கியரை விரட்டிவிட்டு ஒன்றுபட்ட அரேபிய அரசை நிறுவுமாறு மக்களை வேண்டிக் கொண்டார். இஸ்லாமியப் புத்துயிர்ப்பு, அரேபிய தேசியம், அரசியல் சட்ட முறையிலான ஆட்சி ஆகியவற்றைப்போதித்த அதே நேரத்தில் மேலை நாட்டு நாகரிகத்தைத் தழுவுமாறும் அரேபிய மக்களைக் கேட்டுக் கொண்டார். இங்ஙனம் அவரது பேச்சுகளும் எழுத்துகளும் பின்னால் வந்த அரேபிய விடுதலை இயக்கங்களின் கருத்தியலான அடிப்படையாக அமைந்தன.

முதல் உலகப் போர் எழும் வரையில் அரேபியத் தேசிய இயக்கத்தில் மூன்று கட்டங்களைக் காணலாம். முதல் கட்டத்தில் அது கருத்தியலான (Idealistic Movement) இயக்கமாகவே திகழ்ந்தது. அப்போது பண்டைய அரேபியப் பண்பாட்டின் பெருமையால் ஊக்கமடைந்தது. மேலைநாட்டு அரசியல் சட்ட முறையிலான கருத்துகளால் உந்தப்பெற்ற அறிஞர் பலர் அரேபியப் பண்பாட்டின் மறுமலர்ச்சியையும் துருக்கியில் அரசியல் சட்ட அடிப்படையிலான அரசாங்கம் அமைவதையும் விரும்பினர். அவர்கள் துருக்கியர் ஆட்சியை எதிர்க்கவில்லை. இரண்டாவது கட்டத்தில் தன்னாட்சிக் கோரிக்கை எழுந்தது. கிறிஸ்தவ நாடுகளிடம் துருக்கியர் தோல்வி அடைந்ததைக் கண்டு வெறுப்புற்ற அரேபிய தேசியவாதிகள் துருக்கியப் பேரரசில் அடங்கிய அரேபிய மாநிலங்களுக்குத் தன்னாட்சி வழங்க வேண்டுமென்றும் அரேபிய மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்றும் வற்புறுத்தத் தொடங்கினர். கொண்ட குறிக்கோளை அடைவதற்குச் சிரியாவிலும் மற்ற பகுதிகளிலும் சில இரகசிய சங்கங்கள் வேலைசெய்து வந்தன. மூன்றாவது கட்டத்தில், அரேபிய தேசியவாதிகள் துருக்கிய ஆதிக்கத்திலிருந்து முழு விடுதலை கோரி தீவிர நடவடிக்கைகளில் இறங்கலாயினர். முதலில் இளம் அரேபியர் (Young Arabs) எனத் தங்களை அழைத்துக் கொண்ட அரேபிய தேசிய வாதிகள் துருக்கிய சுல்தான் அமீதின் (Hamid) எதேச்சாதிகார ஆட்சியை அகற்றவும் துருக்கியில் அரசியல் சட்ட முறையிலான ஆட்சியை அமைக்கவும் இளந் துருக்கியருக்கு (Young Turks) உதவி செய்தனர். ஆனால் இளந்துருக்கியர் சர்வாதிகார ஆட்சி நடத்தியதால் அரேபியர் துருக்கியர் மீது வெறுப்புக் கொண்டு அவர்களை விரட்ட உறுதி பூண்டனர். இவ்வாறு கருத்தியலான இயக்கமாகத் தொடங்கிய அரேபிய தேசிய இயக்கம் 1908-ல் துருக்கியப் புரட்சிக்குப்பின் முழுக்கமுழுக்க நடைமுறை சார்ந்த அரசியல் இயக்கமாக மாறியது.

இருப்பினும் துருக்கியப் பேரரசில் அரேபியருக்குத் தன்னாட்சி வேண்டுமென்ற அரேபியரும் பலர் இருந்தனர். துருக்கியப் பேரரசில் ஆட்சியைப் பன்முகப்படுத்த)க் (Decentralisation) கோரும் ஹூரி ஜெட்வி இட்டிலாப் (Hurrijet we Ittilaf) (விடுதலை, ஒத்திசைவுக்கட்சி) என்னும் கட்சி 1911-ல் நிறுவப்பட்டது. அல்கட்டானியா Al Kattaniya) எனும் இரகசியக் கட்சியும் துருக்கி-அரேபியக் பேரரசு அமைய வேண்டுமென்றும், அதில் அரேபியர்

பண்பாட்டுச் சுதந்திரம் பெற்று வாழவேண்டுமென்றும் கூறி வந்தனர். ஆனால் 1912- நடந்த சில நிகழ்ச்சிகளால் அரேபியர் இளந் துருக்கியிடம் நம்பிக்கை இழக்கலாயினர். அந்த ஆண்டில் துருக்கியிடமிருந்து திரிப்போலியை (Tripoli) இத்தாலி கைப்பற்றியது. அல்பேனியா, கிரீஸ் முதலான நாடுகள் துருக்கியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டன. இவற்றினால் எல்லாம் துருக்கியப் பேரரசில் இருந்துகொண்டே வளர்ச்சியடைய முடியும் என்ற நம்பிக்கையை அரேபியர் இழக்கலாயினர். எனவே, துருக்கிய ஆட்சியை விலக்கவும் சுதந்திர அரபு அரசை நிலை நாட்டவும் ஆட்டோமான் படையைச் சேர்ந்த அரேபிய அதிகாரிகள் 1913-ல் அல் அஹாத் (Al-Ahad) கட்சியைத் துவக்கினர். அதன் தலைவரான மேஜர் அஜீஸ் அலி (Major Aziz Ali) கைது செய்யப்பட்டு கெய்ரோவிற்கு நாடு கடத்தப்பட்டார். ஆனால் அவர் அங்கிருந்துகொண்டே அல் அஹாத்தை ஊக்குவித்து வந்தார். முதல் உலகப் போர் வெடித்தபோது தேசியவாதிகளில் ஒரு பிரிவினர் நேச நாடுகளை ஆதரிக்கத் தொடங்கினர். போர் முடிந்ததும் தங்களது குறிக்கோளான தன்னாட்சியை நேச நாடுகள் வழங்கும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு செய்தனர். ஆனால் துருக்கியப் பேரரசு வீழ்ந்து விட்டால் தங்கள் மீது வெள்ளையரின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடும் என அஞ்சியதால் மற்றொரு பிரிவினர் துருக்கியை ஆதரிக்கலாயினர். ஆனால் அவர்கள் வெகு விரைவிலேயே நேச நாடுகளின் வெறிகளையும் இளந் துருக்கியரின் குறுகிய நாட்டு வெறியையும் கண்டு, ஏமாற்றமடைந்தனர். துருக்கியர் இரக்கமற்ற முறையில் அரேபிய தேசயவாதிகளை ஒடுக்க முற்பட்டதால் 1916-ல் அரேபியர் புரட்சிக் கலகம் செய்தனர். பிரிட்டனின் ஆதரவுடன் எழுந்த இக் கலகத்தை ஹஷிமைட் (Hashimite) குடும்பத்தைச் சேர்ந்த ஹுசேன் ஷெரீப் (Hussain Sheriff) தலைமைதாங்கி நடத்தினார். ஆரம்பத்தில் வலிமை குன்றியிருந்த புரட்சிக் கலகம் பல தேசியவாதிகள் சிந்திய இரத்தத்தால் வலிமை பெற்றுவிட்டது. துருக்கிய ஆட்சியாளர் ஜமால்பாஷா பல தேசிய இயக்கத்தவரைச் சிறைக்குள் தள்ளியதுடன் பலரைத் தூக்கிலிட்டுக் கொன்றதால் புரட்சிக் கலகம் தீவிரமடைந்தது. ஹுசேனின் மகனான எமிர் பெய்சல் (Emir Faisal) பிரிட்டனிடமிருந்து படைக்கலங்களையும் பணத்தையும் உதவியாகப் பெற்றுப் புரட்சியைத் தீவிரமாக்கினார். இறுதியில் அரேபியரின் புரட்சி வெற்றி பெற்றது. அரேபிய தேசிய இயக்கத்தவர்களும் டமாஸ்கஸ் கூட்டு ஒப்பந்தம் (Damascus Protocol) என்ற முழுநிறைவான

கூட்டு ஒப்பந்த நடை முறைகளை உருவாக்கினர். அதில் மத்திய தரைக்கடலுக்கும் பாரசீக வளைகுடாவிற்கும், சிரியாவின் வட எல்லைக்கும் இந்துமாக்கடலுக்கும் மிகைப் பட்ட பகுதியில் அரேபியர் உரிமையுடன் வாழ உறுதி செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினர்.

முதல் உலகப்போரில் துருக்கியர் படு தோல்வி அடைந்த போது தங்களுக்கு விடுதலை கிடைக்கும் நாள் நெருங்கி விட்டது என அரேபியர் நம்பினர். ஆனால் முன்னால் கொடுத்திருந்த வாக்குறுதிகளை எல்லாம் பிரிட்டன் புறக் கணித்துவிட்டது. 1916-ல் பிரான்சுடன் சைக்கஸ்-பிகோட் (Sykes Picot) செய்துகொண்டு அதன் மூலமாக அரேபிய உலகைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டனர். தேசியவாதிகளின் ஒன்றுபட்ட அகண்ட அரேபியா எனும் கனவு சுக்குநூறாகச் சிதைந்தது. ஒற்றுமை கொண்ட அரேபி யாவிற்குப் பதிலாகப் பாலஸ்தீனம், சிரியா- லெபனான், ஈராக் என்னும் மூன்று பகுதிகள் வல்லரசுகளின் காப்பு நாடுகளாக வகுக்கப்பட்டன. அரேபிய தேசியவாதிகளிடையே கசப் புணர்ச்சி மேலோங்கியது. அவர்கள் நம்பிக்கையிழந்து வெறுப்பு மனப்பான்மை கொண்டவர்களாக மாறினர். வெந்த புண்ணில் வேலெறிவதைப் போல 1917-ல் பிரிட்டிஷ் அமைச்சர் பால்போரின் (Balfour Declaration) அறிக்கை வந்தது. மத்திய ஆசியாவில் யூதர்களின் தேசிய அரசை நிறுவ உதவி செய்வதாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதி கூறியது அரேபியரின் முதுகில் குத்துவது போலிருந்தது. யூதர் நாட்டை உருவாக்கும் யூத இனத்தவரின் திட்டத்தை அரேபியர் முழு மூச்சுடன் எதிர்த்தனர், ஆயினும், 1940-ல் இஸ்ரேல் என்னும் யூதர் நாடு தோன்றி அரேபியரின் ஆத்தி ரத்தை அதிகரித்தது.

இரண்டாவது உலகப் போரின் போதும் அதன்பின்னரும் அரேபிய தேசிய இயக்கம் வளர்ந்து வந்தது. அதற்கு எகிப்தின் ஆதரவு வாயப்பாக வந்தது. உரிமை பெற்ற ஏழு அரபுநாடுகளான எகிப்து, சவூதி அரேபியா (Saudi Arabia) ஈராக், சிரியா, லெபனான், யெமன் (Yemen), டிரான்ஸ் ஜோர்டன் (Trans Jordan) ஆகியவை 'அரேபியர் கழகத்தை' (Arab League) நிறுவியுள்ளன. ஆனால் இக் கழகத்தில் உட் பூசல்கள் மலிந்துள்ளன. இஸ்ரேலுடனான போரில் அரபு நாடுகளிடையேயான ஒற்றுமையின்மை நன்கு புலப் பட்டது. அனைத்து அரபு நாடுகளிடையே முழு ஒற்றுமை

என்பது நெடுந்தூரக்கனவாகவே இருந்து வருகின்றது. எனினும், அரேபியரிடம் சமயம் சாராப் பண்பும் சோஷலிசமும் வளர்ந்துவருகின்றன. அவர்கள் அரசியல் சமுதாய நலத் திட்டங்களை வகுத்து முன்னேறி வருகின்றனர். அரபு நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைய வேண்டுமென்ற குறிக்கோளைக் கைவிட்டு சுதந்திர அரபு நாடுகளிடையே நெருங்கிய உறவு வேண்டுமேன்று விழைகின்றனர்.

## சிரியாவிலும் லெபனானிலும் தேசிய இயக்கம்

**சிரியா**

முதல் உலகப் போருக்குப் பின் அரேபிய தேசியம் வீருடன் வெளிப்பட்டது. முதலில் சிரியாவில்தான் சுதந்திர அரசை அமைக்க அரேபியர் முயன்றனர். 1918 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் மன்னர் பெய்ஸல் (Feisal) ஓர் அரேபியப்படையுடன் டமாஸ்கஸ் நகரில் புகுந்து சிரியாவிற்கான அரசாங்கம் ஒன்றை அங்கே அமைத்தார். அவரது ஆட்சியை மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்றனர். அவரை அரேபியரின் தலைவர் என்றும், எழுச்சியுற்ற இஸ்லாத்தின் எழில்மிகு சின்னம் என்றும் போற்றிக் கொண்டாடினர். சிரியாவிற்கு முழு விடுதலை பெற்றுத் தருவதாக வாக்களித்த பெய்ஸல் அரசாங்கப் பதவிகளில் சிரியர்களையே நியமித்து அந் நாட்டுமக்களின் மாறாத அன்பைப் பெற்றார். போருக்குப்பின் நடைபெற்ற அமைதி மாநாடுகளில் கலந்துகொண்டு அரபு நாடுகளுக்கு முழு விடுதலை வழங்கவேண்டு மென்று வல்லரசுகளுடன் வாதாடினார். ஆனால் வேறு சில அரேபியத் தலைவர்கள் சிரியா பிரான்ஸின் காப்பு நாடாக இருக்க வேண்டுமென்றும் ஓரளவு தன்னாட்சி வழங்கினால் போதும் என்றும் கூறிவந்தனர். அதனால் சிரியா நாட்டு மக்களின் எண்ணத்தை அறிந்துகொள்ள ஆய்வுக் குழுவை அந் நாட்டிற்கு அனுப்புமாறு மன்னர் பெய்ஸல் யோசனை கூறினார். அவரது யோசனையை அமைதி மாநாடு ஏற்றுக் கொண்டது. ஆயினும் பிரிட்டனும் பிரான்சும் அந்தக் ஆய்வுக் குழுவில் சேரமறுத்ததால் கிங் (King) கிரேன் (Crane) ஆகியோரின் தலைமையில் அமெரிக்க அங்கத்தினர் மட்டுமே சிரியா சென்றனர். 1919-ல் அனைத்துசிரியா மாநாடு இயற்றிய பல்வேறு தீர்மானங்களை மன்னர் பெய்ஸல் அந்த ஆய்வுக் குழுவின் முன் வைத்தார். சட்டவரம்பிற்குட்பட்ட முடிமன்னரான பெய்ஸலின் தலைமையில் சிரியா முழு விடுதலை பெற்ற நாடாக வேண்டுமென்று அத் தீர்மானங்

களில் வலியுறுத்தப்பட்டிருந்தது. மேலும், சிரியாவைப் பிரான்ஸின் காப்பு நாடாகச் செய்யலாம் என்ற கருத்தையும் யூதர்களுக்குத் தனிநாடு அமைக்க வேண்டுமென்ற கருத்தையும் மாநாட்டுத் தீர்மானங்கள் கண்டித்தன கிங்-கிரேன் தலைமையில் வந்த ஆய்வுக் குழு சிரியாமக்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அதற்கிணங்க பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் தனது பரிந்துரைகளை அனுப்பியது.

ஆனால் பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்கரின் ஆலோசனையை ஏற்கமறுத்து 1916-ல் ஏற்பட்ட ஒப்பந்தப்படி அரபு நாடுகளைத் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொள்ளமுற்பட்டன. போரின்போது செய்துகொள்ளப்பட்ட அந்த ஒப்பந்தப்படி சிரியாவின் கடற்கரைப்பகுதி பிரான்ஸின் பாதுகாப்பில் இருக்க வேண்டும்; உள்நாட்டுப் பகுதியை மன்னர் பெய்ஸல் ஆட்சி செய்யலாம்; ஆனால் அவர் பிரான்ஸின் ஆதிக்கத்திற்குட்பட்டே ஆட்சி செய்ய வேண்டும். ஆனால் இந்த ஒப்பந்த ஏற்பாட்டைச் சிரியர் ஏற்றுக் கொள்வதாயில்லை. 1920-ல் கூடிய தேசிய சிரியா மாநாட்டில் பெய்ஸலின் தலைமையில் சிரியா, பாலஸ்தீனம், லெபனான் ஆகிய பகுதிகள் சுதந்திர நாடாக வேண்டுமென்று வலியுறுத்தினர். அக் கோரிக்கையைப் பிரான்ஸ் ஏற்க மறுத்து விட்டது. அதே ஆண்டில் சான் ரிமோ (San Remo) என்னுமிடத்தில் கூடிய நேசநாடுகளின் உயர் ஆலோசனைக் குழு வளமான சிரியா நாட்டுப் பகுதியைப் பிரான்சும் பிரிட்டனும் தங்களுக்குள் பகிர்ந்துகொள்ளும் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. அதன் விளைவாகச் சிரியாவும் லெபனானும் பிரான்ஸின் காப்பு நாடுகளாயின. பாலஸ்தீனமும் ஈராக்கும் பிரட்டனிடம் ஒப்படைக்கப் பட்டன.

இந்தச் சான் ரிமோதிட்டத்தைச் சிரியா மக்கள் கண்டனம் செய்தனர். பிரான்சுக்கெதிராகப் புரட்சிக்கலகம் செய்தனர். ஆனால் ஒற்றுமையின்றிக் கிடந்த புரட்சிப்படையினர் கட்டுப்பாடான பிரெஞ்சுத் தாக்குதலைச் சாமாளிக்க முடியாமல் சிதறி ஓடினர். மன்னர் பெய்ஸலை நாடுகடத்தி விட்டுப் பிரெஞ்சுக்காரர்கள் டமாஸ்கஸில் தங்கள் ஆதிக்கத்தை உறுதி செய்தனர். ஆயினும், சிரியரின் விடுதலைப் போராட்டம் ஓய்ந்துவிடவில்லை. அவ்வப்பொழுது கிளர்ச்சிகளும் கலகங்களும் தோன்றியவண்ணமிருந்தன. இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்கள் கையாண்ட பிரித்தாளும் கொள்கையைப் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் சிரியாவில் கையாண்டனர்

அதன் மூலமாகச் சிரியா மக்களின் சுதந்திர தாகத்தை ஒடுக்கி விட முடியுமென்று கனவு கண்டனர். சிரியாவை நான்கு பகுதி களாகப் பிரித்து அவற்றை ஒன்றோடொன்று மோத விட்டனர். மற்ற பகுதிகளை விட லெபனானுக்கு அதிக சிறப்புரிமைகள் வழங்கிச் சிரியரிடையே வேற்றுமையை வளர்க்க முற்பட்டனர். ஆயினும், ஆட்சியாளர்களுக்கும் சிரியா மக்களுக்குமிடையே வெறுப்பு வளர்ந்து வந்தது. அதன் விளைவாக மோதல்கள் நிகழ்ந்து வந்தன.

பிரெஞ்சுகாரர்களின் சுயநலத்தாலும் சுரண்டல் கொள்கை யாலும் சிரியா மக்களிடையே வெறுப்பு வளர்ந்து வந்தது. பிரெஞ்சுக்காரர்கள் சிரியாவின் வாணிப நலன்களைப் புறக் கணித்து விட்டுத் தங்களது வாணிபத்தை வளர்த்து வந்தனர். மதிப்பிழந்த தங்கள் நாணயத்தைச் சிரியாவில் புகுத்தினர். சிரியருக்கு அரசாங்க உயர் பதவிகளை அளிக்க மறுத்தனர். பிரெஞ்சு நாகரிகத்தை அந்நாட்டு மக்கள் மீது திணிக்க முற் பட்டனர். இவற்றின் விளைவாக 1925-ல் டுரூஸில் (Druz) கலகம் எழுந்தது. அது விரைவில் சிரியா முழுவதும் பரவியது. லெபனான் தவிர லெவான்ட் (Levant) பகுதி முழுவதையும் விடுதலை வீரர்கள் கைப்பற்றினர். டமாஸ்கஸ் நகரமும் அவர்கள் கைக்கு வந்தது. இருப்பினும் பிரெஞ்சுக்காரர்கள் மிருகப் பலத்தைக் கொண்டு அக்கலகத்தைக் ஒடுக்கினர். ஆயினும், மக்களின் உறுதியான எதிர்ப்பைக் கண்டு பிரெஞ்சுக் காரர்கள் சலுகைகள் வழங்க முன்வந்தனர். 1926-ல் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் மூலம் லெபனான் குடியரசை உருவாக்கினர். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டசபை மூலம் தனக்கென்று அரசியல் திட்டத்தை வகுக்க சிரியாவிற்கு அனுமதி அளித்தனர். ஆனால், பிரெஞ்சு அரசியல் அமைப்பை மாதிரியாகக் கொண்டு சிரியர் வகுத்த அரசியல் அமைப்புத் திட்டத்தைப் பிரெஞ்சு ஆட்சியாளர் ஏற்க மறுத் தனர். அதற்குப் பதிலாக சிரியாவின் நான்கு பகுதிகளுக்கும் 1930-ல் அரசியல் திட்டமொன்றைக் கொண்டு வந்தனர். தொடக்கத்தில் எவ்வித எதிர்ப்புமின்றி அத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் நாளாவட்டத்தில் நாடு முழுவதிலும் அதற்குக் கடுமையான எதிர்ப்பு எழுந்தது. 1933-ல் புரட்சி யாளருடன் உடன்படிக்கை செய்து கொள்ளும் பிரெஞ்சுக் காரர்களின் சமரச முயற்சி வெற்றி பெறவில்லை. 1936-ல் மற்றுமொரு பெரும் புரட்சி சிரியாவை உலுக்கியது. அப்போது பிரான்சில் லியோன் பிளம் (Leon Blum) தலைமையிலான தாராளக்கட்சி அரசாங்கம் தேசியவாதிகளுடன் சமரச உடன்

படிக்கை ஒன்றைச் செய்து கொண்டது. மூன்றாண்டுகளுக்குள் சிரியா சுதந்திர நாடாகவேண்டுமென்றும், அது சர்வதேச சங்கத்தில் உறுப்பு நாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டு மென்றும் அந்த உடன்படிக்கைக் கூறியது. மேலும் பிரான்ஸ் சிரியாவில் விமான தளங்களை வைத்திருக்க வேண்டுமென்றும் சிரியா படையினருக்குப் பயிற்சியளிப்பதற்காகப் பிரெஞ்சுப் படைத்துறைப் போதகர்கள் சிரியாவில் தங்கியிருக்க வேண்டு மென்றும் அது கூறியது. இது போன்ற உடன்படிக்கையை 1936ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் லெபனானுடனும் செய்துகொண்டது பிரான்ஸ். தேசியவாதிகள் தேர்தலில் போட்டியிடவும் சட்டமன்றத்தில் இடம் பெறவும் அனுமதிக்கப் பட்டனர்.

இரண்டாவது உலகப்போரின் போது சிரியாவிலிருந்த பிரெஞ்சு உயர் தனிப்பேராள் (High Commissioner) சிரியா அரசியல் சட்டத்தை நிறுத்தி வைத்து விட்டு, தமது ஆலோ சனைப்படி நாட்டை ஆளுதற்கு இயக்குநர் குழு ஒன்றை நியமித்தார். இந்த இராணுவ ஆட்சியைத் தேசியவாதிகள் எதிர்த்தனர். போரில் பிரான்ஸ் தோல்வியடைந்ததும் சிரியாவும் லெபனானும் ஜெர்மானியர் வசம் வந்து விடுமோ என அஞ்சிய தால் பிரிட்டிஷ் படையினரும் பிரெஞ்சுப் படையினரும் அப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். இரண்டாண்டுகளுக்கு அப்பகுதிகளில் இராணுவ ஆட்சி நடந்தது. ஆனால் 1944ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் தேதியன்று பிரெஞ்சு தலைமைத் தளபதியான ஜெனரல் டிகால் (General De Gaulle) சிரியா, லெபனான் விடுதலையை ஏற்றுக்கொண்டார். போர் முடிந்தது. லெவான்டிலிருந்த பிரிட்டிஷ் பிரெஞ்சுப்படைகள் வெளி யேறின. சிரியா சுதந்திரக் குடியரசு நாடாகியது. ஒன்றுபட்ட அராபிய அரசுக் கனவை நனவாக்க 1958-ல் சிரியா அரபுக் கழகத்தில் சேர்ந்தது. ஆனால் எகிப்தின் பிரதமரும், அராபிய கூட்டாட்சியை அமைக்கப் பாடுபட்டவருமான நாசருடன் (Nasser) கொண்ட கருத்து வேற்றுமையால் சிரியா 1961-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் அராபிய ஒன்றியத்திலிருந்து விலகியது.

**லெபனான்**

லெபனான் மூலவளங்கள் குன்றிய நாடாக இருந்த போதிலும் அங்கு வாழும் மக்களின் வாணிபத் திறமை காரண மாகச் செல்வவளம் கொழிக்கும் நாடாகத் திகழ்கின்றது. அந் நாட்டில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் கலந்து வாழ்கின்றனர் கிறிஸ்தவர்கள் சிறிதளவு மிகுதியாக வாழ்கின்றனர். முதலில்

இருந்தே லெபனான் மக்கள் பிரெஞ்சு ஆதரவாளர்களாக இருந்து வந்ததால், பிரெஞ்சுக்காரர்கள் அவர்களுக்குச் சில உரிமைகளை வழங்கினர். 1926-ல் குடியரசு அரசியல் திட்டமொன்று அவர்களுக்கு அளிக்கப்பட்டது. ஆயினும், ஆங்கே பிரெஞ்சு உயர்தனிப் பேராளின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. நிர்வாகத்துறையும் சட்டமன்றமும் அவர் கட்டுப்பாட்டில் இயங்கிவந்தன. 1930-ல் ஏற்பட்ட பெருமந்தம் (Great Depression) சிரியா நாட்டுப் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்தது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியது. நாடு தழுவிய வேலை - நிறுத்தம் பொருளாதாரத்தை மேலும் சீர்குலையச் செய்தது. அதனால் பிரெஞ்சுக்காரர்கள் பழைய அரசியல் திட்டத்தை நிறுத்தி விட்டுப் புதிய அரசியல் திட்டத்தை 1934-ல் லெபனானில் புகுத்தினர். அதன்படி சர்வாதிகார அரசாங்கம் அமைக்கப்பட்டது. 1936-ல் சிரியாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டதைப் போலவே பிரெஞ்சுக்காரர்கள் லெபனானுடனும் உடன்படிக்கை செய்து கொண்டனர். மூன்று ஆண்டுகளில் லெபனானுக்கு விடுதலை வழங்குவதாகவும், சர்வதேச சங்கத்தில் இடமளிப்பதாகவும், அதுவரையில் பிரெஞ்சுப்படைகள் லெபனானில் இருக்க வேண்டுமென்றும் அவ்வுடன்படிக்கை கூறியது. ஆனால் உலகில் அமைதியற்ற நிலை இருந்த காரணத்தால் அது நடைமுறைக்கு வரவில்லை. இரண்டாவது உலகப்போரில் பிரெஞ்சுத் தோல்வியையடுத்து சிரியாவைப் போலவே லெபானானுக்கும் முழு விடுதலை அளிப்பதாக டிகாலின் தலைமையிலான பிரெஞ்சு அரசாங்கம் 1944-ல் உறுதியளித்தது. அதற்கிணங்க லெபனானும் சுதந்திரக் குடியரசாகியது. லெபனான் சிரியாவுடன் சேரவேண்டுமென்றும், ஐக்கிய அரபுக்குடியரசை அமைக்க வேண்டுமென்றும் முஸ்லிம்கள் விரும்பிய போதிலும் அவ்வாறு நடப்பதை லெபனான் கிறிஸ்தவர்கள் வெற்றிகரமாகத் தடுத்து விட்டனர். 1956-ல் வந்த சூயஸ் நெருக்கடியின்போது அரசியல் கொந்தளிப்பு எழுந்தது. அதைத் தொடர்ந்து லெபனானில் அமெரிக்க இராணுவத் தலையீடு ஏற்பட்டது. இங்ஙனம் மத்திய ஆசிய நாடுகளில் அதிக அளவு அமெரிக்காவையும் மேலை நாடுகளையும் ஆதரிக்கும் நாடாக லெபனான் திகழ்கின்றது.

## ஈராக்கிலும் ஜோர்டனிலும் தேசிய இயக்கம்

### ஈராக்

இரட்டை ஆறுகளான டைகிரிஸ் (Tigris) யூப்ரடீஸ் (Euphrates) ஆகியவற்றுக்கிடையே உள்ள பகுதியே ஈராக்

நாடாகும். பண்டைக்காலத்தில் அது மெசபடோமியா (இடை நாடு) எனப் பெயர் பெற்றிருந்தது. பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையேயான சாம்ரிமோ உடன்படிக்கைக்கிணங்க அது 1920-ல் பிரிட்டனின் காப்பு நாடாகியது. காப்பு நாடு என்ற கருத்தையே ஈராக் நாட்டவர் எதிர்த்தனர். பிரிட்டனுக்கு எதிராகப் புரட்சி கலகத்தில் இறங்கினர். ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் அக்கலகத்தைக் கொடூரமாக ஒடுக்கிற்று. ஈராக்கில் ஒழுங்கமைதியை நிலைநாட்டும் பொருட்டு சர் பெர்ஸி கோக்ஸ் (Sir Percey Cox) என்பர் உயர்தனிப் பேராளாக அனுப்பப்பட்டார். முதுமையில் தள்ளாடிய நகீப் என்பவரின் தலைமையிலான பொம்மை அமைச்சரவையின் (Puppet Cabinet) உதவியுடன் அவர் ஈராக்கை ஆள முற்பட்டார். உண்மையான அதிகாரம் அவர் கையில் இருந்தது. நாட்டின் வெளி உறவையும் பாதுகாப்பையும் அவரே கவனித்து வந்தார். அமைச்சரவையின் தீர்மானங்களை ரத்து செய்யும் அதிகாரம் அவரிடமிருந்தது. ஆனால் தேசியவாதிகள் அதிருப்தி கொண்டு பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். முழு சுதந்திரம் அவர்களின் குறிக்கோளாக இருந்தது.

ஈராக்கின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 1921ஆம் ஆண்டு ஏபரல் மாதத்தில் அப்போது பிரிட்டனின் குடியேற்ற நாடுகள் அமைச்சரான திருவாளர் சர்ச்சில் (Mr. Churchill) கெய்ரோவில் மாநாடு ஒன்றைக் கூட்டினார். இந்த மாநாட்டில் முக்கியப் பங்கு கொண்ட மெக்கா (Mecca) வின் ஆலோசனைப்படி ஈராக்கிலும் ஜோர்டனிலும் பிரிட்டிஷ் காப்பாளர் ஆட்சி நிறுவப்பட்டது. ஈராக்கில் அப்துல்லாவும் (Abdullah) ஜோர்டனில் பெய்தலும் மன்னர்களாக முடி சூட்டப் பெற்றனர். இந்த ஏற்பாட்டை ஈராக்கில் தேசியவாதிகள் ஏற்க மறுத்தனர். காப்பாளர் ஆட்சி வெளியேற வேண்டுமென்றும் முழுச் சுதந்திரம் அளிக்க வேண்டுமென்றும் கோரிக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். ஈராக் மக்களின் நேர்மையான கோரிக்கைகளை ஒடுக்குதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த அடக்கு முறையை எதிர்த்து நகீப்பின் அமைச்சரவை பதிவியிலிருந்து விலகியது. அதன் பின்னர் பிரிட்டிஷ் ஆலோசகர்கள், ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்தலாயினர். அதனால் பெயரளவிற்கு இருந்த சுயாட்சியும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. 1922-ல் ஏற்பட்ட ஆங்கிலோ ஈராக் (Anglo-Iraq) உடன்படிக்கையைத் திணித்ததன் மூலமாக ஈராக்கின் தலைவிதி பிரிட்டிஷ்காரர்கள் கையில் இருந்தது.

உறுதியானது. அவ்வுடன்படிக்கையின் மூலமாக ஈராக்கின் வெளிநாட்டு உறவும் நீதித்துறையும் பிரிட்டனின் கட்டுப் பாட்டில் வந்தன.

ஈராக் வாழ் அன்னியர் பாதுகாப்பு, படைப்பயிற்சி அளித்தல், ஆலோசகர்களை அமர்த்துதல் ஆகிய உரிமைகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமே இருந்தன. இந்த உடன் படிக்கையை ஈராக்கின் அரசியல் அமைப்புச் சட்டமன்றம் கட்டாயத்தின்பேரில் ஏற்றுக் கொண்டது. சர்வதேச சங்கத்தில் ஈராக் இடம்பெறச் செய்யவும், விரைவிலேயே காப்பாளர் ஆட்சியை நீக்குவதாகவும் பிரிட்டன் வாக்குறுதி தந்தது. ஆனால் ஈராக் மக்கள் நம்பிக்கை இழந்திருந்தனர்.

குர்டுகள் (Kurds) கைப்பற்றியிருந்த போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்த மோசூலின் (Mosul) பெரும் பகுதியைச் சர்வதேச சங்கத்தின் ஆலோசனைக்குழு 1915-ல் ஈராக்கிற்கு அளித்தது. அதனால் மத்தியக் கிழக்கில் பிரிட்டனின் ஆதிக்கம் மேலும் வளர்ந்தது. தேசிய விடுதலை வீரர்களின் கிளர்ச்சிகள் காரணமாக ஆங்கிலோ-ஈராக் உடன்படிக்கை யைத் திருத்தி அமைக்கவும், இராணுவநிதிக் கட்டுப்பாடு களைத் தளர்த்தவும் 1927-ல் பிரிட்டன் முன்வந்தது. 1930-ல் அவ்வுடன்படிக்கையை மாற்றி அமைத்தது. அதன்படி 1932-க்குள் ஈராக்கைச் சர்வதேச சங்கத்தில் சேர்த்துவிடுவது என்றும் அதே சமயத்தில் அந் நாட்டிற்கு விடுதலை வழங்குவது என்றும் உறுதி அளிக்கப்பட்ட போதிலும் வெளி நாட்டு உறவில் பிரிட்டனின் கட்டுப்பாடு தொடர்ந்து வந்தது. மேலும் ஈராக் வழியாகப் படைகளைக் கொண்டு செல்லும் உரிமையைப் பிரிட்டன் தன்னிடம் வைத்திருந்தது. அப் புதிய உடன்படிக்கை 25 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. 1932ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள் சர்வதேச சங்கத்தில் ஈராக் இடம் பெற்றதுடன் விடுதலையும் பெற்றது. ஆனால் விடுதலைக்குப் பிறகு ஈராக்கின் மீது பிரிட்டனின் கட்டுப்பாடு தொடர்ந்து வந்தது.

1933-ல் மன்னர் பெய்ஸல் இறந்ததும் காஸி (Ghazi) என்னும் அவரது மகன் பட்டமேற்றார். ஆனால் தகுதியற்ற அவர் 1936-ல் நடந்த புரட்சியால் தூக்கியெறியப் பட்டார். குழந்தையாய் இருந்த இரண்டாம் பெய்ஸல் முடிசூட்டப் பெற்ற போதிலும் காப்பாளரான எமீர் அப்துல்லாவே

(Emir Abdullah) ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினார். இரண்டாவது உலகப்போரின் போது அமைச்சரவையில் நெருக்கடி தோன்றியது. ஜெர்மன் ஆதரவாளரான ரஷீத்அலி என்பார் படையின் துணைகொண்டு அதிகாரத்தைக் கைப் பற்றினார். பிரிட்டிஷ்காரர் ஈராக் வழியாகத் தங்கள் படைகளை அனுப்புவதைத் தடுத்தார். அதனால் 1941-ல் பிரிட்டிஷ்காரருடன் மோதல் ஏற்பட்டது. இறுதியில் ரஷீத் அலி தோல்வியைத் தழுவினார். அதைத் தொடர்ந்து பிரிட்டிஷாருக்கு ஆதரவான அரசாங்கம் ஈராக்கில் பதவி யேற்றது. சட்டசபையில் வலிமைபெற்று விளங்கிய நூரி-அல் சையது (Nuri-al-Said) உண்மையான அதிகாரம் பெற்றிருந் தார். அராபியக்கழக ஒப்பந்தத்தில் ஈராக் கையெழுத்திட வகைசெய்தார். பிரிட்டனின் ஆதரவாளராகவும் மேலை நாடுகளின் ஆதரவாளராகவும் இருந்த நூரி, மத்தியக் கிழக்கில் ரஷ்யாவின் செல்வாக்குப் பரவுவதைத் தடுப்பதற்கென்று ஐக்கிய அமெரிக்காவின் ஆதரவில் உருவான பாக்தாத் ஒப்பந்தத்தில் ஈராக் சேர வழிவகுத்தார். எவ்வாறெனினும், 1958-ல் நடந்த புரட்சியில் அவரும் அரசாளும் பதவியிலிருந்து விரட்டப்பட்டார். ஈராக் குடியரசாகியது. அப்துல் கரீம் அதன் முதல பிரதமராகப் பதவியேற்றார்.

## ஜோர்டன்

ஜோர்டன் ஆற்றின் கீழ்க்கரையில் அமைந்த நாடு ஜோர்டன். ஆரம்பத்தில் அது டிரான்ஸ் ஜோர்டன் என வழங்கப்பட்டது. அங்கே வாழும் மக்கள் நாடோடிப் பழக்க வழக்கங்கள் கொண்ட பெடுயின்களாவார் (Bedouins) வேளாண்மையும் ஆடு வளர்த்தலும் அந் நாட்டின் பொருளா தாரத்தின் அடிப்படையாக உள்ளன. அது மிகவும் பின்தங்கிய நாடாகும். ஆரம்பத்தில் அரேபியா சிரியா நாட்டின் பகுதியாக இருந்த ஜோர்டனை மன்னர் பெய்ஸல் இறந்ததும் பிரிட்டிஷ்காரர்கள் காப்புநாடாக ஆட்சி செய்யத் தொடங் கினர். பெய்ஸலின் மூத்த சகோதரரான எமீர் அப்துல்லா 1921-ல் ஜோர்டனின் மன்னரானார். 1922-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜோர்டன் பிரிட்டனின் பாதுகாப்பில் உரிமை பெற்ற சிற்றரசாக அறிவிக்கப்பட்டது. 1923-ல் அது எமீர் அப்துல்லாவின் ஆட்சியில் தன்னாட்சி பெற்ற நாடாகியது. எமீர் அப்துல்லா அரசியல் சட்ட முறையிலான மன்னரானார். பிரிட்டிஷாரின் பொறுப்புகளும் வரையறுக்கப் பட்டன. 1925-ல் செங்கடலிலுள்ள அக்வாபா (Aquaba) துறைமுகம் பிரிட்டனுக்குக் கிடைத்ததால் மத்தியக் கிழக்கில்

அந் நாட்டின் வலிமை கூடியது. பிரிட்டன் ஜோர்டனுடன் மற்றுமோர் உடன்படிக்கையைச் செய்துகொண்டது. அந்த 1928ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி ஜோர்டனின் சுதந்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் அதிகாரத்துடன் கூடிய சட்டமன்றம் ஒன்றும் அமைக்கப்பட்டது. ஆயினும், ஜோர்டனில் படை வைத்திருக்கவும் நீதி, மற்றும் வெளிநாட்டு செய்திகளில் பிரிட்டனின் கட்டுப்பாடு தொடரவும் அந்த உடன்படிக்கை வகைசெய்தது. 1946-ல் ஜோர்டன் முழுச் சுதந்திரம் அடைந்த போது பிரிட்டனின் பாதுகாப்புப்பொறுப்பு நீங்கியது. ஆயினும் அன்னியப்படையெடுப்புகளுக்கு எதிராக ஜோர்ட்னுக்கு உதவி செய்வதற்கு ஈடாக 1968 வரையில் பிரிட்டிஷ் படை அந் நாட்டில் இருந்துவந்தது. மேலும், அரேபிய நாட்டுப் படையைக் கண்காணிக்கும் உரிமையும் பிரிட்டனிடம் இருந்தது. 1947-ல் வந்த புதிய அசியலமைப்புச் சட்டப்படி ஜோர்டனில் பாராளுமன்ற முறை அரசாங்கம் அமைந்தது. அடுத்த ஆண்டே ஜோர்டனின் எமீர், ஹஷிமைட் அரசின் மன்னராக முடிசூட்டிக் கொண்டார்.

இரண்டாவது உலகப்போரின்போது அரேபியர் படைகள் ஈராக் மற்றும் சிரியாப் படையெடுப்புகளில் கலந்து கொண்டன. 1948-ல் நடந்த பாலஸ்தீனப் போரிலும் அரேபியப்படையினர் (Arab Legion) சில வெற்றிகளைப் பெற்றனர். அதன் விளைவாக ஜோர்டனுக்கு மேலும் சில பகுதிகள் கிடைத்தன. ஆனால் பாலஸ்தீனத்திலிருந்து 4, 00, 000 அகதிகள் வந்து ஜோர்டனில் அடைக்கலம் புகுந்ததால் பெரும் பிரச்சினை எழுந்தது. ஜோர்டன் நாட்டுக் குடிகளாகிய படுயின்களைவிட முன்னேற்றமடைந்த பாலஸ்தீன அகதிகள் மன்னரின் அதிகாரத்தைத் தட்டிக்கேட்க முற்பட்டனர். 1951-ல் அகதி ஒருவன் மன்னர் அப்துல்லாவைச் சுட்டுக் கொன்றான். அப்துல்லாவின் மரணத்தைத் தொடர்ந்து நாட்டில் அரசாங்கம் சீர்குலைந்தது. மன்னர் அப்துல்லாவின் மகனான தலத் (Talat) சிறிதுகாலம் ஆட்சி செய்தார். ஆனால் மனக்கோளாறு காரணமாக அவர் பதவி விலகினார். அவரது மகன் ஹுசேன் என்னும் சிறுவன் அரியணையேறினான். மன்னர் ஹுசேன் அமெரிக்காவுடனும் பிரிட்டன் போன்ற மேலலைநாடுகளுடனும் நட்புறவு கொண்டு அவற்றின் உதவியுடன் ஆட்சி புரிந்துவந்தார். ஆயினும், ஜோர்டனின் அரசியலில் அமைதியில்லை. அரச குடும்பத்தினர், படையினர், பாலஸ்தீன அகதிகள் ஆகிய

மூன்று சக்திகளும் ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டுள்ளன. படையினரும் தேசியவாதிகளும் சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ள தால் நாட்டில் அமைதி கெட்டுக் குழப்பமான நிலை இருந்து வருகின்றது.




படம் 17-3

வெர்ஸேல்ஸ் ஒப்பந்தத்திற்குப்பின் மத்தியகிழக்கு

## இஸ்ரேலிய தேசிய இயக்கம் (Israel Nationalism)

பண்டைப் பெருங்குடியினருள் யூதரும் ஒருவர். உலகப் பெருநாகரிகங்களான எகிப்திய சுமேரிய நாகரிங்களோடு ஒருசேர வைத்து எண்ணக்கூடிய தொன்மையும் சிறப்பும் மிக்க நாகரிகத்தின் சொந்தக்காரர்கள் அவர்கள். கி மு.1100-ல் தங்களுக்கென்று ஓர் அரசை உருவாக்கி உயர்ந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர்கள். ஆனால் கி.மு. ஆறாம் நூற்றாண்டு முதல் அவர்களுக்குத் துன்பங்கள் தொடர்கதைபோல் வந்தவண்ணமிருந்தன. அவர்களின் தாயகம் அன்னிய ஆதிக்கத்திற்கு அடிபணியும் அவலநிலை ஏற்பட்டது. பாரசீகர், எகிப்தியர், ரோமானியர், ஆகியோர், ஒருவர்பின் ஒருவராக யூத இனத்தவரை ஆட்டிப்படைத்து வந்தனர். தங்களது அடக்குமுறை ஆட்சிக்கு விடாப்பிடியாக எதிர்ப்புக் காண்பித்த யூதர்களின் பொன்னான நாட்டை ரோமானியர் கி பி. முதல் நூற்றாண்டில் அழித்துச் சுடு காடாக்

கினர். பெரும் எண்ணிக்கையில் யூதர்களைக் கொன்று குவித்தனர். அவர்களின் சொத்துகளைச் சூறையாடினர்.




படம் 17.4
பாலஸ்தீனப் பிரிவினை

உயிர் தப்பிய யூதர்கள் ரோமானியர் ஆட்சியின் கொடுங் கோன்மைக்கு அஞ்சித் தாயகத்தை விட்டுவெளியேறி தூரத்து

நாடுகளில் ஓடி ஒளிந்தனர். அதுமுதல் 1948-ல் இஸ்ரேல் எனும் சுதந்திர நாடு உருவாகும் வரையில் நற்பேறு அற்ற யூதர்கள், நாடற்ற நாடோடிகளாக நானிலம் முழுவதும் திரிந்து வந்தனர். எங்குச் சென்றபோதிலும் அவர்கள் வெறுத்து ஒதுக்கப்பட்டனர். அவர்கள் சொல்லொணாத சித்ரவதைகளுக்கு உள்ளாயினர்; பாதுகாப்பின்றிப் பரிதவித்தனர். யூதர்கள் வெளியேறிய பின்னர் அவர்களது நாடான பாலஸ்தீனம் அரோபியப் பேரரசின் பகுதியானது. அதன் பின்னர் அது துருக்கியப் பேரரசில் இணைந்திருந்தது.

### யூத தேசியம் அல்லது ஸியோனிசம் [Zionism]

உலகின் பல்வேறு நாடுகளில் பரவிக்கிடந்த போதிலும் யூதர்கள் தங்கள் தாய்நாட்டை மறக்கவில்லை. என்றாவது ஒருநாள் தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்புவோம் என்று கனவு கண்டுவந்தனர். தங்களுக்கென்று தனிப்பண்பாட்டைப் போற்றிவந்தனர். எங்குச் சென்றாலும் தங்களின் தனித்தன்மையை விடாது பற்றி நின்றனர். சிந்தனைவளமும் செய்திறனும் மிக்கவர்களான யூதர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தபோதிலும் அங்கெல்லாம் உயர்பதவிகளில் அமர்ந்தனர். செல்வச் செழிப்புடன் வாழ்ந்துவந்தனர். ஆயினும், அந்தந்த நாட்டுமக்களுடன் கலக்காமல் ஒதுங்கியே வாழ்ந்ததால் அவர்களை மற்ற இனத்தவர் வெறுத்து ஒதுக்கியதுடன் கொடுமை செய்யவும் முற்பட்டனர். அன்னிய நாடுகளில் யூதர்கள் அடைந்த துன்பங்களால், தங்களுக்கென்று தனிநாடு வேண்டுமென்ற அவர்களின் ஆவல் மேலும் மேலும் வலுப்பெற்று வந்தது. மேலும் அவர்கள் சமயக் பற்றுக் கொண்டவர்கள் என்பதால் புனித நகரமான ஜெருஸலத்தை (Jerusalem) மீட்டு பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் நாட்டை மீண்டும் உருவாக்க உள்ளூர விரும்பினர். பாலஸ்தீனத்தை மீட்கவும் யூதர்களுக்கு என்று சுதந்தர இஸ்ரேல் நாட்டை உருவாக்கவும் ஸியோனிசம் என்னும் இயக்கம் எழுந்தது. யூதர்களின் புனித நகரமான ஜெருஸலத்தின் மற்றொரு பெயரான 'ஸியோன்' என்பதின் அடிப்படையில் யூதர்களின் தேசிய இயக்கம் பெயர் பெற்றது.

முதன் முதலில் 1882ஆம் ஆண்டில் லியோன் பியான்ஸ்கர் (Leon Piansker) என்னும் ரஷ்ய நாட்டு மருத்துவர்தாம் ஸியோனிசம் என்ற கொள்கையை உருவாக்கித்தந்தார். ரஷ்யாவிலும் ருமேனியாவிலும் யூதர்கள் கொடுமைப்படுத்தப்

பட்டதால் ஒடஸ்ஸா நகரில் (Odessa) 'ஹோவீவே ஸியோன் (Hoveve Zion) என்னும் அமைப்பு உருவானது. அதை அடுத்துப் பல யூதர்கள் பாலஸ்தீனத்திற்குச் சென்று சில குடியேற்றங்களை அமைத்தனர்; பிரான்சில் வாழ்ந்த யூதர்கள் சொல்லவொண்ணாத் துன்பங்களுக்கு உள்ளானதைக்கண்டு ஆஸ்திரியாவைச் சேர்ந்த யூதரான தியோடோர் ஹெர்ஸல் (Theodor Herzl) பாரீஸில் ஸயோனிய இயக்கத்தைத் துவக்கினார். ஐரோப்பா முழுவதும் வாழ்ந்த யூத இனத்தவர் அதற்கு அமோக ஆதரவுதந்தனர். 1867-ல் சுவிட்சர்லாந்தில் பேசல் (Basel) என்னுமிடத்தில் முதல் ஸியோனியா மாநாடு நடந்தது. யூத இனத்தவர்களுக்குப் பாலஸ்தீனத்தில் முழு உரிமைகொண்ட அரசு ஒன்றை அமைப்பதே யூதர்களின் குறிக்கோள் என அந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. தொடக்கத்தில் எல்லா யூதர்களும் மாநாட்டுத்தீர்மானத்தை வரவேற்கவில்லை. மரபு ஒழுங்கான யூதர்கள் ஆண்டவரின் அருளால் தங்களது தாயகம் கிடைக்க வேண்டுமென்று விரும்பினர். அதற்காக அரசியல் கிளர்ச்சிகள் செய்வதை வெறுத்தனர். அவர்களிடம் தேசிய உணர்வு காணப்படவில்லை. ஆயினும் நாளாவட்டத்தில் அத்தகைய உணர்வு யூதரிடையே மெள்ள வளர ஆரம்பித்தது, முதல் உலகப்போருக்கும் முன் ஐரோப்பாவின் பல நாடுகளில் வாழ்ந்த யூதர்கள் தேசிய இயக்கத்தில் பெருமெண்ணிக்கையில் சேர்ந்திருந்தனர். பாலஸ்தீனத்தில் யூத குடியேற்ற நிறுவனம் ஒன்றை அமைக்குமாறு ஸியோனிய இயக்கத்தினர் துருக்கி சுல்த்தானை வற்புறுத்தினர்; ஆனால் அவர்களது கோரிக்கையைச் சுல்தான் ஏற்க மறுத்து விட்டார். யுகாண்டாவில் குடியேற்றங்களை அமைக்க யூதர்களுக்கு அனுமதி வழங்க பிரிட்டன் முன் வந்தது. ஆனால் அந்த யோசனையை யூதர்கள் ஏற்கவில்லை. ஸியோன் இல்லாத ஸியோனியா இயக்கம் உயிரற்ற உடல் போன்றது என்பதால் யுகாண்டாவில் குடியேற அவர்கள் ஒப்பவில்லை.

முதல் உலகப்போரின்போது ஸியோனியா இயக்கத்தினர் இருபெரும் பிரிவுகளாக இருந்தனர். ஒரு பிரிவினர் ஜெர்மனியிலும் மற்றொரு பிரிவினர் பிரிட்டனிலும் செயல்பட்டு வந்தனர். டாக்டர் செயிம் விஸ்மன் (Dr. Schaim Weizmann) தலைமையில் இயங்கிவந்த இலண்டன் பிரிவினர் நேசநாடுகளின் போர் முயற்சிக்குப் பேராதரவு தந்து வந்தனர். போரில் துருக்கி தோல்வியடைந்ததும் பாலஸ்தீனத்தில் யூதரின் தேசிய

அரசு அமைய உறுதி அளிக்குமாறு நேசநாடுகளை வற்புறுத்தி வந்தனர். நேசநாடுகளுக்கு யூதர்கள் அளித்துவந்த ஆதரவை மனதில் கொண்டு புகழ்வாய்ந்த பால்போர் அறிக்கையை (Balfour Declaration) 1917-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்டது. அந்த அறிக்கையில், பாலஸ்தீனத்தில் யூதர்களின் தாயகம் அமைய எல்லாவித உதவிகளையும் செய்வதாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதி அளித்தது. ஆனால், அதே சமயத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அரபு மக்களின் உரிமைகளுக்கும் தனிச்சலுகைகளுக்கும் ஊறுநேராதவாறு பார்த்துக் கொள்ளவேண்டுமென்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. பால்போரின் அறிக்கையை அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் வரவேற்று ஒப்புதலும் அளித்தன. அந்தஅறிக்கை தெளிவற்றதாக இருந்தபோதிலும் ஸியோனிய இயக்கத்திற்கு அது பெரும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் நல்கியது. யூதர்களின் இலக்கு தெளிவாகிவிட்டதால் பாலஸ்தீனத்தில் யூத அரசை அமைக்கும் முயற்சிகளில் அவர்கள் முழுமூச்சுடன் இயங்கலாயினர்.

ஆயினும், போரின்போது பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அரேபியரின் ஆதரவைப் பெறவேண்டுமென்ற ஆர்வத்தில், துருக்கியரிடமிருந்து அரேபியருக்கு விடுதலை வாங்கித் தருவதாக நேசநாடுகள் உறுதியளித்திருந்தன. அதனால் போருக்குப்பின்னர் பாலஸ்தீனத்தில் தங்களுக்கென்று ஒரு தனிநாடு அமையுமென்றும் அதில் யூதர்கள் தங்களுடைய பாதுகாப்பில் வாழ்வர் என்றும் அரேபியர் எண்ணத்தொடங்கினர். அதே சமயத்தில் போர் முடிந்ததும் பாலஸ்தீனத்தில் சுதந்திர இஸ்ரேல் நாடு உதயமாகிவிடும் என யூதர்கள் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இங்ஙனம் யூதர்களுக்கும் அரேபியருக்கும் நேர் எதிரான வாக்குறுதிகளை அளித்த நேசநாடுகள் பெருந்தவறு ஒன்றைச் செய்துவிட்டன. பாலஸ்தீனத்தில் வாழும் இருபிரிவினரிடையே நீங்காத பகைமையும் கடுமையான மோதல்களும் எழுவதற்கு வழி வகுத்துவிட்டனர்.

பால்போர் அறிக்கையினால் ஊக்கமடைந்த யூதர்கள் பெரும் எண்ணிக்கையில் பாலஸ்தீனம் சென்று குடியேறத் தொடங்கினர்; ஆனால் அரேபியர் யூதர்கள் வந்து குடியேறுவதை அறவே வெறுத்தனர். 1919-ல் டமாஸ்கஸ் நகரில் கூடிய அரபு மாநாட்டில் பாலஸ்தீனத்தில் யூதர்கள் குடியேறு

வதையும், அங்கே தனி யூதநாடு அமைவதையும் அரேபியர்கள் கடுமையாக எதிர்த்தனர். கிங்–கிரேன் குழுவும் பாலஸ்தீனத்தில் யூதநாட்டை உருவாக்குவதிலுள்ள அபாயத்தை நேச நாடுகளுக்கு எடுத்துரைத்தது. ஆனால் பாலஸ்தீனத்தைப் பிரிட்டனின் காப்பு நாடாகக் கொண்டுவந்த சான்ரிமோ மாநாடு யூதர்களுக்கு ஆதரவாகப் பல செயல்களில் ஈடுபட்டது. பாலஸ்தீனத்தில் ஸியோனிய அமைப்பை யூதர்களின் பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டதுடன், அப்பகுதியில் யூதர்கள் குடியேறுவதை ஊக்குவிக்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஆலோசனையும் வழங்கப்பட்டது. பாலஸ்தீனம் பிரிட்டனின் காப்புநாடு என்பதை 1922-ல் சர்வதேச சங்கம் உறுதி செய்தது. அத்துடன் யூதர்களுக்கான தேசிய அரசை அமைக்க எல்லா முயற்சிகளும் எடுக்குமாறு பிரிட்டனைக் கேட்டுக்கொண்டது. இத்தகைய யூதர்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை அரேபியர் வன்மையாகக் கண்டித்தனர். யூதர்களுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். அவர்களைச் சாந்தப்படுத்துவதற்காக அப்போது குடியேற்ற நாடுகள் அமைச்சராகயிருந்த வின்ஸ்டன் சர்ச்சில் வெள்ளை அறிக்கையை (White Paper) வெளியிட்டுப் பாலஸ்தீனம் முழுவதையும் யூதர்களுக்கு அளிக்கப்போவதில்லையென்றும், அதன் ஒருபகுதி மட்டுமே அவர்களுக்கு அளிக்கப்படு மென்றும் அரேபியருக்கு உறுதியளித்தார்.

பாலஸ்தீனத்தில் 1922-ல் 10 சதவீதத்தினராக இருந்த யூதர்கள் 1942-ல்.31 சதவீதத்தினராக உயர்ந்தனர். ஏராளமான யூதர்கள் வெளியிலிருந்து பாலஸ்தீனத்திற்கு வந்து குடியேறியதால் இந்நிலை உருவாகியது. ஆனால், சமயவேற்றுமை காரணமாகவும் பொருளாதாரக் காரணங்களுக்காகவும் அரேபியர் அவர்களை வெறுத்தனர். பாலஸ்தீனத்துக்கு வந்து குடியேறிய பணக்கார யூதர்கள் ஏராளமாக நிலங்களை வாங்கினர். அதனால் அரேபியக் குடியானவர்கள் நிலமிழந்து வேளாண்மைத் தொழிலாளர்களாயினர். அவர்களில் பலர் வேலையின்றித் தவித்தனர். மேலும் அரேபியர் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் யூதநாடு உருவாகிவிடுமானால் அரபுமொழி பேசும் நாடுகள் ஒருங்கிணைந்த அரபுநாட்டை உருவாக்கும் திட்டம் பாழ்பட்டுவிடும் என அரேபியர் அஞ்சினர். அதனால் அவர்கள் அடிக்கடி யூதர்களுக்கு எதிரான கலகங்களில் ஈடுபட்டனர். அவர்களைச் சாந்தப்படுத்தப் பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டுவந்த பல திட்டங்

களும் பயனில்லாமல் போயின. பாலஸ்தீனத்தை மூன்று வட்டாரங்களாகப் பிரித்து ஒன்றை அரேபியர்களுக்கும், மற்றொன்றை யூதர்களுக்கும் தரவேண்டுமென்றும், ஜெரு ஸலத்தைச் சுற்றியிருந்த மூன்றாவது பகுதியைப் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரவேண்டுமென்றும் 1939-ல் பிரிட்டிஷார் யோசனை கூறினர். அந்த யோசனையை அரேபியர் ஏற்க மறுத்தனர். அதை அடுத்து 1939-ல் அரேபி யரும் யூதர்களும் அடங்கிய வட்டமேஜை மாநாடு ஒன்றைப் பிரிட்டிஷ் அரசாங்கம் இலண்டனில் கூட்டியது. ஆனால், யூதர்களுக்கும் அரேபியர்களுக்குமிடையேயான பகைமை காரணமாகவும், இருதரப்பாரும் கொண்ட நிலையில் விடாப் பிடியாக நின்றதாலும் பிரச்சினைக்கு முடிவுகாண முடிய வில்லை. இந்தத் தோல்விக்குப் பிறகு பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு பாலஸ்தீனத்திற்கு விடுதலை வழங்குவதாக அறிவித்தது. யூதர்கள் வந்து குடியேறுவதையும் கட்டுப் படுத்த முற்பட்டது.

இரண்டாவது உலகப்போரின்போது அரேபியர்கள் நடுநிலை வகித்தனர். ஆனால் யூதர்கள் நேச நாடுகளின் போர் முயற்சிகளுக்கு ஆதரவு தந்தனர். அதன் விளைவாக அமெரிக்க மக்கள் ஸியோனிய இயக்கத்தின்மீது பரிவு காட்டத் தொடங்கினர். அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ட்ருமனும் (Truman) ஒரு லட்சம் யூத குடியேறிகள் பாலஸ் தீனத்திற்குவர அனுமதி வழங்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத் தைக் கேட்டுக் கொண்டார். ஆனால் யூதரிடம் பரிவு கொண்டிருந்த போதிலும், மத்தியக் கிழக்கில் தனது செல்வாக்குத் தொடர்ந்து வருவதற்கு அரேபியரின் உதவி தேவையென்பதால் அவர்களைப் பகைத்துக்கொள்ள பிரிட் டன் விரும்பவில்லை. எனவே, ட்ருமனுடைய யோசனைக்கு இசைவுதர பிரிட்டன் தயங்கியது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் காலம் தாழ்த்தும் உத்திகளைக்கண்டு வெறுப்புற்ற யூதர்கள் பயங்கர வன்முறைச் செயல்களில் ஈடுபடலாயினர். இந் நிலையில் பாலஸ்தீனப் பிரச்சினைக்கு முடிவுகாண முடியாமல் தவித்த பிரிட்டன் இறுதியாக 1947ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இரண்டாம் நாள் அப் பிரச்சினையை ஐ. நா. விடம் (U.N.O) கொண்டு சென்றது.

ஐ. நா. வின் பொதுச்சபையும் பாலஸ்தீனப் பிரச் சினையை ஆராய்ந்து தீர்வுகாண்பதற்கென பதினொரு

உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமித்தது. அக் குழுவும் இரு மாற்று யோசனைகளை ஐ.நா.முன் வைத்தது. பாலஸ்தீனத்தை அரபுநாடு, யூதர்நாடு, பன்னாட்டுக் கட்டுப்பாட்டில் உள்ள ஜெருஸலம் ஆகிய மூன்று பகுதிகளாகப் பிரிப்பது என்றும் அவை மூன்றையும் பொருளாதார ஒன்றியமாக இணைப்பது என்றும் முதல் திட்டம் கூறியது. யூதர் அரசும் அரேபியர் அரசும் இணைந்து ஜெருஸலத்தைத் தலைநகரமாகக் கொண்ட கூட்டாட்சியை அமைப்பது இரண்டாவது திட்டம். 1947–ல் முதலாவது திட்டத்தை ஏற்றுக்கொண்ட ஐ.நா. பொதுச் சபை, பாலஸ்தீனத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது. இதைக் கண்டு அரேபியர் ஆர்த்தெழுந்தனர். ஐ.நா. வின் திட்டத்தை ஏற்க மறுத்து, ஒற்றை அரசாங்கத்தைக் கொண்ட அரபுநாட்டை உருவாக்க வேண்டுமென்றும் அதில் யூத சிறுபான்மையினருக்குச் சில பாதுகாப்புகள் வழங்கலாம் என்றும் அரேபியர் குரலெழுப்பினர். இதற்கிடையில், பாலஸ்தீனத்தில் காப்பாளர் பொறுப்பை 1948ஆம் ஆண்டு விட்டுவிடப் போவதாகப் பிரிட்டன் அறிவித்தது. அதற்கிணங்க 1948ஆம் ஆண்டு மேமாதம் 14ஆம் தேதியன்று இரவு பிரிட்டன் பாலஸ்தீனத்தில் காப்பாளர் பொறுப்பைக் கைவிட்டது. அதே இரவில் பாலஸ்தீனத்தில் சுதந்திர இஸ்ரேல் நாடு உதயமானதாக யூதர்கள் அறிவித்தனர்.

இங்ஙனம் உருவான இஸ்ரேல் அரேபியரின் கண்களை உறுத்தியது. பல அரபுநாடுகளுக்கிடையே உரிமைபெற்ற இஸ்ரேல்நாடு வாழ்வதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் ஐந்து அரபுநாடுகளின் படைகள் இஸ்ரேலைத் தாக்கின. ஆனால் சின்னஞ்சிறு நாடான இஸ்ரேல் வியக்கத்தகுந்த வெற்றி பெற்றது ஸ்வீடனைச் சேர்ந்த கவுண்ட் பெர்னாடட் (Count Bernadotte) என்பவரைப் பாலஸ்தீனத்திற்கு இடையீட்டாளராக (Mediator) ஐ.நா. அனுப்பிவைத்தது. ஆனால் அவரை ஒரு யூத வெறியன் சுட்டுக் கொன்றுவிட்டான். பல மோதல்களுக்குப்பின் அரபு நாடுகள் 1949–ல் இஸ்ரேலுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டன. அதன்படி சில சிறுபகுதிகள் நீங்கலாக பாலஸ்தீனம் முழுவதும் யூதர்கள் கைக்கு வந்தது. ஆனால் மத்தியக் கிழக்கிலிருந்து இஸ்ரேலை ஒழித்துவிட அரேபியர்கள் மீண்டும் முயன்றனர். 1956–ல் பிரிட்டனும் பிரான்சும் எகிப்தின்மீது படையெடுத்தபோது இஸ்ரேலும்

அவர்களுடன் சேர்ந்து எகிப்தைத் தாக்கியது. இருப்பினும் ரஷ்யரின் தலையீடு காரணமாக இஸ்ரேல் பிடித்த பகுதிகளை அரேபியரிடம் திருப்பித் தந்துவிட்டது.

எகிப்தின் தலைவரான நாஸர் (Nasser) **1967-ல்** இஸ்ரேலை அழித்துவிட முயன்று படுதோல்வியுற்றார். '**ஆறு நாள்கள்**' போர் என்றழைக்கப்படும் போரில் ஜோர்டனிடம் இருந்த ஜெரூஸலப் பகுதியையும் சிரியா மலைப்பகுதியையும் இஸ்ரேலியர் கைப்பற்றிக் கொண்டனர். மேலும் ஜோர்டன் ஆற்றின் மேல்கரை முழுவதும் சினாய் தீபகற்பமும் அவர்கள் கைக்கு வந்தன. அப்போதிருந்து கைப்பற்றிய பகுதிகளைத் திருப்பித் தந்துவிடுமாறு இஸ்ரேலைக் கேட்டு வருகின்றனர். அரேபியருக்கும் இஸ்ரேலுக்குமிடையே சமாதானத்தையும் நல்லுணர்வையும் வளர்க்க அமெரிக்கக் குடியரசுத் தலைவரும் மற்றவர்களும் முயன்று வருகின்றனர். ஆனால் இதுவரையில் நிரந்தரமான தீர்வு எதுவும் கிடைக்கவில்லை. பாலஸ்தீனத்தில் இருக்கும் அரேபிய அகதிகள், பாலஸ்தீன விடுதலை முன்னணியினர். (P.L.F) இஸ்ரேல் நாட்டிற்கு எதிராகக் கொரில்லாத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். தங்களுக்கென்று தனிநாடு வேண்டுமென்ற அவர்களுடைய கோரிக்கையை இஸ்ரேல் ஏற்கவில்லை. பாலஸ்தீன அரேபியருக்காகப் பேசும் தகுதி முன்னணியினருக்கு (P.L.F.) உண்டு என்பதை ஐ.நா. ஏற்றுக் கொண்டபோதிலும் இஸ்ரேல் பிடிவாதமாக உள்ளது. அமெரிக்காவின் நல்லாதரவுடன் எகிப்து அதிபரான சாதத், இஸ்ரேலுடன் அமைதி உடன்படிக்கை செய்துகொள்ள இயன்றவரை முயன்று வருகின்றார். இவ்விரு நாடுகளுக்குமிடையே பகைமை முடிவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்றாலும் இன்னும் பல்வேறு அரசியல் பிரச்சினைகளில் கருத்து வேற்றுமைகள் தொடர்ந்து வருவதால் அரபு இஸ்ரேல் பிரச்சினை தீராத தொல்லையாகவே இருந்து வருகின்றது.

## அத்தியாயம் 18

# ஆப்பிரிக்காவில் புத்தெழுச்சி

## (African Resurgence)

நெடுங்காலமாக இருண்ட கண்டமென அழைக்கப்பட்ட ஆப்பிரிக்கா இந்த இருபதாம் நூற்றாண்டில் அதிகமாகப் பேசப்படும் பொருள்களுள் ஒன்றாக மாறியுள்ளது. இந் நூற்றாண்டில்தான் அக் கண்டம் முழுவதிலும் தேசிய உணர்ச்சி அலைகளும் ஏகாதிபத்திய எதிர்ப்பலைகளும் எழுந்ததுடன், பல்வேறு சுதந்தர நாடுகளும் ஆங்கே உதய மாகியுள்ளன. 1945-ல் ஆப்பிரிக்கா முழுவதிலும் நான்கு உரிமைபெற்ற நாடுகளே இருந்தன. ஆனால் 1965-ல் 35 நாடுகள் உரிமையுடன் திகழ்ந்தன. இத்தனை குறைந்த காலத்தில் ஆப்பிரிக்காவின் பெரும்பகுதியில் ஏகாதிபத்திய இருள்மறைந்து, சுதந்திரச் சூரியன் ஒளிவிட்டுப் பிரகாசிப்பது வரலாற்று விந்தைகளில் ஒன்றாகும். இவ்வியக்கத் தகுந்த மாறுதலுக்கான காரணங்கள் எவை? முதலாவது உலகப் போருக்குப்பின் ஏகாதிபத்தியத்தின் பிடி தளர்தல், உலகம் முழுவதும் நிறவெறிக்கு எதிரான உணர்வு எழுதல், நவீனகால ஆப்பிரிக்கத் தேசிய உணர்ச்சிப் பெருகல் ஆகியவற்றின் ஒட்டுமொத்த விளைவே காரணம் எனலாம்.

ஆப்பிரிக்கத் தேசிய இயக்கம் ஐரோப்பியத் தேசிய இயக்கத்திலிருந்து மாறுபட்டது. பொதுமொழி, பொதுவான பண்பாடு, நிலையான எல்லைப்பரப்பு ஆகியவற்றின் அடிப் படையில் எழுந்தது ஐரோப்பியத் தேசிய இயக்கம் என்றால், வெள்ளையரின் திமிரான ஆதிக்கத்தின் அடிப்படையில் ஆப்பிரிக்காவில் தலைவிரித்தாடிய ஐரோப்பிய எதேச்சதி காரத்திற்கு எதிராக எழுந்ததே ஆப்பிரிக்கத் தேசிய இயக்க மாகும்.

வெளிநாட்டு உறவைப் பொறுத்தவரையில் ஆதிக்க ஐரோப்பா, அடிமை ஆப்பிரிக்கா என்ற உறவு முறையை

மாற்றியமைக்க முயல்வது ஆப்பிரிக்கத் தேசிய இயக்கம். உள்நாட்டில், பொருளாதாரவளம் கொழிக்கும், சமுதாய முன்னேற்றம் கொண்ட, பண்பாட்டுப் பெருமைகொண்ட புதிய ஆப்பிரிக்காவை அமைக்க அது பாடுபட்டு வருகின்றது. சுருங்கச் சொல்வதானால் அரசியல் சுதந்தரத்தையும் பண்பாட்டு மலர்ச்சியையும், பொருளாதாரப் புரட்சியையும் ஆப்பிரிக்காவில் கொண்டுவருவதையே அது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும் ஐரோப்பாவைப்போலல்லாமல் தேசிய அரசுகளை உருவாக்க ஆப்பிரிக்கத் தேசியத் தலைவர்கள் ஆர்வம் காட்டவில்லை. ஆப்பிரிக்காவில் பல நாடுகளை வகுத்தவர்கள் அன்னிய ஏகாதிபத்தியவாதிகளே யாவர் அதனால் அக்கண்டத்தின் ஒரு பகுதியின் விடுதலைக்காகப் போராடும் ஆப்பிரிக்கர்கள் ஆப்பிரிக்கக் கண்ட முழுவதையும் விடுவிப்பதற்கான பெரும் போராட்டத்தின் ஒரு பகுதியே தங்களது போராட்டம் எனக் கருதிவந்தனர். எனவே, ஆப்பிரிக்கத் தேசிய இயக்கத்தில், ஒன்றுபட்ட ஆப்பிரிக்கா என்ற எண்ணம் மேலோங்கி நிற்பதைக் காணலாம். ஆப்பிரிக்கக் கறுப்பு இனத்தவரிடையே இவ்வித எண்ணத்தைத் தூண்டியவர் அமெரிக்க நீக்ரோ, இனத் தலைவரான டாக்டர் டபிள்யூ. இ. பி. துபாய்ஸ் (Dr. W. E. B DuBois) என்பவரே: அவர் கறுப்பர்களின் முன்னேற்றத்திற்காகத் தேசியக்கழகம் ஒன்றை நிறுவ அருந்தொண்டாற்றினார். முதல் உலகப் போருக்கு முன் 'ஆப்பிரிக்காவிற்குத் திரும்பு' (Back to Africa) என்னும் போராட்டத்தைத் தொடக்கிய ஜெமய்காவைச்சார்ந்த நீக்ரோத் தலைவரான மார்க்கஸ் ஆரீலியஸ் கார்வி (Marcus Aurelius Garvey) ஆப்பிரிக்கத் தேசிய உணர்வைப் பொங்கியெழச் செய்தார். உத்வேகங் கொண்ட ஆப்பிரிக்கத் தலைவர்கள் அனைத்து ஆப்பிரிக்க (Pan -African) மாநாடுகளைப் பல இடங்களில் நடத்தினர். முதலாவது மாநாட்டை 1900-ல் இலண்டன் மாநகரில் நடத்தினர். இத்தகைய மாநாடுகளில் இரு மாறுபட்ட கருத்துகள் விவாதிக்கப்பட்டன. கறுப்பர் வெள்ளையருக்கிடையே சமத்துவத்தை நிலைநாட்டல் என்னும் துபாய்ஸின் கொள்கையும் கலப்பற்ற கறுப்பரின் சுதந்தர அரசுகளை நிறுவவேண்டுமென்ற கார்வியின் கொள்கையும் விவாதத்திற்கு வந்தன. 1945-ல் கூடிய அனைத்து ஆப்பிரிக்க மாநாடு சிறப்புமிக்கதாகும். வருங்கால ஆப்பிரிக்காவின் பெருந்தலைவர்களான நுக்குருமா (Nkrumah), கென்யாட்டா

(Kenyatta) போன்றவர்கள் அதில் கலந்துகொண்டனர். மேலும், முந்தைய மாநாடுகளைப்போல் அல்லாமல் அமெரிக்க நீக்ரோத் தலைவர்களின் ஆதிக்கம் அந்த மாநாட்டில் இல்லை. அதில் ஆப்பிரிக்கத் தலைவர்களே முக்கிய இடம்பெற்றிருந் தனர். வரலாற்றுச் சிறப்புமிக்க அம் மாநாட்டில்தான் ஆப்பி ரிக்காவுக்கு முழுச் சுதந்தரம் வேண்டுமென்ற கோரிக்கை வலி யுறுத்தப்பட்டது. இந்திய விடுதலைப் போராட்டத்தைப் போலக் கூடுமானவரையில் அமைதி வழியைப் பின்பற்றுவது எனவும் தீர்மானிக்கப் பட்டது. உலகப்போர் முடிந்தபிறகு. நாடுகடத்தப் பெற்றிருந்த பல தலைவர்கள் ஆப்பிரிக்கா விற்குத் திரும்பி வந்து அரசியல் கட்சிகளைத் தோற்றுவித்து நாட்டு விடுதலைக்காகப் போராடத் துணிந்தனர். படிப்படி யாகச் சுதந்திரத்தை அளிக்குமாறு அன்னிய ஆதிக்க வெறி யரை நெருக்க முற்பட்டனர். பொருளாதாரவளம் பெற மேற்கு நாடுகளின் தாராள ஜனநாயகக் கொள்கையைக் கடைப்பிடிக்க விரும்பியபோதிலும், அவர்கள் விரைவான முன் னேற்றம் காண சோஷலிசக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட ஒருகட்சி ஆட்சியை ஏற்படுத்த முன்வந்தனர். இனி ஆப்பிரிக்காவின் பல பகுதிகள் அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற விதத்தைக் காண்போம்.

### நைஜீரியா (Nigeria)

நைஜீரியா வேற்றுமைகள் மலிந்தநாடு. நூற்றைம்பதுக்கு மேற்பட்ட மரபுக்குடிகள் வாழும்நாடு. இஸ்லாமும், கிறிஸ் தவமும் பல்வேறு பழங்குடியினர் சமயப் பிரிவுகளும் பரவிக் கிடக்கும் நாடு. இருப்பினும், வேற்றுமையில் ஒற்றுமையுடன் பரந்த நிலப்பரப்பும் 55 மில்லியன் மக்கள் தொகையும் கொண்ட வலிமைமிக்கு விளங்கும்நாடு நைஜீரியா. அது 1960-ல் விடுதலை பெறும்வரையில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

சுதந்திரத்திற்குமுன் வட நைஜீரியக் காப்பு நாடு (North Nigerian Protectorate) தென் நைஜீரியக் காப்பு நாடு, மேற்கு லாகோஸ் (Western Lagos) என்னும் மூன்றுபிரிவுகள் நைஜீரி யாவில் அடங்கியிருந்தன. 1914-ல்தான் இந்த மூன்று பகுதி களையும் இணைத்து நைஜீரியக்காப்பு நாடும் குடியேற்றம் என வழங்கும் நாடும் உருவாக்கப்பட்டது, 1939-ல் தெற்கி லுள்ள காப்பு நாடு நைஜர் ஆற்றினை எல்லையாகக் கொண்ட கிழக்கு, மேற்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. நைஜீரி

யாவின் இந்த மூன்று பகுதிகளும் 1945-ல் அநேகமாகச் சுயாட்சி பெற்ற மூன்று தனிப் பகுதிகளாகத் திகழ்ந்தன, இவற்றுக்கிடையே பண்பாட்டு வேற்றுமைகள் நிலவின. வடக்குப் பகுதியில் முஸ்லிம் பண்பாடு விளங்குகின்றது. தெற்கில் கிறிஸ்தவப் பண்பாடும் மரபுக்குலங்களின் பண் பாடும் பரவி நிற்கின்றன. இப் பகுதிகளில் பல்வேறு மாறு பட்ட மரபுக்குடியினர் வாழ்கின்றனர். வடக்கில் ஹவ்ஸா புலானி (Hause Fulani) குடியினரும், மேற்கில் யோருபா (Yoruba) குடியினரும், கிழக்கில் ஐபோ (Ibo) குடியினரும் பெரும்பான்மையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களேயன்றி ஒவ்வொரு பகுதியிலும் சிறு குலமரபினர்களும் கலந்து வாழ் கின்றனர். வடக்கில் ஹவ்ஸாவும் தெற்கில் ஆங்கிலமும் ஆட்சி மொழிகளாக விளங்குகின்றன.

இருபதாம் நூற்றாண்டில்தான் நைஜீரியா ஓரளவிற்கு நவீன நாடாகியது. மேலைநாகரிகம் அங்கே பரவத் தொடங் கியது. பழைய பண்டமாற்று முறைக்குப் பதிலாகப் பண அடிப்படையிலான பொருளாதாரம் நிலவியது. உள்நாட்டு வியாபாரமும் வெளிநாட்டு வாணிகமும் பெருகியதால் நகரங்கள் வளர்ந்தன. நகரங்களில் வாழ்ந்தவர்கள் பெரும் செல்வந்தர்களாயினர். தங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு மேலை நாட்டுக்கல்வி அளிக்க முற்பட்டனர். இவ்வாறு மேலை நாட்டுக் கல்வி கற்ற இளைஞர்களை மையமாக வைத்துத் தேசிய இயக்கம் அந் நாட்டில் மெள்ள நடை போட்டது. குலமரபுகளைக் கடந்த பல கழகங்கள் தோன்றின. 1931-ல் தோற்றுவிக்கப்பட்ட நைஜீரிய ஆசிரியர் ஒன்றியம் சக்திவாய்ந்த கழகமாக உருவெடுத்தது. இந்நிலையில் ஸிக் (Zik) என வழங்கப்பட்ட அஸிகிவே (Azikiwe) என்னும் பெருந் தலைவர் அரசியல் வானில் தோன்றி நைஜீரிய எழுச்சிக்குப் புதிய நோக்கும் புது நெறி முறையும் அளித்தார்.

கிழக்கு ஐபோ (Ibo) பகுதியில் ஸுங்கெரு (Zungeru) என்னுமிடத்தில் 1904-ல் பிறந்தார் ஸிக். எழுத்தராக இருந்த அவருடைய தந்தையைப் பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் இழிவு செய்தது இளம் ஸிக்கின் மனத்தில் ஆழப்பதிந்துவிட்டது. கிறிஸ்தவப் பள்ளிகளில் கல்விகற்று எழுத்தராகச் சிறிது காலம் பணியாற்றியபின் ஸிக் 1925-ல் அமெரிக்கா சென்றார். அங்கே பல பணிகளைச் செய்துகொண்டே ஹோவர்டு பல் கலைக்கழகத்தில் (Howard University) பட்டம்பெற்று

லிங்கன் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியேற்றார். பட்ட மேல்படிப்பை முடித்துக்கொண்டு 1934-ல் தாயகம் திரும்பினார். முதலில் மேற்கு ஆப்பிரிக்காவில் அக்ரா ஆப்பிரிக்க மார்னிங்போஸ்ட் (Accra Morning Post) என்னும் செய்தித்தாளின் ஆசிரியராகிப் பின்னர் 1937-ல் நைஜீரியா விற்குச் சென்று 'வெஸ்ட் ஆப்பிரிக்கன் பைலட்' (West African Pilot)என்னும் சொந்த நாளேட்டைத் தொடங்கினார். சக்திவாய்ந்த தமது பத்திரிக்கையின் மூலமாக அனைத்து ஆப்பிரிக்கக் கருத்தைப் பரப்பியதுடன் குறுகிய குலமரபு உணர்வுகளை மறந்து வெள்ளையரின் கொடுங்கோன்மை யிலிருந்து விடுதலைபெறப் பாடுபடுமாறு ஆப்பிரிக்கருக்கு அறைகூவல் விடுத்தார்.

அவரது எழுத்துகளால் எழுச்சியுற்ற படித்த நைஜீரிய இளைஞர்கள் விடுதலை இயக்கத்தைத் தொடங்கினர். இலண்டன் பொருளாதாரப்பள்ளியில் பட்டம் பெற்ற எச்.ஓ. டேவீஸ் (H. O. Davies) என்பாரின் சீரிய தலைமையில் நைஜீரிய உரிமைப்பத்திரம் 1938-ல் தயாரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் பொது நலக்குடியரசில் (British Commonwealth) வாழும் நைஜீரிய இனத்தவர் அனைவரும் ஒருங்கிணைந்து சமஉரிமைகளுக்காகப் போரிடவேண்டுமென்று வற்புறுத்தப் பட்டது. யோருபாவில் (Yoruba) தொடங்கிய இவ் விடுதலை இயக்கம் மெதுவாக நைஜீரியா முழுவதும் பரவத்தொடங்கியது. 1938-ல் 20 கிளைகளையும் பத்தாயிரம் உறுப்பினர்களையும் பெற்று வலிமையுடன் விளங்கியது. ஆனால் விரைவிலேயே குலமரபுகளிடையே உட்பூசல்கள் மலிந்தன. இதனால் வெறுப்புற்ற ஸிக் தமது ஆதரவை விலக்கிக் கொண்டார்.

இரண்டாவது உலகப்போர் நைஜீரியாவின் தேசிய இயக் கத்திற்கு மிகுந்த ஊக்கமளித்தது. அமெரிக்காவில் கல்வி பயின்று வந்த நைஜீரிய இளைஞர்கள் அப்போது பரவலாகப் பிரசுரம் செய்யப்பட்டுவந்த ஜனநாயகம் மற்றும் எதேச் சாதிகார எதிர்ப்புக் கருத்துகளால் கவரப்பட்டனர். மேலும், அமெரிக்க வெள்ளையரின் மத்தியில் வாழ்ந்த அவர்களது அனுபவங்களும் அவர்களிடையே தேசிய உணர்வை வளர்க்க உதவின. நீக்ரோக்களுக்கென்று சுதந்தரத் தனிநாட்டின் அவசியத்தை உணர்ந்த அவர்கள் தாய்நாடு திரும்பியதும் விடுதலை இயக்கத்தில் ஆர்வத்துடன் பங்குகொள்ளத் தொடங்கினர். கோகோ, இரப்பர், பருத்தி, நிலக்கடலை ஆகியவற்றை மொத்தமாக வாங்கும் வெள்ளையர்கள்

ஆப்பிரிக்க வாணிகரின் வாய்ப்புகளைப் பறித்துக் கொண்டதுடன், நைஜீரியாவைச் சுரண்டியும் வருகின்றனர் என்பதை மக்கள் உணருமாறு செய்தனர். நைஜீரியாவில் தங்கியிருந்த ஏராளமான ஐரோப்பியப்படை வீரர்களின் முரட்டுத்தனமான கீழ்த்தரமான நடவடிக்கைகளால் நாட்டுமக்கள் வெள்ளையர் ஆட்சிமீது வெறுப்புக்கொண்டனர். வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய நைஜீரியர் அந்நாடுகளிலும் தங்கள் தாய் நாட்டிலும் இருந்த நிலையைச் சீர்தூக்கிப் பார்த்துத் தங்களது கேவலமான நிலைக்கு அன்னிய ஆட்சியே காரணம் எனக் கூறிவந்தனர்.

'நைஜீரியா மற்றும் காமரூன்ஸ் தேசியக் கவுன்சில்' (National Council of Nigeria and the Cameroons- N. C. N. C) என்னும் தேசியக் கட்சியையும் அஸிகிவே நிறுவினார். பிரிட்டிஷ் பொதுநலக் குடியரசில் தன்னாட்சிகொண்ட நைஜீரியாவை உருவாக்குவது அக்கட்சியின் குறிக்கோளாகும். 1945-ல் ஆங்கில ஆட்சியாளர், ரிச்சர்டு அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ் (Richard's Constitution) நைஜீரியத் தேசியக் கட்சியினரின் கோரிக்கைகளில் சில நிறைவேற்றப்பட்டன. நாட்டின் மூன்று பகுதிகளில் மூன்று சட்டமன்றங்களும் அச் சட்டமன்றங்கள் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சட்டமன்றம் ஒன்றும் அத் திட்டத்தில் அடங்கியிருந்தன. ஆனால், பிரதேசத் தன்மைகொண்ட இந்த அரசியல் திட்டத்தை என். சி. என். சி. இளைஞர்படையினர், யோருபாஸ் ஆகிய அனைத்துக்கட்சியினரும் எதிர்த்தனர். வடக்குப்பகுதியினர் மட்டுமே அதனை வரவேற்றனர்.

இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு அஸிகிவேவின் செல்வாக்கு உச்சநிலையை எட்டியது. தொழிலாளரும், ஆசிரியர்களும், தொழில் வினைஞரும், இளைஞரும், பல்வேறு கழகத் தலைவர்களும் அவரது தலைமையை எதிர்நோக்கி நின்றனர். அவரது தலைமையிலான தேசிய சக்திகளைத் திருப்தி செய்யும் வகையில் 1948-ல் புதிய அரசியல் திட்டமொன்றை வழங்கப் போவதாகவும், அதன் மூலமாக ஆட்சித் துறையிலும், கல்வித் துறையிலும் ஆப்பிரிக்கருக்கு அதிகப் பங்கு வழங்கப்போவதாகவும் பிரிட்டிஷார் வாக்குறுதி அளித்தனர். அதற்கிணங்க ஆளுநரான மாக்பர்சன் (Macpherson) 1951-ல் அரசியல் திட்டமொன்றை அறிவித்தார். மத்திய சட்டமன்றத்தை அமைக்கவும் அதில் வடக்கு வட்டாரத்திற்கு 64 இடங்களும், கிழக்கு மற்றும் மேற்கு

வட்டாரங்களுக்கு 34 இடங்கள் ஒதுக்கவும், அத் திட்டம் வகை செய்தது. மேலும், அமைச்சரவையில் நான்கு வட்டா ரங்களிலிருந்து நான்கு அமைச்சர்கள் பதவியேற்கவும் வழி வகுத்தது. ஆனால் புதிய அரசியல் திட்டம் வட்டார உணர்வை வளர்க்கவே உதவியது. மேற்கு வட்டார யோருபாக்களும் கிழக்குவட்டார ஐபோக்களும் சுயநலக் கும்பல்களைப் போல் செயல்பட்டனர். தேசியப் போர்வையில் குறுகிய குலமரபு நலன்களைப் பெருக்க முயன்றனர். என். சி. என். சி - கட்சியினர் அனைத்து ஆப்பிரிக்கக் கொள்கையைக் கொண்டிருந்த போதிலும் கிழக்கு வட்டாரக் கழகம் போலவே செயல்பட்டனர். இதற் கிடையில் வடக்குப் பகுதியில் முன்னேற்ற அரசியல்கட்சி யெனும் புதிய கட்சி தோன்றித் தெற்குப் பகுதிக்கு எதிரானப் பிரசாரத்தில் இறங்கியது. இத்தகைய வட்டார வெறுப்புணர் சிக்கிடையே புதிய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்தது. கூட்டரசு சட்டசபையில் வடக்கு வட்டாரப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மற்றப் பகுதிகளின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருந்ததால் அதன் கை மேலோங்கி இருந்தது. இந்த நிலையில் மற்றப் பகுதியினர் புதிய அரசியல் திட்டத்தை வெறுத்ததில் வியப்பொன்றும் இல்லை. எவ்வாறாயினும் 1959-ல் நடக்கும் பொதுத்தேர்தலுக்குப் பின் கூடுகின்ற கூட்டாட்சிச் சட்டமன்றம் விரும்பினால் நைஜீரியாவிற்கு விடுதலை வழங்கப் போவதாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்தது. அதற்கிணங்க 1960ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் நாளன்று நைஜீரியா சுதந்தர நாடாகியது. 1963-ல் அங்கே குடியரசு அமைக்கப் பட்டது. டாக்டர் அஸிகிவே குடியரசுத்தலைவராகவும், அல்பாஸி அபுபெக்கர் (Albasi Abubakar) பிரதமராகவும் பதவியேற்றனர்.

ஆனால் வெகு விரைவிலேயே நைஜீரிய அரசியலில் குறுகிய வட்டார உணர்வு மீண்டும் தலை தூக்கியது. 1964-ல் நடந்த பொது தேர்தலிலும் பிரதேச உணர்வு மேலோங்கி நின்றது. ஆளுங்கட்சியினர் மோசடியையும் ஊழலையும் கையான்டு பெரு வெற்றி பெற்றனர். பல தொகுதிகளில் ஜன நாயகம் கேலிக் கூத்தாகியது. 1965-ல் மேற்குப்பகுதியில் கலகங்கள் தோன்றின. அவற்றில் ஆயிரக்கணக்கானவர் கொல்லப்பட்டனர். கொந்தளிப்பான சூழ்நிலையில் 1966-ல் நைஜீரியாவில் இராணுவப் புரட்சி எழுந்தது பிரதமரும் நிதி அமைச்சரும் கொலையுண்டனர். மேற்குப் பகுதியின் தலைமை யமைச்சரும் வடக்குப் பகுதியின் தலைமையமைச்சரும் கொலை

செய்யப்பட்டனர். சைப்ரஸ் தலைவர் ஆர்ச்பிஷப் மக்காரியோ ஸுடன் தங்கியிருந்ததால் கிழக்குப் பகுதியின் முதலமைச்சர் உயிர் தப்பினார். இராணுவ ஆட்சியின் தலைவரான மேஜர்ஜெனரல் அகுயி இரோன்ஸி (Aguyi-Ironsi) கூட்டாட்சி முறையை முடிவிற்குக் கொண்டு வந்து நைஜீரியக் குடியரசில் வட்டாரங்களுக்குப் பதிலாக மாநிலங்களை உருவாக்கப் போவதாக அறிவித்தார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து கிளர்ச்சிகளும் குலமரபுகளுக்கிடையே கைகலப்புகளும் நடந்தன. இரோன்ஸியும் அவரது ஆதரவாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர். வடக்குப் பகுதியைச் சேர்ந்த கர்னல் யகாபூ கோவான் (Colonel Yakabu Gowan) உயர் தலைமைப் பதவியை ஏற்றார். ஆனால் மீண்டும் குலமரபுகளுக்கிடையே எழுந்த போராட்டங்களில் வடக்கு நைஜீரியாவில் வாழ்ந்த ஆயிரக் கணக்கான ஐபோக்கள் கொல்லப்பட்டனர். அதனால் கிழக்குப் பகுதியினரான இபோஸ்கள் 1967-ல் பையாப்ரா (Biafra) என்னும் புதிய சுதந்திர நாட்டை உருவாக்கினர். ஆனால் விரைவிலேயே பையாப்ராவிற்கும் நைஜீரியக் கூட்டரசுக்கு மிடையே, உள்நாட்டுப் போர் எழுந்தது அப்போர் 1970 வரையில் தொடர்ந்து நடைபெற்றது.

**கானா** (Ghana)

மேற்கு ஆப்பிரிக்காவில் கோல்டுகோஸ்ட் என்னும் பிரிட்டிஷ் குடியேற்றமே சுதந்தர கானா நாடாகியது. கானா விலும் மாறுபட்ட நிலவியல் தன்மை கொண்ட பகுதிகளையும் அரசியல் வேற்றுமைகள் நிறைந்த பரப்பெல்லைகளையும் காணமுடியும். ஆரம்பத்தில் கோல்டு கோஸ்ட், அஷாண்டி குடியேற்றம் (Colony of Ashanti), வடபகுதி, டோகோலாந்து (Togoland) ஆகிய பகுதிகள் கானாவில் அடங்கியிருந்தன. கோல்டு கோஸ்ட் தனது பெயருக்கேற்ப பொன் கொழிக்கும் பூமியாகவே விளங்கியது. தொடக்க காலத்தில் அடிமை வாணிபத்தால் வளம் பெற்ற அஷாண்டி குடியேற்றம் கோகோ விளையும் பூமியாகியது.

மேலே குறிப்பிட்ட நான்கு பகுதிகளும் குடியேற்ற நாட்டு ஆளுநரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தன. இந்த நான்கு பகுதிகளிலிருந்தும் வந்த அதிகாரிகள் அடங்கிய நிர்வாகக் குழுவின் உதவியுடன் அந்த ஆளுநர் ஆட்சி செய்தார். கோல்டுகோஸ்டில் விளங்கிய சட்டமன்றத்தில் அரசாங்கச் சார்புடைய உறுப்பினர்களும், அரசாங்கச்

சார்பற்ற ஆப்பிரிக்க, ஐரோப்பிய உறுப்பினர்களும் அங்கம் வகித்தனர். பல பகுதிகளில் பிரிட்டிஷ் ஆளுநரின் கட்டுப் பாட்டிற்குட்பட்டு உள்நாட்டுத் தலைவர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவர்கள் அரசியல் முன்னேற்றத்திற்குத் தடையாய் நின்றனர்.

தாராளக் கொள்கையுடைய ஆளுநரான குகிஸ்பர்க் (Guggisberg) என்பார் உள்ளாட்சி மன்றங்களில் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆப்பிரிக்கர்கள் இடம்பெற வேண்டுமென்று கூறும் நகராண்மைக் கழக மசோதாவை 1924-ல் கொண்டு வந்தபோது உள்ளூர்த் தலைவர்கள் அதனைத் தீவிரமாக எதிர்த்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு இடமளித்து விட்டால் தங்களது அதிகாரம் குறைந்து விடும் என அஞ்சி அவர்கள் உள்ளாட்சிச் சீர்திருத்தத்தைத் தீவிரமாக எதிர்த்தனர். மக்களும் தாங்கள் அதிகவரி செலுத்த நேரிடும் என்பதற்காக அம் மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் அம் மசோதாவை ஆளுநர் விலக்கிக் கொண்டார். அதைத் தொடர்ந்து 1925-ல் புதிய அரசியல் அமைப்புத்திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. சட்டமன்றத்தில் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அத் திட்டம் வகை செய்தது. அவ்வாறு வரும் ஒன்பது உறுப்பினர்களில் ஆறு பேர்களை உள்ளூர்த் தலைவர்களின் ஆலோசனைக் குழுக்கள் அனுப்ப வேண்டுமெனவும் அத்திட்டம் கூறியது. ஆனால் இந்தத் திட்டம் குலமரபுத் தலைவர்களின் அதிகாரத்தை நிலைப்படுத்துவதாக ஆக்கிவிடும் என்பதால் தேசியத் தலைவரான டாக்டர் அக்ரே (Dr. Aggrey) என்பார் அத் திட்டத்தைக் கண்டனம் செய்தார்.

கோல்டுகோஸ்டில் தேசிய இயக்கம் வளர இரண்டாவது உலகப்போர் உதவியது. நுகர் பொருள்களின் தட்டுப்பாடு மிகுந்ததால் துன்புற்ற மக்கள் அதற்குப் பிரிட்டிஷ்காரர்களே காரணம் என நினைத்தனர். நோயினால் ஏராளமான கோக்கோ மரங்கள் அழிந்துவிட்டதைக் கண்ட விவசாயிகள் வெறுப்புற்றனர். போரில் பங்குகொண்டு தாய்நாடு திரும்பிய ஆப்பிரிக்கப் படைவீரர்கள் தங்கள் நாட்டில் வாழ்க்கைத் தரம் மிகக் குறைவாக இருப்பது கண்டு அதிருப்தி அடைந் தனர். உள்நாட்டில் ஆங்கில அதிகாரிகளுக்கும் ஆப்பிரிக்கக் குடிகளுக்குமிடையே இருந்த ஏற்றத்தாழ்வைக் கண்ட மக்கள் ஆத்திரம் கொண்டனர். பொருளாதாரத்துறையில் புறை

யோடிக்கிடந்த குறைகளைக் களைவதற்கு அரசாங்கத்தில் ஆப்பிரிக்க மக்களுக்கு அதிகப் பங்கு கிடைக்க வேண்டு மென்று தேசிய வாதிகள் விரும்பினர். தங்கள் நோக்கத்தை அடைவதற்கு ஐக்கிய கோல்டுகோஸ்ட் கழகம் (United Gold Coast Convention) என்னும் அரசியல் கட்சி ஒன்றையும் உருவாக்கினர். ஜார்ஜ் கிராண்ட் போன்ற வாணிகச் செல்வந் தரும், டாக்டர் டான்குவா (Dr. Dan Quaah) போன்ற சட்ட வல்லுநர்களும் அக்கட்சியில் ஆதிக்கம் செலுத்தினர்.

தேசியவாதிகளைத் திருப்தி செய்வதற்காக அரசியல் அமைப்பில் சில மாறுதல்களைச் செய்ய ஆட்சியாளர் முன் வந்தனர். சர் ஆலன் பர்ன்ஸ் (Sir Alan Burns) என்னும் ஆளுநர் 1946-ல் புதிய அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார். அதன்படி நாட்டின் சட்ட சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பெரும்பான்மைப் பலம் பெற வழியேற்பட்டது. 31 உறுப்பினர்களில் 24 பேர் ஆப்பிரிக்கர் என்றபோதிலும் அவர்களில் 13 பேர் குலமரபுத் தலைவர்களின் ஆலோசனைக் குழுக்களின் ஆள்களாகவே இருந்தனர்.

குவாமே நுக்ருமா (Kwame Nkrumah) 1947-ல் ஐக்கிய கோல்டு கோஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராகப் பதவி யேற்றது, அந் நாட்டுத் தேசிய இயக்க வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அமெரிக்காவில் லிங்கன் பல்கலைக் கழகத்திலும், பென்சில்வேனியா பல்கலைக் கழகத் திலும் கல்வி பயின்ற நுக்ருமா மேலை நாட்டுத் தாராளக் கொள்கையில் நம்பிக்கை கொண்டார். நைஜீரியத் தலைவர் அஸிசிவேயின் எழுத்துகளில் மனதைப் பறிகொடுத்தார். அதன் விளைவாக ஆப்பிரிக்காவில் வெள்ளையரின் ஆதிக்கத்தை அழித்து ஆப்பிரிக்க விடுதலைக்காகப் பாடுபட உறுதி பூண்டார் அவரது பிரசாரத்தின் விளைவாகக் கோல்டு கோஸ்டில் தேசிய உணர்வு வீறு கொண்டெழுந்தது. 1948-ல் பெருங்கலகம் ஒன்றிற்கு நுக்ருமா ஏற்பாடு செய்தார். அக் கலகத்தில் பலர் மாண்டனர். பலர் படுகாயமுற்றனர். இதைத் தொடர்ந்து அரசாங்கம் ஐக்கிய கோல்டுகோஸ்ட் கழகத் தலைவர்களைச் சிறையிட்டது. கலகத்திற்கான காரணத்தைக் கண்டறியும் பொருட்டு வாட்சன் (Watson) என்பவரின் தலைமையில் குழு ஒன்றையும் நியமித்தது. 1946ஆம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டத்தைக் குறை கூறிய வாட்சனின் அறிக்கை ஆப்பிரிக்க அமைச்சர்களைக்

கொண்ட மக்காளாட்சியைக் கொண்டுவரலாம் எனப் பரிந்துரைத்தது. ஆங்கிலப் பிரதமரான அட்லி கோல்டுகோஸ்டில் தகுந்த அரசியல் அமைப்பைப் பரிந்துரை செய்வதற்காகப் புகழ்மிக்க ஆங்கில நீதிபதியான சர் ஹென்லீ கௌஸியின் (Sri Henley Coussey) தலைமையில் குழு ஒன்றை அந் நாட்டிற்கு அனுப்பினார். ஐக்கிய கோல்டுகோஸ்ட் கழகத் தலைவர்கள் கௌஸியுடன் ஒத்துழைத்துப் புதிய அரசியல் அமைப்புத் திட்டமொன்றை உருவாக்கினர். ஆனால் நுக்ருமா அவர்களுடன் சேர மறுத்து முழுச்சுதந்தரம் வேண்டுமென்று முழு மூச்சுடன் வேலைசெய்ய முற்பட்டார். கன்வென்ஷன் மக்கள் கட்சி(Convention People's Party--C.P.P.) என்ற பெயரில் தனிக் கட்சியைத் தொடங்கினார். வெகுவிரைவிலேயே அவரது கட்சி மக்களின் அமோக ஆதரவைப் பெற்றது. புதிய அரசியல் அமைப்பு அடிப்படையில் 1951-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் மத்திய சட்டசபையில் 38 இடங்களில் 34 இடங்களை அவரது சி. பி. பி. கட்சியினர் தட்டிச் சென்றனர். நுக்ருமா மக்களுக்குப் பல வாக்குறுதிகளை அளித்தார். முழுவேலைவாய்ப்பு, இலவச ஆரம்பக்கல்வி, தேசிய நல்வாழ்வுச் சேவை (National Health Service) முதலானவற்றை அளிப்பதாக உறுதி கூறினார். நாடு தழுவிய வேலை நிறுத்தம், கதவடைப்பு ஆகியவை உள்ளிட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் (Positive Action) மூலமாகத் தன்னாட்சியை விரைவாகக் கொண்டு வரமுடியுமென்று பிரசாரம் செய்தார். அதற்காக அரசாங்கம் 1950-ல் அவரைச் சிறையிலடைத்தது. ஆனால் 1951–ல் நடந்த பொதுத் தேர்தலில் அவரது கட்சி அடைந்த பெருவெற்றியைத் தொடர்ந்து ஆளுநரான கிளார்க் (Clarke) அவரை விடுதலை செய்ததுடன், தலைமையேற்று அரசாங்கத்தை நடத்தவும் அனுமதித்தார். 1957-ல் கோல்டுகோஸ்டிற்கு விடுதலை கிடைத்தது. 1957 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் சுதந்தர கானா நாடு உதயமானது. பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்த முதல் ஆப்பிரிக்கா நாடு என்ற பெருமையும் அதற்குக் கிடைத்தது. அன்னிய ஆதிக்கம் அகன்றதற்கடையாளமாக, இடைக்காலத்தில் வாழ்ந்த சூடான் பேரரசின் பெயரான கானா என்பதைத் தங்களது புதிய குடியரசுக்குச் சூட்டி மகிழ்ந்தனர் நுக்ருமாவும் அவரது நண்பர்களும்.

நுக்ருமாவின் தலைமயில் கானா விரைந்து முன்னேறியது. பத்தாண்டுக் காலத்தில் நகரங்களெல்லாம் அடையாளம்

தெரியாமல் மாறிவிட்டன. கிராமப் புறங்களில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லையாயினும் நகரங்களில் நவீன சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, ஆகாய விமானங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியவை புகுத்தப்பட்டன. 1960 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் கானா குடியரசாகியது. நுக்ருமா முதல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார்.




படம் 18.1

*1968-ல் ஆப்பிரிக்கா*

நுக்ருமா வகுத்த புதிய குடியாட்சி அரசியல் அமைப்பில் எதிர்க்கட்சிகளுக்கு இடமில்லை. ஒருகட்சி ஆட்சியே

கானாவில் நிறுவப்பட்டது. நாட்டின் பொருளாதாரத்தை விரைவாகப் பெருக்கப் பொது உடமைக் கொள்கையைக் கடைப்பிடித்தார் நுக்ருமா. அதை விரும்பாத மூன்று அமைச்சர்கள் அவரது மந்திரிசபையிலிருந்து வெளியேறினர். தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒதுக்கிவைக்கும் அதிகாரமும் நுக்ருமாவின் கைக்கு வந்தது. நாட்டு முன்னேற்றத்தில் நாட்டங் கொண்ட அவர் வோல்டா நதித் திட்டத்தை (Volta River Project) நிறைவேற்றியதுடன் ஜெமாலில் (Jema) அலுமினியத் தொழிற்சாலையையும் கட்டி முடித்தார். ஆயினும் அவர் சர்வாதிகாரி போல் நடந்து கொண்டார். 1960-ல் தம்மைக் கானாவின் நிரந்தரக் குடியரசுத் தலைவராக அறிவித்துக்கொண்டார். 1965-ல் தேசிய சட்ட சபைக்கான தேர்தலைப் புறக்கணித்துவிட்டு உறுப் பினர்களைத் தாமே நியமிக்கத் தொடங்கினார். பத்திரிகைகளை அரசாங்கமே ஏற்று நடத்தியது. நுக்ருமா தமது அரசியல் பகைவர்களையெல்லாம் சிறையிலிட்டார். எவ்வாறாயினும் அவரது எதேச்சாதிகார ஆட்சியை நாட்டில் இருந்த அறிவாளிகள் வெறுக்கத் தொடங்கினர். அதன் விளைவாகக் கானாவில் புரட்சி ஏற்பட்டது. நுக்ருமா ஹனாய்க்குச் (Hanoi) சென்றிருந்தபோது 1966ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24ஆம் நாளன்று பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டார். இங்ஙனம் கானாவின் விடுதலையில் முக்கிய பங்கேற்று வெற்றிநடைபோட்ட நுக்ருமாவின் எதேச்சாதிகார ஆட்சி திடீரென்று கவிழ்ந்துவிட்டது.

### தான்ஸானியா (Tanzania)

கிழக்கு ஆப்பிரிக்காவில் மிகப்பெரும் நாடாக விளங்குவது தான்ஸானியா. ஆயினும் நீர்வளமும் மற்ற வசதிகளும் அதிக மில்லாத காரணத்தால் அங்கே மக்கள்தொகை மிகக் குறைவு. அங்கே வாழும் மக்களில் பெரும்பாலோர் ஆப்பிரிக்க இனத் தவர். ஐரோப்பியரும் ஆசியமக்களும் ஒரு சதவீதமே உள்ளனர். நைஜீரியாவைப் போன்றோ கானாவைப் போன் றோ வளம்கொழிக்கும் நாடாக இல்லாதபோதிலும், தான்ஸானியாவில் மற்ற ஆப்பிரிக்க நாடுகளில் காண முடியாத இன ஒற்றுமை அந் நாட்டிற்குப் பெரு வாய்ப்பாக இருந்து வருகின்றது. தான்ஸானியாவின் முக்கியப்பகுதியான தாங்கனீகா (Tanganyika) முதல் உலகப்போருக்குமுன் ஜெர்மானியப் பேரரசின் பகுதியாக இருந்தது. ஆனால் 1914-1918ல் நடந்தபோரில் ஜெர்மனி தோல்வியுற்றவுடன் அது

பிரிட்டனின் காப்புநாடாகியது. தாங்கனீகாவைச் சமுதாயப் பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றம் காணச்செய்து இறுதியில் அந் நாட்டு மக்களைத் தன்னாட்சிக்குத் தகுதி வாய்ந்தவர்களாகச் செய்யும் பொறுப்புப் பிரிட்டனிடம் ஒப்படைக்கப்பட்டது.

1925 முதல் 1931 வரை தாங்கனீகாவின் ஆளுநராகவிருந்த சர் டொனால்டு காமிரான் (Sir Donald Comeron) அந் நாட்டு அரசியலில் ஜனநாயக மரபுகளைப் புகுத்த முயன்றார். சட்ட ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து நாட்டிற்கு வேண்டிய சட்டங்களை இயற்றும் பணியில் ஆப்பிரிக்கரும் பங்கு கொள்ளச் செய்தார். ஆயினும், அவர் மரபாகவந்த அமைப்புகளை அழிக்க முயலவில்லை. மாறாக ஆளுநரின் மேற்பார்வையில் பல்வேறு பகுதிகளில் ஆட்சி புரிந்த குலமரபுத் தலைவர்களின் ஆட்சியை அனுமதித்தார். கிறிஸ்தவ சமயப்பரப்பாளர்கள்மூலமாக ஆப்பிரிக்காவின் கல்வி வளர்ச்சிக்கு ஆவனசெய்ய முற்பட்டார்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின், 1947-ல் தாங்கனீகா ஐக்கியநாடுகள் சங்கத்தின் (U. N. O.) அறநிலையக்குழுவின் Trusteeship Council) மேற்பார்வையில் வந்தது. தாங்கனீகா மக்கள் சுதந்தரமும் தன்னாட்சியும் பெறுவதற்கு உதவி செய்யுமாறு ஐ.நா. கேட்டுக்கொண்டபோது அப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பிரிட்டன் சட்டமன்றங்களிலும் அரசாங்கத்திலும் ஆப்பிரிக்கர் மேன்மேலும் பங்குகொள்ளும் வழிவகைகளைக் கொண்டுவர முயன்றது. ஹெய்லி பிரபு (Lord Hailey) 1945-ல் 'சமநிலைப் பிரதிநிதித்துவம்' என்ற முறையைத் தாங்கனீகாவில் புகுத்தினார். அதன்படி சட்ட மன்றத்தில் அரசாங்கச் சார்பற்ற ஐரோப்பிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஆப்பிரிக்க உறுப்பினர் எண்ணிக்கையும் சமநிலையில் இருக்க வேண்டுமென்று கொண்டு வந்தார். ஆனால். 1948-ல் தாங்கனீகாவிற்கு வந்த ஐ.நா. குழு ஒன்று இத் திட்டத்தைக் குறை கூறியது. ஏனெனில், மக்கள்தொகையில் பத்தில் ஒரு சதவீதமுள்ள வெள்ளையருக்கு அளவுக்கு மீறிய பிரதிநிதித்துவமும் ஆதிக்க நிலையும் அளிக்கப்படுவதை அக் குழு விரும்பவில்லை. அதன் பிறகு தாங்கனீகா சட்ட ஆலோசனைக் குழுவில் மூன்று இனத்தவருக்கும் சமமான இடங்களைத் தர ஆங்கில அரசாங்கம் முன்வந்தது. அதாவது, சட்டமன்றத்தில் அரசாங்கச் சார்பான 31 உறுப்பினர்களுடன் மூன்று முக்கிய வகுப்பாரும் தனித் தனியாக

10 உறுப்பினர்களை அனுப்பிவைக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. ஆளுநரிடம் ஏராளமான அதிகாரங்கள் குவிந்திருந்தன. இருப்பினும் அரசாங்கம் தாராளத்தன்மை கொண்டதாக மாறியது. அதனுடன் தாங்கனிகாவில் அரசியல் கட்சிகள் மெள்ளத் தலைதூக்கின.

காமிரான் ஆளுநராக இருந்தகாலத்தில் தாங்கனிகா ஆப்பிரிக்கக் கழகம் (T. A. A) தோன்றியது. வெள்ளையருடன் சமநிலை அடிப்படையில் பிரச்சினைகளை விவாதிப்பதற்கு நகரங்களில் வாழும் ஆப்பிரிக்கர்களுக்கு வசதியளித்தது இக் கழகம். 1954-ல் அது மேலும் வலுவடைந்து, தாங்கனிகா ஆப்பிரிக்கத் தேசிய ஒன்றியம் (T. A. N. U.) எனப் பெயர் கொண்டது; தாங்கனிகா ஆப்பிரிக்கக் கழகம் 1951-ல் 5000 உறுப்பினர்கள் மட்டுமே கொண்டிருந்தது. அவர்களில் பலர் அரசாங்க அலுவலர்களாகவும் ஆசிரியர்களாகவும் இருந்தனர். 1953 ல் ஜூலியஸ் நைரேரே (Julius Nyerere) அதன் தலைவரானார். வாஸநாகி குலமரபின் (Wazanaki tribe) தலைவரான நைரேரே பூரிட்டேயின் (Nyerere Burite) புதல்வரான ஜூலியஸ் கிறிஸ்தவர் பள்ளிகளில் பயின்று, பின்னர் இங்கிலாந்தில் எடின்பரோ பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். இங்கிலாந்திலிருந்து தாய் நாடு திரும்பிய பின்னர் கத்தோலிக்கப் பள்ளியென்றில் ஆசிரியராகப் பணியேற்றார். 1954-ல் தாங்கனிகா ஆப்பிரிக்கத் தேசிய ஒன்றியத்தின் தலைவரானதும் ஆசிரியர் தொழிலை விட்டு விலகித் தமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக முழுமுச்சுடன் பணியாற்றத் தொடங்கினார். தாங்கனிகாவிற்குப் படிப்படியாகத் தன்னாட்சி வழங்கவேண்டுமென்றும் 1975 அல்லது 1985-க்குள் அது சுதந்தர நாடாக வேண்டுமென்றும், 1955 லேயே ஐ. நா. யோசனை கூறியது. இதற்கிடையில் தாங்கனிகா ஆப்பிரிக்க தேசிய ஒன்றியத்தின் சார்பில் ஐ நா. வின் அறங்காவலர் குழுவிற்குச் சென்ற நைரேரே தாங்கனிகாவில் பிரதிநிதித்துவ அமைப்புகளிளெல்லாம் ஆப்பிரிக்கர் பெரும்பான்மை பெற்றிருக்க வேண்டுமென்றும், அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தினார். அதற்கிணங்க 1957-ல் சட்டமன்றங்களில் தேர்தல்முறை புகுத்தப்பட்டதுடன் தாங்கனிகாவிற்கு அமைச்சர்களைக் கொண்ட அரசாங்க முறையும் அளிக்கப்பட்டது. 1958-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தான்ஸானியக் கட்சி, தாங்கனிகா சுதந்திரக் கூட்டாட்சிக் கட்சி (Tanganyika Federal Independent Party) முதலான மற்றக்கட்சிகளுடன்

நைரேரேயின் தேசிய ஒன்றியக் கட்சியும் போட்டியிட்டு அமோகவெற்றி பெற்றது. 1959-லும் 1960-லும் நடந்த தேர்தல்களிலும் தாங்கனீகா ஆப்பிரிக்கத் தேசிய ஒன்றியக் கட்சியே வெற்றிவாகை சூடியது. 1960-ல் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய நைரேரே தமது நாட்டிற்குப் பொறுப்பாட்சி பெறுவதில் வெற்றிபெற்றார். 1961-ல் தாங்கனீகா முழு உரிமைபெற்ற நாடாகியது. பிரதமர் பதவி யேற்றிருந்த நைரேரே 45 நாள்களுக்குள் தமது பதவியைத் துறந்து நாட்டிலுள்ள இனப்பிரிவுகளுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கும் பணியை மேற்கொண்டார். 1962ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் ஒன்பதாம் நாளன்று தாங்கனீகா குடியர சானது. முதல் குடியரசுதலைவராக நைரேரே பதவியேற்றார். 1964-ல் சான்ஸிபார் தாங்கனீகா ஒன்றியத்துடன் இணைந்தது. அதிலிருந்து தான்ஸானியா என்ற பெயர் வழங்கலானது. நைரேரேயின் தாங்கனீகா ஆப்பிரிக்கத் தேசிய ஒன்றியக் கட்சியில் ஆப்பிரிக்கரும் மற்றையோரும் சேர வாய்ப்பளிக்கப் பட்டது.

குடியரசுத்தலைவரான நைரேரே சிந்தனைச் செறிவும் நாட்டுப்பற்றும் மிக்க நல்ல தலைவராக விளங்கிவருகின்றார்; இன ஒற்றுமையையும் பொருளாதார வளர்ச்சியையும் இரு கண்களாகப் பாவித்து வருகிறார். சீனா, பிரிட்டன், இஸ்ரேல், சோவியத் யூனியன் முதலான நாடுகளிலிந்து உதவி பெற்றுத் தாய்நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்கும் முயற்சியில் ஈடு பட்டுள்ளார். ஒன்றுபட்ட ஆப்பிரிக்கா அவரது கனவாகும். கென்யா, உகாண்டா, தான்ஸானியா ஆகிய நாடுகளடங்கிய அமைப்பு ஒன்றை உருவாக்குவதில் ஆர்வங்காட்டி வருகின் றார். 1964-ல் கெய்ரோவில் நடந்த ஆப்பிரிக்க ஒற்றுமைக் கான நிறுவனத்தில் பேசும்போது அனைத்து ஆப்பிரிக்க ஒற்றுமையின் முதல்படியாக, ஆப்பிரிக்கப் பொதுச் சந்தையை (African Common Market) நிறுவவேண்டுமென்று வலியுறுத் தினார். அவரது கனவு நனவாவதற்கு நெடுந்தூரம் பயணம் செல்லவேண்டுமென்றாலும், நைரேரே போன்ற தலைவர்கள் ஆப்பிரிக்க ஒற்றுமைக்கான நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்து வருகின்றனர்.

### கென்யா (Kenya)

கிழக்கு ஆப்பிரிக்காவில் விடுதலைப்பயணம் மேற்கு ஆப்பிரிக்காவைக் காட்டிலும் சிக்கல் மிகுந்ததாக இருந்தது.

கிழக்கு ஆப்பிரிக்கக் குடியேற்றங்கள் சிறியவையாகவும், அதிக வளர்ச்சியடையாதவையாகவும் இருந்ததுடன் அவற்றில் ஐரோப்பியர் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தது சுதந்தரக் கனவு நனவாவதைச் சிக்கலாக்கியது. கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான கென்யாவில் வாழ்ந்த ஐரோப்பியருக்கும் அந்நாட்டுப் பழங்குடியினருக்குமிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வு பெருகியிருந்தது. இந்த ஏற்றத் தாழ்வு அந்நாட்டில் தேசிய இயக்கத்தை ஊக்குவிக்க உதவியது. கென்யா ஆப்பிரிக்க ஒன்றியம் 1946-ல் அமைக்கப் பட்டது. துக்கு (Thuku) அதன் தலைவரானார். அவர் மித வாதியாக இருந்ததால் 1947-ல் ஜோமோ கென்யாட்டா (Jomo Kenyatta) தலைமைப் பதவியைக் கைப்பற்றினார்.

கென்யாட்டா தமது இளமைப்பருவத்திலேயே தேசிய கி.கீ.யு கழகத்தில் (National Kikeeyu Association) சேர்ந்திருந் தார். கி.கீ.யு வினரின் குறைகளைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் எடுத்துக் கூறுவதற்காக அவர் இருமுறை இலண்டனுக்குச் சென்றார். பிரிட்டனில் இருந்தபோது அவர் இலண்டன் பொருளாதாரப் பள்ளியில் மானிட இயல் பயின்று பட்டம் பெற்றார். இரண்டாவது உலகப்போரின்போது இங்கிலாந்தி லுள்ள சஸ்ஸக்ஸ் மாநிலப்பண்ணையொன்றில் பணியாற்றி னார். அதன் பின்னர் 1946-ல் தாயகம் திரும்பினார். நெடி துயர்ந்த உருவமும் நிமிர்ந்த நடையும் கொண்ட அவரிடம் தலைமைப் பண்பு இயற்கையிலேயே குடிகொண்டிருந்தது. அப்படிப்பட்ட கென்யாட்டாவின் தலைமையில் கென்யா ஆப்பிரிக்க ஒன்றியம் புதிய சக்தியுடன் மிளிரத் தொடங்கியது. சட்ட ஆலோசனைக் குழுவிலும் பொது ஆட்சித் துறையிலும் ஆப்பிரிக்கருக்கு நிறைய இடமளிக்க வேண்டுமென்று அவரது கட்சி அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தது. அதற்கிணங்க பிரிட்டிஷ் அரசாங்கமும் 54 உறுப்பினர்கொண்ட சட்ட ஆலோசனைக் குழுவில் ஆறு ஆப்பிரிக்கர்களையும், 12 உறுப்பினர் கொண்ட நிர்வாகக் குழுவில் ஓர் ஆப்பிரிக்கரையும் நியமிக்க முன்வந்தது. இதற்கிடையில், வெள்ளையரைக் கென்யாவிலிருந்து அடியோடு விரட்டும் நோக்கம் கொண்ட 'மாவ் மாவ்' (Mau Mau) என்ற தீவிரவாதிகளின் தலைமையில் மரபுகுல வன்முறைகள் கென்யாவில் தலைதூக்கின. அத் தீவிரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் காடுகளில் நடுஇரவுக் கூட்டங்களை நடத்திவந்தனர். ஐரோப்பியரையும் அவர் களுக்கு ஆதரவாக இருக்கின்ற ஆப்பிரிக்கரையும் கொல்லுவ தென்று சபதம் எடுத்துக்கொண்டனர். 1952 வரையில்

பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களைப் பொருட்படுத்தவில்லை ஆனால், 1952ல் ஆளுநராகப் பதவியேற்ற சர். இவலின் பார்ரிங் (Sir Evelyn Barring) என்பார் இத்தீவிரவாதிகளை ஒடுக்கக் கொடிய அடக்குமுறையைக் கையாளத் தொடங்கினார். கென்யாட்டாவையும் வேறுபல தேசியவாதிகளையும் சிறையில் தள்ளினார். 1953-ல் பயங்கரமான லாரி (Lari) படுகொலை நடந்தது. பல ஊர்கள் கொளுத்தப்பட்டன. 1955-லும் பல்லாயிரக்கணக்கான ஆப்பிரிக்கர்கள் அழிக்கப்பட்டனர். தீவிர தேசிய இயக்கம் ஒடுக்கப்பட்டது ஆயினும், விரைவிலேயே தடைவிதிக்கப்பட்டிருந்த கட்சிகள் திரும்பிவர அனுமதிக்கப்பட்டன. 1956-ல் சட்ட ஆலோசனைக் குழுவில் ஆப்பிரிக்கரின் எண்ணிக்கை எட்டாக உயர்த்தப்பட்டது. ஆயினும், உறுப்பினரின் எண்ணிக்கையை மேலும் உயர்த்தினாலன்றிப் பதவியேற்க முடியாது என ஆப்பிரிக்கர் கூறி விட்டனர். எனவே, ஆப்பிரிக்கப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 14 ஆக உயர்த்தப்பட்டது. 1960-ல் கூடிய இலண்டன் மாநாட்டில் அமைச்சரவையில் நான்கு ஆப்பிரிக்கர்களுக்கு இடமளிப்பதாகவும், விரைவிலேயே கென்யாவிற்கு விடுதலை வழங்கப்போவதாகவும் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்தது. தேசியக் கட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இரு கட்சிகள் முன்னணியில் நின்றன. அவற்றில் ஒன்று கி.கீ யுவினர் ஆதிக்கம் செலுத்திய தேசியக் கென்யா ஆப்பிரிக்க ஒன்றியம் (KANU) ஆகும். மற்றொன்று கென்யா ஆப்பிரிக்க மக்களாட்சி ஒன்றியம் (KADU) என்ற மிதவாதக் கட்சியாகும். 1961-ல் நடந்த சட்டசபைக்கான தேர்தல்களில் 'கானு' கட்சிக்குப் பெரும்பான்மை பலம் கிடைத்தது. ஆயினும். கென்யாட்டாவை விடுதலை செய்யும் வரை மந்திரி சபை அமைக்க அக்கட்சி மறுத்தது. அரசாங்கம் பணிந்து வந்து கென்யாட்டாவை விடுதலை செய்தது. கானு கட்சியினரின் தொடர்ந்த போராட்டத்தின் விளைவாக 1963-ல் கென்யா விடுதலை பெற்ற நாடாகியது.

**உகாண்டா (Uganda)**

விவசாய நாடான உகாண்டா இருபதாம் நூற்றாண்டு வரையில் மிகவும் பின்தங்கிய நாடாக இருந்து வந்தது தொழில்துறையில் எவ்வித முன்னேற்றமும் அங்கே ஏற்படவில்லை. அரசியல் முன்னேற்றம் காணவும் வழியில்லாமல் இருந்தது. பிற்போக்கு எண்ணங் கொண்ட உகாண்டா மன்னர்கள் பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டுவர நினைத்த சில

மக்களாட்சிக் கூறுகளையும் எதிர்த்து வந்தனர். உகாண்டா மக்களின் தலைவரான கபாகாவும் (Kabaka) கென்யா, தாங்கனிகா, உகாண்டா ஆகியவை அடங்கிய கூட்டாட்சி யோசனையை மறுத்துவந்தார். ஆயினும், அவர் உகாண்டாவில் பிரிட்டிஷ்காரர்களுக்கெதிரான கிளர்ச்சிகளைத் தூண்டினார். அதன் விளைவாக அரசாங்கம் அவரை நாடுகடத்தியது. ஆயினும், தேசியவாதிகள் அரசியல் கட்சிகளைத் தொடங்கித் தேர்தல்களில் போட்டியிட்டுச் சட்டசபையிலும் நிர்வாகக் குழுவிலும் இடம் பெற்றனர். ஒபோட்டே (Obote) என்பார் தலைமையில் இயங்கிய உகாண்டா மக்கள் காங்கிரஸ் (Uganda People's Congress) என்னும் கட்சி வலிமை பெற்று விளங்கியது. *1961*-ல் ஆப்பிரிக்கத் தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குமிடையே நடந்த பேச்சு வார்த்தைகளின் பயனாக *1962*-ல் உகாண்டாவிற்கு விடுதலை கிடைத்தது. உகாண்டாவையும் உள்ளடக்கிய உகாண்டா கூட்டாட்சியும் உதயமானது.

## பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்காவிலும் நிலநடுக் கோட்டுப் பகுதியிலும் தேசிய இயக்கம் (Nationalism in French West and Equatorial Africa)

ஆப்பிரிக்காவில் இருந்த தங்களது குடியேற்றங்களைப் பிரான்ஸின் ஒரு பகுதியாகவே கருதி வந்தனர் பிரெஞ்சு மக்கள். அதற்கிணங்கக் குடியேற்றங்களில் வாழ்ந்த ஆப்பிரிக்க மக்களையும் தாய்நாட்டில் வாழும் பிரெஞ்சுக்காரர்களையும் ஒருங்கிணைக்கும் முயற்சி நடந்து வந்தது. ஆப்பிரிக்க மக்களுக்குப் பிரெஞ்சு குடியுரிமை வழங்கப்பட்டதுடன் பாரீஸில் கூடிய பிரெஞ்சு சட்டமன்றத்திற்குப் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமையும் அவர்களுக்குத் தரப்பட்டது. ஆப்பிரிக்கக் குடியேற்றங்கள் பிரெஞ்சு ஆளுநர்களின் நேரடி ஆட்சியில் இருந்தன. ஆப்பிரிக்க மரபு குலத்தலைவர்கள் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தவில்லை. ஆப்பிரிக்கத் தலைவர்களும் பிரெஞ்சுப் பண்பாட்டில் ஒன்றாகக் கலப்பதை இரண்டாவது உலகப்போர் காலம்வரை வரவேற்று வந்தனர். ஆனால் போரின்போது பிரான்ஸில் ஆட்சி நடத்திய சர்வாதிகார விச்சி அரசாங்கம் குடியேற்ற ஆப்பிரிக்கரிடையே வெறுப்பை வளர்த்துவிட்டது.

உணவுப் பற்றாக்குறை, வேலையில்லாத் திண்டாட்டம், விலை யேற்றம் ஆகியவையும் ஆப்பிரிக்கரின் வெறுப்பை மேலும் வளர்த்தன. மேலும் ஜெர்மானியர் பிரான்ஸை வென்ற பிறகு டிகாலின் (De Gaulle) தலைமையிலான சுதந்தரப் பிரான்ஸை ஏற்பதா, ஜெர்மனியின் கட்டுப்பாட்டில் இருந்த விச்சி அரசாங் கத்தை ஏற்பதா என்ற இக்கட்டான நிலை பிரெஞ்சுக் குடியேற் றங்களுக்கு ஏற்பட்டது.

1944-ல் பிரெஞ்சுக் காங்கோ பகுதியில் பிரேஸவில் (Brazzavile) நகரில் நடைபெற்ற மாநாட்டில் பிரெஞ்சு ஆப்பிரிக்கக் குடியேற்றங்களுக்குப் பிரான்ஸின் சட்டமன்றத் தில் பிரதிநிதித்துவம் அளிப்பதாக, டிகால் உறுதி அளித்தார். ஆயினும் அவற்றிற்குத் தன்னாட்சி வழங்க மறுத்து வந்தார். ஆனால் 1946-ல் பிரெஞ்சுக் குடியேற்றம் ஒவ்வொன்றிலும் ஆலோசனைக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஓரளவு தன் னாட்சியும் வழங்கப்பட்டது. குடியேற்றங்களில் இருந்த சட்ட சபைகளுக்குச் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன; ஆப்பிரிக்கப் பிரதிநிதிகளுக்குப் பிரெஞ்சு பாராளுமன்றத்தில் இடமளிக்கப்பட்டது. ஆயினும், பாரீஸில் கூடிய பிரெஞ்சுப் பாராளுமன்றத்தில் 622 உறுப்பினர்களில் 13 பேர்களே தென் மேற்கு ஆப்பிரிக்கப் பிரதிநிதிகள். மேலும், குடியேற்றங்களில் ஐரோப்பியக் குடியினரும், வெள்ளையரல்லாத ஆப்பிரிக்கரும் தனித்தனியாக வாக்களிக்கும் தேர்தல் முறையினால் ஆப்பிரிக் கரிடையே வெறுப்பு வளர்ந்தது.

மேலே குறிப்பிட்ட அரசியல் திட்டத்தால் ஏமாற்றமடைந்த தேசியவாதிகள், ஆப்பிரிக்கக் கூட்டு மக்களாட்சிக் கட்சியைத் (Reassemblement Democratic African R.D.A.) தொடங்கினர். ஐவரி கோஸ்டைச் (Ivory Coast) சேர்ந்த மருத்துவரான ஹொபோயட் போயிக்னி (Houphouet Boigny) அதன் தலை வராக விளங்கினார். ஆயினும், அக்கட்சி பிரெஞ்சுப் பொது உடைமைக் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த தாலும், முழுச் சுதந்தரம் வேண்டுமென்று போராட முற்பட்ட தாலும் பிரெஞ்சு அரசாங்கம் 1948 முதல் 1950 வரையில் உள்ள காலத்தில் அக்கட்சியை ஒடுக்கியது. ஆனால், சில ஆண்டுகள் கழித்து ஆப்பிரிக்கக் கூட்டு மக்களாட்சிக் கட்சி, பொது வுடைமைக் கட்சியுடனான தொடர்பை அறுத்துக் கொண்டு மீண்டும் வலிமை பெற்று விளங்கத் தொடங்கியது. ஹொபோ

யட்டும் அரசாங்கத்துடன் மோதுவதைவிடச் சமரசக் கொள்கையைக் கடைப்பிடிப்பது நல்லது எனத் தீர்மானித்தார். அதற்கிணங்க 1956-ல் பிரெஞ்சு அமைச்சரவையில் சேர்ந்தார். ஆயினும், செனிகாலின் (Senegal) பெரும் தேசியத் தலைவரான லியோபால்டு செங்கோர் (Leopold Senghor), பிரான்ஸுடன் ஒன்றாகக் கலப்பதைவிட ஆப்பிரிக்கரின் தனிப்பண்பாட்டைப் பேணிக்காப்பது அவசியம் என வற்புறுத்தினார்.

செங்கோர், போயிக்னி போன்றோரின் செல்வாக்கின் விளைவாகவும், தொழிலாளர் இயக்கத்தின் காரணமாகவும் 1957–ல் பிரெச்சுக்காரர்கள் கடைப்பிடித்து வந்த கொள்கைகள் மாறின. குடியேற்றங்களைத் தாய்நாட்டுடன் ஒருங்கிணைத்துப் பாரீஸிலுள்ள பிரெஞ்சு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்னும் கொள்கை கைவிடப்பட்டது அதுபோலவே குடியேற்றங்களில் வாழும் மக்களை வறுக்கும் பிரெஞ்சுக் குடியுரிமை வழங்கும் கொள்கையும் கைவிடப்பட்டது. பழைய கூட்டாட்சி அமைப்பு முடிவிற்கு வந்தது. குடியேற்றங்களுக்குத் தனித்தனியான அரசாங்கங்கள் அமைக்கப்பட்டன. பிரெஞ்சு ஆட்சியாளர்களின் அதிகாரங்களும் வெகுவாகக் குறைக்கப்பட்டன. ஆப்பிரிக்கக் குடியினர் வயது வந்தோர் வாக்குரிமை பெற்றனர். ஆயினும், அரசாங்கத்தின் புதிய கொள்கையின் விளைவாக மேற்கு ஆப்பிரிக்கா சிறு பிரிவுகளாகத் துண்டாடப்பட்டுவிடும் எனச் செங்கோர், கினியைச் சேர்ந்த சிகோவ் தோரே (Sekov Toure) போன்ற ஆப்பிரிக்கத் தலைவர்கள் அஞ்சினர். இதற்கிடையில் பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்காவும் நிலக்நடுக்கோட்டு பகுதியும் பிரான்சுடன் தொடர்புகொண்ட கூட்டாட்சிகளாக உருவாக்கப்பட வேண்டுமா, ஒவ்வொரு குடியேற்றமும் உரிமை கொண்ட நாடுகளாகப் பிரான்சுடன் தொடர்பு கொண்டு விளங்க வேண்டுமா என்ற விவாதம் நடந்து வந்தது. முழு விடுதலையா, பொதுப்பாதுகாப்பு, பொதுவான வெளிநாட்டுக் கொள்கை கொண்ட, பிரெஞ்சு ஐக்கியத்தில் இணைந்த உள்நாடடுத்தனியாட்சிபெற்ற நிலையா என்பதைக் குடியேற்றங்கள் தீர்மானிக்க வேண்டுமென்று பிரான்ஸில் ஐந்தாவது குடியரசின் தலைவரான டிகால் 1958–ல் குடியேற்றத் தலைவர்களைக் கேட்டார். கினி சுதந்தர நாடாகியது. சிகோவ் தோரே அதன் தலைவரானார். 1959–ல் செனிகலும் மாலியும் ஒன்றாக இணைந்து, உரிமைபெற்ற மாலி கூட்டரசாக மலர்ந்தன. போயிக்னியின் தலைமையில்

ஆப்பிரிக்கர் குடியேற்றங்களுக்கு விடுதலை வேண்டுமென்று வற்புறுத்திவந்ததன் விளைவாக 1960-ல் 14 குடியேற்றங்கள் பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுபட்டன. அவையனைத்தும் ஐ.நா.வின் உறுப்பு நாடுகளாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டன.

எகிப்து (Egypt)

அரேபிய உலகிலும் ஆப்பிரிக்காவிலும் வீசிய தேசியக் காற்று எகிப்திலும் வீசத் தொடங்கியது. மன்னர் பருக் (King Farouk) மற்றும் வாபட் (Wafd) கட்சியின் உறுதியற்ற, ஊழல் மிகுந்த ஆட்சியைக்கண்டு தேசியவாதிகள் வெறுப்படைந் தனர். அவர்களது வெறுப்புணர்வு நாட்டுப்படையிலும் பரவத் தொடங்கியது. தேசியவாதிகளின் செல்வாக்கிற்குட் பட்ட படையினர் மன்னருக்கு எதிராகக் கலகம் செய்தனர். 1952-ல் தளபதி நகீப் (Geneual Namib), கர்னல் நாஸர் (Colonel Nasscr) ஆகியோரின் தலைமையில் சில இளம் படைத் தலைவர்கள் புரட்சிசெய்து மன்னர் பருக்கைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றினர் அப் புதிய ராணுவ அரசாங்கம் நாட்டில் அரசியல் கட்சிகளை எல்லாம் கலைத்துவிட்டது. அரசாங்கத்தில் நிறைந்திருந்த ஊழலைக் களைய முயன்றது. நிலப் பிரபுக்களிடமிருந்து நிலத்தைப்பறித்து நிலமற்ற குடியானவர்களுக்கு வழங்கியது. நிலச்சொந்தக்காரர்களுக்கு ஓரளவு இழப்பீடு வழங்கியது. புதிய புரட்சி அரசாங்கம் பிரிட்டனுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு அதன்மூலமாகச் சூடானில் இருந்துவந்த பிரிட்டிஷ் பிரான்சுக் கூட்டாட்சியை முடிவிற்குக்கொண்டு வருவதிலும் தன்னாட்சியைத் தோற்றுவிப்பதிலும் வெற்றி பெற்றது. 1955-ல் சூடான் சுதந்தர நாடாகியது.

1954ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் எகிப்தில் மற்றுமொரு புரட்சி எழுந்தது. அதில் கர்னல் நாஸர் நகீபைப் பதவி யிலிருந்து நீக்கிவிட்டு எகிப்தைத் தாமே ஆளமுற்பட்டார். பதவிக்கு வந்தவுடன் சூயஸ் கால்வாய்ப் பகுதியில் நிறுத்தப் பட்டிருந்த பிரிட்டிஷ் படைகளை விலக்கிக்கொள்ள வேண்டு மென்று பிரிட்டனை வற்புறுத்தினார். பிரிட்டனும் இருபது மாதங்களில் தனது படைகளை விலக்கிக்கொள்ள இணங்கியது. சூயஸ் கால்வாயில் பிரிட்டிஷ் கப்பல்கள் தாராளமாகச் செல்லலாம் என்ற முந்தைய ஒப்பந்தத்தை

ஏற்றுக்கொள்வதாக நாஸர் உறுதிகூறினார். 1955-ல் பிரிட்டிஷ்படைகள் சூயஸ் பகுதியிலிருந்து முறையாக விலக்கிக் கொள்ளப்பட்டன. ஆனால், 1955-ல் தாம் அளித்த வாக்குறுதியை மீறி 1959-ல் சூயஸ்கால்வாயைத் தேசிய உடமையாக்கினார். பிரிட்டனும், அமெரிக்காவும் பின்பற்றிய கொள்கைகளுக்கு எதிரெடிதரும் வகையிலேயே நாஸர் அந் நடவடிக்கையிலிறங்கினார். எகிப்திற்கு நிதி உதவி வழங்கு வதாகவும், எகிப்தில் அஸ்வான் அணையைக் கட்டத் தேவையான உதவிகள் செய்வதாகவும் 1953-ல் அமெரிக்கா வாக்களித்தது. ஆனால், 1955-ல் செக்கோஸ்லோவாக்கியா மூலமாக ரஷ்யாவிடமிருந்து படைக்கலங்களை வாங்கும் ஒப்பந்தத்தை நாஸர் செய்துகொண்டதைக்கண்டு ஆத்திரங் கொண்ட அமெரிக்கா அஸ்வான் அணையைக்கட்ட எல்லா வித உதவிகளையும் நிறுத்தியது. அமெரிக்காவின் தீர்மானத்தை பிரிட்டனும் உலகபாங்கும் உறுதி செய்தன. தமது மனதுக்குகந்த அஸ்வான் அணைத்திட்டத்திற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் குறுக்கே நிற்பதைக்கண்டு சினம் கொண்ட நாஸர் சூயஸ்கால்வாயைத் தேசிய மயமாக்கினார். இச்செயலை நம்பிக்கைத் துரோகம் எனப் பிரிட்டன் கண்டித்தது. அல்ஜீரிய தேசியவாதிகளுக்கு நாஸர் உதவி செய்ததைக்கண்டு பிரான்சும் எகிப்தின் மீது பகைமை கொண்டது. எகிப்தின் தீவிர தேசிய உத்வேகத்தைக்கண்டு அச்சங்கொண்ட இஸ்ரேல் பிரிட்டன் பிரான்ஸ் ஆகியவற்றின் மறைமுக ஆதரவுடன் 1956ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 29ஆம் நாளன்று எகிப்தைத்தாக்கி, வியத்தகு வெற்றியும் பெற்றது. போரை உடனடியாக நிறுத்தவில்லையானால், சூயஸ்கால்வாய்ப் பகுதியிலுள்ள முக்கியக் கேந்திரங்களைக் கைப்பற்றப்போவதாகப் பிரிட்டனும் பிரான்சும் எச்சரித்தன. அந்த எச்சரிக்கையை நாஸர் பொருட்படுத்தாததால் அடுத்த இரண்டு நாள்களில் பிரிட்டிஷ் படைகளும் பிரெஞ்சுப்படை களும் எகிப்தின் மீது பாய்ந்தன. உடனடியாக நாஸர் ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் முறையிட்டார். பாதுகாப்புச் சபையும் உடனடிப்போர் ஓய்விற்கு உத்தரவிட்டது. ஜவஹர்லால் நேருவும் சோவியத் யூனியனும், பல ஆசியா ஆப்பிரிக்கா நாடுகளும் எகிப்தின் மீதான வன்முறைத் தாக்குதலைக் கண்டனம் செய்தனர். பாதுகாப்புச் சபையின் கட்டளைக் கிணங்க பிரிட்டிஷ், பிரெஞ்சு, இஸ்ரேலியப் படைகள் எகிப்தை விட்டு விலகிக்கொண்டன.

இந்த எகிப்தியப் போரின் விளைவாக நாஸரின் பேரும் புகழும் ஓங்கின. அரேபிய தேசிய இயக்கத்தின் வீரமுதல்வன் தான்தான் என்பதைப்போல நடந்து கொள்ளலானார். அரபு நாடுகள் அனைத்தும் இணைந்த கூட்டாட்சி அமையவேண்டு மென்று பேசலானார். அத்தகைய இலக்கின் முதல்படியாக 1958-ல் எகிப்தும் சிரியாவும் ஒன்றுபட வழிவகுத்தார். ஆயினும் இந்த ஐக்கிய அரபுக்குடியரசு (United Arab Republic) 1961-ல்லேயே கலைக்கப்பட்டுவிட்டது. ஈராக்கில் அப்துல்கரீம் எப் காஸிமில் தலைமையில் எழுந்த தேசியப் புரட்சிக்கு நாஸர் ஆதரவுதந்தார். அதன்மூலமாக அந் நாட்டில் ஹஷமைட் அரசகுலத்தினர் ஆட்சி நீங்கிக் குடியரசுத் தோன்ற உதவினார். மேற்கு ஆசியாவின் வரை படத் திலிருந்து இஸ்ரேலைக் கிழித்தெறிவதாகச் சூளுரைத்த நாஸர் 1967-ல் இஸ்ரேல்மீது போர் தொடுத்தார். ஆனால் இஸ்ரேலின் ஆயுதபலத்திற்கு முன்னால் படுதோல்வியடைந்தார். தோல் வியால் வெறுப்படைந்த நாஸர் போருக்குப்பின் மனமொடிந்து மாண்டு போனார். அவரை அடுத்து சாதத்(Sadat) அதிபராகப் பதவியேற்றார். அவரது காலத்திலும் 1969-ல் எகிப்திற்கும் இஸ்ரேலுக்கும் போர் மூண்டது. ஆயினும், 1967-ல் பெற்றதைப்போல இஸ்ரேல் பெரு வெற்றிபெற முடிய வில்லை. இரு தரப்பினரும் போரை நிறுத்திப் பேச்சு வார்த்தை நடத்த முன்வந்தனர். மேற்கு ஆசியாவின் அமைதிப் பிரச்சினையைத் தீர்க்க எகிப்து அதிபர் சாதத்தும் இஸ்ரேல் பிரதமர் பேகினும் (Begin) தீவிரமுயற்சி செய்து வருகின்றனர். அமைதியைக் காப்பதற்காக அரும்பாடுபட்டு வரும் அவர்களிருவருக்கும் நோபல் பரிசு (Nobel Prize) அறி விக்கப்பட்டுள்ளது.

### வட ஆப்பிரிக்காவில் தேசிய இயக்கம்

அரேபிய தேசிய இயக்கத்தின் எதிரொலி பிரான்ஸின் ஆதிக்கத்திலிருந்த வடஆப்பிரிக்க நாடுகளான மொராக்கோ, டுனீசியா, அல்ஜீரியா ஆகியவற்றிலும் கேட்கத் தொடங் கியது. இரண்டாவது உலகப்போரைத் தொடர்ந்து விடு தலைப் போராட்டங்களும் பிரெஞ்சு எதிர்ப்புக் கிளர்ச்சிகளும் இந் நாடுகளைக் குலுக்கின. 1955-ல் தேசியவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலமாக டுனீசியா மற்றும் மொராக்கோ பிரச்சினைக்குப் பிரான்ஸ் தீர்வு கண்டது. டுனீசி

யாவில் காவல், நீதி, கல்வி ஆகிய துறைகளை அந் நாட்டு மக்களிடையே படிப்படியாக மாற்றிவிடுவதாகப் பிரான்ஸ் உறுதி கூறியது. அது போன்ற சலுகைகளை மொராக்கோவிற்கு வழங்கியது. ஆனால் அல்ஜீரியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அத்துணை எளிதாக இல்லை. அந் நாட்டில் 1954-ல் எழுந்த விடுதலைப்போர் எட்டு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடைபெற்றது. அல்ஜீரியாவில் பிரெஞ்சுக்காரர் தங்கள் தனி நலன்களைக் கைவிட விரும்பாததே போருக்குக் காரணமாகும். அந் நாட்டில் ஏற்கெனவே ஒரு மில்லியன் பிரெஞ்சுக்காரர்களைக் குடியமர்த்தியிருந்தனர்; அந் நாட்டின் வளங்களை எல்லாம் அனுபவித்து வந்தனர். மேலும் சஹாரா பகுதியில் எண்ணெய் வளமும், கனிவளங்களும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அல்ஜீரியாவின் மீதான கட்டுப்பாட்டைக் கைவிட பிரான்ஸ் விரும்பவில்லை. இங்ஙனம் தன்னலக் கும்பல்களின் செல்வாக்குக் காரணமாக அல்ஜீரியக் குடியேற்றத்தின் மீதான பிடியைத் தளர்த்திக் கொள்ள பிரான்ஸ் முன்வரவில்லை.

அல்ஜீரியாவின் தேசியத் தலைவரான அகமது பென்-பெல்லா (Ahmed Ben-Bella) 1952-ல் எகிப்தின் ஆதரவுடன் கெய்ரோவில் புரட்சிக் குழுவை உருவாக்கினார். அக் குழு கெய்ரோவில் இருந்துகொண்டே அல்ஜீரியாவில் வாழ்ந்து வந்த பிரெஞ்சுக் குடும்பங்கள் மீதும், பிரெஞ்சுக்காரர்களுக்கு ஆதரவு அளித்து வந்த முஸ்லீம் குடும்பங்கள் மீதும் வன் முறைத்தாக்குதல்களுக்கு ஏற்பாடு செய்து வந்தது. பிரான்ஸில் கல்விகற்ற பெர்ஹத் அப்பாஸ் என்பவர் 1955-ல் அல்ஜீரிய தேசியவாதிகளின் தலைவரானார். 1958-ல் அவர் அல்ஜீரியக் குடியரசின் தற்காலிக அரசாங்கத்தைக் கெய்ரோவில் அமைத்தார். பொதுவுடைமைச் சீனாவும் வேறுசில ஆசிய ஆப்பிரிக்கா நாடுகளும் அத்தற்காலிக அரசாங்கத்தை அங்கீகரித்தன.

தேசியக் கிளர்ச்சியாளர்களுடன் கலந்துபேசி ஒரு தீர்வினைக் கொண்டுவராமல் காலங்கடத்தி வந்த பிரெஞ்சு அரசாங்கத்தின்மீது அல்ஜீரிய மக்கள் வெறுப்புக் கொண்டனர். அதன் விளைவாக 1958-ல் அங்கே புரட்சிப் புயல்கிளம்பியது. சில பிரெஞ்சுப் படைத்தலைவர்களும் புரட்சி யாளர்களுக்கு ஆதரவு தர முன்வந்தனர். அப்போது பிரெஞ்சுக் குடியரசுத் தலைவராக இருந்த டிகால் ஓரளவு தாராளத்தன்மை

கொண்ட அரசியல் திட்டத்தை வெளியிட்டார். அதன்படி பிரெஞ்சு ஆப்பிரிக்கக் கூட்டாட்சியில் அடங்கிய அல்ஜீரியா விற்குத் தன்னாட்சி வழங்க முன்வந்தார். ஆனால் அல்ஜீரியர்கள் அதனை ஏற்கமறுத்து, முழுச்சுதந்தரம் வேண்டுமென்றனர். 1960-ல் மேற்கு ஆப்பிரிக்காவில் முன்னாள் பிரெஞ்சுக்குடியேற்றங்களாக இருந்த பன்னிரண்டு பகுதிகளுக்கும் விடுதலை அளித்து அவை புதிய பிரெஞ்சுக் கூட்டாட்சியாக உருவாக்கப்பட்டன. அல்ஜீரியாவின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கு அந் நாட்டில் 1961-ல் பொது மக்கள் வாக்கெடுப்புதற்கு டிகால் ஏற்பாடு செய்தார். அதில் பிரெஞ்சுக் கட்டுப்பாடில்லாத தன்னாட்சி வேண்டுமென்று மக்கள் தீர்ப்பளித்தனர் அதற்கிணங்க 1962-ல் விடுதலை அடைந்த அல்ஜீரியா குடியரசானது. பென்பெல்லா அதன் முதல் தலைவராகப் பதவியேற்றார். ஆனால் 1965-ல் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டுக் கர்னல் பொமிடியன் பதவிக்கு வந்தார்.

**காங்கோ** (Congo)

ஆப்பிரிக்காவின் மேற்குப்பகுதியிலுள்ள காங்கோ நீண்டகாலமாகப் பெல்ஜியத்தின் ஆதிக்கத்தில் இருந்துவந்தது. இருபதாம் நூற்றாண்டில்தான் அங்கு அன்னிய ஆட்சிக்கு எதிரான பல மரபுகுலக் கிளர்ச்சிகள் எழுந்தன. எனவே, 1960இல் பெல்ஜிய அரசாங்கம் காங்கோ நாட்டுப் பிரதி நிதிகள் அடங்கிய மாநாட்டைப் புருஸ்ஸில்ஸ் (Brussels) கூட்டிக் காங்கோ பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வந்தது. அந்த மாநாட்டின் யோசனைக்கிணங்க அந்த ஆண்டு இறுதியில் காங்கோவிற்கு விடுதலை வழங்கப்பட்டது. தேர்தல்கள் நடந்தன. ஜோசப் கசவூபு (Joseph Kasavubu) குடியரசுத் தலைவரானார். பாட்ரீஸ் லுமும்பா (Patrice Lumumba) பிரதமராகப் பதவியேற்றார். ஆனால் காங்கோவில் உண்மையான தேசிய ஒற்றுமையில்லாததால் பல மரபுகுடியினர் தங்களுக்குள் போரிடத் தொடங்கினர். காங்கோ படையில் கலகம் ஒன்று எழுந்தது. அதனை ஒடுக்க பெல்ஜிய அரசாங்கம் தனது படைகளை ஏவியது. இந் நிலையில் காங்கோ அரசாங்கம் அமைதிகாக்க ஐ.நா.வின் உதவியை நாடியது. ஐ.நா.வும் பன்னாட்டுப் படையொன் றைக் காங்கோவிற்கு அனுப்பி அமைதியைக் காக்க முயன்றது. ஆனால், காங்கோவின் மாநிலங்களில் ஒன்றான கடாங்காவின் (Katanga) பிரதமரான ஷோம்பே (Tshombe)

கொங்காவைச் சுதந்தர நாடாக அறிவித்ததுடன் பெல்ஜியப் படைகளை வரவேற்றார். காங்கோவின் தலைநகரான லியோபால்டுவில்லில் மரபுகுலச் சண்டைகள் மூண்டதால் குழப்பமும் கொந்தளிப்பும் பரவியிருந்தன. இதற்கிடையில் காங்கோ படைத்தலைவரான கர்னல் மோபுட்டு (Mobutu) பிரதமர் லுமும்பாவைச் சிறையில் வைத்தார். வல்லரசுகளின் தலையீடும் காங்கோவில் அதிகரித்தது. சோவியத் யூனியன் லுமும்பாவிற்கு ஆதரவு காட்டியது. மேலைநாடுகள் அதிபர் கசவூபுவிற்குப் பக்கபலமாக நின்றன. மரபுகுலக்கலகங்களும், கொலைகளும், காங்கோவை அலைக்கழித்த நிலையில் தலைமைச் செயலாளரான டேக் ஹாமர்ஷீல்டை (Dag Hammarskjold) நடுவராக அனுப்பியது. ஆனால், அவரது பயணம் வெற்றிபெறவில்லை. 1961-ல் லுமும்பா படுகொலை செய்யப்பட்டார். இவ்வாறு ஆரம்பத்திலிருந்தே காங்கோ குடியரசில் நிலையற்ற, கொந்தளிப்பான நிலை இருந்து வருகின்றது.

## ரொடீஷியா (Rhodesia)

பெரும் ஏகாதிபத்தியவாதியான சிசில் ரோட்ஸ் நிறுவிய குடியேற்றம் அவர் பெயராலேயே ரொடீஷியா என வழங்கலாயிற்று. அது ஆரம்பத்திலிருந்தே பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. 1923-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் அக்குடியேற்றத்திற்குத் தன்னாட்சி வழங்கியது. இன விரோதமான சட்டங்களை ரத்து செய்யும் அதிகாரம் தவிர மற்றப் பொறுப்புகள் ரொடீஷிய அரசாங்கத்திடமே விடப்பட்டது. இரண்டாவது உலகப்போருக்குப் பின் ஏராளமான ஐரோப்பியர் அந்நாட்டில் குடியேறி வாழத் தொடங்கினர். வடக்கு ரொடீஷியா (ஸாம்பியா), நியாஸாலாந்து (மலாவி), தெற்கு ரொடீஷியா ஆகிய பகுதிகளை இணைத்து மத்திய ஆப்பிரிக்கக் கூட்டரசைப் பிரிட்டிஷ் அரசாங்கம் 1953-ல் உருவாக்கியது. தொடக்கத்திலிருந்தே இத்தகைய கூட்டரசை ஆப்பிரிக்கர் எதிர்த்து வந்தனர். ஆப்பிரிக்கக் காங்கிரஸ் எனும் அமைப்பை உருவாக்கித் தங்களின் குறைகளை எடுத்துக் கூறுவதற்காக அப்போது தூதுக்குழுக்களை இலண்டனுக்கு அனுப்பி வந்தனர். இருப்பினும் அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை. அரசியல் கட்சிகளை அமைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படவில்லை. எவ்வாறெனினும் ஆப்பிரிக்கத் தலைவர்கள் பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிராக புரட்சிக் கலகமொன்றை 1959-ல் செய்யத் திட்டமிட்டனர்.

அதற்கிணங்க நியாஸாலாந்தில் கலகங்கள் தோன்றின. கலகங்களை ஒடுக்குவதற்குக் கூட்டாட்சிப் படைகள் அனுப்பப்பட்டன. பல ஆப்பிரிக்கர்கள் கொல்லப்பட்டனர். தேசியத்தலைவர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸுக்குத் தடைவிதிக்கப்பட்டது. ரொடீஷியா விலுள்ள நிலைமையை ஆராய்ந்து அறிக்கை அளிக்குமாறு டெல்வின் பிரபுவைப் (Lord Delvin) பிரிட்டிஷ் அரசாங்கம் அனுப்பியது. அவர் தம் அறிக்கையில் ரொடீஷியாவில் 'போலீஸ் ஆட்சி' நடைபெறுவதாகக் குறிப்பிட்டு, குடி யேற்றங்கள் மீதான கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டு மென்று பரிந்துரைத்தார். ரொடீஷியாவிற்குச் சென்று சுற்றிப் பார்த்த பிரிட்டிஷ் பிரதமரான மாக்மில்லன் (Macmillan) கூட்டாட்சியிலிருந்து தனிக்குடியேற்ற நாடுகளைப் பிரிக்க வேண்டுமென்று கூறி அவற்றிற்குப் பிரிந்து செல்லும் உரிமை யை வழங்கினார். அதற்கிணங்க 1964-ல் வட ரொடீஷியா உரிமைபெற்ற தனிநாடாகி சாம்பியா எனப் பெயர் பெற்றது. நியாஸாலாந்தும் சுதந்திர மலாவி நாடாகியது. டாக்டர் ஹேஸ்டிங்ஸ். பண்டா (Dr. Hastings Bunda) அதன் தலைவ ரானார். ஆனால், தெற்கு ரொடீஷியாவிற்கு மட்டும் விடுதலை அளிக்கப்படவில்லை. எனினும், அதன் பிரதமரான இயான் ஸ்மித் (Ian Smith) 1965-ல் ரொடீஷியா சுதந்தர நாடென்று அறிவித்து நிறவெறிக் கொள்கையைத் தீவிரமாகக் கடைப் பிடித்து வருகின்றனர். ஆப்பிரிக்கருக்கு வாக்குரிமை வழங்க வும் பெரும்பான்மை ஆட்சி வழங்கவும் மறுத்து வருகின்றனர். ரொடீஷிய அரசாங்கத்தின் நிறவெறிக் கொள்கையை ஐ.நா. கண்டனம் செய்ததுடன், அந்நாட்டிற்கு எதிராகப் பொருளா தாரத்தடைகளைப் பயன்படுத்துமாறு உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. இயான் ஸ்மித்தின் நிறவெறி ஆட்சிக்கு எதிராக ஸிம்பாப்வே ஆப்பிரிக்க மக்கள் கட்சியை (Zimbabwe African People's Party-ZAPU) அமைத்துத் தேசிய வாதிகள் கொரில்லாப் போர் நடத்தி வருகின்றனர். ரொடீஷி யாவில் நடைபெறும் இந்த ஆப்பிரிக்க விடுதலை இயக்கத்தில் ஸாம்பியா போன்ற அண்மையிலுள்ள ஆப்பிரிக்க நாடுகள் உதவிவருகின்றன.

### தென் ஆப்பிரிக்கா

ரொடீஷியாவைப் போலப் பெருமளவில் இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடு தென் ஆப்பிரிக்கா வாகும். பிரிட்டிஷ் பொதுநலக்குடியரசின் மற்ற உறுப்பு

நாடுகள் அதன் இனவெறிக் கொள்கையைக் கண்டித்து, அது பொதுநலக்குடியரசில் தொடர்ந்து இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது 1961-ல் அந்த அமைப்பிலிருந்து வெளியேறி விட்ட நாடு தென் ஆப்பிரிக்கா. அந்நாட்டு மக்களில் நான்கில் ஒரு பங்கினராக இருக்கும் வெள்ளையர் எல்லாவித அரசியல் சலுகைகளையும் அனுபவித்து வருகின்றனர். எட்டில் ஏழு பங்கு நிலம் அவர்களின் உடைமையாக இருக்கின்றது. அந் நாட்டில் வாழும் ஆப்பிரிக்க மக்களை, வெள்ளையரல்லாதவர் களை, தனியாக ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வாழுமாறு செய் திருக்கின்றனர். தங்களுடைய பண்பாட்டையும், சட்டங் களையும் ஆப்பிரிக்க மக்கள் இந்த ஒதுக்கப்பட்ட பகுதியில் தான் அனுபவிக்க முடியும். மொத்த நிலத்தில் எட்டில் ஒரு பங்கு நிலத்தை ஒதுக்குப் பகுதிகளாக ஆக்கி அவற்றில் ஆப் பிரிக்கர்கள் தங்களின் தனிப்பண்பாட்டுடன் தனியாக வளர்ச்சி பெறவேண்டுமென்று தென் ஆப்பிரிக்காவின் முன்னாள் பிரதமரான டாக்டர் வெர்வோர்டும் (Dr. Verwoerd), இந் நாள் பிரதமரான போத்தாவும் (Botha) பேசி வந்தனர். மற்றப் பகுதிகளில் வெள்ளையரல்லாதருக்கு அரசியல் உரிமைகளும் மற்றப் பொது உரிமைகளும் மறுக்கப்படுகின்றன ; வேறு படுத்தி இழிவாக நடத்தப்பட்டனர். எனவே, தென் ஆப்பிரிக் காவில் நிறவெறிகொண்ட அரசாங்கத்தை ஆப்பிரிக்கர் வெறுத்து அதனை ஒழிப்பதற்கான சூழ்ச்சிகளைச் செய்து வருகின்றனர். ஐ.நா.வும் தென் ஆப்பிரிக்காவின் கொள்கை யைக் கண்டித்ததுடன், பொருளாதாரத்துறையில் அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உறுப்பு நாடு களை வேண்டிக் கொண்டது. அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா முதலான நாடுகள் தென் ஆப்பிரிக்காவுடன் வாணிகம் செய்வதில்லை. ஆயினும் தனக்கு வேண்டிய படைக்கருவிகள், எண்ணெய் முதலான பொருள்களைத் தென் ஆப்பிரிக்கா வேறுசில ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெற்று ஐ.நா.வின் ஆணையைப் பொருட்படுத்தாமல் இருந்து வருகின்றது. மேலும், ஐ.நா.வின் கண்டனத்திற்குப் பிறகும் அது தென்மேற்கு ஆப்பிரிக்காவைத் தன்பிடியில் வைத்துக் கொண்டிருக்கிறது. பொருளாதாரத்திலும் படை பலத்திலும் மேலான நிலையிலுள்ள தென் ஆப்பிரிக்காவை மற்ற ஆப்பிரிக்க நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தாலும் வெல்வது கடினம்.

முடிவுரை

ஒருகாலத்தில் கருதியதைப்போல ஆப்பிரிக்கா இன்று 'இருண்ட கண்டமாக' இல்லையென்பதை மேலே கூறியவற்றிலிருந்து நன்கு உணரலாம். அது, பல சுதந்திர நாடுகளைத் தன்னகத்தே கொண்ட சக்திவாய்ந்த கண்டமாகத் திகழ்கின்றது. காலனி ஏகாதிபத்திய நாடுகள் ஆப்பிரிக்காவிலிருந்து வெற்றிகரமாக வெளியேறிவிட்டன. தென் ஆப்பிரிக்கா, ரொடீஷியா மற்றும் சில போர்ச்சுகீசியக் குடியேற்றங்களைத் தவிர ஆப்பிரிக்கா எங்கணும் தேசிய இயக்கம் வெற்றி நடைபோட்டுள்ளது. ஆயினும், மக்களாட்சிதான் இன்னும் ஆப்பிரிக்க மண்ணில் வேரூன்றவில்லை. மரபுகுல மனப்பாங்கும் (Tribalism), பிரதேச நோக்கும் (Provincialism) ஆப்பிரிக்க மண்ணிலிருந்து அகன்றபாடில்லை.

அனைத்து ஆப்பிரிக்க உணர்வு ஓரளவு வளர்ந்து வந்துள்ளது. ஆப்பிரிக்க ஐக்கிய நிறுவனம் 1962-ல் நிறுவப்பட்டு எத்தியோப்பியாவிலுள்ள அடிஸ் அபாபாவில் (Addis Ababa) இயங்கி வருகின்றது. ஆப்பிரிக்க நாடுகளிடையே ஒற்றுமையை வளர்க்கவும், உறுப்புநாடுகளின் இறைமைத் தன்மை கொண்ட சமத்துவ நிலையைக் காக்கவும் அது முயன்று வருகின்றது. பொதுவான பிரச்சினைகளை விவாதிப்பதற்கென ஆப்பிரிக்க நாடுகள் ஒன்றுகூடும் பொது மேடையாகப் பயன்படுகின்றது. உறுப்பு நாடுகளிடையே எழும் பூசல்களைத் தீர்த்துவைக்கும் நடுவராக விளங்குகின்றது.

பல்வேறு மூலவளங்களும், வாய்ப்புகளும் நிறைந்தது ஆப்பிரிக்கா. அதன் வளங்களை யெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தினால் அது உலகிலேயே வளமிக்க கண்டமாகத் திகழமுடியும். ஆப்பிரிக்காவைக் கும்பகர்ணனுக்கு (Sleeping Giant) ஒப்பிடலாம். அது இப்போதுதான் கண் விழித்துள்ளது. தனது ஆற்றல் முழுவதையும் அது வெளிப்படுத்தத் தொடங்கினால் மற்றக் கண்டங்களெல்லாம் மா அரக்கன் முன்னிற்கும் சித்திரக் குள்ளனைப்போல் காட்சி தந்தாலும் வியப்பில்லை.

## அத்தியாயம் 19

# ருஷ்யா—ஸ்டாலின் ஆட்சியும் அதன் பின்னரும்

## (Russia under Stalin and after)

*1917* முதல் *1922* வரை ருஷ்யாவிலும், பொதுவுடைமைக் கட்சியிலும் தனித்தலைவராக விளங்கிய லெனின் (Lenin) *1924*ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் நாள் மாரடைப்பால் காலமானார். அவரது பூத உடல் பதம் செய்யப்பட்டுக் கிரம்ளின் மாளிகைக்கு முன் வைக்கப்பட்டுள்ள கல்லறை, வெகு விரைவிலேயே புனித யாத்திரைத் தலமாக மாறியது. லெனினின் மரணத்திற்குப் பிறகு ஸ்டாலினுக்கும் டிராட்ஸ்கியிக்கும் (Trotsky) அதிகாரப் போட்டி எழுந்தது. இறுதியில் ஸ்டாலின் வெற்றி பெற்று ருஷ்யாவின் தனிப் பெருந் தலைவரானார். *1929* முதல் *1953* வரையில் அவரது இரும்புக் கரம் ருஷ்யாவை ஆட்சி செய்தது.

### (அ) ஸ்டாலின் ஆட்சியில் ருஷ்யா 1929-1953

ஸ்டாலின் *1879*-ல் ஜார்ஜியாவில் காலணி செய்யும் ஏழைத் தொழிலாளியின் மகனாய்ப் பிறந்தார். அவர் கிறிஸ்தவப் பள்ளியில் பயின்று அதன் பின்னர் சமயக் குருவுக்கான பயிற்சியும் பெறத் தொடங்கினார். ஆனால், அரசியல் நடவடிக்கைகள் காரணமாகச் சமயப் பயிற்சி நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அதன் பிறகு முழுநேரப் புரட்சித் தொண்டராக மாறிய ஸ்டாலின் அரசாங்கத்திற்கெதிரான இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார். பலமுறை சிறையிலடைக்கப்பட்டார். *1917*-க்கு முன் பத்தாண்டுகளில் ஏழு ஆண்டுகளை அவர் சிறையில் கழித்தார். விரைவிலேயே அவர் போல்ஷிவிக் கட்சியில் செல்வாக்கு மிகுந்த தலைவராகி, *1917*-ல் கட்சியின் பத்திரிகையான பிராவ்டாவின் (Pravda) ஆசிரியரானார். பொது உடமைக் கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்றியதும் ஸ்டாலின், தேசிய இனங்களின் துறையின் ஆணையாளரானார். அப் பதவியில் இருக்கும் போது ருஷ்யாவில் வாழ்ந்த வெளிநாட்டவரைப்பற்றி நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்குக்

கிடைத்தது. அதன் பிறகு ஸ்டாலின் தொழிலாளர் மற்றும் குடியானவர் ஆய்வகத்தின் ஆணையாளராகப் பதவியேற்றார். அப்போது அவர் அரசு பணித்துறையை உருவாக்கி, முக்கிய மான பதவிகளில் தமது ஆதரவாளர்களை நியமித்தார். 1922-ல் அவர் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளராகப் பொறுப் பேற்றார். அதன் பின்னர் அவரது செயலகம் ருஷ்யாவில் மிகுந்த செல்வாக்கும் சக்தியும் வாய்ந்த நிலையமாக விளங் கியது. ஸ்டாலின் எளிமையின் சின்னமாக விளங்கினார். அவரது செயல்களில் ஆரவாரமோ மேதைத்தன்மையோ இருந்தது எனக் கூறமுடியாது. அவரது சாதாரணத் திறமைக் கும் பின்னால் கடுமையான இரக்கமற்ற தன்மை எத்தகைய எதிர்ப்பையும் பொறுக்க முடியாதவராகச் செய்தது. தமது எதிரியான டிராட்ஸ்கியியை அரசியலிலிருந்து அடியோடு நீக்குவதில் அவர் வெற்றி பெற்றார்.

பணக்கார யூத விவசாயியின் மகனான ட்ராட்ஸ்கி சிறந்த சிந்தனையாளராகவும் போர்வீரராகவும் திகழ்ந்தவர். மென்ஷி விக்குகளுக்கும் (Menshiviks) போல்ஷிவிக்குகளுக்குமிடையே யான உள்நாட்டுப் போரின்போது அவர் போர்த்துறை அமைச் சராக இருந்தார். மென்ஷிவிக்குகளுக்கு அவர் ஆதரவு தந்த தால் பொதுவுடைமைக் கட்சியில் செல்வாக்கிழந்தார். மேலும், கொள்கை அடிப்படையில் அவர் ஸ்டாலினுடன் மோதினார். உலக நாடுகளில் பொதுவுடைமைப் புரட்சியை உருவாக்கு வதைக் காட்டிலும் உள்நாட்டில் ருஷ்யாவை வளமும் வலிவும் பெற்ற நாடாகச் செய்வதே முக்கியமாகும் என ஸ்டாலின் வாதாடினார். ஆனால், பொதுவுடைமைக் கருத்து உலகெங் கணும் பரவவேண்டுமென்று டிராட்ஸ்கி வலியுறுத்தினார். எவ்வாறெனினும் பொதுவுடைமைக் கட்சியின் கேந்திரமாக விளங்கிய ‘பொலிட்பிரோ’ (Politbureau) என்னும் செயற்குழு வில் ஸ்டாலினுக்குப் பெரும்பான்மை ஆதரவு இருந்தது. 1925-ல் டிராட்ஸ்கி போர் அமைச்சர் பதவியை விட்டு விலக வேண்டி வந்தது. 1926-ல் ஸ்டாலினின் மற்றோர் எதிரியான காமனேவ்வுடன் (Kamenov) டிராட்ஸ்கியும் பொலிட்பிரோ விலிருந்து வெளியேற்றப்பட்டார். 1926-ல் அவர் கட்சியி லிருந்தே விரட்டப்பட்டு மத்திய ஆசியாவிற்கு அனுப்பப் பட்டார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அமெரிக்காவிற்குத் தப்பியோடி நாடோடியாக வாழ்ந்திருந்த அவரை 1940-ல் மெக்சிகோவில் வெறியன் ஒருவன் கொன்றுவிட்டான். 1929-ல் டிராட்ஸ்கியை வெளியேற்றிய பின்னர் ஸ்டாலின் சோவியத்

ருஷ்யாவின் தனிப் பெருந்தலைவரானார். அவரது ஐம்பதாவது பிறந்தநாள் நாடு முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. பொது இடங்களிலெல்லாம் அவரது சிலைகளும் உருவப்படங்களும் வைக்கப்பட்டன.

**ஐந்தாண்டுத் திட்டங்கள்**

ருஷ்யாவைப் படைப்பலமிக்க வலிமையான நாடாக மாற்ற ஸ்டாலின் விருப்பினார். ஜெர்மனியோ வேறு ஐரோப்பிய நாடோ எளிதில் வெல்லமுடியாத வலிமை கொண்ட நாடாகச் செய்யப் பெருமுயற்சி செய்தார். இக்குறிக்கோளை அடைவ தற்கு ருஷ்ய விவசாயத்தையும் தொழிலையும் முழுக்கமுழுக்க நவீனமயமாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார். முதலில் வேளாண்மைப் பொருள்களைப் பெருக்கவும், மீதமாகும் விளைபொருள்களைத் தொழில்வளம் மிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, தேவையான தொழில் துறைக்கான இயந் திரங்களை அந் நாடுகளிலிருந்து பெற்று ருஷ்யாவின் தொழில் வளத்தைப் பெருக்கவும் முயன்றார். அதற்காக 25 மில்லியன் குடியானவர் பண்ணைகள் இருந்த இடத்தில் பல கூட்டுப் பண்ணைகளை (Collective farms) உருவாக்கினார். இருபது சிறிய பண்ணைகளை ஒன்று சேர்த்து ஒரு பெரிய பண்ணை உருவாக்கப்பட்டது. அதில் குடியானவர்களின் நில உரிமை பறிக்கப்பட்டது. நிலம் பொதுச் சொத்தானது. பண்ணை பொதுவாகப் பயிரிடப்பட்டது. வேளாண்மையில் இயந்திரங் கள் புகுந்தன. அது நவீனமயமாகியது. கூட்டுப் பண்ணை யில் வேலை செய்யும் நேரத்திற்கு ஏற்பக் கூலி வழங்கப் பட்டது. விளைபொருள்களைக் குறைந்த விலையில் அரசே வாங்கிக் கொண்டது. இத்தகைய கூட்டுப் பண்ணைகளை எளிய குடியானவர்கள் வரவேற்ற போதிலும் குலாக்குகள் (Kulaks) என அழைக்கப்பெற்ற பணக்கார நிலப்பிரபுக்கள் எதிர்த்தனர். ஆட்சியாளரை எதிர்த்துக் கலகஞ் செய்தவர்கள் கடுமையான அடக்குமுறைகளுக்கு ஆளாயினர். அவர்கள் கொல்லப்பட்டனர் அல்லது சைபீரியாவிற்கு அனுப்பப்பட்டு அங்கே சொல்லொணாத் துயருக்கு ஆளாயினர். 1939-ல் அநேகமாக நிலங்கள் முழுவதும் கூட்டுப் பண்ணை முறையின் கீழ்வந்தன. ஆனால், இத்தகைய கூட்டுப் பண்ணை முறை யினால் உடனடியாக நல்ல பயன் ஏற்படவில்லை. தொழில் ஆர்வமும் மதிநுட்பமும் மிகுந்த குடியானவர்கள் நகரங்களுக் குச் சென்றுவிட்டதால் வேளாண்மைத் துறையில் வீழ்ச்சி ஏற்பட்டது. குறைவான விளைச்சலும் பஞ்சங்களும் தொடக்க

காலத்தில் தொல்லை தந்தன. அதன் விளைவாக 10 மில்லியன் மக்கள் உயிரிழந்தனர். ஆனால், ஸ்டாலின் தமது கொள்கையைக் கைவிடாமல் கூட்டுப் பண்ணை முறையைச் செயல்படுத்தினார். படிப்படியாக விளைச்சல் பெருகியது. சோவியத் யூனியன் உணவுத் தானியங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தொழிலுக்கு வேண்டிய நவீன இயந்திரங்களைப் பெற முடிந்தது.

தொழில்துறை உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஸ்டாலின் பல ஐந்தாண்டு திட்டங்களைக் கொண்டு வந்தார். முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1928-ல் நடைமுறைக்கு வந்தது. நான்காண்டுகளிலேயே அதன் தொழில்முறை குறியளவுகள் எல்லாம் எட்டப்பட்டன. புதிய தொழிற்சாலைசளை எல்லாம் வேண்டுமென்றே மேற்கு எல்லைக்கு வெகு தூரத்தில் உள் நாட்டிலேயே அமைக்க ஸ்டாலின் ஏற்பாடு செய்தார். எடுத்துகாட்டாகப் புதிய இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் யூரல் மலைப் பகுதியில் (Urals) உருவாக்கப் பட்டன. இரண்டாவது திட்டமும் (1932-1937) தொழில் வளர்ச்சிக்கே சிறப்பிடம் அளித்தது. வெளி நாட்டுத் தொழில் நுட்ப உதவியையும், நிதி உதவியையும் நல்லமுறையில் பயன் படுத்தியதால் தொழில்துறை உற்பத்திப் பெருகியது. பொருள் களின் தரம் உயர்வாக இல்லையென்றாலும் உற்பத்திப் பொருள்களின் அளவு வெகுவாக உயர்ந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1937–41) இயந்திர சாதனங்கள் (Capital) உற்பத்திக்குப் பதிலாக அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் பொருள்கள் உற்பத்தயில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக, நாட்டின் வளம் கருதி தங்களது சொந்த நலன்களை விட்டுக் கொடுத்து வந்த ருஷ்ய மக்களுக்கு ஓரளவு ஆறுதல் கிடைத்தது. ஆனால், அந்த நிலை நீண்ட காலம் நீடிக்கவில்லை. 1939-ல் உலகப் போர் எழுந்தபோது, அதில் சோவியத் யூனியனும் பங்குக் கொள்ளவேண்டி வந்தது. அதனால் படைக்கலன் உற்பத்திக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ருஷ்யாவில் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு அரசின் திட்டக்குழுவிடம் விடப்பட்டது. ஒவ்வொரு திட்டத்தின் குறியளவுகளை அக் குழுவே நிர்ணயித்தது. தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி அளவுகள் தரப்பட்டன. அந்த அளவுகளை எட்டத் தவறினால் தொழிற்சாலை மேலாளர்களுக்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அதனால், சில சமயங்களில் அவர்கள் உற்பத்தி குறித்துத் தவறான

புள்ளி விவரங்களைத்தரமுற்பட்டனர். திட்டமுன்னுரிமைகள் மனம்போன போக்கில் இருந்தன. எடுத்துக்காட்டாக, எண்ணெய் உற்பத்திக்குப் பதிலாக நிலக்கரி உற்பத்தியே வலியுறுத்தப்பட்டது. சாலைகள் மற்றும் இரயில் பாதைகளைவிடக் கால்வாய்களுக்கே சிறப்பிடம் தரப்பட்டது. தொழிலாளர்களுக்கு வாழ்க்கைத்தரம் குறைந்துகொண்டே வந்ததால் அவர்கள் அவதியுற்றனர். ஆனால், இறுதியில் விவசாயநாடான ருஷ்யாவைத் தொழில்வளமிக்க நாடாக மாற்றும் ஸ்டாலினின் கனவு பலித்தது.

தமது பொருளாதாரப் புரட்சியை வெற்றிகரமாக முடிப்பதற்காக ஸ்டாலின், அதுவரையில் ருஷ்யா கண்டிராத அளவிற்கு வேண்டாதவரை ஒழித்துக்கட்டும் வேலையில் இறங்கினார். லெனின்கிராட் நகரத்தில் செல்வாக்கு மிகுந்த கட்சித் தலைவரான கிரோவ் (Kirow) கொலை செய்யப்பட்டார். 1936 முதல் 1938 வரையில் ஸ்டாலினுக்குப் பகைவர்கள் என்ற ஐயத்தின் பேரில் பல மூத்தப் பொதுவுடமைக் கட்சித தலைவர்கள் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை பெற்றனர். ஆயிரக்கணக்கான படை அதிகாரிகளும் இலட்சக்கணக்கான குடிமக்களும் கைது செய்யப்பட்டோ, நாடுகடத்தப் பெற்றோ அவுதியுற்றனர். ஒரு சிலர் கொல்லப் பட்டனர். இங்ஙனம் தமது பதவிக்குப் போட்டியாக வந்தவர்களையும், தமது கொள்கையின் பகைவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களையும் நீக்கும் பணியில் ஸ்டாலின் தீவிரமாக இறங்கினார்.

### வெளி நாட்டுக் கொள்கை

1933-க்கு முன்னால் ஜெர்மனியுடன் ருஷ்யா நட்புறவு கொண்டிருந்தது. ஆனால் ஹிட்லரின் தலைமையில் நாஸிக் கட்சினர் அதிகாரத்திற்கு வந்தபிறகு ருஷ்யாவின் உறவில் மாறுதல் தோன்றியது. பொதுவுடைமைக் கொள்கையைத் தீவிரமாக எதிர்த்ததுடன் கிழக்கில் ஜெர்மனியின் ஆதிக்க வளர்ச்சியை விரும்பினார் ஹிட்லர். ஹிட்லரின் ஜெர்மனியிடம் கோபமும், அச்சமும் கொண்ட ருஷ்யா பிரிட்டனுடனும் பிரான்சுடனும் நட்புக்கொள்ளத் தொடங்கியது. 1934-ல் சோவியத் யூனியன் பன்னாட்டுக் கழகத்தில் சேர்ந்தது. 1935-ல் ருஷ்யா பிரான்சுடன் பரஸ்பர உதவிவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. பிரான்சும் உதவிக்கு வருவதாக இருந்தால் செக்கோஸ்லோவாக்கியாவை (Chechozlovakia) அன்னியநாடு தாக்கும்போது அந் நாட்டிற்கு ருஷ்யாவும்

உதவி செய்வதாக உறுதியளித்தது. ஆனால், பிரிட்டனும் பிரான்சும் ஹிட்லரின் ஆதிக்க வெறியைத் தணிக்கும் கொள்கையைப் பின்பற்றியதைக் கண்டு ஸ்டாலின் அந் நாடுகளுடன் நட்புறவு கொள்வதில் பயனொன்றுமில்லை என நினைத்தார். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள், பெர்லின்-ரோம்-டோக்கியா அச்சினை (Berlin-Rome-Tokyo Axis)உருவாக்கியபோது மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் ருஷ்யா தாக்கப்படும் என ஸ்டாலின் அச்சங்கொண்டார். தாற்காலிகமாக நாஸி ஜெர்மன் படையெடுப்பிலிருந்து ருஷ்யாவைக் காத்துக் கொள்ள அவர் 1939-ல் ஹிட்லருடன் நட்புறவு ஒப்பந்தம் செய்துகொண்டார். இந்தச் சோவியத்-நாஸி ஒப்பந்தப்படி கிழக்குப் போலந்து, பின்லாந்து (Finland) எஸ்தோனியா (Estonia), லாட்வியா (Latvia), ஆகியவை ருஷ்யாவிற்கு அளிக்கப்பட்டன. மேற்குப்போலந்தும் லிதுவேனியாவும் (Lithuania) ஜெர்மனி வசம் வந்தன. இவ் வொப்பந்தத்தின் மூலம் தமது மேற்குப் படையெடுப்பில் ருஷ்யா தலையிடாது என ஹிட்லர் நம்பினார். ருஷ்யாவின் மீதான ஜெர்மன் தாக்குதலைத் தாமதப் படுத்துவது ஸ்டாலினின் நோக்கமாக இருந்தது. ஆனால் இந்த தாமதம் இரண்டு ஆண்டுகள் தான். இதற்குள் மேற்கு ஐரோப்பாவை ஹிட்லர் விழுங்கி விட்டார். 1941-ல் அவர் ருஷ்யா மீது பாய்ந் தார்.

**இரண்டாவது உலகப்போர்**

நெப்போலியனின் படையெடுப்பிற்குப் பின் எப்போதும் அடைந்திராத அளவுக்குத் துன்பங்களை ருஷ்யா 1941 முதல் 1945 வரையிலான ஐந்தாண்டுக் காலத்திற்கு அனுபவித்தது. இருப்பினும் நாஸி தாக்குதலை ருஷ்யா திடமாக எதிர்த்து நின்றது. பிரிட்டனும் அமெரிக்காவும் ருஷ்யாவிற்கு ஏராள மான உதவிகளைச் செயதபோதிலும் ருஷ்யாவின் இழப்பு பேரிழப்பாகும். அப் பயங்கரமான போரில் 15 மில்லியன் பொதுமக்களும் 10 மில்லியன் படையினரும் உயிரிழந் துள்ளனர். தொடக்கத்தில் ருஷ்யர்கள் பின்வாங்கிய போதிலும், பின்னால் அவர்கள் நாஸி படையினரைக் கடுமையாகத் தாக்கி ஸ்டாலின்கிராடிலும் (Stalingrad)வேறுபல இடங்களிலும் வியத்தகு வெற்றிகளைக் குவித்தனர். போரின் போது அநேகமாக எல்லா முடிவுகளையும் ஸ்டாலினே எடுத்து ருஷ்யரை நல்லமுறையில் வழிநடத்திச் சென்றார். ருஷ்யர் அனைவரும் அவர்பின் ஒன்று திரண்டு நின்று போரில் சோவியத் யூனியனுக்குச் சிறந்த வெற்றியைத் தேடித்தந்தனர்

எனினும், போரின் விளைவாக ருஷ்யர் சொல்லொணாத் துயரங்களுக்குள்ளாயினர். தொழிற்சாலைகளும் பண்ணைகளும் பாழாயின; இயந்திரங்கள் தூளாயின; சுரங்கங்கள் வெள்ளத்தில் மூழ்கின. தொழிலாளர்கள் சிதைந்து சோர்வுற்றிருந்தனர். ஆனால். போரின் அழிவிலிருந்து ருஷ்யாவைக் காக்கவும் போருக்கு முன்னால் இருந்த பொருளாதாரத்தை மீட்கவும் ஸ்டாலின் உறுதி பூண்டார். தேவைகளை குறைத்துக் கொள்ளுமாறும் மக்களை அவர் வேண்டிக் கொண்டார். நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்காகக் குறைந்த ஊதியத்தைக் கொள்ளுமாறும் நிறைய வேலை செய்யுமாறும் தொழிலாளத் தோழர்களைக் கேட்டுக் கொண்டார். அவரது அறைகூவலை ஏற்ற மக்கள் போரின் போது பாழ்பட்ட நகரங்களையும் கிராமங்களையும் புதுமைப் பொலிவு கொண்டவையாகச் செய்ய இராப்பகலாக உழைத்தனர். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாகச் சிறப்பான வெற்றி கிடைத்தது. ஆனால் தொழிலாளரின் ஊதியம் குறைவாகவே இருந்தது. சோவியத் நாட்டின் செல்வம் பெருகிக்கொண்டே வந்தது. ஆயினும், ஏழைகள் மேலும் ஏழைகளாகி வந்தனர். எவ்வாறெனினும, ஸ்டாலின் ஆதிக்கம் எல்லாம் வல்லதாக இருந்தது. அவர் தெய்வத் தன்மை கொண்டவர் போல் நடக்கலானார். நாடு முழுவதிலும் அவரது சிலைகள் நிறைந்தன. நகரங்கள் பல அவரது பெயரைத் தாங்கின. இருப்பினும் உண்மையான எதிரிகளையும் கற்பனை எதிரிகளையும் அவர் அழித்துவிட்டார். "சந்தேகப் பேயும் அடக்குமுறைப் பித்தும் பிடித்த பெருநோயாளி'' என ஸ்டாலினைக் குருஷேவ் (Khuruschev) வருணித்தார். மக்களாட்சி நாடுகளில் காணும் பேச்சுரிமை, கூட்டு உரிமை போன்ற உரிமைகளுக்குச் சோவியத் யூனியனில் இடமில்லை. அங்கே 1939 முதல் 1952 வரையிலான காலத்தில் பொதுவுடைமைக் கட்சியின் மாநாடும் கூட்டப்படவே இல்லை.

ஸ்டாலின் 1953-ல் காலமானார். செஞ்சதுக்கத்தில் உள்ள கல்லறையில் லெனின், சவத்திற்குப் பக்கத்தில் ஸ்டாலினின் உடலும் பதம் செய்யப்பட்டு வைக்கப்பட்டது. அவர் ஒரு வல்லாட்சியாளர் என்றாலும் ஒருவகையில் நாட்டு நலங் கருதும் வல்லரட்சியாளராகத் திகழ்ந்தார். "மாடு பூட்டிய ஏர் கொண்டு உழும் ருஷ்யாவைக் கண்ட அவர் அணு ஆயுதங்கள் நிறைந்த தொழில் மயமான புதிய ருஷயாவை உருவாக்கி சென்றார்'' என்று கூறப்படுகின்றது.

## (ஆ) குருஷேவின் ஆட்சியில் ருஷ்யா 1953-64 (The Khruschev Era)

ஸ்டாலின் காலமானதும் **மாலங்காவ்** (Malenkov) சோவியத் யூனியனின் பிரதமராகவும் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளராகவும் பதவியேற்றார். ஆயினும், ஒரு வாரம் கழித்து குருஷேவ் கட்சியின் செயலாளர்ப் பதவியைக் கைப்பற்றினார். இங்ஙனம் ருஷ்யாவின் இருபெரும் தலைவர்கள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டனர். மாலங்காவ் அரசாங்கத் தலைவரானார். குருஷேவ் கட்சித் தலைவராகப் பணியாற்றினார். ஆனால் முக்கியமான பதவிகளில் தமது ஆதரவாளர்களை அமர்த்துவதன் மூலமாகக் குருஷேவ் தமது செல்வாக்கை வளர்த்து வந்த நேரத்தில் மாலங்காவ் கட்சியில் செல்வாக்கை இழந்து நின்றார். 1955-ல் மாலங்காவ் பிரதமர் பதவியிலிருந்தும் விலகினார். குருஷேவின் ஆதரவாளரும் நண்பருமான **புல்கானின்** (Bulganin) என்பார் அப்பதவியை ஏற்றார். 1955 முதல் 1958 வரையில் புல்கானினும் குருஷேவும் இணைந்து ருஷ்யாவை ஆண்டு வந்தனர். எங்கு சென்றாலும் அவர்கள் ஒன்றாகவே சென்றனர். ஜெனீவா மாநாட்டிற்கு இருவரும் சேர்ந்து சென்றனர். யூகோஸ்லாவியா, இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும் இணைந்தே சென்று வந்தனர். ஆனால். கட்சியில் குருஷேவின் பலம் படிப்படியாகப் பெருகியது. அவரைக் குறை கூறிய, ஸ்டாலின் கொள்கையைக் கடைப்பிடித்தவர்கள் (Stlainists) கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர். 1958-ல் புல்கானின் பதவியிலிருந்து விலகியதும் குருஷேவே அரசாங்கத் தலைவராகவும் கட்சித் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

நிக்கிட்டா குருஷேவ் தெற்கு ருஷ்யாவில் 1894-ல் குடியானவர் குடும்பம் ஒன்றில் தோன்றினார். பத்து வயது வரை ஆட்டுமந்தைகள் மேய்ப்பவராக இருந்த குருஷேவ் அதன் பிறகு இரண்டு ஆண்டுகள் கல்வி பயின்றார். 1908-ல் அவரது குடும்பம் நிலக்கரிச் சுரங்கப் பகுதியில் குடியேறிய போது அவர் ஒரு சுரங்கத்தொழிலாளியானார். 1918-ல் பொது உடைமைக்கட்சியில் சேர்ந்து அதன்பிறகு மூன்றாண்டுகள் தொழில் நுட்பக்கல்லூரியில் பயின்றபின்னர் மீண்டும் யூக்ரேனில் (Ukraine) தீவிரத் தொண்டராகப் பணியாற்றலானார். கட்சியில் படிப்படியாக உயர்ந்து யூக்ரேன் பொது உடைமைக் கட்சியின் முதன்மைச் செயலரானார். அப்போது அவரது தலைமைப் பண்பும் செயல்திறனும் நன்கு வெளிப்

பட்டனர். 1949-ல் குருஷேவ் மாஸ்கோ சென்று அங்கே ஸ்டாலினின் ஆதரவைப் பெற்றார். அவரது எளிமையும் நயமான பண்பும், மகிழ்ச்சியான மனப்போக்கும், வெளிப் படையான பேச்சும் கட்சியில் பலரைக் கவர்ந்தன. இந்த நற்பண்புகளைக் கண்டு பலர் அவரது தலைமையை ஏற்கத் திரண்டுவந்தனர். பல சமயங்களில் ஆராயாமல் பேசுவதும், திடீரென்று செயல்களிலீடுபடுவதும் உண்டு என்றாலும் அவர் மிகவும் அழுத்தமானவராக இருந்தார். பொது அறிவு நிரம்பப் பெற்ற அவர் பல பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ந்துவைக்கும் பாங்குடையவராகத் திகழ்ந்தார். உறுதியான உள்ளம் படைத்தவர் எனினும், காலத்திற்கு ஏற்றாற் போல வளைந்து கொடுக்கும் பண்புடையவராகவும் விளங்கினார். கொள்கைச் சிறப்பைவிடத் திறமையே அவரது வெற்றிக்குக் காரணம் ஆகும்.

ஸ்டாலின் அடக்குமுறைக் கொள்கையை உள்ளூர வெறுத்த குருஷேவ், 1953 முதல் 1956 வரையில் ஸ்டாலினின் கொள்கையை மாற்றிப் பரிவிரக்கக் கொள்கையைப் பின் பற்றலானார். மக்களை கொடுமை செய்வதை நிறுத்தினார்; அறிவாளிகளுக்கு அதிக உரிமை வழங்கினார் ; சிறைவாசம் செய்தவர்கள் விடுதலைபெற்றனர். முதன்முறையாக நினைத்த இடங்களுக்குச் செல்லும் உரிமை பெற்றனர். பல ருஷ்யர்கள் வெளிநாடுகளுக்கு சென்று வந்தனர். பல வெளிநாட்டவர் ருஷ்யாவிற்கு வந்தனர். ஸ்டாலின் உருவாக்கிய 'இரும்புத் திரை' (Iron Curtain) விலகியதுபோலத் தெரிந்தது. அப்பாவி மக்கள் மீது அட்டூழியஞ் செய்துவந்த இரகசியக் காவல்படை கட்டுப்படுத்தப்பட்டது. அப்படையின் பொறுப்பேற்றிருந்த பேரியா (Beria) எனும் அமைச்சர் சுட்டுக் கொல்லப்பட்டார். மக்களைக் கொடுமைக் குள்ளாக்கிய பல 'கடும்வேலை முகாம்கள்' (Labour Camps) கலைக்கப்பட்டன. அன்றாடத் தேவைக்கான பொருள்கள் உற்பத்தி பெருக்கப்பட்டதுடன் குடியானவர்களுக்கு நிதி யுதவியும் அளிக்கப்பட்டது. ஸ்டாலினின் கொங்கோன்மை யான அடக்கு முறைகளை நேரடியாகக் கண்டித்த குருஷேவ் முன்னவரது போர்க்கொள்கையைக் குறைகூறினார். ஸ்டாலி னின் தெய்வமாக்கும் கொள்கையையும் கடுமையாகத் தாக்கினார். அரசாங்க அலுவலகங்களில் வைக்கப்பட்டிருந்த ஸ்டாலினின் உருவபடங்களையும் சிலைகளையும் நீக்குமாறு உத்தரவிட்டார். ஸ்டாலின்கிராட் நகரின் பெயரை வோல்கோ கிராட் (Volgograd) என மாற்றினார். ஸ்டாலினின் சவத்

தையும் கல்லறையில் விட்டுவைக்கவில்லை. மேற்கு நாடு களின் முதலாளிகளுடன் கூடிவாழும் கொள்கையைக் (Co-excistence) குருஷேவ் ஆதரித்தார். பொதுவுடைமைப் பொதுநலத்தைப் பலவழிகளில் அடையமுடியுமென அறிவித் தார். இங்ஙனம் அவர் ருஷ்யாவில் அடக்குமுறை பயங்கர ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து ருஷ்யர்கள் நறுமணமிக்க உரிமைக் காற்றைச் சுவைக்க வழிவகுத்தார்.

தொழில் மற்றும் வேளாண்மைத் துறையில் ஆட்சி உரிமையைப் பன்முகப் படுத்தும் கொள்கையைக் கடைப் பிடித்தார். 1957-ல் அவர் ருஷ்யாவை நூறு பகுதிகளாகப் பிரித்து, மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் தொழில் களைத் திட்டமிட்டு அமைக்கும் உரிமையை அவற்றிற்கு வழங்கினார். 1962-ல் அப்பகுதிகளைப் பாதியாகக் குறைத் தார். ருஷ்யர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நுகர்வோர் பொருள் உற்பத்தியை அதிகரிக்க ஊக்கமளித்தார். மேலும், இலேசு ரகத் தொழில்களுக்கு (Light Industries) அதிக நிதி ஒதுக்கினார். இவற்றின் விளைவாகத் தொழில் உற்பத்தி பெருகியது. நுகர்வோரின் தேவையை வைத்து உற்பத்தி திட்டமிடப்பட்டது. பொருளாதார அடிப்படையில் பயன் தராத தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டன.

குருஷேவ் ஒரு குடியானவர் என்பதால் வேளாண்மைத் துறையில் அவர் அதிகக் கவனம் செலுத்தினார். விளை பொருள் உற்பத்தியைத் திட்டமிடும் உரிமையை கூட்டுப் பண்ணைகளுக்கு வழங்கினார். நவீன இயந்திரங்களைக் கொண்டு வேளாண்மை செய்து விளைச்சலை அதிகரிப் பதற்காக அவர் பண்ணைகளின் அளவைப் பெரிதாக்கினார். பண்ணைகளில் அதிக இயந்திரங்களையும் இரசாயன உரங் களையும் பயன்படுத்த ஊக்கமளித்தார். அரசுக்கு அளித்த விளைபொருள்களுக்கு ஏற்றவிலையைக் குடியானவர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்தார். 1954–ல் தென் சைபீரியாவில் தரிசாகக் கிடந்த நிலங்களை விளை நிலங்களாக மாற்றினார். இந்த நடவடிக்கைகளின் விளைவாகத் தானியங் களும் மற்ற வோளாண்மைப் பொருள்களும் பெருகின. ஆனால், விரைவிலேயே பொருளியல் வகையில் குறைந்து செல்லும் போக்கு (diminishing returns) காரணமாக விளை பொருள்களின் உற்பத்தி குறைந்தது. 1963–ல் அமெரிக்கா விடமிருந்து தானியங்களை இறக்குமதி செய்யும் இடர்ப்பாடு ஏற்பட்டது.

நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் பெரும் சேவை புரிந்த குருஷேவிற்கு விரைவிலேயே கெட்டகாலம் தொடங்கியது. அவர் தமது செல்வாக்கை இழக்கலானார். *1961*-க்குப் பிறகு விலைவாசிகள் உயர்ந்து கொண்டேயிருந்தன. நுகர் பொருள்களின் உற்பத்தி குறைந்து விட்டது. எதிர்பாரத இயற்கைக் கோளாறுகள் காரணமாகவும் பெரும் கூட்டுப் பண்ணைகள் சரியாக இயங்காத காரணத்தாலும் வேளாண்மை விளை பொருள் உற்பத்தி மிகக் குறைந்தது. வெளிநாட்டு உறவிலும் குருஷேவின் கொள்கைகள் ருஷ்யாவிற்குப் புகழ்சேர்க்கத் தவறின. தொடக்கத்தில் அவர் அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டிருந்தார். ஆனால் அமெரிக்க யூ இரண்டு உளவு விமான விவகாரத்தில் (U2 affair) ருஷ்யாமீது வேவு பார்க்கும் குற்றம் அமெரிக்காமீது சாட்டப்பட்டதால் அந்த நிலை மாறியது. கியூபாவில் ருஷ்ய ஏவுகணைகளை அமைக்க முயன்று, அமெரிக்காவின் அச்சுறுத்தல் காரணமாகப் பின் வாங்கி, அந்த ஏவுகணைகளைத் திரும்பப் பெற்ற சம்பவம் குருஷேவின் செல்வாக்கைக் குறைத்தது. மாஸ்கோவில் சக அமைச்சர்களைக் கலக்காமல் எகிப்தின் நாஸருக்கு 100 மில்லியன் பவுன் கடனளிக்க முன்வந்த குருஷேவ் பல கட்சித் தலைவர்களின் கண்டனத்திற்குள்ளானார். அவர் தனிமனித வல்லாட்சியை வளர்த்து வந்த காரணத்தால் மக்கள் அவரை வெறுக்கத் தொடங்கினர். அவரது பகட்டாரவார வெல்திறம், தகவறியாத பேச்சுகள், ஐ. நாவில் காலணி கொண்டு மேஜையை அடித்தது போன்ற நன்னய மற்ற நடத்தை, மாசேதுங்குடனான (Mao-Tse-Tung) பகைமை ஆகியவை மக்களிடையே அவரது செல்வாக்கைப் பெரிதும் பாதித்தன. *1964* ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சற்றும் எதிர்பாராத வகையில், அவர் கடைப்பிடித்த கொள்கைகளுக்காகக் குற்றம் சாட்டப் பெற்று பதவியிலிருந்து தள்ளப்பட்டார். அவரது மறைவிற்குப் பிறகு கோஸிஜின் (Kosygin) பிரதமராகவும், பிரஷ்நேவ் (Brezhnev) கட்சிச் செயலராகவும் பதவியேற்றனர்.

## அத்தியாயம் 20

# ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதாம் ஆண்டுகளில் அமெரிக்கா

### முன்னுரை

பல்வேறு வகையான பிரச்சினைகள், தொல்லைகள், அவற்றால் ஏற்பட்ட மன உளைச்சல், அமைதியின்மை, ஒரு வகையான பதட்டநிலை ஆகியவை 1960ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டது போன்று அமெரிக்க வரலாற்றில் வேறு எந்தக் காலத்திலும் ஏற்பட்டிருக்கவில்லை எனக் கருதப்படுகின்றது. அதுவரை உலகம் கண்டிராத அளவில் அமெரிக்கா படை வலிமை பெற்றுத் திகழ்ந்தது. இருப்பினும் ஒருசிறு தென்கிழக் காசிய நாட்டின்மீது அத்தகு படைவலிமையைக் கொண்டு வெற்றிகாண இயலவில்லை. வேறு எந்த நாட்டிலும் காணப் படாத அளவில் அமெரிக்கா வரலாறு காணாத வகையில் பொருளாதார ஏற்றம் மிகுந்து காணப் பட்டிருந்தது. இருப்பினும் பொருளாதாரச் சிக்கல்கள் மலிந்து அமெரிக்கர் களின் உள்ளத்திலே ஒருவித அமைதியின்மையையும், பதட்ட நிலையினையும் உருவாக்கி விட்டது. செல்வவளம் கொழிக் கின்ற அமெரிக்காவிலும் ஏழ்மை தாண்டவமாடியது. அத்தகு நிலையும் அமெரிக்க வரலாற்றில் காண இயலாத ஒன்றாகும்.

பல இனத்தவர் இணைந்து வாழ்கின்ற அமெரிக்காவில் இன அடிப்படையில நீதிவழங்குதல் காணப்பட்டது. அத்தகு மாறுபட்ட இனங்களுக்குள் ஏற்பட்ட பொறாமையும் பூசலும், போட்டியும் அமெரிக்க அரசினையே அலைக் கழித்தன. மக்களிடையே ஏற்பட்ட மனக்கசப்பு, போராட்டங் களாக-இனப் போராட்டங்களாக-உருவெடுத்தன. அத்தகு இனப் போராட்டங்களின் காரணமாக ஒருசில அமெரிக்கப் பெருநகரங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கல்வி வளர்ச்சியின் காரணமாக, அதுவரை கண்டிராத அளவு அமெரிக்க இளைஞர்களுக்குக் கல்விவாய்ப்பு உருவாக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் பள்ளிகளும், கல்லூரிகளும் மாணவர்களின் அறிவுப்பாசறைகளாக விளங்குவதற்கு மாறாக, மாணவர் களிடையே பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் பாசறைகளாக மாறி மிகவும் சீர்கேடான நிலையில் இருந்தன.

(அ) கென்னடி நிர்வாகம்.

அந்தப் பத்தாண்டுகளில், அமெரிக்காவினை எதிர்நோக்கி இருந்த அளவற்ற பிரச்சினைகளை வெற்றிகண்டு, முறையான வளர்ச்சிக்கானநம்பிக்கையளிக்கின்ற திட்டங்களை, அமெரிக்க குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற ஜான்.F. கென்னடி என்பார் தமது பதவியேற்பு விழா அறிக்கையில் வெளி யிட்டார். அவருடைய அவ்வறிக்கை குழம்பிக்கிடந்த அமெரிக்க உள்ளங்களை ஒருவாறு தேற்றி அமைதிப்படுத் தியது. "இருள் சூழ்ந்துவிட்ட அமெரிக்காவினை வழிநடத்திச் செல்லப்பயன்படும் ஒளிவிளக்கு, இக்கால அமெரிக்கர் களிடையே கொடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கச் சமுதாயம் போர்க் களங்களில் பயிற்சி பெற்று. போர்க்காலத் தொல்லைகளை ஏற்றுத் திண்மையுடன் எதிர்த்து வெற்றி கண்டது. போரின் முடிவில் ஏற்பட்ட கொடுமையான அமைதி உடன்படிக்கையை மனக்கசப்புடன் ஏற்று, சமுதாயத்திற்கு ஏற்பட்ட துயர்களைத் துடைக்கும் மனப் பாங்கு கொண்டிருக்கின்ற தீரமிக்க சமுதாயம், தங்களது பரம்பரைப் பெருமையிலும் பண்பாட்டுச் சிறப்பிலும் நம்பிக்கையும் மதிப்பும் கொண்டிருப்பவர்கள், நாடு உறுதி அளித்துள்ள மனித உரிமைகள் மீறப்படுவதைக்கண்டு, அத்தகைய அத்துமீறிய நடவடிக்கைகள் தடுக்கப்பட்டேயாக வேண்டும் என்ற உறுதி கொண்டுள்ள அமெரிக்கர்கள்," என அமெரிக்க சமுதாயத்தைப் பீடித்திருக்கின்ற பிணிகளை எடுத்துக்காட்டி, அத்தகு பிணிகளை நீக்க அமெரிக்க மக்கள் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதனையும், அரசின் நட வடிக்கைகள் எத்தன்மைத்தாக இருக்கும் என்பதனையும் கென்னடி அவர்கள் சுட்டிக்காட்டினார். அமெரிக்க இளைஞர் களிடையே விழிப்புணர்ச்சியினையும், அரசியல் உணர் வினையும் தட்டியெழுப்பி, அமெரிக்காவின் அரசியல் வளர்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ளுமாறு தூண்டியது அமெரிக்கக் குடியரசுத்தலைவராகிய கென்னடி அவர்களே யாம். 1900 ஆம் ஆண்டிற்குப்பின்னர் அத்தகைய அரசியல் ஈடுபாட்டுணர்வு அமெரிக்க இளைஞர்களிடையே காணப்பட வில்லை என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். தேர்தலின்

போது, பொது வாக்கெடுப்பில் கென்னடி அவர்களுக்குக் கிடைத்திருந்தது சிறு அளவிலான பெரும்பான்மையே ஆகும். காங்கிரஸின் இரு சபைகளிலும் அவரது கட்சி அறுதிப்பெரும் பான்மை பெற்றிருந்தாலும் பழமை விரும்பிகளே மிகுந்து காணப்பட்டனர். அத்தகைய நிலையில் மிகவும் கவனத்தோடு பிரச்சினைகளுக்கு முடிவு காண வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது.

கென்னடி அவர்கள் ஆட்சித்தலைமைப் பொறுப்பில் இருந்தது, ஓர் ஆயிரம் நாள்களேயாகும். அந்த நாள்களிலும் உள் நாட்டு வளர்ச்சிக்காக அவர் உருவாக்கிய சட்டங்கள் குறைவாகவே இருந்தன. அவருடைய முயற்சியின் காரணமாக 1961ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியிருப்புச் சட்டம் (Housing Act of (1961) இயற்றப்பட்டது. முதியோருக்கான குடியிருப்புகளைக் கட்டிக்கொடுக்கவும் நகர்ப்புற வளர்ச்சிக்கெனவும் 5 6 பில்லியன் டாலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது கறுப்பர்களின் உரிமைப் பிரச்சினையை முடித்து வைக்க அமெரிக்க காங்கிரஸ் கென்னடியுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டது. இருப்பினும், வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் சட்டமன்றத்தின் சிறிதளவு ஆதரவையேனும் பெற்று, அமெரிக்க நீக்ரோக்களுக்கு உரிமை வழங்கும் முயற்சிகளை மேற்கொண்டார். பேருந்துகளிலும், தங்கும் விடுதிகளிலும், உணவகங்களிலும் கறுப்பர்களுக்கென தனியிடம் ஒதுக்குவதைமாற்றி, அவர்களுக்கும் சம உரிமை வழங்குவதை அமெரிக்கச் சட்டம் அனுமதியளித்திருந்தது. ருஷியாவுடன் ஏற்பட்டுவிட்ட விண்வெளிப்போட்டியின் காரணமாகக் கென்னடி அவர்கள் இன்னும் பத்தே ஆண்டுகளில் முதல் அமெரிக்கர் ஒருவர் நிலவில் காலடி எடுத்து வைக்கும் திட்டமொன்றினைத் தீட்டி, அதை விரைந்து செயல்படுத்த எண்ணி ஒன்பது பில்லியன் டாலர் நிதி ஒதுக்கீடு செய்யும்படி அமெரிக்க காங்கிரசை வற்புறுத்திப் பெற்றார்.

கென்னடி அவர்கள் தமது நிர்வாக அதிகாரத்தினைப் பயன்படுத்தித் தமது அமைதிப் பணிக்கான அணி(Peace Corps) ஒன்றனை உருவாக்கும் ஆணையினை 19o1 ஆம் ஆண்டில் வெளியிட்டார். வளர்ந்து வருகின்ற நாடுகளில் நல்லெண்ணத்தினைத் பெறுவதே அமைதிப் பணிக்கான அணியினை உருவாக்கியதன் நோக்கமாகும். சிறப்புப் பயிற்சி பெற்ற அமெரிக்க இளைஞர்கள் வளர்ந்து வரும் நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அந் நாடுகளில் கல்வி, பொதுச் சுகாதாரம்.

உழவுத் தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான புதிய திட்டங்களை உருவாக்கிக் கொடுத்து, அத் திட்டங்களை நிறைவேற்ற உதவி செய்வதே அமைதிப் பணிக்கான அணியினரின், கடமையாக அறிவிக்கப்பட்டது. அத்தகு பணிகளின் மூலமாக அமெரிக்க இளைஞர் சமுதாயத்துக்கு உலகநாடுகளில் காணப்படும் பிரச்சினைகளை உணர்ந்து மக்களையும் அறிந்துகொள்ளுகின்ற அரியவாய்ப்பு அளிக்கப் பட்டது.

அமெரிக்காவின் தெற்கு எல்லையில் அமைந்துவிட்ட அண்டைநாடுகளின் முன்னேற்றப் பணியில் அமெரிக்கா உதவவேண்டும் என்ற ஒப்பந்தம் எதுவும் உருவாக்கப் பட்டிருக்கவில்லை என்றாலும், தனது அண்டைநாடுகளுடன் சிக்கலற்ற எளிய நல்லுறவு கொண்டு அவற்றின் ஆக்கப் பணியில் பங்குபெற முடியும் என்ற நம்பிக்கை அமெரிக்கரிடையே காணப்பட்டிருந்தது. அத்தகைய நல்லெண்ணமும் நம்பிக்கையும் 1961ஆம் ஆண்டில் தகர்க்கப் பட்டது. அவ்வாண்டில் கியூபாவிற்கு எதிராக அமெரிக்கா படைப்யெடுப்பினை மேற்கொள்ளவேண்டிய நெருக்கடி நிலை ஏற்பட்டுவிட்டது. 'Bay of Pigs' என்ற கடற்பகுதியில் அமெரிக்கப்படையினர் இறங்கி போரினைத் தொடங்கினர். இருப்பினும் அம் முயற்சி பலிக்கவில்லை.

அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும்போர் ஏற்படு மானால் பயங்கர அழிவுகளும், கற்பனைக்கெட்டாத தொல்லைகளும் ஏற்பட்டுவிடக்கூடும் என்று அஞ்சிய கென்னடி அவர்கள், அத்தகையபோர் ஒன்று ஏற்படாமல் தடுக்க முன்நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன் விளைவே அவர் உலகநாடுகளிடையே அமைதி நிலை நாட்ட மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளாகும். பூமியின் மீதோ, விண்வெளியிலோ, அல்லது கடலுக்கடியிலோ அணு ஆயுதச் சோதனைகள் நடத்தப்படுவதைத் தடைசெய்யும் ஒப்பந்தம் ஒன்று 1963ஆம் ஆண்டில் கையெழுத்தானது. அமெரிக்கா, ருஷ்யா, இங்கிலாந்து ஆகிய அம் மூன்று வல்லரசுகளும் அவ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அவ் ஒப்பந்தம் கென்னடியின் அரசியல் திறமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டது. அவ்வொப்பந்தத்தினை எழுபது நாடுகள் ஏற்றுக்கொண்டு விட்டன. பிரான்சும், சீனாவும் மட்டும் ஏற்க மறுத்து விட்டன. அவ் ஒப்பந்தம் கெடுபிடிப்போரின்

தொடக்கத்தின் பின்னர், அமைதியை நிலைநாட்டும் பணியில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சியெனப் புகழப்படுகின்றது.

அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் வெள்ளை மாளிகைக் கும் (White House) ருஷ்ய அரசின் தலைமையகமான கிரெம்லின் மாளிகைக்கும (Kremilin) இடையே அவசரகால நேரடி தொலைபேசித் தொடர்பு (Hot Line) ஏற்படுத்தப்பட்டது. அதன்மூலம் நெருக்கடி காலங்களில் அவ்விரு பெரும் வல்லரசு களின் ஆட்சித்தலைவர்களும் உடனடியாகத் தொடர்பு கொண்டு, பேச்சுவார்த்தைகள் நடத்துவதன் மூலம் உலக நெருக்கடியை ஏற்படுத்தும் பிரச்சினைகளுக்கு உடனடி முடிவு காண வகையேற்பட்டுள்ளது. அந்நிகழ்ச்சி உலக அமைதியை நிலைநாட்டுவதில் அவ்விரு வல்லரசுகளின் ஆர்வத்தினை வலியுறுத்தும் நிகழ்ச்சியெனவும், அவற்றிற் கிடையே வளர்ந்துவருகின்ற ஒத்துழைப்பினையும் வலியுறுத்து வதாக அமைந்துவிட்டது எனவும் குறிப்பிடப்படுகின்றது. மேலும், மிகுந்துவிட்ட அமெரிக்கக் கோதுமையை ருஷ்யா விற்கு விற்கவும் கென்னடி அரசு முன்வந்தது. நிலவை அடையும் விண்வெளி ஆராய்ச்சியில் இருபெரும் வல்லரசு களும் இணைந்து செயலாற்றவேண்டும் என்ற கென்னடியின் வேண்டுகோளை ருஷ்ய அரசு ஏற்க மறுத்துவிட்டாலும், அவ்விரு நாடுகளுக்கிடையே உருவாகி வருகின்ற இணக்க நிலையும், அந் நிலையை உருவாக்க முனைந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடியின் ஆர்வமும் ஈண்டு குறிப் பிடத்தக்கதாகும்.

கியூபாவின்மீது அமெரிக்கா தொடுத்த போர் தோல்வியில் முடிந்தது· அத் தோல்விக்கு காரணமாக இருந்தவர் கியூபாவுன் ஆட்சித்தலைவர் காஸ்ட்ரோ (Castro) என்பவரா வார். கென்னடி அவர்களின் ஆட்சியின் ஆரம்பத்திலேயே அரைகுறையாகத் திட்டமிட்டு நடத்தி, தோல்வியுற்ற தன்மையினை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டிய அவலநிலை ஏற்பட்டுவிட்டது. வரலாறு உரைக்கும் பாடங்களை அமெரிக்கா சரிவர உணர்ந்துகொள்ளவில்லை என்பதனையே அந் நிகழ்ச்சி வலியுறுத்துகின்றது.

இருபெரும் வல்லரசுகளும் தங்களது அரசியல் வலிமை படைத்திறமை அரசதந்திர முயற்சி ஆகியவற்றைச் சோதனை கொள்ளும் முயற்சி தொடர்ந்தது. பெர்லின் பிரச்சினையில் கடும்மோதல் ஏற்படுகிற நிலை உருவானது. எதிர் அரசின்

செயல்தன்மையைச் சீர்தூக்கிப் பார்க்கும் வகையில், அமெரிக்கா பெர்லின் பிரச்சினையைக் குறித்து எச்சரிக்கை யொன்றனை ருஷ்ய அரசிற்கு அனுப்பியது. பெர்லின் பிரச்சினையை அமைதி வழியில் முடிவிற்குக் கொண்டுவர ருஷ்யா ஒத்துழைக்க வில்லையெனில் போர் அபாயம் உருவாக வேண்டியிருக்கும் என்பதே அந்த எச்சரிக்கையின் சுருக்கமாகும். ருஷ்ய ஆட்சித்தலைவரான குருசேவ் (Khrushchev) அவர்களை 1961ஆம் ஆண்டில் ஜுன் திங்களில் கென்னடி சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். அப் பேச்சு வார்த்தைகளின் போது குருசேவ் அவர்களின் மன உறுதியையும், அரசியல் திறமையினையும் நன்குணர்ந்தார். அப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஜுன் மாதத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பெர்லின் பிரச்சினையைக் குறித்த இறுதி எச்சரிக்கையொன்றனை குருஷ்சேவ் விடுத்தார். அவ்வெச்சரிக்கையில் அந்த ஆண்டின் முடிவிற்குள் பெர்லின் பிரச்சினைக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகள் முடிவு கண்டாக வேண்டும். இல்லை எனில் கிழக்கு ஜெர்மனி அரசு, தன்னிச்சையாகப் பெர்லின் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளும் என்பதே அவ்வெச் சரிக்கையின் சுருக்கமாகும். நேசநாடுகள் உடனடியாக முடிவெடுக்க முடியாத நிலையினை வலிமை குறைந்து இருப்பதாகவோ, திறமையற்று இருப்பதாகவோ கருதினால் அது மாபெரும் தவறாகும் எனக் கென்னடி அவர்கள் குருசேவின் எச்சரிக்கைக்குப் பதிலிறுத்தார்.

அத்தகு நெருக்கடி நிலை உருவான பின்னர் இரு பெரும் வல்லரசுகளும் தங்களது படைகளையும், படைக்கலன் களையும் பெருக்கிக் கொள்வதில் போட்டியிட்டன, படைச் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகமாக்கப்பட்டன. பெர்லின் நகர் இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருப்பதை நிலை நிறுத்தும் வகையில் பெர்லின் நகரின் குறுக்காக 40 கி. மீ. நீளத்திற்குக் 'காங்கிரீட்' சுவர் எழுப்பப்பட்டது. அச் சுவரின் ஒரு புறத்தில் முள் கம்பி வேலியும் அமைக்கப் பட்டது. குருசேவ் அவர்களின் அத்தகைய ஆணை பெர்லின் நகர்ப்பிரிவினையின் வலிவுள்ள சின்னமாக விளங்குகின்றது. அத்தகு தடைகளைக் கடந்து வருகின்ற நிகழ்ச்சியும், கடப்பதற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சி களும், கிழக்குஜெர்மன் மக்களில் சிலர் அதிக உரிமை களை அனுபவிக்கத் துடித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதனை வலியுறுத்துகின்றது.

கியூபாவில் ருஷ்யா தளங்களை அமைத்து ஏவுகணை களைக் குவிக்க முயன்றது. தனது நாட்டின் மிக அருகில் அந்நிய ஏவுகணைகள் குவிக்க நடக்கும் முயற்சிகளைக் கண்ட அமெரிக்கா, தடுப்பு நடவடிக்கையில் இறங்கியது. அந்நிகழ்ச்சி 'கியூபா நெருக்கடி' (Cuban Crisis) எனக் குறிப்பிடப்படுகிறது. அமெரிக்காவின் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக, ருஷ்யா கியூபாவில் ஏவுகணைத்தளங்களை அமைக்கும் முயற்சியைக் கைவிட்டது. அவ் வெற்றி கென்னடி அவர் களுக்கு அமெரிக்க மக்களிடையே புகழ் சேர்த்து அதே போலக் கென்னடி அவர்களின் இடையறாத முயற்சிகளின் விளைவாக **அணு ஆயுதச் சோதனைத் தடை உடன்பாடும்** (Test Ban Treaty) ஏற்பட்டது. அவ்விரு வெற்றிகளாலும் தமது பெருமை உயர்ந்திருப்பதை உணர்ந்த கென்னடி அவர்கள் தமது மறுதேர்தலுக்கான முயற்சிகளில் இறங்கினார். அவருடைய பதவிக்கான மறுதேர்தலைப் பற்றி 1963ஆம் ஆண்டிலேயே முயற்சிகள் மேற்கொள்ள எண்ணினார். அதன் விளைவாக அவ்வாண்டின் நவம்பர் மாதத்தில் டெக்சாஸ் (Texas) மாநிலத்திற்குச் சென்று, பிளவுபட்டுக் கிடந்த தமது மக்களாட்சிக் கட்சியின் ஒருமைப்பாட்டிற்கு ஆவன செய்யத் திட்டமிட்டார். அத்திட்டத்தின்படி நவம்பர் 2 ஆம் நாள் டெக்சாஸ் மாநிலத்திலுள்ள டல்லாஸ் (Dallas) நகர் சென்றடைந்தார். அங்கு மாபெரும் கார் ஊர்வலத்தில் செல்லும்போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### (ஆ) ஜான்சனின் நிர்வாகம்

கென்னடி கொலையுண்ட பின்னர் துணைத் தலைவராக இருந்த லிண்டன்.பி.ஜான்சன் (Lyndon B. Johnson) அமெரிக்கக் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றார். அவர் புதிய **சீரமைப்புத் திட்டம்** (New Deal) செயல்பட்டபோது முதன் முதலாக அரசியலில் ஈடுபடத் தொடங்கினார். அவருடைய முதல் பணியாகக் கென்னடியால் உருவாக்கப்பட்டுப் பின்னர் காங்கிரசினால் மறுக்கப்பட்ட அதே சட்டங்களை அதே காங்கிரசின் மூலம் நிறைவேற்றச் செய்தார். பதவியேற்ற ஒரு சில மாதங்களிலேயே அதாவது 1964 பிப்பிரவரியில் பதி னொன்றரை பில்லியன் டாலர் தொகைக்கு வரிகளைக் குறைத்து, வரிகுறைப்புச் சட்டமொன்றினை நிறைவேற்றி னார். அத்தகைய வரிகுறைப்புப் பொருளாதாரச் சீர்குலை வைத் தடுத்து, மேம்பாடு காண உதவும் என்பது அமெரிக்கர் களின் நீண்ட காலக் கனவாக இருந்தது. ஜூலை 2 ஆம் நாள்

சிவில் உரிமைச் சட்டத்தினை (Civil Rights Act) ஏற்று வெளி யிட்டார். அச்சட்டம் 'சமரச இணக்கம் ஏற்படுத்துவதில் அரசின் பெருந்தன்மையை உணர்த்துகின்றது' என்று 'தீவிர சம உரிமைக் கழகத்தின்' (Congress of Radical Equality-Core) தலைவரான ஜேம்ஸ் ஃபார்மர் (James Farmer) என்பவரால் வருணிக்கப்பட்டது. நீக்ரோக்களின் சம உரிமையை நிலை நாட்ட உருவாக்கப்பட்ட தீவிர இயக்கமே 'தீவிர சமஉரிமைக் கழகமாகும்.' அச்சட்டத்தின் மூலம் வெள்ளையர்—கறுப்பர் இனத்தினரிடையே சமரச இணக்கம் ஏற்பட ஏதுவாயிற்று. மேலும், அச்சட்டத்தின் மூலம் வாக்குரிமைகளைப் பாதுகாப் பதற்குக் கூட்டரசு மேலும் அதிக அதிகாரங்களைப் பெற்றது. பொது நிறுவனங்களிலும், பொதுவசதிகளிலும் காணப்பட்ட இனப்பிரிவினைக் கொள்கையைத் தடைசெய்யும், கல்வி நிறுவனங்களில் காணப்பட்ட இனப்பிரிவினைக் கொள்கை யைத் தடுக்கவும், வேலைவாய்ப்புக்களை அதிகமாக்கி, தொழில் கழகங்களை உருவாக்கவும் நீக்ரோக்களுக்கு அச் சட்டம் துணை நின்றது.

## 1964 ஆம் ஆண்டுத் தேர்தல்

சமுதாய நலச்சட்டங்களை உருவாக்குவதில் காங்கிரஸ் ஜான்சனுக்கு உறுதுணையாக இருந்தது. அத்தகைய சமுதாய நலச்சட்டங்களை முனைந்து செயல்படுத்துவதாகவும் நாட்டு மக்களுக்கு ஜான்சன் உறுதியளித்திருந்தார். அத்தகு நிலை 1964 ஆம் ஆண்டில் நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் ஜான்சனுக்கு வெற்றி வாய்ப்பினை ஏற்படுத்திவிட்டது. ஜான்சன் அவர்களின் புயல் வேகத் தேர்தல் பிரச்சாரமும் அவருக்கு மாபெரும் வெற்றியினைத் தேடித் தந்தது. அவரை எதிர்த்து போட்டியிட்ட கோல்டுவாட்டர் (Goldwater) என்ப வரைச் ஜான்சன் எளிதாகத் தோற்கடிக்க முடிந்தது. ஜான்ச னின் அத்தகு மாபெரும் வெற்றி, 1936 ஆம் ஆண்டில் ஃபிராங்க் ளின். டி. ரூஸ்வெல்ட் (Franklin D. Roosevelt) அவர்களின் வெற்றிக்கும் 1920 ஆம் ஆண்டில் வாரன் ஜி. ஹார்டிங் (Warren. G. Harding) என்பவரது வெற்றிக்கும் இணையானது என அமெரிக்க வரலாற்றாசிரியர்கள் புகழ்ந்துரைக்கின்றனர்.

1965 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 6ஆம் நாள் வாக்குரிமைச் சட்டம் (Voting Rights Act) இயற்றப்பட்டது செல்மா, அலபாமா (Selma, Alabama) போன்ற நகரங்களில் நீக்ரோக்கள் வாக்குரிமை வேண்டி பெருங்கலகங்களில்

இறங்கினர். அத்தகு கலகங்கள் அடக்கப்பட்ட பின்னர். நீக்ரோக்களும் சம வாக்குரிமை வழங்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையை குறித்து, எழுச்சி மிக்க சொற்பொழிவு ஒன்றினை அமெரிக்கக் காங்கிரசில் ஜான்சன் ஆற்றினார். அச்சொற்பொழிவின் விளைவாகவே 1965 ஆம் ஆண்டின் வாக்குரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. அதுகாறும் நீக்ரோக்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டு வந்த தெற்கு மாநிலங்களில் அச்சட்டத்தின் மூலம் நீக்ரோக்களின் வாக்குரிமை உறுதியாக்கப்பட்டது.

ஜான்சனின் ஆட்சிக் காலத்தில் கூட்டப்பட்ட காங்கிரசின் 89 ஆவது கூட்டத்தொடர் கீழ்க்கண்ட சமுதாய நலச் சீர் திருத்தங்களை ஏற்றுக் கொண்டது. அவைகளாவன (1) புதிய நுழைவுச் சட்டம் (New Immigration Law) ஏற்றுக் கொள்ளப்பட்டது. அமெரிக்காவில் குடியேற விழைவோர் எந்த நாட்டினைச் சேர்ந்தவர் என்பதனைக் கண்ட பின்னரே. பாகுபாடு செய்யப்பட்டு, உள்நுழைய அனுமதி வழங்கும் சட்டம் 1920-ல் உருவாக்கப்பட்டிருந்தது. அச்சட்டத்தினை மாற்றியமைக்கும் வகையில் புதிய நுழைவுச் சட்டம் உருவாக்கப்பட்டது. (2) பதினோருமாநிலங்களில் விரிந்து கிடக்கும் அபலேசிய மலைப்பகுதியினைச் (Appalachia Area) சீர்திருத்தவும் மீண்டும் பொருளாதார நிலையை முன்னேற்றவும் சிறப்பு நிதி உதவி அளிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. (3) நெடுஞ்சாலைகளை திருத்தியமைத்து, அழகுபடுத்துவதல் மூலம்காற்றுத் தூய்மைக் கேட்டினைக் குறைத்தல் மற்றும் தூய்மை கேடுற்ற நீர்வழிகளைச் சீர்திருத்தியமைக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டன. (4) குடியரசுத் தலைவர் ஏதாவது காரணங்களால் தமது கடமையை ஆற்ற இயலாமல் போனால், அவரது கடமைகளை நிறைவேற்ற வேறொருவர் நியமிக்கப்படும் வகையில் அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டு வருதல் (5) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற பிரச்சினைகள், போக்குவரத்து ஆகிய துறைகளைக் கவனிக்கப் புதிய அமைச்சுத் துறைகளை உருவாக்குதல்.

பொருளாதார சமுதாய நலத்துறைப் பணிகளில் ஜான்சனின் நிர்வாகம் சிறப்பாகப பணியாற்றி, தனக்கென உயரிய இடத்தினைப் பெற்று விட்டது. ஆனால். அவரது ஆட்சிக்காலத்தில் மக்கள் மனநிறைவினறி இருந்தனர் என்பதையும் குறிப்பிட்டாகவேண்டும். அத்தகைய மனக்

குறைக்கு இரண்டு முக்கியக் காரணங்களைக் குறிப்பிடலாம் முதலாவதாக, நீக்ரோக்களுக்கு இழைக்கப்பட்டு வருகின்ற அநீதியைத் தடுக்கும் வகையில் நாடு முனைந்து செயல்படவில்லை இரண்டாவதாக, அமெரிக்கர்களை அலைக்கழிக்கும் தன்மை வாய்ந்த வியட்நாம் போர். அவ்விரண்டு காரணங்களுமே 1960 ஆம் ஆண்டுகளில் அமெரிக்க மக்களிடையே காணப்பட்ட மனநிறைவற்ற தன்மைக்கு அடிப்படையாகும்.

**வியட்நாம் போர்**

தென்கிழக்காசிய நாடுகளில் பொதுவுடைமைக் கொள்கைகள் புரவவொட்டாமல் தடுக்கவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக அமெரிக்கா, வியட்நாமில் போரிட்டுக் கொண்டிருந்த பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவ முன் வந்தது. 1953ஆம் ஆண்டுவரையில் ஆண்டிற்கு ஒரு பில்லியன் பவுன்களை வியட்நாம் போருக்காக அமெரிக்கா செலவிட்டு வந்தது. அமெரிக்காவின் அத்தகைய உதவியும் வியட்நாமில் பிரெஞ்சுக்கார்ரரைச் காப்பாற்ற இயலவில்லை. மாபெரும் பிரெஞ்சுப் படைகள் லாவோஸ் எல்லைக்கருகில் இருந்த தியன்-பியன்-பூ (Dien-Bien-Phu) கோட்டையில், வியட்நாமியப் படைகளிடம் சரண் அடைந்தன. அந் நேரத்தில் பிரெஞ்சுக்காரர்களின் உதவிக்கு அமெரிக்கப் படைகளை அனுப்பும்படி குடியரசுத் தலைவர் ஐசனோவரின் (Eisenhower) ஆலோசகர்கள் வற்புறுத்தினர். ஆனால் கொரியப்போரினைப் போன்ற மற்றொரு போரினை அமெரிக்க மக்கள் தாங்கிக் கொள்ளமாட்டார்கள் என்ற எண்ணத்தில் அப்போரில் தலையிட மறுத்துவிட்டார்.

வியட்நாம் போரில் ஜெனிவா உடன்பாட்டின்படி தாற்காலிகமாக அமைதி ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின்படி வியட்நாம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவ்விரு நாடுகளின் எல்லையாக 17° குறுங்கோடு (17 th Parallel) அமைந்தது. அவ்விரு நாடுகளிலும் 1966ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடத்தி அதன் வழியாக மீண்டும் ஒற்றுமையாக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆனால் உடன்பாட்டில் குறிப்பிட்டபடி தேர்தல் எதுவும் நடத்தப்படவில்லை. ஜெனிவா உடன்பாட்டில் அமெரிக்கா கையொப்பமிடவில்லை எனினும், அதன் கூறுபாடுகளை அமெரிக்காவும் ஏற்றுக் கொண்டிருந்தது. தெற்கு வியட்நாமிலிருந்த பொதுவுடைமையினர் வியட்காங் (Vietcong) என்ற வன்முறையில் ஆழ்ந்த

நம்பிக்கை கொண்ட இராணுவத்தினைப் போன்ற ஓர் இயக்கத்தினைத் தோற்றுவித்து, தெற்கு-வியட் நாமிய அரசைத் தாக்க ஆரம்பித்தனர். அத் தாக்குதல்களைக் கண்ட ஐசனோவரின் தலைமையிலான அமெரிக்க அரசு தெற்கு வியட்நாமிய அரசுக்கு மேலும் அதிக உதவியளிக்க முன் வந்தது. கென்னடி குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்கும் வரையில் அத்தகு நிலைமை நீடித்தது.

வியட்நாம் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஐசனோ வரின் ஆட்சிக்கால முறையினையே தொடர்ந்து, அதிக உதவியளிக்க, கென்னடியின் அரசும் முடிவு செய்தது. தென் வியட்நாமிய அரசின் தலைவராக இருந்த நகோ-தின்-தயம் (Ngo-Dinh-Diem) என்பாருக்குக் கென்னடி அரசும் தொடர்ந்து உதவியளித்தது. அமெரிக்க அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் தெற்கு வியட்நாமியப் படைத் தலைவர்கள் புரட்சி செய்து நகோ-தின்-தயம் அவர்களைப் பதவி நீக்கம் செய்தனர். ஆனாலும் வியட்காங்கினருடன் நடத்திய போரில் நல்ல திருப்பங்கள் எதுவும் ஏற்படவில்லை. தென் வியட்நாமியருக்கு நாம் உதவியளிக்க முடியும்; ஆனால் போரில் வெற்றி பெறுவது அவர்களது கடமையாகும், எனக் கென்னடி அவர்கள் அறிவித்தார். கென்னடி அவர்கள் கொலையுண்டபோது வியட்நாமில் இருந்த அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை 17,000 வீரர்களாகும். லிண்டன் பி. ஜான்சன் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றவுடன் வடக்கு வியட்நாமின் இராணுவத் தளங்களைக் குண்டு வீசித் தாக்குமாறு தமது விமானப்படைக்குக் கட்டளை யிட்டார். பின்னர் தாம் அனுமதித்த விமானத் தாக்குதலுக்கு ஆதரவளிக்குமாறும், வியட்நாம் போரின் நடவடிக்கைகள் குறித்துக் குடியரசுத் தலைவர் முடிவெடுக்கும் சிறப்பதிகாரத் தினை அளிக்குமாறும், காங்கிரசினை வேண்டினார். தென்கிழக் காசிய நாடுகளில் பொதுவுடைமையினரின் வலுத்தாக்குதல் களை எதிர்த்து எடுக்கும் நடவடிக்கைகளுக்கான முழுப் பொறுப்பினையும் அமெரிக்க காங்கிரஸ் அவருக்களித்தது. அந்த அதிகாரம் 'தொங்கின் வளைகுடா தீர்மானம்' (Tonkin Gulf Resolution) என அழைக்கப்பட்டது. காங்கிரஸின் இரு அவைகளின் ஒருமித்த முடிவின்படி நீக்கப்படும் வரை அவ்வதிகாரம் செயல்படுத்தப்படும் என்றும் அமெரிக்கக் காங்கிரஸ் அனுமதியளித்தது. வியட்நாமியப் போரைத் தன்னிச்சைப்படி நடத்தும் தடையற்ற அதிகாரத்தினைக்

குடியரசுத் தலைவர் ஜான்சன் பெற்றுவிட்டாரெனப் பின்னர் ஒருசில செனட்டர்களும் காங்கிரஸின் உறுப்பினர்களும் வருத்தத்துடன் குறிப்பிட்டனர்.

வியட்நாமில், வியட்காங்கினர் மற்றும் வட வியட்நாமியர் பெறும் வெற்றி, தென் கிழக்காசிய நாடுகள் முழுவதிலும் பொதுவுடைமையினர் பெற்றுவிட்ட பொது வெற்றியாகும் என ஜான்சனும் அவரது ஆலோசகர்களும் கருதினர். வியட்நாமில் நடைபெறும் போர், வெறும் உள்நாட்டுப் போர் அன்றென்றும், சுதந்தரமான தென்வியட்நாம் நாட்டின் மீது அந்நிய நாட்டினரின் வலுத்தாக்குதலை எதிர்க்கும் தற்காப்புப் போரே எனவும், வியட்நாம் போருக்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. தற்காப்புப்போர் என அறிவிப்புச் செய்த பின்னர் அதுவே அமெரிக்கத் தலையீட்டிற்குக் காரணமாகவும் காட்டப்பட்டது. தன்னுடைய சுதந்தரத்தினைக் காப்பதற்கான தற்காப்புப் போரில் ஈடுபட்டுள்ள தென்வியட்நாமியரின் வெற்றி அமெரிக்க உதவியினால் தான் ஏற்படமுடியும் என விளக்கங்கள் கூறப்பட்டன.

1965 ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாளுக்குப் பின்னர் 'பிலெய்க்கு' ப் (Plaiku) பகுதியிலிருந்த அமெரிக்க நிலையங்களை வியட்காங்கினர் தாக்கியதை அடுத்து, வட வியட்நாமின் இராணுவத் தளங்கள். நிலையங்கள் மீது அமெரிக்க விமானப்படைகள் பயங்கரமாகத் தாக்கி, குண்டு மாரி பொழிந்தன. மார்ச்சு மாதத்தில் முதன் முதலாக 5000 வீரர்கள் கொண்ட அமெரிக்கப்படை வியட்நாம் போரில் பங்கெடுத்துக் கொண்டது. தென்வியட்நாமிய அரசின் வேண்டுதலின் பேரில் அப் படைகள் போரில் ஈடு படுத்தப்பட்டன.

இந் நிலையிலிருந்து எவ்வளவு அமெரிக்கப் படைகள் அனுப்பப்பட்டாலும், போதாது என்ற அளவில், வியட்நாமில் அமெரிக்கத் தலையீடு உயர்ந்து கொண்டே சென்றது. 1966 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நான்கு இலட்சம் அமெரிக்கப் படையினர் வியட்நாம் போரில் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர்.

வியட்நாமின் காடுகளிலும், வளம் கொழிக்கும் நெல் வயல்களிலும் கடுமையான, முடிவற்ற போர் தொடர்ந்தது.

ஜான்சனின் அமெரிக்க நிர்வாகம் எவ்வளவு படையினரைப் பலி கொடுத்தாலும், அல்லது எவ்வளவு பணத்தைச் செல விட்டாலும் அப் போரினை முடிவுக்குக் கொண்டு வர இயலாது என்ற நிலை உருவாகியது. கொரில்லாப் போர் முறைக்கு ஏற்ற நிலவியல் அமைப்பினைக் கொண்டிருந்த வியட்நாமில் அறிவியல்துறை ஆக்கித் தந்திருந்த பெரிய நவீனப் போர்க் கருவிகளைக் கொண்டிருந்த அமெரிக்கப் பெரும்படை வெற்றிகரமாகச் செயல்பட இயலவில்லை.

ஏராளமான அமெரிக்க இளைஞர்களைப் பலியிட்டு, பெரும் அளவு பணத்தையும் செலவிட்டு, வெகு நீண்ட காலமாகத் தொடர்ந்து போரிட்டு வருகின்ற தேவையற்ற, பயனற்ற வியட்நாமியப் போர் மக்களிடையே மனக் கசப்பையும், எதிர்ப்புணர்ச்சியினையும் தோற்றுவித்தது. அமைதிக் காலத்தில்கூடக் கட்டாய இராணுவப் பணியில் ஈடு படவேண்டியுள்ளதே என்பதைக் கண்ட அமெரிக்க இளைஞர்கள் மிகவும் கொதிப்படைந்திருந்தனர். படைப் பணியிலிருந்து நடுத்தர வகுப்பினைச் சார்ந்த இளைஞர் களுக்கு மட்டும் விலக்களிக்கப்பட்டு, அவர்கள் உயர் கல்வியைத் தொடர வாய்ப்பளிக்கப்படுகின்றது என, மற்றைய வகுப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் அமெரிக்க அரசினைக் குறைகூறி எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடங்கினர். அதுவும் இளமைப் பருவத்தின் மிகவும் இனிமையான காலமாகிய 19 - லிருந்து 26 வரையிலான காலத்தினைக் கட்டாயப் படைப்பணி, பழக்கமில்லாத நாட்டில், உயிரைக் காத்துக்கொள்ள எந்நேரமும் போராடு கின்ற பயங்கரமான போர்க்களத்தில், ஏக்கம் நிறைந்த கடுமையான வாழ்க்கையில் தள்ளிவிடுகின்றதே என்ற வெறுப்புணர்வு அமெரிக்க இளைஞர் சமுதாயத்தில் வளர்ந்து விட்டிருந்தது. போரின் தேவையினையோ, அவசியத் தினையோ ஏற்றுக் கொள்ளாத இளைஞர்களைக் கூட, படைப்பணியில் சேரும்படிக் கட்டாயப்படுத்துவது, அவ்வாறு சேர மறுத்தால், துரோகி எனச்சாடுவது என்ற நிலையினை அடியோடு வெறுத்தனர். அந்நிய நாட்டுப் போர்களை வெறுக்கின்ற அல்லது அப் போர்களில் தலையீடாமல் ஒதுங்கி நிற்கின்ற தன்மை அமெரிக்கர்களுக்குப் புதிதன்று. 1812, 1848, 1898, 1917 ஆகிய ஆண்டுகளின் அமெரிக்க வரலாறு அத்தகு நிலையினை வலியுறுத்தும். அந் நிலை அமெரிக்க அரசினைத் திகைக்க வைத்தது. அமெரிக்காவின் வியட்நாமியப் போர் இளைஞர்களின் எதிர்ப்புகளுக்கிடையே

தொடர்ந்தது. செலவுகள் ஆண்டிற்கு 26 பில்லியன் பவுன் களாக உயர்ந்தது. அது உள்நாட்டில் அமெரிக்க அரசு செலவிடும் மொத்த அளவினையும் விடக் கூடுதலாகக் காணப்பட்டது. அவ்வளவு அதிகப்போர்ச் செலவுடன், உள்நாட்டு திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு தேவையான அள விற்குச் செய்வதென்பது அமெரிக்க அரசுக்கே கூடக் கடினமான செயலாகத் தோன்றியது. அமெரிக்காவில் 'மாபெரும் சமுதாயம்' அமைக்கும் ஜான்சனின் திட்டம் போர்க்காலச் செலவுகளினால் தடைபட்டது.

1968 ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தல் நெருங்கியது. அமெரிக்காவில் ஜான்சனுக்கு எதிர்ப்பு வலுவடைந்தது. எனவே, ஜான்சனுக்கு மறுதேர்தலில் நிற்கும் உரிமையை அவரது கட்சியே மறுக்க வேண்டும் என்று எண்ணிய யுஜின் மெக்கார்தி (Eugene Magarthy) என்ற மினசோட்டா மாநிலத்தைச் சேர்ந்த செனட்டர் அரும் முயற்சியில் ஈடுபட்டார். நூற்றுக்கணக்கான கல்லூரி மாணவர்களின் துணையோடு நியு ஹாம்ஷையர் மாநிலத்தில் மெக்கார்தி அவர்கள் ஜான்சன் எதிர்ப்புப் பிரச்சாரத்தை வெற்றிகரமாக நடத்தினார். அவருடைய வெற்றியைக் கண்ட இராபர்ட் கென்னடி (மறைந்துவிட்ட குடியரசுத் தலைவர் கென்னடியின் சகோதரர்) குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட இணக்கம் தெரிவித்தார். அது வரையில் இராபர்ட் கென்னடி தேர்தலில் போட்டியிட மறுத்து வந்தார் என்பதும் குறிப்பிடத் தகுந்ததாகும். எதிர்ப்பினைக் கண்ட குடியரசுத் தலைவர் ஜான்சன் போட்டியினின்றும் விலகினார். ஆனால் லாஸ் ஆஞ்சல்ஸ் (Los Angels) நகரில் இராபர்ட் கென்னடி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் நீக்ரோக் களின் உரிமைகளுக்காகப் 'பாடுபட்ட மார்டின் லூதுர் கிங்' (Martin Luther King) என்பார் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். அக் கொலையினைப் பற்றியும், வன்முறை நிகழ்ச்சிகள் மீண்டும் ஆரம்பமாகிவிட்டதற்கான காரணங்களைப் பற்றியும் ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் வகையில் தேசிய விசாரணைக் குழு ஒன்றினைக் குடியரசுத் தலைவர் ஜான்சன் நியமித்திருந்தார். இராபர்ட் கென்னடியின் மரணத்தின் பின்னர் மக்களாட்சிக் கட்சியின் வேட்பாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது.

**1968 ஆம் ஆண்டு நடந்த தேர்தல்**

அமெரிக்காவில் புதிய முறைகள் தோன்றியிருப்பதையும் புதிய பிரச்சினைகள் உருவாகிவிட்டதையும் 1968 ஆம் ஆண்டில் நடந்த குடியயசுத் தலைவர் தேர்தல் அறிவித்தது. நாட்டில் வலது, இடதுசாரிகள் தோன்றிவிட்டன. அதனால் ஆளுங்கட்சி அல்லல்பட்டது குடியரசுக் கட்சியினர் குடியரசுத் தலைவருக்கான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் கட்சி மாநாட்டினை மியாமி (Miami) நகரில் ஆகஸ்டு மாதத்தில் கூட்டினர். கலிபோர்னியா மாநிலத்தின் ஆளுநரான **ரொனால்டு ரீகன்** (Ronald Reagan) என்பாரையும், நியூயார்க் மாநிலத்தின் ஆளுநரான **நெல்சன் ரா:.பெல்லரையும்** (Nelson Rockfeller) **ரிச்சர்டு நிக்சன்** (Richard Nixon) என்பார் வென்று குடியரசுத் தலைவர் பதவியின் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் மாரிலாந்து மாநிலத்தைச் சேர்ந்த **ஸ்பிரோ அக்னியு** (SProw Agnew) என்பாரைத் துணைத்தலைவர் பதவிக்கான வேட்பாளராக நியமித்தார்.

இரு வாரங்களுக்குப் பின்னர் தீவிரவாதிகளான இளைஞர் களுக்கும், காவல் துறையினருக்குமிடையே ஏற்பட்ட கடுமையான கைகலப்புக்கிடையே சிக்காகோ நகரில் நடந்த மக்களாட்சிக் கட்சியின் மாநாட்டில் மினசோட்டா மாநிலத்தைச் சேர்ந்த **ஹியுபர்ட் ஹம்ப்ரே** (Hubert Humphrey) என்பார் குடியரசுத் தலைவர் தேர்தலின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மக்களாட்சிக் கட்சியின் வேட்பாளருக்கெதிராகக் காணப்பட்ட மக்களின் கசப்புணர்வினைத் தமக்குச் சாதக மாக்கிக் கொண்டு, நிக்சன் தமது பிரச்சாரத்தினை நடத்தினார். வியட்நாம் போரில் பெருமையுடன் அமைதி காண்பதே தமது நோக்கமென்றும், அதை எவ்வாறு அடைவதென்பதை விளக்குதல் தவறு என்பதால் விளக்க விரும்பவில்லை என்றும் உறுதியளித்தார். நாட்டில் மீண்டும் தலைதூக்கி விட்ட வன்முறையினையும், குற்றங்களையும் அடக்கி அமைதி நிலவச் செய்வதும் தமது முதன்மையான பணியென் பதனையும் அறிவுறுத்தினார்.

ஜான்சன் நிர்வாகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண் டிருந்த காரணத்தினால் ஹம்ப்ரே அவர்கள் அவ்வளவு

எளிதாகப் பிரச்சாரம் செய்ய இயலவில்லை. இருப்பினும் வியட்நாம் பிரச்சினைக்கு முடிவு தேடுவதையும், அமெரிக்கச் சமுதாய வளர்ச்சிக்கு மேலும் பல புதிய திட்டங்களைத் தீட்டு வதையும் தமது நோக்கமென அறிவித்தார். பிரச்சாரத்தின் போது நிக்சனை விடச்சற்று அதிகமான ஆதரவினைப் பெற்றிருந்த ஹம்ப்ரே அவர்கள் பொதுவாக்கெடுப்பில், மிகவும் குறைவான வாக்கு வித்தியாசத்தில் தோற்றுப் போனார். ஆனால், குடியரசுத் தலைவர் தேர்தல் கழகத்தில் மிக அதிக மான வாக்கு வித்தியாசத்தில் தோற்றார்.

## (இ) நிக்சனின் நிர்வாகம் (1968-1972)

'அமைதியை உருவாக்குபவர் என்பதே வரலாறு ஒருவருக்கு அளிக்கும் மிக உயர்ந்த விருது ஆகும்' என நிக்சன் தமது பதவியேற்பு உரையில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார். அவ்வாறு உரைக்கும் போது தமக்குள்ள இருபெரும் கடமை களை நினைத்தே அவ்வாறு குறிப்பிட்டார் எனக் கருத இட முண்டு. ஏனெனில், வியட்நாம் போரில் மதிப்பை இழக்காமல் அமைதியை ஏற்படுத்துவதும், உள்நாட்டில் தோன்றிவிட்ட வன்முறைகள், குற்றங்கள், கலகங்கள் ஆகியவற்றை நசுக்கி, அமைதியேற்படுத்துவதும் அவரை எதிர்நோக்கி நின்ற இரு பெரும் பணிகளாகும்.

பண வீக்கத்தாலும், உயர்வரிகளினாலும் உள்நாட்டில் மக்கள் அல்லல்பட்டுக் கிடந்தனர். அதனால் மக்களிடையே பதட்ட நிலையும், தெளிவற்ற தன்மையும் காணப்பட்டன. 'பொறுமையுடன் காத்திருக்கும் பெரும்பான்மையினர்' (Silent Majority) என நிக்சன் அவர்களால் பெருமையுடன் குறிப்பிடப் பட்டவர்களுக்கிடையே தோன்றிவிட்ட மனக்கசப்பினை அகற்றுவதைத் தமது தலையாய பணியெனக் கொண்டார். வெள்ளையர்—கறுப்பர்களுக்கிடையே நீடித்து விட்ட இனத் தின்பாற்பட்ட அநீதிகளை அகற்றும் பொறுப்பும் அவரிடம் விடப்பட்டது. மக்களிடையே வறுமையும், பட்டினியும் மிகுந்து காணப்பட்டது. மனிதனின் தேவையற்ற அழிவுச் செயல்களால் சுற்றுப்புறத் தூய்மையும், வன விலங்குகள் மற்றும் உயிரினங்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்து காணப்பட்டன. அத்தகு பிரச்சினைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் காணப்பட்டது வியட்நாம் பிரச்சினையே யாகும். அப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் வேறு

எந்த முக்கியப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண இயலாது என்ற நிலை உருவாகியிருந்தது.

**அயலுறவுக் கொள்கை**

வியட்நாம் போரை முடித்து விடுவது என்ற வாக்குறுதியின் அடிப்படையில் 1968ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றிபெற்ற நிக்சன், அப்பணியில் மிகவும் எச்சரிக்கையுடன் மெதுவாகச் செயல்பட ஆரம்பித்தார். அதனால், பத்திரிகைகள், மக்கள், அமெரிக்கக் காங்கிரஸ் ஆகிய அனைத்தும் நிக்சனைக் குறை கூற ஆரம்பித்தன. இருப்பினும் தாம் எடுத்துக் கொண்ட செயலினை வெற்றியுடன் முடிக்கும் திண்மை கொண்ட நிக்சன், ஒரு சில சிறப்பான ஆலோசனைகளைக் கூறினார். வியட்நாமியப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பாரீஸ் மாநாட்டு அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு ஒருசில அறிவுரைகளை வழங்கி, செயல்படுத்துமாறு ஆணை யிட்டார். படிப்படியாக வடவியட்நாமிய, அமெரிக்கப் படை யினரை தென்வியட்நாமிலிருந்து ஓராண்டுக் காலத்திற்குள் விலக்கிக்கொள்வது என்றும், படைகள் விலக்கிக் கொள்ளப் பட்டபின்னர், பன்னாடுகளின் மேற்பார்வையில் பொதுத் தேர்தல் நடத்துவது என்பதுமே நிக்சன் வெளியிட்ட திட்டங் களாகும். ஆனால், அமெரிக்கப்படைகள் முழுவதும் வியட் நாமிலிருந்து வெளியேற வேண்டுமென்றும், அதன் பின்னரே வியட்நாமிய இணைப்பு பற்றிய அரசியல் பேச்சு வார்த்தைகள் நடத்த ஏதுவாகும் என்றும் கூறிய வடவியட்நாமியர் நிக்சனின் கொள்கையை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர். வியட நாமிலிருக்கும் அமெரிக்கத் தரைப்படையை விலக்கிக்கொண்டு தென்வியட்நாமியரின் உதவிக்கு அமெரிக்க விமான, கடற் படைகளை விட்டுவைப்பது என்ற தமது திட்டங்களை விளக்கி, உள்நாட்டில் தமது திட்டங்களுக்கு ஆதரவினைத் தேட முற்பட்டார். அம்முறை 'வியட்நாமிய மயமாக்குதல்' (Vietnamization) எனப்படுகின்றது.

● வடவியட்நாமியரை அச்சுறுத்தி, பணியவைத்து, போரை முடித்துக்கொள்ளும் எண்ணத்தில் 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கம்போடியா மீதும், 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் லாவோஸ் மீதும் அமெரிக்கத் தென்வியட்நாமியப் படைகள் தாக்கி, போரைத் தொடங்கின. அவ்வாறு வியட் நாமியப் போர் விரிவாக்கப்பட்டுவிட்டதை எதிர்த்துக் கலகங் கள் ●அமெரிக்கா எங்கிலும் தோன்றின. ● அக் கலகங்களில்

ஈடுபட்ட மாணவர்களில் சிலர் கொல்லப்பட்டனர். அந் நிகழ்ச்சிகள் அமெரிக்க மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஒகியோ மாநிலத்திலிருந்த கென்ட் மாநிலப் பல்கலைக்கழகத் திலும், மிசிசிபியிலிருந்த ஜாக்சன் மாநிலப் பல்கலைக்கழகத் திலும் நடந்த மாணவர்களின் பெருங்கலகத்தின் போது தேசிய காவல்படையினர் சுட்டனர். அத்தகைய துப்பாக்கிச் சூட்டில் ஒருசில மாணவர்கள் உயிரிழந்தனர். அமெரிக்க மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய பல நிகழ்ச்சிகளில் அவையிரண்டும் முதலிடத்தினைப் பெறுகின்றன.

போர் விரும்பிகள், போரை எதிர்ப்போர் என்ற இரு பிரிவினரிடையே காணப்பட்ட வேறுபாடுகள் குடியரசுத் தலை வரின் செயல்களால் மேலும் அதிகமாயின. மேலும் காங்கிரஸ் பொதுமக்கள் ஆகியோரின் வற்புறுத்தல்களை ஏற்றுக் கொண்ட அரசு, கட்டாயப் படைப்பணிக்கு இளைஞர்களைச் சேர்க்கும் விதத்தில் புதிய நேர்மையான வழியினைப் பின்பற்ற ஆரம்பித்தது. இளைஞர்களின் பிறந்த தேதியின் அடிபபடை யில் கட்டாயப் படைப்பணிக்கு எவ்வித வேறுபாடுகளுமின்றி இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பொதுவுடைமைச் சீனாவுடன் அமெரிக்கா கொண்டிருந்த உறவினை முற்றிலும் மாற்றியமைக்கப் பாடுபட்டார் நிக்சன். அமெரிக்க-சீன நட்புறவு ஏற்பட வழிவகை செய்யப்பட்டது. 1971 ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் அமெரிக்க மேஜைப் பந்தாட்டக்காரர்கள் சீனாவிற்குச் சென்று, அங்கு நடந்த போட்டிகளில் கலந்துகொண்டு சீன அணியினருடன் விளை யாடினர். அமெரிக்கக் காங்கிரஸின் உறுப்பினர்களும், பத்திரிக்கையாளர்களும் சீனாவில் வரவேற்கப்பட்டனர். இருபத்திரண்டு ஆண்டுகளாக அவ்விரு நாடுகளுக்குமிடையே இருந்த வர்த்தகத்தடை நீக்கப்பட்டது. அதற்கடுத்த ஆண்டில் அமெரிக்க குடியரசுத் தலைவர் நிக்சன் சீனப் பயணத்தை மேற்கொள்ளுவார் என்ற, வெள்ளை மாளிகையிலிருந்து வெளி வந்த அறிக்கை உலக நாடுகளைத் திகைக்க வைத்தது. அக்டோபர்த் திங்களில் அமெரிக்காவின் ஆதரவுடன் சீனா ஐக்கிய நாடுகளின் அவையின் உறுப்பினராக ஏற்றுக் கொள் ளப்பட்டு அனுமதிக்கப்பட்டது. தேசிய சீனாவின் ஐக்கிய நாடுகளின் அவை உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர். 1972 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் நிக்சன் தமது சீனப்பயணத்தினை மேற்கொண்டார். அவரது பயண ஏற்பாடுகளைத் தேசியப் பாதுகாப்பு குழுவின்

தலைவரான டாக்டர் ஹென்றி கிஸிஞ்சர் இரகசியமாகச் செய் திருந்தார். சீனத் தலைவர்களான மா-சே-துங், சு-என்-லாய் ஆகியோருடன் நிக்சன் நேரடிப்பேச்சுவார்த்தைகளை நடத்தி, நாடு திரும்பினார்.

நிக்சனின் சீனப் பயணத்தின் பின்னர் வடவியட்நாமியப் படைகள் தென்வியட்நாமின், வடமாநிலங்களில் நுழைந்து பயங்கரத் தாக்குதல்களைத் தொடங்கின. வியட்நாமியப் போர் எப்போதும் இல்லாத அளவிற்குக் கடுமையாக நடை பெற்றது. உள்நாட்டில் ஏற்படும் எதிர்ப்புகளைப் பற்றி அவ் வளவாகக் கவலைப்படாத நிக்சன் ஹைபாங் துறைமுகத்திலும் (Haipong Harbour) ஏனைய துறைமுகங்களிலும் நீருக்கடியில் வெடி குண்டுகளை வைத்து, அத்துறைமுகங்களில் கப்பல்கள் நுழையாவண்ணம் தடை செய்தார். அதே நேரத்தில் வட வியட்நாம் நகரங்களைத் தாக்குமாறு தமது மாபெரும் விமானப் படையினை ஏவினார். சீனாவும் ருஷியாவும் கூக்குர லிட்டன. ஆனால் போரில் கலந்துகொள்ளவில்லை.

நிக்சன் ருஷ்யப் பயணத்தையும் மேற்கொண்டு மாஸ்கோ சென்றார். ருஷியாவிற்கு உணவுத்தானியங்கள் அனுப்புவதற்கு இருந்த தடையினை நீக்கி, அமெரிக்கா கோதுமையை ருஷ்யா விற்கு ஏற்றுமதி செய்ய அனுமதியளித்தார். அதே போல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சீனா போன்ற நாடுகளின் மீது விதிக்கப்பட்டிருந்த வர்த்தகத் தடைகளும் ஏற்கனவே விலக்கிக் கொள்ளப்பட்டிருந்தன. அமெரிக்க-ருஷ்ய அரசு களுக்கிடையே ஏற்பட்ட உடன்பாட்டில் விண்வெளி ஆராய்ச்சி, அறிவியல், மருத்துவம், மற்றும் சுற்றுப்புறத் தூய்மைக்கேடு ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகளில் அவ்விரு நாடுகளும் ஒத்துழைக்க வழி வகை செய்யப்பட்டிருந்தது.

சீனாவுடன் நட்புறவினை மீண்டும் ஏற்படுத்திக் கொண்டது. ருஷ்யாவுடன் வர்த்தகத்தொடர்பினை உருவாக்கி விட்டது. அணு ஆயுதக்குறைப்புப் பேச்சு வார்த்தைகளில் நல்ல முன்னேற்றம் கண்டது (Strategic Arms Limitation Talks-S.A.L.T.) ஆகியவை குறித்து நிக்சன் தற்பெருமை கொண்டார். அத்தகு வெற்றிகள் உள்நாட்டில் அவருக் கிருந்த எதிர்ப்புகளைக் ஓரளவிற்குக் குறைத்தனவே தவிர, முழுவதுமாக நீக்கிவிடவில்லை. சீனாவிற்கு ஏராளமான சலுகைகளை அளித்துவிட்டு, அதற்கு மாறாக எதையுமே பெற்றுக்கொள்ளவில்லை எனப் பழமை விரும்பிகள் குறை

கூறினர். ஆனால் தாராளக் கொள்கையாளர்கள் நிக்சனின் சீனக்கொள்கையினை வரவேற்றுப் பாராட்டினர். வியட் நாமைப் பொறுத்தவரையில் தாராளக்கொள்கையினர் நிக்சனைக் கண்டித்தனர். பழமை விரும்பிகள் ஆதர வளித்தனர். குடியரசுத்தலைவர் தேவையற்ற பணச் செல வினையும், உயிர் இழப்பினையும் தடுக்கும் வகையில் மேலும் விரைவாகச் செயலாற்றத் தவறிவிட்டார் எனப் போர் எதிர்ப்பாளர்கள் கூக்குரலிட்டனர்.

1972ஆம் ஆண்டு அக்டோபரில், குடியரசுத் தலைவர் தேர்தலுக்குப் பன்னிரண்டு நாட்களுக்கு முன்னர் வியட் நாமியப் போரில் அமைதி வெகுவிரைவிலேயே ஏற்பட்டு விடும் என அறிவித்தார். ஆனால் அமைதி அமெரிக்கர் களுக்கு எட்டாத தூரத்திலேயே காணப்பட்டது. கிஸிஞ் சருக்கும், வடவியட்நாமியப் பிரதிநிதியான லி-தி-தோ (Le-Dee-Tho) என்பவருக்குமிடையே போர்நிறுத்தத்தின் ஆரம்பகால நடவடிக்கைகள் குறித்தே வாக்குவாதமும், கருத்து மாறுபாடுகளும் நீடித்தன. கிஸிஞ்சர் அவர்களைத் திருப்பியழைத்துக் கொண்டதன் மூலம் நிக்சன் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்குத் தடைவிதித்தார். பின்னர் ஜனவரி யில் அமெரிக்காவும், வடவியட்நாமும் மீண்டும் பேச்சு வார்த்தைகளைத் தொடங்க, தொடர ஒத்துக்கொண்டு, அமைதியைத் தேடும் போராட்டத்தில் தீவிரமாக இறங்கின. அத்தகைய தீவிரமுயற்சிகளின் பின்னர் 1973 ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள் 27 ஆம் நாள் அமைதி உடன்பாடு கையெழுத்தாயிற்று. ஆனால், அவ்வுடன்பாடு செயல்படுத்த இயலாத அளவிற்கு அமெரிக்க உள் நாட்டு வரலாற்றிலும், வெளி நாட்டிலும் எதிர்பாராத புதிய பிரச்சினைகள் தோன்றி விட்டன.

# அத்தியாயம் 21

# நேரு சகாப்தத்தின் நன்கொடை
## (Legacy of the Nehru Era)

**முன்னுரை**

சுதந்தர பாரதத்தின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு தனிப்பெரும் தேசியத் தலைவராக மட்டு மின்றி, புகழ்மிக்க உலக அரசியல் மேதைகளுள் ஒருவராகவும் திகழ்ந்து வந்தார். அரை நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாக இந்திய மண்ணில் மாபெரும் சக்தியாக விளங்கிய நேருஜி, இந் நாட்டின் சமுதாயப் பொருளாதார வளர்ச்சிக்கு அளப் பரிய சேவை செய்துள்ளார். அன்னாரது வாழ்க்கையில் இருபெரும் கருத்துக் கருவூலங்கள் பின்னிப் பிணைந் துள்ளன. ஜனநாயக சோஷலிசம் (Democratic socialism) அவரது உள்நாட்டுக் கொள்கையின் உயிர் நாடியாக அமைந்தது. கூட்டுச் சேராக் கொள்கை (Non-alignment) வெளிநாட்டு உறவுகளில் வழிகாட்டியாக விளங்கியது. 1947-ல் இந்தியா சுதந்தரம் அடைந்த காலத்திலிருந்து, 1964-ல் தமது இறுதி மூச்சு அடங்கும் வரையில் நேருஜி இந்திய நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் பிரதமராகவும் திகழ்ந்தார்.

**அ. ஜனநாயக சோஷலிசம்**

ஜனநாயக சோஷலிசத்தை நேருவின் கைக்குழந்தை என லாம். இளமைப் பருவத்திலேயே பொதுவுடைமைக் கருத்து களில் மனதைப் பறிகொடுத்திருந்த அவரை, இங்கிலாந்தில் கல்வி பயின்ற காலத்தில் பேராசிரியர் லாஸ்கி (Prof. Laski) எச்.ஜி. வெல்ஸ் (H. G. Wells), பெர்னார்டு ஷா (Bernard Shaw), சிட்னி (Sydney) போன்ற ஃபேபிய சமதர்மக் கொள்கை யாளரின் (Fabian Socialism) கருத்துகள் பெரிதும் கவர்ந்தன. சமதர்மத்தை அடைவதற்குச் சட்ட முறையிலான ஜனநாயக முறைகளைக் கையாள வேண்டியதன் அவசி யத்தை அவ்வறிஞர்களிடமிருந்து உணர்ந்து கொண்டார்.

சோஷலிசச்சமுதாயத்தை அமைப்பதற்குவன்முறைவல்லாட்சி முறைகளில் நேரு நம்பிக்கை வைக்கவில்லை. எனவே, புரட்சிகரமான பொதுவுடைமை வாதத்தையும் அவர் கண்டனம் செய்து வந்தார். இருப்பினும் பொதுவுடைமைப் பெருநாடான ருஷ்யாவிற்கு 1927-ல் சென்றுவந்த நேரு அந்நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்களில் அதிக நம்பிக்கை வைக்கலானார். அது போன்ற ஐந்தாண்டுத் திட்டங்களை, வன்முறை தவிர்த்த அமைதியான சட்டங்களின் மூலம் நடைமுறைப்படுத்த விருப்பம் கொண்டார். எனவே, இந்தியாவின் பொருளாதார வளத்தைப் பெருக்குவதற்குப் படிப்படியாகத் தொழில்களை நாட்டுடைமையாக்கும் கொள்கையையும், ஐந்தாண்டுத் திட்டங்களையும் செயல்படுத்த முற்பட்டார்.

1948-ல் இந்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையை வெளியிட்ட நேரு, இரயில்வேக்கள், வெடிமருந்து உற்பத்தி, அணுசக்தி ஆகிய மூன்றுதொழில்கள் மட்டுமே நாட்டுடைமையாக்கப்படும் என்றும் வேறு ஆறு தொழில்களில் புதிய நிறுவனங்களை அரசாங்கம் தொடங்கும் என்று அறிவித்தார். ஏற்கனவே இயங்கி வரும் தொழில் நிறுவனங்கள் அடுத்த பத்தாண்டு காலத்திற்கு அரசாங்கத்தின் குறுக்கீடு இல்லாமல் செயல்படலாம் என்றும், மற்ற தொழில்களெல்லாம் தனியார் துறையிலேயே இயங்குமென்றும் கூறினார் இவ்விதமாக இந்திய அரசாங்கம் 'கலப்புப் பொருளாதாரக் கொள்கையை' (Mixed Economy) ஏற்றுக் கொண்டது. இக்கொள்கையைச் 'சமதர்மக் கொள்கையின் பின்வாங்கல்' எனத் தீவிரவாதிகள் தூற்றிய போதிலும், பிற்போக்குவாதிகள் பேயைக் கண்டது போல் அஞ்சிய போதிலும் அதன் இன்றியமையாத் தன்மையை நேருஜி வலியுறுத்தி வந்தார். மூலதனமும் தொழில்நுட்ப அறிவும் குறைவாகவுள்ள வளர்ந்து வரும் நாட்டில் தனிப்பட்ட முதலாளிகளால் பெரிய தொழில்களை பயனுள்ள வகையில் உருவாக்க முடியாது என்றும், நாட்டின் உற்பத்தியை உச்ச அளவிற்குக் கொண்டு செல்லத் தனியாரும் அரசாங்கமும் கூட்டாக முயலவேண்டுமென்றும் கூறினார்.

1955 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆவடியில் கூட்டிய காங்கிரஸ் மாநாட்டில்தான் தமது புதுப்பாணிச் சமதர்மக் கொள்கையான ஜனநாயக சோஷலிசத்தை அறிவித்தார். நேரு அரசாங்கத் துறையும் தனியார் துறையும் வளர வாய்ப்

பளிக்கக்கூடிய ஜனநாயக சோஷலிசத்தில், பெரும் மூலதனம் தேவைப்படும், பெரியதும், பொதுமக்களுக்கு அதிகம் தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்வதுமான தொழில் நிறுவனங்கள் அரசாங்கத் துறையில் இருக்கவேண்டு என்றும், மூலதனம் அதிகம் தேவையில்லாத சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தனியார் துறையில் இருக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டது. சமதர்மத்தின் இலக்கான வருமானச் சமப் பங்கீட்டினைப் பல்வேறு முறைகள் மூலம் அடையலாம் என்றது. முன்னேற்ற நோக்கம் கொண்ட வரி விதிப்பு, தனிச்சிறப்புரிமைகளின் நீக்கம், எல்லா வகுப்பாருக்கும் சமவாய்ப்பு, குறிப்பாகப் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குச் சமவாய்ப்பு, எல்லோருக்கும் கல்வி வசதி, சமுதாயத் தீமைகள் ஒழிப்பு, பெருநிலக்கிழார் முறை ஒழிப்பு ஆகியப் பல்வேறு முறைகளைக் கையாள்வதன் மூலமாக வருமானத்தைச் சமமாகப்பங்கீடுசெய்ய முடியுமென நம்பியது. மாநாட்டின் இம்முடிவுகள் அனைத்தும் அரசாங்கத்தின் நோக்கங்களாக அறிவிக்கப்பட்டன. 1959-ல் நாகபுரி காங்கிரஸ் மாநாடு கூட்டுறவுப் பண்ணை முறையையும் (Co-operative farming) கிராமங்களில் நில உச்சவரம்பையும் பரிந்துரைத்தது. இந்த அறிக்கையைத் தொடர்ந்துதான், பொதுவுடைமை நாட்டு வளர்ச்சிக்குத் தீமை விளைவிக்கக் கூடியது எனக் கண்டனம் செய்த இராஜாஜி, சுதந்திரா கட்சியைத் தொடங்கினார்.

### ஐந்தாண்டுத் திட்டங்கள்

ருஷ்யாவில் இருப்பதைப் போன்று இந்தியாவிலும் திட்டமிட்ட வளர்ச்சியில் நேரு நம்பிக்கை கொண்டிருந்தார். அதற்கிணங்க 1950-ல் திட்டக் குழுவை நியமித்தார். வேளாண்மை, தொழில் முதலான துறைகளின் பொறுப்பேற்ற ஆறு உறுப்பினர் அக்குழுவில் இடம் பெற்றனர். திட்டமிடுவதில் அரசாங்கத்திற்கு உதவத் தேசிய வளர்ச்சி ஆலோசனைக் குழு ஒன்றும் 1952-ல் நிறுவப்பட்டது. பாரதப் பிரதமர் மாநில முதலமைச்சர்கள், திட்டக்குழு உறுப்பினர் ஆகியோர் அக்குழுவில் இடம் பெற்றனர். ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறைகள் கூடித் திட்டத்தின் வளர்ச்சியை ஆய்வு செய்வதும், அரசாங்கக் கொள்கையின் நெறிமுறைகளை வகுப்பதும் அதன் பணிகளாகும். மாநிலங்களிலும் திட்டக் குழுக்கள் அமைய அனுமதி வழங்கப்பட்டது. நேரு காலமானபோது, ஏற்கனவே இரு ஐந்தாண்

டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மூன்றாவது திட்டம் நடைமுறையிலிருந்தது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951-56) வேளாண்மையை யும், உணவு உற்பத்தியில் தன்னிறைவையும் வற்புறுத்தியது. அதனால் வேளாண்மை, இராசாயன உரம், நீர்ப்பாசனத் திட்டங்கள், நீர் மின்விசைத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு மொத்தச்செலவில் மூன்றில் ஒரு பங்கு ஒதுக்கப்பட்டது. கல்வி, நல்வாழ்வு போன்ற பல சமுதாயப் பணிகளுக்கும் பெரும்பொருள் ஒதுக்கப்பட்டது. தொழில்களுக்கு சிறு தொகையே கிடைத்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் குறியளவுகள் எட்டப்பட்டதால் அஃது ஒரு வெற்றித் திட்ட மாக அமைந்தது. உணவு உற்பத்தியில் 20 சதவீதம் அதி கரிப்பு ஏற்பட்டது. 16 மில்லியன் ஏக்கர் நிலம் கூடுதலாகப் பாசனவசதி பெற்றது. மின்சார உற்பத்தி இரண்டு மடங்காகப் பெருகியது. தொழில் உற்பத்தியிலும் 20 சதவீத உயர்வு காணப்பட்டது. . முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதி யாகச் சமுதாயத் திட்டங்கள் 1952-ல் கொண்டுவரப்பட்டன. பல கிராமங்களை ஒன்றாக இணைத்து வளர்ச்சிவட்டாரங்கள் (Development Blocks) உருவாக்கப்பட்டன. கிராமங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் அவர்களுக்கு வழி காட்டப் பயிற்சி பெற்ற பணியாளர்கள் அனுப்பப் பெற்றனர். 1962-ல் நான்கு இலட்சம் கிராமங்கள் கிராமவளர்ச்சித் திட்டத் தின் கீழ் வந்தன. கிராமப் பஞ்சாயத்துகள் பெருமெடுப்பில் உருவாயின். தலத்தன்னாட்சியில் மக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. குடிசைத் தொழில்களும் சிறுதொழில்களும் ஊக்கமும் ஆக்கமும் பெற்றன. ஜமீந்தார் முறையை ஒழிக்க வும். குடியானவர்களைச் சுரண்டலிலிருந்து காக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தாழ்த்தப்பட்ட, மற்றும் பின்தங்கிய வகுப்பாரை உயர்த்துவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது.

இரும்பு, நிலக்கரி, இராசயனப் பொருள்கள், சிமெண்ட் முதலிய கனரகத்தொழில்களில் கவனம் செலுத்தியது இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956-61) தொழில்களைப் பன் முகப்படுத்துவதையும் (diversification) வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதையும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்து வதையும் நோக்கமாகக் கொண்டது. மேலும், வருமானத்தை அதிக அளவில் சமமாகப் பங்கிடவும் விரும்பியது. ஆயினும், குறைந்த அறுவடைகள், பணவீக்கம், வெளிநாட்டுச் செலா

வணிக் குறைவு ஆகியவற்றால் வெகு விரைவிலேயே இரண்டாவது திட்டம் தடுமாறத் தொடங்கியது. உணவு உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது. தொழில் வளர்ச்சியும் தெம்பூட்டுவதாக இல்லை. இருப்பினும் இரும்பு, எஃகு, நிலக்கரி, செயற்கை உரங்கள், பொறியியல் மற்றும் மின்விசைப் பொருள்கள் உற்பத்தி போன்ற அடிப்படைத் தொழில்கள் நன்கு வளர்ந்தன. துர்க்காபூர், பிலாய், ரூர்கேலா ஆகிய இடங்களில் மூன்று எஃகுத் தொழிற்சாலைகள் எழுந்தன. சித்தரஞ்சன் இரயில் என்ஜின் தொழிற்சாலையும், பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலையும் இத்திட்ட காலச் சாதனையாகும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961-66), வேளாண்மைத் துறையில் அதிகக் கவனம் காட்டுவன் மூலமாகவும், அதே சமயத்தில் அடிப்படைத் தொழில்களை வளர்ப்பதன் மூலமாகவும் இரண்டாவது திட்டத்திலிருந்த குறைகளை நீக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. தற்சார்புடைய, தானாக வளரும் பொருளாதாரத்தை வளர்க்க அது விரும்பியது. ஆனால், மூன்றாவது திட்டத்தின் நோக்கங்கள் முற்றிலும் நிறைவேறியது எனச் சொல்லமுடியாது. எதிர்ப்பார்த்ததைப் போல நாட்டு வருமானம் உயரவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவில் பெருகியது. எங்கணும் உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்தன. தொழிற்சாலைகளும் எதிர்பார்த்த அளவிற்குப் பொருள்களை உற்பத்தி செய்யவில்லை. திட்டமிட்ட வளர்ச்சியில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசுகளுக்கும் இடையே போதுமான அளவு ஒத்துழைப்பு இருந்ததாகத் தெரியவில்லை. பாகிஸ்தானுடனான போரும் சீனப்படையெடுப்பும் நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கின. இவற்றிற்கும் மேலாக அளவுக்கு மீறிய மக்கள் பெருக்கம், திட்டத்தை நிறைவேற்றும் அரசாங்க அதிகாரிகளிடையே போதுமான ஆர்வமின்மை, மக்களிடையே காணப்பெற்ற மெத்தனம் ஆகியவை இத்திட்டம் அதிகம் வெற்றியடையாமற் போனதற்குக்காரணங்களாக இருந்தன. இங்ஙனம் நேருவின் உயர்ந்த நோக்கங்கள் முழுதுமாக நிறைவேறவில்லை.

ஐந்தாண்டுத் திட்டங்கள் குறியளவுகளை எட்ட முடியவில்லை என்றாலும், அவை இந்தியப் பொருளாதாரத்தைப் பெருமளவில் மாற்றியமைப்பதில் வெற்றி பெற்றுள்ளன. பல பெரிய அணைகள் கட்டப்பட்டுள்ளன. பஞ்சாபில்

பக்ரா நங்கல் அணை, ஒரிஸ்ஸாவில் ஹிராகுட் அணை (Hirakud), பீஹாரிலும் வங்காளத்திலும் தாமோதர் பள்ளத் தாக்குத் திட்டம், ஆந்திரபிரதேசத்தில் துங்கபத்திரை அணை ஆகியவை நேரு அளித்த ஊக்கத்தின் விளைவாக முதல் மூன்று திட்டகாலத்தில் எழுந்த பெரும் நீர்ப்பாசனத் திட்டங் களில் சிலவாகும். நாட்டைத் தொழில்வளமாக்க வேண்டு மென்ற நேருஜியின் கனவும் பெருமளவு நனவாகியுள்ளது. பெங்களூரிலும் கான்பூரிலும் ஆகாயவிமானத் தொழிற் சாலைகள், கான்பூரில் தோல் தொழிற்சாலை, சென்னையில் மோட்டார் வாகன உற்பத்தித் தொழிற்சாலை, ஆவடியில் டாங்க் தொழிற்சாலை (Tank Factory), சிர்பூரில் காகிதத் தொழிற்சாலை, பிலாயில் எஃகுத் தொழிற்சாலை இவை எல்லாம் தொழில்துறை வளர்ச்சிக்கான சில சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சியோடு, டாட்டா இரும்பு எஃகுத் தொழிற்சாலை போன்ற தனியார் தொழில் நிறுவனங்களும் இக்காலத்தில் வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேருவின் சோஷலிசக் கொள்கை பொருளாதார வளத்தை மட்டுமல்லாமல், பண்பாட்டு மலர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. ஓவியம் சிற்பம் முதலான கவின்கலைகளை வளர்பபதற்காக லலித கலைக் கழகம் (Lalit Kala Academy) 1954-ல் டில்லியில் நிறுவப்பட்டது. 1953-ல் அமைக்கப்பட்ட சங்கீத நாடகக் கழகமும் (Sangeeth Natak Academy) இசை, நடனம், நாடகம் ஆகிய இன்கலை களை வளர்த்து வருகின்றது டில்லியில் நிறுவப்பட்டுள்ள. சாகித்யக் கழகம் (Sahitya Academy) பல்வேறு இந்திய மொழி இலக்கியங்கள் வளர ஊக்கமளித்து வருகிறது. 1957-ல் தலைநகரில் உருவாக்கப்பட்ட தேசியநூல் நிறுவனம் (National Book Trust) மலிவு விலையில் தரமான நூல்களை வெளியிட்டு வருகின்றது. உயர்கல்வி வளர்ச்சிக்காகப் பல்கலைக்கழக மானியக்குழு (University Grants Commission) உருவாக்கப்பட்டுள்ளது.

அரசியல் ஜனநாயகத்துடன் சமுதாய ஜனநாயகத்தையும் கொண்டுவர வேண்டுமென்று நேருஜி ஆசைப்பட்டார். அவரது ஊக்கத்துடன் உருவான இந்திய அரசியல் அமைப்புத் திட்டத்தில் வயதுவந்தோர் வாக்குரிமை, சுதந்தரமான தேர்தல்கள், அரசாங்கப் பணிகளில் சமமான வாய்ப்புகள்

ஆகியவற்றிற்கு வகைசெய்யப்பட்டுள்ளது. இவற்றின் மூலமாக அரசியல் சமத்துவம் நிலைநாட்டப்பட்டுள்ளது. தீண்டாமை ஒழிப்பு, பெண்களுக்குச் சொத்துரிமை, சிறு பான்மையினருக்குச் சிறப்புப பாதுகாப்பு ஆகியவற்றின் மூலமாகச் சமுதாயச் சமத்துவத்தை உருவாக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மேலும், எல்லா சமயத்தவரையும் சமமாகப் பாவிக்கும் சமயச் சார்பின்மைக் கொள்கையை (Secularism) அரசாங்கம் பின்பற்றிவருகின்றது. அரசாங் கத்தின் தலையீடு இல்லாமல் மக்கள் தங்கள் சமயங்களைப் போற்றிவாழ வகை செய்யப்பட்டுள்ளது. ஜமீன்தாரி முறை ஒழிப்பு மூலமாகவும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங் குடியினருக்கு வேலைகளை ஒதுக்குவதன் மூலமாகவும், பணக் காரர்கள்மீது அதிகவரிவிதிப்பதன் மூலமாகவும் பொருளாதாரச் சமத்துவத்தை நிறுவ நேருவின் அரசாங்கம் முயன்று வந்தது. இங்ஙனம் சோஷலிசத்தின் அடிப்டையான சமத்துவத்தை நிலைநாட்ட ஜவஹர்லால் நேரு அரும்பாடுபட்டுவந்தார்.

### (ஆ) கூட்டுச்சேராக்கொள்கை (Non-alignment)

வெளிநாட்டுக் கொள்கையில் நேருஜி கூட்டுச் சேராக் கொள்கையைக் கடைப்பிடித்தார். அக் கொள்கையை வகுப்ப தில் நேருவும் யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோவும் (Marshal Tito) முக்கியப் பங்கு கொண்டனர். அமெரிக்காவின் தலைமையிலும், சோவியத் யூனியனின் தலைமையிலுமான இரு வல்லரசு மண்டலங்களாக உலகம் பிரிந்திருப்பதையும், இவ்விரு வல்லரசு மண்டலங்களுக்கிடையே எழுந்த கெடுபிடிப்போரையும் கண்டு அஞ்சிய நேருவும் டிட்டோவும், இந்த வல்லரசு மண்டலங்களோடு கூட்டுச் சேராத நாடுகள் அடங்கிய மூன்றாவது கூட்டணியை உருவாக்க எண்ணங் கொண்டனர். அத்தகைய மூன்றாவது கூட்டணி உலக அரசியல் அரங்கில் சக்திச் சமநிலையைக் காக்க உதவும் என்றும், இரு வல்லரசு மண்டலங்களுக்கிடையே மோதல் எழுமானால் அதனைத் தவிர்க்க வகை செய்யுமென்றும் நம்பினார்.

முதன்முதலாக 1955-ல் பாண்டுங் மாநாட்டில் (Bandung Conference) இந்த கூட்டுச் சேராக் கொள்கையையும் சமாதானச் சகவாழ்வுக் கொள்கையையும் பண்டித நேரு அவர்கள் அறிவித்தார். சீனா உட்பட முப்பத்தொன்பது

நாடுகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில்தான் பஞ்சசீலக் (Panch Sheel) கொள்கையும் உருவாயிற்று. இந்தப் பஞ்சசீலக் கொள்கையில் அடங்கியவை :

(1) நாடுகள், ஒன்றின் எல்லையை மற்றது மதித்தல்.
(2) ஒன்றன் மீது ஒன்று வலுத்தாக்குதல் செய்யா திருத்தல்.
(3) ஒன்றன் உள்நாட்டு விவகாரத்தில் மற்றது தலையிடாதிருத்தல்.
(4) நாடுகளிடையே சமத்துவத்தை நிலைநாட்டி, ஒன்றுக் கொன்று உதவி செய்தல்.
(5) சமாதானச் சகவாழ்வை மேற்கொள்ளுதல்.

இவ்வைந்து அரும்பெரும் கருத்துகளை மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டன. முதலாளித்துவ மண்டல நாடுகளும் பொதுவுடைமை நாடுகளும், மற்றதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் அமைதியாக வாழவேண்டுமென்று நேரு அறிவித்தார். பெரும் வல்லரசுகளும் பஞ்சசீலக் கொள்கையைக் கடைப் பிடித்து உலக அமைதியைக் காக்கும் என அவர் நம்பினார். ஆனால், 1962-ல் சீனா இந்தியாவின்மீது படையெடுத்த போது அவரது நம்பிக்கை நாசமாகியது. பாண்டுங் மாநாட்டு அமைதி அறிக்கையில் பொதுவுடைமைச் சீனாவின் பிரதமர் சூயன்-லாய் (Chou-en-lai) கையொப்பமிட்டிருந்தும், இந்தியாவைச் சீனப்படைகள் தாக்கியது நேருவுக்குப் பேரிடியாக இருந்தது. அதிலிருந்து அவரால் மீள முடிய வில்லை. அதுவே அவரது வாழ்வை முடிக்கும் காலனாகவும் வந்தது

நேருவின் கூட்டுச் சேராக் கொள்கை ஒரு நடுநிலைக் கொள்கையன்று. எப்போதும் நீதியை ஆதரிக்கவும், அநீதியைக் கண்டிக்கவும் ஆன ஆக்கப்பூர்வமான தத்துவமே கூட்டுச் சேராமையாகும் வல்லரசுக் கூட்டு எதிலும் இந்தியா இணையவில்லை. பிரிட்டிஷ் பொதுநலக் குடியரசில் தொடர்ந்து அங்கம் வகிக்க முன்வந்த போதிலும், 'நேட்டோ' (NATO)'சீட்டோ' (SEATO) போன்ற வட்டார படைத்துறைப் பாதுகாப்பு அமைப்புகள் எவற்றிலும் சேரவில்லை. வலுத் தாக்குதல் எங்கிருந்து வந்தாலும் கண்டனக்குரல் எழுப்பத் தவறியதில்லை. எல்லாவகையான காலனி ஆதிக்கத்தையும் ஏகாதிபத்தியத்தையும் ஐ.நா.விலும் அதற்கு வெளியேயும் கண்டித்தது நம்நாடு. வலுத்தாகுதலைத் தடுத்து நிறுத்த, ஐ.நா. அனுப்பும் படைகளில் பாரத வீரர்களும் இடம்

பெற்றனர். காங்கோ, சைப்ரஸ் (Cyprus), கொரியா போன்ற இடங்களில் ஐ.நா.வின் அமைதிகாக்கும் படைகளில் இந்திய வீரர்கள் அரும்பணியாற்றினர். இந்தோனேஷியாவில் டச்சுக் காலனி ஆதிக்கத்தைக் கண்டித்த நேரு, இந்தோசீனாவில் ஐ.நா. தலையிடவும் இந்தோனேஷியா விடுதலை பெறவும் பேருதவி புரிந்தார். பிரிட்டனும், பிரான்சும், இஸ்ரேலும் எகிப்தைத் தாக்கியபோது உடனடியாகத் தலையிடுமாறு அமெரிக்காவையும் ஐ.நா.வையும் தூண்டி சூயஸ்கால்வாய்ப் பிரச்சினைக்கு முடிவு காணுமாறு வற்புறுத்தினார். அரபு நாடுகளின்மீது இஸ்ரேல் நடத்திய வலுத்தாக்குதல்களை எப்போதும் கண்டித்து வந்தார். ஆனால், சோவியத் யூனியனைப் பொறுத்தவரையில் நேரு நெகிழ்வான கொள்கையைக் கடைப்பிடித்தார். எடுத்துக்காட்டாக ஹங் கேரியில் மக்களுடைய புரட்சியை ருஷ்யப்படை ஒடுக்கியதை அவர் வெளிப்படையாகக் கண்டிக்கவில்லை. ருஷ்ய நடவடிக்கை ஹங்கேரியின் உள்நாட்டு விவகாரம் என்றும், பொதுவுடமையை அழிக்கச் சூழ்ச்சி செய்யும் அன்னிய ஏகாதிபத்தியத்திற்கெதிரான நடவடிக்கை என்றும் சமாதானம் கூறினார். எனினும் தென் ஆப்பிரிக்காவிலும் ரொடீஷியா விலும் கடைபிடிக்கப்பட்ட இன ஒதுக்கல் கொள்கையை, நிறவெறியை, அவர் எப்போதும் கண்டனம் செய்து வந்தார். இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரான முதல் தீர்மானத்தை ஐ.நா.வில் கொண்டு வந்ததும் இந்தியாவே.

பாகிஸ்தானுடனும் மற்ற அண்டைநாடுகளுடனும் நட்புறவை வளர்க்க நேரு முயன்று வந்தார். ஆனால், 1947-ல் பாகிஸ்தான் படைகள் காஷ்மீரின்மீது படையெடுத்து வந்தன. காஷ்மீர் மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியப் படைகள் உதவிக்கு விரைந்தன. படையெடுத்து வந்தவரை புறங்கண்டன. அதன்பின்னர்க் காஷ்மீர்ப் பிரச்சினையை நேரு ஐ.நா.வின் பார்வைக்குக் கொண்டுவந்தார். ஆனால், இன்று வரையிலும் அப் பிரச்சினை ஐ.நா.வால் தீர்க்க முடிய வில்லை.

பெரும் வல்லரசுகள் உள்ளிட்ட அனைத்து உலக நாடுகளும் நேருவின் கூட்டுச் சேராக் கொள்கையைப் புகழ்ந்தன. புதிதாகச் சுதந்தரம் பெற்ற ஆசியா ஆப்பிரிக்க நாடுகள் அவரது கொள்கையைக் கடைபிடிக்க முயன்று வருகின்றன. அவை, பன்னாட்டு அரசியலில் சக்திவாய்ந்து விளங்கும் மூன்றாவது நாடுகள் அணியை உருவாக்கியுள்ளன

# அத்தியாயம் 22

# மாவோவின் தலைமையில் சீனா

**முன்னுரை**

சீனா இன்று உலக வல்லரசு நாடுகளில் ஒன்றாக விளங்கு கிறது. மிக அதிக மக்கள் தொகையைக் கொண்டிருந்தாலும். வாழ்க்கைத் தரமும் உயர்ந்தே காணப்படுகின்றது. உலகப் பெரிய நாடுகளுக்கு இணையான பொருளாதார வளர்ச்சியும் பெற்றுள்ளது. அறிவியல் நுணுக்கத்தின் துணை கொண்டு உருவாக்கப்பட்ட படைக் கலன்கள், அணுகுண்டு, மற்று முள்ள சாதாரண போர்க் கருவிகளைக் கொண்டுள்ள மிகப் பெரிய படையும் சீனாவிடம் உள்ளது. இத்தகைய வியத்தகு முன்னேற்றங்களை உருவாக்கித் தந்தது, டாக்டர் சன்யாட் செனின் கோமிங்டாங் கட்சியோ, அல்லது அக் கட்சியைச் சேர்ந்த சியாங்கை ஷேக்கோ அல்ல. மா-சே-துங், சூ-என்-லாய் போன்ற இணையற்ற தலைவர்களைக் கொண்ட சீனப் பொது வுடமைக் கட்சியே யாகும். இப் பகுதியில் சீனப் பொது வுடமைக் கட்சியின் தோற்றத்தையும் அதன் சாதனை களையும் சுருக்கமாகக் காணலாம்.

**(அ) சீனாவில் கம்யூனிஸ்ட் புரட்சி சீனப் பொதுவுடமைக் கட்சியின் தோற்றமும், கம்யூனிஸ்டு அரசு ஏற்படுத்துதலும்**

1911 இல் நடந்த சீனப் புரட்சி தோல்வியடைந்தது. ஜனநாயக ஆட்சி அமைக்கப் படாமல் யுவான்ஷிகேயின் சர்வாதிகாரி ஆட்சியும், அதற்குப் பின் படைதளகர்த்தர்களுக் குள் போட்டியும், உள்நாட்டுப் போரும் நடந்தன. சீனாவில் இம் மாதிரி குழப்பம் ஏற்பட்டபோது, சீன சமூதாயம் ருஷ்யா விலிருந்து வந்த கம்யூனிஸ்டுக் கொள்கைகளை உடனடியாக ஏற்றுக் கொள்ளத் தயங்கவில்லை. மேலை நாடுகளின் பார்லிமென்ட் ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள டாக்டர் சன்யாட்சென் கூட சீனாவின் அல்லல்களை அகற்றும் அரும் மருந்து, லெனின் கொள்கைகளைப் பின் பற்றுவதேயாகும் என உறுதியாக நம்பினார். அதன் காரணமாகவே

கோமிங்டாங் கட்சியில் கம்யூனிஸ்டுகளையும் சேர்த்துக் கொண்டார் சிறுகச் சிறுக கோமிங்டாங் கட்சியில் சேர்ந்து விட்ட கம்யூனிஸ்டுகள் தங்களது கட்சியின் தனி செல்வாக்கினைப் பெருக்கிக் கொண்டனர். 1925 ஆம் ஆண்டில் டாக்டர் சென் இறந்த பின்னர் கோமிங்டாங் கட்சித் தலைவரான சியாங்கைஷேக் கம்யூனிஸ்டு கட்சியின் செல்வாக்கு வளருவதைக் கண்டு அச்சமடைந்தார். அவர் கம்யூனிஸ்டுகளைத் தமது கட்சியிலிருந்து வெளியேற்ற முடிவு செய்தார். 1927 ஆம் ஆண்டில் வெற்றி கரமாக நடத்தப்பட்ட சதித்திட்டத்தின் மூலம் கம்யூனிஸ்டுகள் வெளியேற்றப் பட்டனர். கோமிங்டாங் கட்சி வலதுசாரிக் கட்சியாக மாறியது. மா-சே-துங், சூ-என்-லாய்- ஆகியோரின் தலைமையில் சீன கம்யூனிஸ்டுகட்சி தனியாக உருவாக்கப் பட்டது. (CPC) இக்கட்சி தென் சீனாவில் கியாங்ஸி மா நிலத்தின் தெற்குப் பகுதியில் முதலில் வலிமை பெற்று விளங்கியது.

சியாங் கைஷேக் கம்யூனிஸ்டு கட்சியினரை சீனாவிலிருந்தே விரட்டியடிக்க முயற்சிகள் எடுத்தார். தம்முடைய கட்சியைக் காப்பாற்ற வேண்டி, மா-சே-துங் தலைமையில் சீனக்கம்யூனிஸ்டு கட்சியினர் வரலாற்று புகழ் மிக்க தங்களது நீண்டபயணத்தை (long March) மேற்கொண்டனர். அவர்கள் 1934 ஆம் ஆண்டில் ஜுய்சின் (Juichin) காடுகளினின்றும் வெளிப் போந்து, ஏராளமான இடர்ப் பாடுகளுக்கிடையே மலைகளையும், ஆறுகளையும், அடர்ந்த சதுப்பு நிலக் காட்டுப் பகுதிகளையும் கடந்து, இடையிடையே கோமிங்டாங் படைகளுடன் போரிட்டுக் கொண்டே 6000 மைல்களைக் கடந்து சீனாவின் வட பகுதியிலிருந்த ஷென்சி மாநிலத்தை 1935 ஆம் ஆண்டில் அடைந்தனர் அங்கு ஏனான் (yenan) நகரில் தங்களது தலைமையகத்தை நிறுவினர். ஷென்சி மாநிலத்தை தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் அது சோவியத் ருஷ்யா, மற்றும் அதன் சார்பு நாடான மங்கோலியா ஆகியப் பகுதிகளின் அருகிலிருந்தது. முன்னேறி வருகின்ற ஜப்பானிய படைகளுக்கும் அருகிலிருந்தது. ஜப்பானியரை வெறுக்கின்ற சீனர் அனைவரையும் ஒன்று திரட்டி தங்களது செம்படையின் தலைமையில் ஜப்பானியரை எதிர்த்துப் போரிடுவதால் கம்யூனிஸ்டு கட்சியின் செல்வாக்கும், பெருமையும் பெருக வாய்ப்பிருந்தது.

சீனக் கம்யூனிஸ்டு கட்சி சீன அரசுக்குள் தனது அரசை ஏற்படுத்தியிருந்தது. ஷென்சி மாநிலத்தில் அரசு, படை, பள்ளிகள் போன்ற அனைத்துமிருந்தன. ஆனால் இவை யாவும் கிராமப் புறங்களிலேயே காணப்பட்டன. ஆரம்பத்தில் சீனக் கம்யூனிஸ்டு கட்சி நகர்வாழ் உழைப்பாளர்களின் ஆதரவினைப் பெற இயலவில்லை. கிராமப்புறங்களிலிருந்த உழைப்பாளிகளையே அது நம்பியிருந்தது.

1931-'33 ஆம் ஆண்டுகளில் ஜப்பான் மஞ்சூரியாவின் மீது போரைத் தொடங்கியிருந்த அதே நேரத்தில் கம்யூனிஸ்டுகளுக்கும், கோமிண்டாங்களுக்குமிடையே உள்நாட்டுப் போரும் நடந்து கொண்டிருந்தது. 1937 இல் இரண்டாவது சீன ஜப்பானியப்போர் தொடங்கி, அது 1941 இல் உலகப் போரான போது, இரண்டு கட்சிகளும் சமாதானம் செய்துகொண்டு இணைந்து, ஒற்றுமையாக ஜப்பானியரை எதிர்த்துப் போரிடவேண்டும் என்பது சீனமக்களின் பொதுவான கருத்தாக இருந்தது. அதன்படி இருகட்சிகளும் தோளோடு தோள் நின்று இணைந்து போரிட்டன. இருப்பினும் இவ்விரு படைகளும் ஒருவரையொருவர் சந்தேகத்துடனே நோக்கின. அந்தப் போரில் கம்யூனிஸ்டு செம்படையினரின் மதிப்பு உயர்ந்தது. ஏனெனில், கொரில்லாப் போர் முறையில் செம்படையினர் பயிற்சி பெற்றுச் சிறந்து விளங்கியதால், ஜப்பானியர்களுக்குப் பெரும் தொல்லைகளை விளைவித்தனர்.

போரைச் சாதகமாக்கிக்கொண்டு தமது கட்சியின் செல்வாக்கைப் பெருக்க வேண்டுமென்பதே மாவோவின் குறிக்கோளாக இருந்தது. '70 சதவீதம் கம்யூனிஸ்டு கட்சியினரின் சொந்த முயற்சியால் விரிவடைவது; 20 சதவீதம் சமாதான பேச்சு வார்த்தைகள் மூலம் பயனடைவது; மீதி 10 சதவீதம் ஜப்பானியருடன் போர் புரிவது' என்பதே மாவோவின் கொள்கையாகும்.

சியாங்கை-ஷேக் ஒரு திறமையான தளகர்த்தர்; ஆனால் அவரும், அவருடைய சகாக்களும் லஞ்சஊழலில் ஊறிப் போனவர்கள். டாக்டர் சன்யாட்சென்னின் திட்டத்தை அவரால் செயல்படுத்த முடியவில்லை. எனவே சீனமக்கள் அவரை வெறுத்தனர்.

இரண்டாம் உலகப்போரின் முடிவில் மாவோவும், சியாங்கும் சீனத்தலைமைப் பதவிக்காகக் கடும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். சியாங் அமெரிக்காவிலிருந்து யுத்த தளவாடங்களைப் பெற்றுக் கடற்கரை ஓரத்திலுள்ள நகரங்களைக் கைப்பற்றினார். சீனாவின் முக்கால் பகுதியில் அவர் செல்வாக்குப் பெற்றிருந்தார். ஆனால் சியாங்கின் ஆட்சியில் காணப்பட்டகுறைபாடுகளால் அவரதுசெல்வாக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது. சீனாவில் பண வீக்கம் ஏற்பட்டு, நாணயத்தின் மதிப்புக் குறைந்தது. ஏனான் நகரை மையமாகக்கொண்டு நிறுவப்பட்ட கம்யூனிஸ்டு அரசு மக்களிடையே நன்மதிப்பினைப் பெற ஆரம்பித்தது. மாவோவின் கொள்கைகள் குறைபாடுகளுடனேயே வாழ்ந்து வந்த சீன மக்களுக்குப் புதிய தெம்பினை அளித்தது. நிலமற்ற உழவர்களுக்கு விளை நிலங்களின் உரிமையை அளிப்பதன் மூலம் அவர்களது ஆதரவினைப் பெற்றார். பெரிய நிலச்சுவான்தார்களை ஆரம்ப காலத்தில் தொல்லைப்படுத்தவில்லை. ஏழை உழவனுக்கு வாழ்க்கைக்குத் தேவையான அளவு விளை நிலங்களைப் பெற வசதி செய்து கொடுத்திருந்தார். அதிகாரிகளுக்குப் பொருளாதாரத் தேவையை நிறைவு செய்கின்ற அளவுக்கு ஊதியமளிக்கப்பட்டது. 'சுரண்டல் இல்லையேல் தொல்லையுமில்லை' (No graft, no squeeze) என்பதே மாவோவின் புதிய சீனாவின் ஒருமித்த முழக்கமாக இருந்தது. கன்பூசியக் கொள்கை வழியிலான பண்டைய குடும்ப அமைப்பு முறையை மாவோ வெறுத்தார். மாவோ பெண்களுக்கு மதிப்புக் கொடுத்து, சலுகைகள் வழங்கினார். குடும்ப வாழ்க்கையிலிருந்துகொண்டே பெண்கள் தொழிற்சாலைகளில் பணிபுரியவும், கிராமப் பொதுக் குழுக்களில் விவாதம் செய்யவும் அனுமதிக்கப்பட்டனர்.

தங்களுடைய பலத்தை உறுதிப்படுத்திக்கொண்டு மாவோவின் செம்படையினர் அமெரிக்க ஆதரவு பெற்றிருந்த சியாங் படையினரைத் தாக்கினர். அமெரிக்க இராணுவ ஆலோசகர்களின் ஆலோசனையை மீறி, சியாங் மஞ்சூரியா மீது படையெடுத்தார். மஞ்சூரியா படையெடுப்பின் போது, வட சீனா பாதுகாப்பற்றுக் காணப்பட்டது.

இதனைப் பயன்படுத்திக்கொண்ட செம்படையினர் மஞ்சூரியாவையும், அதன் பின்னர் சீனாவின் தலைநகரான பீகிங்கையும் கைப்பற்றிக் கொண்டனர். இது சியாங்கிற்கு மிகப்பெரிய இழப்பாக ஆயிற்று. அதன்பின்னர் நடந்த

போரில் சியாங் முறியடிக்கப்பட்டார். தமது ஆதரவாளர்களுடனும், எஞ்சியிருந்த படையுடனும் சியாங் பார்மோசா (தைவான்) தீவிற்கு ஓடினார். மாவோவிடம் கப்பற்படை எதுவுமில்லை. எனவே, அமெரிக்கக் கப்பற்படை அளித்த பாதுகாப்புடன் சியாங் பார்மோசாவில் தேசிய சீன அரசை ஏற்படுத்தினார். சீனா முழுவதும் மாவோவின் தலைமையை ஏற்றுக்கொண்டது. அவர் 1949ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளன்று சீனாவில் மக்கள் அரசை (People's Government) நிறுவினார்.

சீன கம்யூனிஸ்டு புரட்சி இயக்கம் தனிச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகத் தென்படுகின்றது. சீனாவின் தொன்றுதொட்டு வருகின்ற பண்பாட்டுச் சிறப்போ, சீனர்கள் பரம்பரை பரம்பரையாகப் போற்றிக் காத்து வந்த கொள்கைகளோ கம்யூனிஸ்டு புரட்சியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தவில்லை. பண்டைய பண்பாட்டுக் கொள்கைகளைச் சீனக் கம்யூனிஸ்டுகள் சிறிதும் மதிக்கவும் இல்லை; அவற்றை அழிக்கத் தயங்கவுமில்லை.

(இ) மக்கள் அரசின் சாதனைகள்

1. உள்நாட்டில்

மாவோ, சூ-என்-லாய் ஆகிய கம்யூனிஸ்டு தலைவர்கள் வடமேற்குச் சீனாவில் ஆட்சிநடத்தி பயிற்சி பெற்றிருந்தனர். அவர்களுடைய மரபுகளும், கோட்பாடுகளும், அனைத்திற்கும் மேலாக, ருஷ்யாவில் கம்யூனிஸ்டு கட்சியினரின் ஆட்சி முறையைப்பற்றிக் கற்றிருந்தவைகளும், அவர்களுக்கு அரசு நடத்துகின்ற முறைகளையும், அரசின் குறிக்கோள்களையும், அக்குறிக்கோள்களை அடைகின்ற வழிகளையும் அறிவுறுத்தியிருந்தன. சீனாவில் ஏற்படுத்தப்பட்ட மக்கள் அரசு பல கட்சிகள், வகுப்புகள் ஆகியோரின் கூட்டமைப்பாகக் காணப்பட்டது. அவ்வரசில் உழைப்பாளர்கள், விவசாயிகள் ஆகியோரைக் கொண்ட கம்யூனிஸ்டு கட்சியும், பல் மக்களாட்சிக் கட்சிகளும் இணைந்திருந்தன. மக்களாட்சிக் கட்சிகளையும் கூட்டாக இணைத்துக் கொண்டதன் நோக்கம் கம்யூனிஸ்டு அரசு அனைத்துப் பிரிவு மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டரசே என்று வெளி உலகை நம்பவைப்பதற்கேயாகும். கம்யூனிஸ்டு கட்சியினர் தங்களது கொள்கைகளை மக்கள் அனைவருக்கும் விளக்கவும், கட்சிக் கோட்பாடுகளைச் செயல்படுத்திப் பரப்பவும் வழி செய்யும் வகையில் நாட்டின் பல பகுதிகளிலும் பொது

நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. சீனக் கம்யூனிஸ்டு கட்சி அரசின் துறைகளனைத்தையும் கட்டுப்படுத்துகின்ற மையாக விளங்கியது. இந்த ஒரே அதிகாரத்தின் மூலமாகத்தான் மாவோ, சூ-என்-லாய் போன்ற பெருந் தலைவர்கள் சீனாவின் முழு ஆட்சிப் பொறுப்பினையும் தங்களது நேரடி கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடிந்தது.

1951-52 ஆண்டு மூன்று எதிர்ப்பு இயக்கங்கள் (Three Antis Movement) ஏற்படுத்தப்பட்டன. இதன் நோக்கம் ஊழல், ஊதாரித்தனமான செலவுகள், நிர்வாகத்துறை குறைபாடுகள் ஆகிய மூன்று குறைபாடுகளையும் சீனமக்கள் வெளிபடுத்த வேண்டும் என்பதாகும். இவ்வியக்கங்களின் மூலம் கட்சிக் கொள்கைகளில் அவ்வளவாக நம்பிக்கையில்லாதவர்களைக் கட்சியிலிருந்து வெளிப்படுத்தவும், கோமிங்டாங் கட்சியின் ஆதரவாளர்கள் யாராவது நிர்வாகப் பொறுப்பில் இருந்தால், அவர்களைக் களையெடுப்பதற்கும் வகை செய்யப்பட்டது. அதே காலத்தில் ஐந்து எதிர்ப்பு இயக்கமும் (Five Antis Movement) உருவாக்கப்பட்டது. அதன் மூலம் வரி ஏய்ப்பு செய்வோர், இலஞ்சம் கொடுப்போர்-வாங்குவோர், அரசு ஒப்பந்தங்களில் ஏமாற்றுதல், பொருளாதார நிலையை விளக்கும் புள்ளி விவரங்களைத் திருடுதல், தேசியச் சொத்துகளைக் கொள்ளையடித்தல் ஆகிய இவ்வைந்து குற்றங்களைச் செய்வோரையும் கண்டுபிடித்து நீக்குவதற்காக இந்த ஐந்து எதிர்ப்பு இயக்கம் உருவாக்கப்பட்டது.

அறிவியல் தொழில் நுணுக்கங்களைக் கற்கவும், தொழில் துறைகளை நவீனமாக்கத் தேவையான முதலீடு, அத்தொழிலகங்களை இயக்கும் பயிற்சிபெற்ற வல்லுநர்கள் ஆகிய அனைத்து உதவிகளுக்கும் சீனா, சோவியத் ருஷ்யாவை நாடியது. ஆயிரக்கணக்கான ருஷ்ய தொழில்நுட்ப வல்லுநர்கள் சீனாவிற்கு வந்தனர். பல்லாயிரக்கணக்கான சீன இளைஞர்கள் அறிவியல். தொழில்நுட்பக் கல்வி பயிற்சியைத் தேடி ருஷ்யாவிற்குச் சென்றனர். சிறிய பெரிய தொழில்கள், புதிய இரயில்பாதைகளை அமைத்தல், பழையவற்றைப் புதுப்பித்தல், நதிகளில் விசைப்படகு போக்குவரத்தினை நவீனமாக்குதல், உழவுத் தொழிலில் மேம்பட்ட புதிய முறைகளைப் புகுத்துதல் ஆகிய முக்கியத் தொழில் வளர்ச்சிகளுக்குப் புதிய சீனா சிறப்பிடம் அளித்தது.

ஆரம்ப காலத்திலும், உள்நாட்டுப் போரின் போதும், கோமிங்டாங் கட்சிக்கு எதிர்ப்பாக இருந்து கம்யூனிஸ்டு கட்சியினை சீன அறிஞர்கள் ஆதரித்தனர். தனிமனிதன் உரிமையை ஏற்றுக்கொள்ளாத கம்யூனிஸ்டு அரசையும், அதன் யதேச்சாதிகாரப் போக்கினையும் சீன அறிஞர்கள் எதிர்க்க ஆரம்பித்தனர். அறிஞர்களின் ஆதரவைப் பெற விரும்பிய மாவோ நூறு மலர்கள் இயக்கம் (Hundred Flowers Movement) என்ற புதிய இயக்கமொன்றை 1957ஆம் ஆண்டில் தோற்றுவித்தார். அதன்படி அறிஞர்களுக்குப் பேச்சு, எழுத்து உரிமை அளிக்கப்பட்டது. அதுவரை வாளாவிருந்த எழுத்தாளர்கள்கூட உரிமை கொடுக்கப்பட்டவுடன் தங்களது எண்ணங்களை துணிந்து வெளியிட்டனர். அரசின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினர். பத்திரிகைகளில் அரசுக்கும், கட்சிக்கும் எதிராகப் பல கட்டுரைகள் தோன்றின. எழுதப்பட்டிருந்த குறைபாடுகளைக் கண்ட மாவோ அதிர்ச்சியடைந்தார். அவ்வாறு துணிந்து குறைகளை வெளியிட்ட அறிஞர்களை வலதுசாரிகள் எனக்குறிப்பிட்டு அவர்களைத் தண்டிக்க ஆரம்பித்தார். இயக்கம் கைவிடப்பட்டது.

1957ஆம் ஆண்டு சீனாவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. தொழிற்சாலைகளில் உற்பத்திக் குறைந்தது. பொருளாதார வளர்ச்சியின் வேகம் குறைந்தது. ருஷ்யாவின் பொருளாதார உதவியும் வெகுவாகக் குறைந்தது. அத்தகைய நெருக்கடியைச் சமாளிக்க வேண்டி, மாவோ விரைந்து முன்னோக்கிச் செல்லும் திட்டம் (Great Leap Forward) என்ற திட்டமொன்றினை வெளியிட்டார். மூலதனம் தேவையான அளவு இல்லாத நிலையைச் சரிக்கட்ட சீனாவின் ஆண்—பெண் ஆகிய அனைவரின் உழைப்புச் சக்தியையும் ஒன்றுதிரட்டிப் பயன்படுத்தி, பொருளாதார வளம் காண வேண்டுமென்பதே அத்திட்டத்தின் குறிக்கோளாகும். சீனாவின் உழைப்புச் சக்தி அனைத்தையும் ஒன்றுதிரட்டித் தீவிரமாகப் பயன்படுத்த வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழிலாளிகள் 14 மணி நேரம் உழைக்க வேண்டியதாயிற்று. கூட்டுப் பண்ணைகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டுப் பல கம்யூன்களாக (Commune) பிரிக்கப்பட்டன. அப்பண்ணைகளில் இராணுவத்திலிருப்பது போன்ற கடுமையான ஒழுங்குமுறை விதிகள் கடைபிடிக்கப்பட்டன,

விரைந்துமுன்னோக்கிச் செல்லும் திட்டத்தின் விளைவாகச் சீனாவில் ஏற்பட்ட வளர்ச்சிகள் தாற்காலிகமானதாகவே காணப்பட்டன. தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தி, புதிய ஆலைகள் ஏற்படுத்தப்படுதல், போக்குவரத்து வசதிகளைப் பெருக்குதல், விவசாயத்துறையில் நவீனமுறைகளைப் புகுத்துதல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சிகள் தாற்காலிகமானதாகவே தோன்றின. சீன மக்களிடையே கம்யூனிஸ்டு கட்சியின் செல்வாக்கு உயர்ந்தது.

விரைந்து முன்னோக்கிச் செல்லும் திட்டத்தின் பின்னர் சீனப்புரட்சியை மேலும் செந்நிறமாக்கவும் (More Red), தீவிர இடதுசாரிகளின் புரட்சியாக மாற்றவும், மாவோ முயன்றார். மாவோவின் கொள்கைகளை நாடறியச் செய்து, மாவோவின் எண்ணங்களைச் சீனர்களின் உள்ளங்களிலே தெளித்து, மனிதருள் மிகவும் உயர்ந்தவராக, சீனாவின் தன்னிகரற்ற தலைவராக உயர்த்த, வழிபாடு செய்ய உருவாக்கப்பட்டதே **பண்பாட்டுப் புரட்சி** (Cultural Revolution) ஆகும். *1966—1968* ஆண்டுகளில் நடந்த இப்புரட்சி அதிகாரப் போட்டியுமாகவும் கருதப்படுகிறது. இந்தப் போட்டியில் மாவோ வெற்றி பெற்றார். அவருக்கு விசுவாசமாக இருந்த **செங்காவலர்கள்** (Red Guards) என்ற புரட்சி வீரர்கள் மாவோவின் எதிரிகளைக் கொன்று குவித்தனர். இந்தப் பயங்கரப் படுகொலைகளினாலும், அதிகாரப் போட்டிக் குழப்பத்தினாலும், நாட்டில் உற்பத்தி பாதிக்கப்பட்டது. 1969இல் அமைதி நிலவின பின்னர்தான், பீகிங் அரசாங்கம் நெடுங்காலப் பொருளாதாரத் திட்டத்தைச் செயல்படுத்த முடிந்தது.

பொருளாதார வளர்ச்சியைப் பற்றி சீன அரசு வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் அனைத்தையும் அப்படியே ஏற்றுக் கொள்வதென்பது சற்றுக் கடினமானதாகும். ஏனெனில் **மூங்கில் திரைக்குள்** (Bamboo Curtain) என்ன நடக்கினறது என்பதை ஒருவரும் தெரிந்துகொள்ள இயலாது. ஆனாலும், பெருகிவரும் மக்கள் தொகையினிடையிலும் வாழ்க்கைத்தரம் மிகவும் உயர்ந்து காணப்படுகின்றது. ஆசியாவிலேயே மிகவும் அதிகமான எண்ணிக்கையுள்ள வழக்கமான படைக்கலன்களைக் கொண்ட பெரும்படையினைச் சீனா வைத்துள்ளது. இவற்றைக் காணும்போது சீனா பொருளாதார வளர்ச்சியில் ருஷ்யாவிற்கு இணையாக விளங்குகிறது என கருத வேண்டியுள்ளது. அறிவியல் துறை வளர்ச்சியும், மிகவும்

திறமை வாய்ந்த நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகளும், தொழில் நுணுக்க வல்லுநர்களும் சீனாவில் இருக்கின்றனர் என்பதைச் சீனாவின் அணு ஆயுதச் சோதனைகள் விளக்குகின்றன. சீனாவின் தொழில் துறை மிகவும் வளர்ந்துள்ள நிலையும் தெளிவாகின்றது.

## 2. சீனாவும் உலக நாடுகளும் (1949-1976)

*1949* இலிருந்து *1976* வரை சீனாவின் அயல்நாட்டுக் கொள்கை ஒரு சமயம் கம்யூனிஸ்டுப் புரட்சியைத் தீவிரமாக எல்லா நாடுகளில் ஆதரித்தும், மற்றொரு சமயம் சமாதானச் சக வாழ்வை (Peaceful Co-existence) ஆதரித்தும், ஆக இருவிதமாக இருந்திருக்கிறது. ஆனால், எல்லாச் சமயங்களிலும் தான் ஓர் உலக கம்யூனிஸ்டு தலைமை நாடென்றும், ஆசியாவின் முதன்மையான வல்லரசு நாடென்றும் பறை சாற்றி வந்தது. பல வருடங்களாக மேலை நாடுகளுக்கு அடிபணிந்திருந்த சீனா, ஆசியாவில் மேலை நாடுகளின் செல்வாக்கை ஒழித்து, தானும் மேலை நாடுகளுக்குச் சமம் என்பதை நிருபித்துக் காட்ட முயன்று வந்தது.

சீனாவின் அயல்நாட்டு இயல்முறையின் முதல்கட்டம் தனது கம்யூனிஸ்டு கொள்கைகளைப் பகிரங்கமாக வன்மை முறையில் பரப்புவதேயாகும். உலகம் கம்யூனிஸ்டு நாடுகள், ஏகாதிபத்திய நாடுகள் (Imperialist Bloc), ஆசியாவின் மேலை நாடுகளின் ஆதிக்கத்திலிருந்த நாடுகள் என மூன்று வகையாகச் சீனா பிரித்தது. கம்யூனிஸ்டு நாடுகளுடன், முக்கியமாகச் சோவியத் ருஷ்யாவுடன் ஒத்துழைத்துக் கம்யூனிஸ்டு புரட்சியைப் பலப்படுத்த முயற்சி செய்யும். ஏகாதிபத்திய நாடுகளுடன் இடைவிடாமல் போர் நடத்தும். மேலை நாடுகளின் ஆதிக்கத்திலிருந்த நாடுகளைக் கம்யூனிஸ்டு பிரிவில் சேர புரட்சிகளை ஆதரிக்கும்.

மேலே கூறிய இயல்முறையின்படி முதல் கட்டத்தில் (*1949*-1952) தென்கிழக்கு ஆசியாவில் மேலை நாடுகளின் ஆதிக்கத்தின் கீழிருந்த நாடுகளில் நடந்த மக்கள் விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு கொடுத்து, அந்நாடுகளைக் கம்யூனிஸ்டு அல்லாத அரசுகளை நீக்கி, அவற்றைக் கம்யூனிஸ்டு பிரிவில் சேர்க்க முயன்றது. அமெரிக்க ஆதரவின் கீழிருந்த சியாங்கின் பார்மோசா அரசாங்கத்தைத் தாக்க தனது படைகளைப் பலப்படுத்தியது. ஜப்பான், பிலிப்பைன்ஸ், இந்தோ-சீனா ஆகிய நாடுகளில் இடைவிடாமல் மேலை நாடு

களுக்கு எதிராகப் பிரசாரம் செய்தது. 1950 இல் கம்யூனிஸ்டு வடகொரியாவிற்கும் அமெரிக்க ஆதரவின் கீழிருந்த தென் கொரியாவிற்கும் போர் தொடங்கியபோது, சீனா முதலில் இரகசியமாகவும் பின்னர் பகிரங்கமாகவும் வடகொரியாவை ஆதரித்து உதவி செய்தது.

இரண்டாவது கட்டத்தில் (1952-55) சீனா 'சமாதானச் சக வாழ்வு' இயல்முறையைக் கையாண்டது. அதற்கு மூன்று காரணங்கள் உள. (1) அப்பொழுது சீனாவுடன் நல்லுறவு கொண்டிருந்த சோவியத் ருஷ்யா அக்கொள்கையை ஆதரித்து வந்தது. (2) சீனா நாட்டின் உற்பத்தியைப் பெருக்க ஐந்து வருடத் திட்டத்தை வகுத்திருந்தது. அதைச் செயல்படுத்த சமாதானம் தேவை. (3) இக்கொள்கையினால் அமெரிக்கா தனக்கு எதிராகச் செய்து வந்த நடவடிக்கைகளைச் சமாளிக்கலாம் என்று கருதியது. இந்த இயல்முறையின் விளைவாக ஆசியாவில் கம்யூனிஸ்டு அல்லாத 'பூர்ஷ்வோ' அல்லது நடுத்தரவகுப்பினரின் அரசுகளைக் கவிழ்ப்பதைச் சீனா நிறுத்தி வைத்தது; கொரியா போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஆதரித்தது; இந்தோ—சீனா சமாதானத்திற்காகக் கூட்டப்பட்ட மகா நாட்டில் கலந்து கொண்டது; 1955-ல் பாண்டுங்கில் நடந்த ஆப்பிரிக்க-ஆசிய நாடுகளின் மகாநாட்டில் கலந்து கொண்டு, மனித உரிமைகளைக் காப்பாற்றவும், ஆயுதப்பெருக்கத்தைத் தடுக்கவும், அயல்நாடுகளுடன் பொருளாதாரத்தில் ஒத்துழைக்கவும், உலக சமாதானத்தை ஆதரிக்கவும் சீனா ஒப்புக் கொண்டது.

மூன்றாவது கட்டத்தில் (1955-70) சீனா போர் முறையைக் கையாண்டது. சோவியத் ருஷ்யாவுடன் இருந்த நல்லுறவு முறிந்தது. சீனா திபெத் மீது படையெடுத்து ஆக்ரமித்தது. திபெத்தின் தலைவரான **தலாய்லாமா** திபெத்தை விட்டு, இந்தியாவில் தஞ்சமடைந்தார். 1962 இல் இந்தியா மீது படையெடுத்து ஹிமாலயப் பகுதியில் சில இடங்களை ஆக்ரமித்துக் கொண்டது. சீனாவுக்கும் ருஷ்யாவிற்கும் ஆசியாவில் ஆதிக்கப்போட்டி வலுத்தது.

இன்றைய உலகின் முக்கிய அம்சம் சீன-ருஷ்ய ஆதிக்கப் போட்டியாகும். இந்த இரண்டு கம்யூனிஸ்டு நாடுகளிடையே கம்யூனிஸ்டு கோட்பாடு விஷயத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது. சீனா நிரந்தரப் புரட்சியில் நம்பிக்கை வைத்துள்ளது. ருஷ்யா 'சமாதானச் சகவாழ்வு'தான் நல்ல இயல்முறை என்று கூறுகிறது. ஏனெனில், போர் ஏற்பட்டால் முதலாளி நாடுகளில் போரைச் சமாளிக்க ஒற்றுமை ஏற்படும்;

சமாதானம் இருந்தால், முதலாளி நாடுகளில் தகராறுகள் தோன்றி, போர் மூண்டு அவை அழிந்துவிடும். இந்தக் கொள்கையைச் சீனா ஏற்றுக் கொள்ளவில்லை. ருஷ்யா முதலாளி நாடுகள் பக்கம் இருக்கிறது, உண்மையான கம்யூனிஸ்டு நாடு சீனாதான் என்று பறை சாற்றுகிறது. இரண்டு நாடுகளிடையே உறவு முறிந்ததற்கு மற்றொரு காரணம் 1958 இலிருந்து ருஷ்யா சீனாவுக்கு உதவி செய்வதை நிறுத்தி விட்டது மூன்றாவது காரணம் இரண்டு நாடுகளிடையே எல்லைத் தகராறு.

சீனா ஆப்பிரிக்காவில் பழைய குடியேற்ற நாடுகளில் நடக்கும் புரட்சி இயக்கங்களுக்கு உதவி செய்து வருகிறது. மேற்கு ஆசியாவில் இஸ்ரேல் நாட்டிற்கு எதிராக இயங்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை (Palestine Liberation Organisation - PLO) ஆதரித்து வருகிறது.

உலக அரங்கில் சமீப காலத்தில் வியக்கத்தக்க நிகழ்ச்சி நடந்துள்ளது. எதிரிகளாகப் பல வருடங்கள் இருந்து வந்த அமெரிக்காவும், சீனாவும் இன்று ஒன்று சேர்ந்துள்ளன. அமெரிக்கா பல வருடங்களாகச் சியாங் பார் மோசா அரசை ஆதரித்தும், அதற்கு ஐ. நா. பாதுகாப்புக் குழுவில் இடங்கொடுத்தும், கம்யூனிஸ்டு சீனாவுக்கு ஐ. நா. சபையில் இடங்கொடுப்பதை எதிர்த்தும் வந்திருக்கிறது. ஆனால் 1972 இல் அமெரிக்க காரியதரிசியான டாக்டர் கிஸ்ஸிஞ்சரின் முயற்சியினால் பல வருடங்கள் பகைவர்களாக இருந்த இரு நாடுகளும் நட்புறவு கொண்டன. அமெரிக்காவின் உதவியால் இன்று சீனா ஐ. நா. சபை உறுப்பினர் நாடாகவும், பாதுகாப்புக் குழுவின் நிரந்தர உறுப்பினராகவும் விளங்குகிறது. இரண்டு நாடுகளின் நல்ல உறவைப் பலப் படுத்த அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸன் சீனாவுக்கு வருகை தந்தார்.

இன்றைய சீனா உலக நாடுகளுடன் நல்ல உறவு கொள்ள விரும்புகிறது. 1962 இல் இந்தியாவின் மீது படையெடுத்த காரணத்தினால் இரு நாடுகளுக்கும் முன்பு இருந்த நல்ல உறவு முறிந்தது. 1976 ஆம் ஆண்டு இந்த இரு நாடுகளுக்குமிடையே மறுபடியும் நல்ல உறவு ஏற்பட்டு இருநாடுகளிலும் தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது ஒரு நல்ல அறிகுறி ஆசியாவின் பழம்பெரும் நாடுகளான இந்தியாவும், சீனாவும் தங்களது பண்பாடுகளை நினைவிற் கொண்டுவந்து எப்பொழுதும் போல் நல்ல உறவு வைத்துக் கொள்ள இரு நாட்டுத் தலைவர் களும ஒத்துழைப்பார்கள் என்று நாம் நம்புவோமாக.

# அத்தியாயம் 23

# இன்றைய பாரதம்

## (அ) அரசியல் நிகழ்ச்சிகள்

நமது அரசியல் அமைப்பை உருவாக்கிய நிபுணர்கள் நமது நாட்டின் தேவைகளை உணர்ந்து அமைத்தபடியால் அது நிரந்தரமாக நாட்டின் மக்களுக்கு உதவும் என்று நம்பினர். சென்ற 30 வருடங்களாக இந்த அரசியல் அமைப்புச் செயல்பட்டதிலிருந்து, அவர்கள் நம்பிக்கை வீண்போக வில்லை என்று புலப்படுகிறது. ஏழு பொதுத் தேர்தல்கள் (1952, 1957, 1962, 1967, 1971, 1977, 1980) நடந்துள்ளன; அவற்றில் 1952 இல் 20 கோடி வாக்காளர்களும், 1977 இல் 32.1 கோடி, 1980 இல் 36.1 கோடி வாக்காளர்களும் அமைதியாக வாக்குச் சாவடிகளுக்குச் சென்று தங்கள் 'வாக்குகளைப் பதிவு செய் திருக்கின்றனர். அமைதியான தேர்தல்களின் விளைவாக டில்லியிலும், மாநிலங்களிலும் அரசுகள் அமைக்கப்பட்டன. கல்வியறிவு இல்லாத மக்களுக்கு நமது நாட்டில் ஓட்டுரிமை கொடுத்தது பார்லிமெண்ட் ஜனநாயக முறை நன்றாகச் செயல்படுவதற்கு உதவுமா என்று அயல்நாட்டு அரசியல் அறிஞர்களில் சிலர் ஐயமுற்றனர். நடந்த ஏழு தேர்தல்களில் நமது மக்கள் வயது வந்தோருக்கு ஓட்டுரிமை அளிக்கப் பட்டது சரி என்று உலகநாடுகள் வியக்கத்தக்கவாறு நிரூபித்து விட்டார்கள். பார்லிமெண்ட் ஜனநாயக முறை நடைபெறாத நமது நாட்டில், நமது மக்கள் அம்முறையைச் சிறப்பாகச் செயல் படுத்த முடியுமா என்றும் சிலர் ஐயமுற்றனர். சென்ற 30 வருடங்களாக நாம் பிரிட்டனைப்போல் ஜனநாயக ஆட்சியைச் செவ்வனே செயல்படுத்தியிருக்கிறோம். நமது அரசு செயல்படுவதை அயல்நாட்டிலிருந்து நமது நாட்டிற்கு வந்த அரசியல் நிபுணர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இவ்வாறு நமது நாட்டில் சீரும், சிறப்புமாக ஜனநாயகம் செயல் படுவதற்குக் காரணம் நமது தலைவர்கள்தான். நாடு சுதந்தர மடைந்ததிலிருந்து நாட்டுப் பற்றுடனும், தியாக உணர்ச்சியுட னும், நாட்டின் நலனுக்காகப் பாடுபட்ட மாபெரும்தலைவர்கள்

நமக்குக் கிடைத்தது நமது பாக்கியமேயாகும். இரண்டாவது உலகப் போர் முடிவடைந்தபின் ஆசியாவில் விடுதலை அடைந்த மற்ற நாடுகளை நம்முடைய நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் எவ்வாறு எல்லாத் துறைகளிலும் முன்னேறி யிருக்கிறோம் என்று புலப்படும்.

**(i) சிக்கிம் இந்திய யூனியனுடன் இணைதல் (1974)**: இந்திய யூனியனில் இன்று 22 மாநிலங்களும், 9 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. கடைசியாக இந்திய யூனியனுடன் இணைந்த மாநிலம் **சிக்கிம்** ஆகும். 1974 ஆம் ஆண்டுக்கு முன் சிக்கிம் இந்தியாவின் கீழ் பாதுகாப்பு நாடாக இருந்தது. அதாவது, அதற்கு மாநில சுய ஆட்சி இருந்தது; அதன் பாதுகாப்பும் அயல்நாட்டு இயல்முறையும் இந்தியாவின் பொறுப்பாகும். 1974 இல் திருமதி இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது, சிக்கிம் மன்னரான **சோக்யாலின்** (Chogyal) வல்லாட்சியை எதிர்த்து மக்கள் புரட்சி செய்தனர். யூனியன் அரசாங்கம் தலையிட்டு ஒரு பொதுஜன வாக்கெடுப்பு (Referendum) நடத்தியது. அந்த வாக்கெடுப்பின்படி சோக்யால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்; இந்திய யூனியனுடன் சிக்கிம் இணைந்தது. இந்திய அரசியல் அமைப்புத் திருத்தம் செய்யப்பட்டு, சிக்கிம் இந்திய யூனியனின் 22 ஆம் மாநிலமாயிற்று. சிக்கிமின் தலைநகரான காங்டாக்கில் மக்கள் ஆதரவு பெற்ற மந்திரிசபை பதவிக்கு வந்தது.

**(ii) காஷ்மீருடன் ஒப்பந்தம் (1975)**: திருமதி இந்திரா காந்தி பிரதமர் பதவி வகித்த போது காஷ்மீருடன் இந்திய யூனியன் அரசு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. காஷ்மீர் மாநிலமும் இந்திய யூனியனும் இணைந்தது சட்டபூர்வமானதே; ஏனெனில், காஷ்மீரை அப்பொழுது ஆண்டுவந்த மகாராஜாவும், அவருடைய முதல் மந்திரியான ஷேக் அப்துல்லாவும் இந்தியாவுடன் இணைய இசைவு தந்தனர். பின்னர் அந்த இணைப்பை காஷ்மீர் அரசியல் சபை உறுதிப்படுத்தியது. எனவே காஷ்மீரை ஆண்ட தலைவர்களும், மக்களும் ஒருமனதாக இணைப்பைச் செயல்படுத்தினார்கள். இந்த இணைப்பை பாகிஸ்தான் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது அச்சமயத்தில் ஷேக் அப்துல்லா காஷ்மீர் இணைப்பு விஷயமாய் ஒரு பொது ஜன வாக்கெடுப்புக் காஷ்மீரில் நடத்த வேண்டுமென்றும், அதற்குக்

கிளர்ச்சி செய்ய பொதுஜன வாக்கெடுப்பு இயக்கம் (Plebiscite) ஒன்றைத் துவக்கினார். அதனால் யூனியன் அரசாங்கம் ஷேக் அப்துல்லாவைக் காவலில் பல வருடங்கள் வைத்திருந்தது. 20 வருடங்களாகக் காஷ்மீரில் அதிகாரத்தில் இருந்த முதல்




மந்திரிகள் ஷேக் அப்துல்லாவின் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லர். ஷேக் அப்துல்லா காஷ்மீரில் பெரும்பான்மையான மக்களால் விரும்பப்பட்ட தலைவர். காஷ்மீரம் ஒரு கேந்திர

மாநிலம்; காஷ்மீர், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானம், ருஷ்யர் நாடுகளின் அண்டை நாடு. எனவே, இந்த கேந்திர மாநிலத்தில் அமைதியை நிலைநாட்ட பிரதமர் இந்திரா காந்தி ஷேக் அப்துல்லாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன் படி ஷேக் அப்துல்லா காஷ்மீரின் முதல் மந்திரியாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அவர் ஒரு மந்திரிசபை அமைக்க அனுமதிக்கப்பட்டார். காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது சட்ட பூர்வமானதே; பொதுஜன வாக்கெடுப்பு அவசியமில்லை என ஷேக் அப்துல்லா ஒப்புக் கொண்டார். ஷேக் பதவியில் இல்லாத போது காஷ்மீர் மந்திரிசபை இயற்றிய சட்டங்களை (1953 – 1975) மாற்றவோ, திருத்தவோ அவருக்கு உரிமை கொடுக்கப்பட்டது. தலைமை நீதி மன்றத்தில் காஷ்மீரத்திலிருந்து அப்பீல் வழக்குகள் காஷ்மீர் மாநிலத்தின் உயர்நீதி மன்றத்தின் அனுமதியின் பேரில்தான் தாக்கல் செய்யப்படும்.

இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைக் கவனிக்கும் போது, யூனியன் அரசாங்கம் சில முக்கியச் சலுகைகள் காஷ்மீருக்கு வழங்கியிருப்பதுபோல் தோன்றும். ஆனால் காஷ்மீர் இணைப்பை ஷேக் அப்துல்லா மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருப்பது இந்திய யூனியனின் ஒரு முக்கிய வெற்றியாகும். இந்த ஒப்பந்தத்தினால் பல வருடங்கள் குழப்பம் மிகுந்த மாநிலமான காஷ்மீர் மாநிலத்தில், இப்பொழுது அமைதி நிலவுகிறது; மந்திரிசபை மக்களுக்கு ஆற்றலுடன் பணிசெய்து வருகிறது.

(iii) **தேசியநெருக்கடியும் 1977 தேர்தலும் :** *1964*, மே மாதம் 27ஆம் நாள் ஜவஹர்லால் நேரு மறைந்தவுடன், லால்பகதூர்சாஸ்திரி இந்தியாவின் பிரதமரானார். அவருக்குப்பின் திருமதி இந்திரா காந்தி 11 ஆண்டுகள் பிரதமராகப் பணியாற்றினார். அவர் ஆட்சிக் காலத்தில் 14 பெரிய வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன; சுதேச சமஸ்தானங்கள் இணைப்பிலிருந்து சுதேச மன்னர்கள் அனுபவித்து வந்த சலுகைகளும், மான்யங்களும் (Civil List) ஒழிக்கப்பட்டன. சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தில் அநேக திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றுள் இரண்டு திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தோன்றியது. அவை, பார்லிமென்ட் அரசியல் அமைப்புக்கு மேலானது; நெறிமுறைக் கோட்பாடுகள் (Directive Principles

of State Policy) அடிப்படை உரிமைகளுக்கு (Fundamental Rights) மேலானவை. இந்தத் திருத்தங்களால் காங்கிரஸ் கட்சியில் மட்டுமன்றி நாட்டிலும் எதிர்ப்புத் தோன்றியது. இந்நிலையில் 1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் தேதி தேசிய நெருக்கடி நிலையை பிரதமர் இந்திரா காந்தி அறிவித்தார்.

20 மாத நெருக்கடி காலச் சாதனைகளைக் காட்டி 1977 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில் திருமதி இந்திரா காந்தி மக்களின் தீர்ப்பைப் பெற பொதுத் தேர்தலுக்கு ஆணையிட்டார். அந்தத் தேர்தலில் 30 வருடங்கள் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தது. ஜனதா கட்சி பதவிக்கு வந்து திரு. மொரார்ஜிதேசாய் பிரதமரானார். ஜனதா கட்சியில் பிளவு ஏற்பட்டதின் விளைவாக திரு. தேசாய் 1979 ஜூலை மாதம் பதவியிலிருந்து விலகினார். திரு. சரண்சிங் பிரதமர் ஆனார். ஆனால் அவருக்கு லோக் சபையில் பெரும்பான்மையினரின் ஆதரவு கிடைக்காமல் போகவே, அவர் லோக் சபையைக் கலைத்து, பொதுத் தேர்தல் நடத்த ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறினார். தேர்தல் வரை அவர் காபந்து சர்க்காரின் (Caretaker Government) பிரதமராக நியமிக்கப்பட்டார்.

1980, ஜனவரியில் நடந்த தேர்தலில் காங்கிரஸ்(I) கட்சி வெற்றி பெற்று, **திருமதி இந்திரா காந்தியின்** தலைமையில் ஒரு மந்திரிசபை நாட்டை ஆட்சி செய்து வருகிறது.

### (ஆ) சமுதாய, பொருளாதார, விஞ்ஞான முன்னேற்றம்

1971 இல் நடைபெற்ற பொது மக்கள் கணக்கெடுப்பின்படி (Census) இந்தியாவின் மக்கள்தொகை 54.8 கோடியாகும். இது உலக நாடுகளிடையே இரண்டாவது (சீனாவிற்கு முதலிடம்) இடத்தைப் பெற்றுள்ளது. வளர்ந்து வரும் மக்கள் தொகை ஒரு மகிழ்ச்சி தரும் செய்தியன்று; மாறாகப் பலப்பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் பேரிடராகக் காணப்படுகின்றது. எனவே, மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

இன்றைய பாரதத்தில் மனிதன் வாழ்வு 27 வருடங்களி லிருந்து 50 வருடங்களாக உயர்ந்துள்ளது. இறப்பவர்களின் எண்ணிக்கை குறைதல், பஞ்சமும், கொள்ளை நோயும் தடுக்கப்படுதல், மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு ஆகியவை மக்கள்தொகைப் பெருக்கத்திற்குக் காரணங்களாகும். வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா ஒன்று. மக்கள்தொகை பெருக்கத்தைத் தடுக்காவிட்டால், பொருளாதர முன்னேற்றத் திற்குத் தடையாக இருக்கும். எனவே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை (Family Planning Programme) இந்தியா செயல் படுத்தி வருகிறது. தென் ஆசிய நாடுகளில் குடும்பக் கட்டுப் பாட்டின் அவசியத்தை உணர்ந்த முதல் நாடு நமது பாரதமே. 1952-லிருந்து இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது; ஓரளவு நாம் வெற்றியும் அடைந்திருக்கிறோம். ஒவ்வொரு மாநிலத் திலும் குடும்பக் கட்டுப்பாடு நிறுவனம் அமைக்கப்பட்டு, கிரா மங்கள், பட்டணங்கள் எல்லாவற்றிலும் பிரசாரம் செய்யப் பட்டு வருகிறது.

அரசியல், பொருளாதார மாற்றங்களின் மூலமாக இந்தியக் கிராமங்கள் தொடர்ந்து திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. நிலச் சீர்த்திருத்தங்களினாலும், நகர்ப்புற நிலம்பற்றிய சட்டங் களினாலும் முன்னேற்றத்துக்கான மாற்றங்கள் தொடர்ந்து வந்த வண்ணமிருக்கின்றன. கிராம வாழ்க்கையை வளம் பெறச் செய்யவந்த சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் (Community Development Programmes) நடைமுறையில் இருந்து வருகின்றன. பஞ்சாயத்து ஆட்சிமூலம் தங்களிடமுள்ள வாக் குரிமையின் சக்தியை மக்கள் உணர்ந்துள்ளனர். வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய உரங்களும், நீரும், மின்சாரமும் கிடைத்து, பசுமைப் புரட்சி தோன்றி நாட்டின் உணவு தானி யங்கள் உற்பத்தியை அதிகரித்துள்ளது. நாட்டின் மீன் இலாகா அதிகாரிகள் மீன் பிடித்தலுக்கு வேண்டிய அளவு உதவி செய்து நீலப்புரட்சியை தோற்றுவித்திருக்கின்றனர். ஐந்து வருடத் திட்டங்களால் நாட்டின் தொழில்வளம் அதிகரித் துள்ளது. (இப்பொழுது ஆறாம் ஐந்து வருடத் திட்டம் அமுலில் உள்ளது) 'தனியார் தொகுதி' 'அரசாங்கத் தொகுதி' என்ற இரண்டு தொகுதிகளும் அரசின் கண்காணிப்பில் ஒத்துழைத்து, நமது நாட்டை ஒரு தொழில்மய நாடாக்க முயற்சித்து வருகின்றன.

கல்வி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் நாட்டின் பல பாகங்களில் நிறுவப்பட்டுள்ளன. கோடிக்கணக்கான ரூபாய்

கள் கல்வி முன்னேற்றத்திற்காகவும், முக்கியமாக அறியாமையை நீக்கவும், செலவழிக்கப்படுகின்றன. 'நாம் நம்முடைய எஜமானர்களுக்குக் கல்வி புகட்ட வேண்டும்' என்று 19 ஆவது நூற்றாண்டில் பிரிட்டிஷ் பிரதமராக இருந்த பெஞ்சமின் டிஸ்ரலே கூறினார். ஜனநாயக ஆட்சி வெற்றியடைய வேண்டுமானால், ஓட்டுரிமை மக்களுக்குக் கல்வியறிவு இருக்க வேண்டும். இதை உணர்ந்து யூனியன் அரசாங்கம் அறியாமையை நீக்க, பல கல்வி நிலையங்களை அமைத்து அவற்றின் மூலம் முதியோர்கள், பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்கள் ஆகியோர்களுக்குக் கல்வி புகட்டி வருகிறது.

இந்தியாவில் சாதிப்பிரிவினை அதிகம். ஆனால் கல்வி வளர்ச்சியும், தொழில்வளப் பெருக்கமும் சாதியின் கொடுமையை நீக்கி, தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதில் பெரும் பங்கு கொண்டுள்ளன. நகரங்களில் சமுதாய வாழ்க்கையில் ஓரளவு நெகிழும் தன்மை காணப்படுகின்றது. 1955இல் நிறைவேறிய தீண்டாமை (குற்றச்) சட்டம் ஒரு திருப்புமுனையாகத் திகழ்கின்றது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே பாராளுமன்றத்திலும், மாநிலச் சட்டமன்றங்களிலும் அரசாங்கப் பணிகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடியினருக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன; உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன; வேலைவாய்ப்புகள் தரப்படுகின்றன. இவையெல்லாம் அவர்களது சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்கு ஓரளவு பேருதவியாக இருந்து வருகின்றன.

இந்திய சமூகம் மரபாக வந்த குடும்பத் தலைவனை மையமாக வைக்கும் அமைப்புக் கொண்டதால், பெண்கள் தங்களுக்குரிய மதிப்பைப் பெற முடியவில்லை. பர்தா, சதி, விதவை திருமணத்திற்கு எதிர்ப்பு, சிசு திருமணம் ஆகியவை சமூகத்தில் பெண்களின் தாழ்ந்த நிலையைக் காண்பிக்கின்றன. சமூக சீர்திருத்த வாதிகளாலும், அரசாங்கத்தின் முயற்சியினாலும் அநேக சமுதாயத் தீமைகள் நீக்கப்பட்டுள்ளன. பெண் கல்வியினாலும், பெண்களுக்கு ஆண்களைப் போல் அரசாங்க அலுவலகங்களிலும், வங்கிகளிலும் வேலைகள் வழங்குவதனாலும், பெண்களதுநிலை ஓரளவு உயர்ந்துள்ளது. ஆனால் பரிசம் போடுதல் அல்லது சீதனமளித்தல் (Dowry) என்னும் தீமை குறைந்ததாகத் தெரியவில்லை. 1961-ல் சீதனத் தடுப்புச் சட்டம் வந்துள்ளபோதிலும் சீதனம் எல்லா வகுப்

பினரிடமும், கல்வி கற்றவர்களிடமும், பாமர மக்களிடமும் இருந்து வருவது நமது சமுதாயத்தின் ஒரு பெரிய குறை ஆகும். இந்தியப் பெண்ணின் விடுதலை முன்னேற்றத்திற்குக் கல்வியும் சட்டமும் சாதனங்கள் அல்ல. நமது இளைஞர்கள் சீதனத் தீமையை ஒழித்துக்கட்ட தாங்கள் சீதனம் பெறாமல் திருமணம் செய்து, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்; பெண்கள் வாழ்வில் முன்னேறுவது அவர்கள் கையில்தான் உள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் நெறிமுறை கோட்பாடுகள் (Directive Principles of State Policy) மதுவிலக்குப் போன்ற கொள்கைகளை வலியுறுத்துகின்றன. ஆனால் வாய்ப் பேச்சினால் மட்டும் மதுவிலக்குப் போன்ற மனித நலக் கொள்கை இலக்கை எட்டிவிட முடியாது. மகாத்மா காந்தியின் கனவை நனவாக்குவதற்கு அரசும் மக்களும் விழிப்புடனும் பயனுள்ள வகையிலும் செயல்பட்டால்தான் மது என்னும் அரக்கனை ஒழிப்பதில் வெற்றி காணமுடியும்.

விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பக் கலையிலும் நாம் மேலைநாடுகள் போல் முன்னேறி வருகிறோம். அதற்கு முக்கியச் சான்றுகள் இராஜஸ்தான் பாலைவனத்தில் போகரன் என்னுமிடத்தில் அணுகுண்டு வெடித்ததும், விண்வெளியில் 'ஆரியபட்டா' வை பறக்க விட்டதுமேயாகும்.

### (இ) இந்தியாவும் அயல்நாடுகளும்

(i) **சீனா :** ஜவஹர்லால் நேரு வகுத்த கூட்டுச் சேராக் கொள்கை உலக அமைதியை வளர்த்த இயல்முறையாகும். அதை பெரிய வல்லரசுகள் உள்பட எல்லா நாடுகளும் பாராட்டியிருக்கின்றன. நேருவின் இறுதிக் காலத்தில் 1962ஆம் ஆண்டு சீனா இந்தியாவின் வடபகுதியைத் தாக்கி ஆயிரக்கணக்கான சதுர கிலோ மீட்டர்கள் பரப்பு கொண்ட இடங்களைக் கைப்பற்றியது. இந்தத் திடீர் தாக்குதலுக்குத் இந்தியா தயாராக இல்லை. ஏனெனில் இரண்டு நாடுகளும் பல வருடங்களாக நல்லுறவு கொண்டிருந்தன. தாக்குதலுக்குச் சில மாதங்கள் முன்புதான் நமது நாட்டிற்கு சீனா நல்லுறவு குழுவை அனுப்பியிருந்தது, சீனாவின் ஆக்கிரமிப்பு நேருவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

1962ஆம் ஆண்டு சீனாவின் ஆக்கிரமிப்பினால் இந்திய சீன நல்லுறவு முறிந்தது. ஆனால், தற்போது இரண்டு நாடுகளும் முன்புபோல் நேச நாடுகளாக இருக்க தூதர் களை நியமித்து நல்லுறவு வளர்க்க முயற்சித்து வருகின்றன. ஆசியாவின் பழம்பெரும் நாடுகள் தங்களது தகராறு களைத் தீர்த்து மறுபடியும் அமைதியுடனும் ஒத்துழைப் புடனும் வாழுவதற்கு நல்ல அறிகுறிகள் காணப்படுகின்றன.

(ii) பாகிஸ்தான் : காஷ்மீர் இந்தியாவுடன் சட்டபூர்வ மாகவும், மக்கள் ஆதரவுடனும் இணைந்தது முதல், இந்தியா விற்கும் பாகிஸ்தானுக்கும் நல்லுறவு முறிந்தது. பாகிஸ்தான் இந்தியாவிற்கு எதிராகப் பிரசாரம் செய்து இரு நாடுகளின் நல்லுறவைக் கெடுத்து வந்தது. லால்பகதூர் சாஸ்திரி பிரதம ராக இருந்தபோது 1965-ல் பாகிஸ்தான் இந்தியாவை காஷ்மீர் பகுதியில் தாக்கியது. நமது படைகள் பாகிஸ்தான் படைகளை காஷ்மீர் பகுதியில் நிறுத்தியதுமல்லாமல் லாகூர், சியால்கோட் பகுதியில் எதிர்த் தாக்குதலை நடத்தின. ஆனால் ஐ.நா. பாது காப்புக் குழுவின் தலையீட்டினாலும், ருஷ்யப் பிரதமர் கோசிஜின் முயற்சியினாலும் போர் நிறுத்தப்பட்டு டாஷ்கண்டு என்னுமிடத்தில் இரு நாடுகளுக்கும் சமாதான உடன்படிக்கை 1966-ல் ஏற்பட்டது.

1971-ல் மறுபடியும் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் போர் ஏற்பட்டது; இது காஷ்மீர் தகராறினால் ஏற்பட்டதன்று. கிழக்கு பாகிஸ்தான் அல்லது கிழக்கு வங்காளம் வளமுள்ள பிரதேசம். பாகிஸ்தான் அதைக் குடியேற்றம்போல் நடத்தி சுரண்டி வாழ்ந்தமையால், முஜ்பூர் ரஹ்மான் தலைமையில் கிழக்கு வங்காளம் பாகிஸ்தான் நாட்டிலிருந்து 1971-ல் பிரிந்தது. இஸ்லாமாபாத்திலிருந்த பாகிஸ்தான் அரசு பிரிவினையைத் தடுக்க ஒரு படையைக் கிழக்கு வங்காளத்திற்கு அனுப்பி, அட்டூழியங்களைச் செய்தது. அதனால் இலட்சக்கணக்கான மக்கள் கிழக்கு வங்காளத்திலிருந்து, இந்தியாவிற்குள் அகதி களாக வந்தனர். அப்பொழுது நமது நாட்டுப்பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி பாகிஸ்தான் படை தனது கொடுமை களை நிறுத்தி, அகதிகள் இந்தியாவிற்கு வருவதைத் தடுக்க வேண்டுமென்று பாகிஸ்தான் அரசையும், உலக நாடுகளை யும் வேண்டிக்கொண்டார். ஒருவிதமான பதிலும் ஒருவரிட மிருந்து வராமல் போகவே, இந்தியா முஜ்புர் ரஹ்மானுக்கு உதவ ஒரு படையை அனுப்பியது. இந்தப் போர் 14 நாள்

களில் முடிவடைந்தது. பாகிஸ்தான் படை இந்தியப் படையிடம் சரணடைந்தது. கிழக்கு வங்காளம் பங்களாதேஷ் என்ற சுதந்தர நாடாயிற்று. முஜ்பூர் ரஹ்மான் அதன் முதல் குடியரசுத் தலைவரானார்.

போர் முடிந்ததும் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் சிம்லாவில் சமாதான பேச்சு வார்த்தைகள் நடந்தன. அந்த சிம்லா உணர்ச்சி (Simla spirit) இருநாடுகளிடையே வளர்ந்து வருகிறது. பல வருடங்களுக்குப்பிறகு பாகிஸ்தான் கிரிக்கெட் குழு ஒன்றை நமது நாட்டிற்கு அனுப்பியுள்ளது. இருநாடுகளின் கிரிக்கெட் குழுவினர் பந்தயம் விளையாடி, நல்லுறவை வளர்த்து வருகின்றனர். இன்று பாரதமும் பாகிஸ்தானும் நல்ல உறவு கொண்ட அண்டை நாடுகளாக விளங்குகின்றன.

(iii) **இந்தியாவும் அணு ஆயுத நாடுகளும்:** உலகில் வல்லரசு நாடுகளான அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன், பிரான்சு, சீனா ஆகியவை அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்யும் நாடுகள். இவை மற்ற நாடுகள் அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதில்லை என்று உறுதிமொழி கொடுக்கும்படி வேண்டுகின்றன. அதற்கு இந்தியா சம்மதிக்கவில்லை. அணு ஆயுதப் பெருக்கை நிறுத்த வேண்டுமானால், வல்லரசு நாடுகளிலும் அணு ஆயுதங்கள் செய்வதற்கு தடைவிதிக்கப்பட வேண்டும். அணு ஆயுதங்கள் பெருகாமல் இருப்பதற்கு வகுத்த உடன்படிக்கை (Non Proliferation Treaty-N.P.T) சமத்துவத்தின் அடிப்படையில் இருக்க வேண்டுமென்பது இந்தியாவின் வாதம். அணுகுண்டுகளைச் சமாதானத்திற்கு உபயோகப்படுத்துவது இந்தியாவின் கொள்கை (மலைகளில் சுரங்கப்பாதை அமைப்பது, அணைக்கட்டுவது, பாறைகளைத் தகர்ப்பது போன்ற வேலைகளுக்கு). எனவே இந்தியா NPT-ல் கையெழுத்துப் போட மறுப்பதற்குக் காரணம் அது தன் சுயமரியாதையைக் காப்பதற்கேயல்லாமல், ஆயுதப் பெருக்கிற்கு விரோதம் என்று ஒருவரும் கருதக்கூடாது.

(iv) **நேபாளம்:** இந்தியாவும் அண்டை நாடான நேபாளமும் எப்பொழுதுமே நல்லுறவு கொண்ட நாடுகளாகும். சமீபத்தில் நேபாள மன்னர் பீரேந்திரர் தமது நாட்டில் பார்லிமென்டு முறை ஜனநாயகம் நிறுவப்போவதாக அறிக்கை விடுத்துள்ளார்.

நேபாளத்தில் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டால் நம் நாட்டுடன் இப்பொழுது இருக்கும் நல்லுறவு மேலும் வலுப்படும்.

(v) பர்மா, ஸ்ரீலங்கா : அண்டை நாடுகளான பர்மாவும் ஸ்ரீலங்காவும் சுதந்தரத்திற்குமுன் இந்தியாவைப் போல பிரிட்டிஷ் பேரரசைச் சேர்ந்திருந்தன. அப்பொழுது அநேக இந்தியர்கள் அந்நாடுகளில் குடியேறியிருந்தனர். அந்நாடுகள் சுதந்தரமடைந்தவுடன் அங்குள்ள இந்தியர்கள் தமது நாடு திரும்பினர். நாடு திரும்பினவர்களுக்குப் புதிய வாழ்வு அமைக்க எல்லாவிதத்திலும் நமது அரசாங்கம் உதவி செய்து வருகிறது.

நவீன இந்தியாவின் அண்மைக்கால வரலாறு நல்லதும் கெட்டதும் கலந்த ஒன்றாக, நம்பிக்கையும் நலங்காணா வெறுப்பும் கலந்ததாகக் காணப்படுகின்றது. நமது மாபெருந் தலைவர்களின் திறமையினாலும் மக்களின் ஒத்துழைப்பினாலும் வளர்ந்துவரும் நமது நாடு குழப்பத்திலிருந்தும் துன்பங்களிலிருந்தும் வெளியேறி வெற்றிநடை போடுகின்றது. நமது தலைவர்களது சாதனைகளைப் போற்றி, வருங்காலத்தில் மேலும் நமது பாரதம் சிறப்படைய முடியும் என்ற நம்பிக்கை இந்திய மக்களிடையே தோன்றியுள்ளது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற

மேலட்டை அச்சிட்டோர் :

பிரின்ட் ஹவுஸ் (மக்கள் குரல்), சென்னை-24